
திருமூலர் அருளிய

திருமந்திரம்



நான்காம் தந்திரம்

உ

அன்பே சிவம்

பதிப்புரிமை © 2022
முதல் பதிப்பு 2022

திருமூலர் அருளிய

திருமந்திரம்

நான்காம் தந்திரம்

விளக்கம்

த. சரவணன்

திருமூலர் வரலாறு

திருக்கைலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல் பூண்ட திருநந்தி தேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள் அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற சுந்தரநாதர் என்னும் சிவயோகியார் ஒருவர் இருந்தார். இவர் திருக்கைலாய பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர் மரபில் முதலானவராகிய அகத்தியருக்கு அடுத்தவர் இவர் எனக் கருதப்படுகின்றார். திருக்கைலாயத்தில் திருநந்தி தேவரின் உபதேசம் பெற்றவர்.

இவர் அகத்திய முனிவரிடத்தில் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி அகத்தியர் எழுந்தருளியிருக்கும் பொதிகை மலையை அடையும் பொருட்டு திருக்கையிலையிலிருந்து புறப்பட்டு தென்திசை நோக்கி சுந்தரநாதன் என்ற பெயருடன் சென்றார். அகத்தியரை காணச் செல்லும் வழியில் சாத்தனூர் என்னும் ஊரில் பசுக் கூட்டங்கள் கதறி அழுவதைக் கண்டார். பசுவை மேய்க்கும் மூலன் என்பவன் இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச்சுற்றி வந்து வருந்தி அழுதன. மேய்ப்பான் இறந்தமையால் பசுக்களைடைந்த துயரத்தினைக் கண்ட சிவயோகியாரது உள்ளத்தில் இப்பசுக்களின் துயரத்தினை நீக்குதல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இந்த இடையன் உயிர் பெற்று எழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்காது என எண்ணிய சிவயோகியார் தம்முடைய திருமேனியைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்னும் சித்தியினால் தமது உயிரை இறந்த இடையனது உடம்பில் புகுமாறு செலுத்தினார். மூலன் அதுவரை உறங்கியிருந்தவன் போல் சட்டென்று கண் விழித்து திருமூலராய் எழுந்தார்.

திருமூலர் விழித்தெழுந்ததைக் கண்டு பசுக்கள் மகிழ்ந்து அவரது உடலை நாவினால் நக்கித் தங்களின் அன்பை வெளிப்படுத்தின. அவரும் பசுக்களைத் தட்டிக்கொடுத்து அவற்றோடு சேர்ந்து மகிழ்ந்தார். மாலை வந்ததும் வீடு நோக்கி பசுக்கள் புறப்பட திருமூலரும் கூடவே புறப்பட்டார். ஒவ்வொரு பசுவும் தத்தம் வீடு அறிந்து புகுந்து கொண்டன. திருமூலர் அவற்றை எல்லாம் வீடு சேர்த்தார். ஆனால் மூலன் மட்டும் அவரது வீட்டிற்கு போக விரும்பவில்லை. அவர் ஞான திருஷ்டியால் மூலனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதை அறிந்தார். அதனால் தனியாக ஒரு இடத்தில் அமர்ந்தார்.

மூலனின் மனைவி கணவன் வரவை வெகு நேரமாக எதிர்பார்த்துப் பயன் ஏதும் இல்லாததால் கணவனைத் தேடிப் புறப்பட்டாள். வரும் வழியிலே ஓரிடத்தில் கணவன் அமர்ந்து இருப்பதைக் கண்டு அருகே சென்று வீட்டிற்கு வரக் காலதாமதம் ஆனது பற்றி கேள்விகளாக கேட்டாள். திருமூலர் மௌனமாகவே

இருந்தார். மூலனின் மனைவிக்கு புரியவில்லை. திருமூலரின் கையைத் தொட்டு அழைக்க முற்பட்டாள். அம்மையார் செய்கை கண்டு திருமூலர் சிறிது எட்டி விலகினார். அதைக் கண்டு அந்தப் பெண்மணி அஞ்சி நடுங்கி உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தது? எதற்காக இப்படி விலகுகிறீர்கள்? என்று மன வருத்தத்தோடு கேட்டாள். என்னால் உன் வீட்டிற்கு வர முடியாது. உனக்கும் எனக்கும் இனி மேல் எவ்வித உறவும் கிடையாது. அதனால் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு அமைதி பெறுவாயாக என்று கூறினார். அதற்குமேல் அவள் முன்னால் நிற்பதும் தவறு என்பதை உணர்ந்து திருமூல யோகியார் அத்தலத்திலுள்ள திருமடம் ஒன்றுக்குச் சென்று சிவயோகத்தில் அமர்ந்தார். கணவனின் நிலையைக் கண்டு கதிகலங்கிப் போனாள் மனைவி. கணவனின் மனமாற்றத்தைப் பற்றி ஒன்றும் புரியாமல் கவலையோடு வீடு திரும்பினாள்.

மறுநாள் மூலனின் மனைவி சுற்றத்தாரை அழைத்துக்கொண்டு அவர் இருக்குமிடத்திற்கு வந்தாள். யோக நிலையில் அமர்ந்திருக்கும் திருமூலரின் முகத்தில் தெய்வ சக்தி தாண்டவமாடுவது போன்ற தனிப் பிரகாசம் பொலிவு பெறுவது கண்டு இவர் ஒரு முனிவர் என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இருந்தும் அவர்கள் மூலனின் மனைவிக்காக திருமூலரிடம் வாதாடினார்கள். ஒரு பலனும் கிட்டவில்லை. அதன் பிறகு அவர்கள் மூலனின் மனைவியிடம் உன் கணவர் முன்னைப்போல் இல்லை. இப்பொழுது அவர் முற்றும் துறந்த முனிவராகி விட்டார். இனிமேல் இந்த மெய்ஞானியாரோடு வாழ வேண்டும் என்பது நடக்காத காரியம் என்று கூறினர். அவர்கள் கூறியதைக் கேட்ட மூலனின் மனைவி அவரது கால்களில் விழுந்து வணங்கி வேதனையோடு வீடு திரும்பினாள். பிறகு திருமூலர் மறைவாக இருந்த தமது திருமேனியைத் தேடினார். கிடைக்கவில்லை. முதலில் யோகியாருக்கு சற்று வியப்பாகவே இருந்தது. யோக நிலையில் அமர்ந்தார். தமது தபோ வலிமையால் இறைவன் அருளிய வேத ஆகமப் பொருள்களைத் தமிழிலே வகுத்து உலகோர்க்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே இறைவன் தம் உடலை மறைத்தருளினார் என்பதை உணர்ந்து கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்ட திருமூலர் திருவாவடுதுறை திருத்தலத்தை அடைந்து மூலவர் பெருமானைப் பணிந்தவாறு மதிலுக்கு வெளியே மேற்கு பக்கமாக அமைந்துள்ள அரசமரத்தின் அடியில் அமர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளையும் ஓர் ஆண்டிற்கு ஒரு மந்திரப் பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களை பாடினார். உலகோர் உய்யும் பொருட்டுத் திருமந்திர மாலையை அருளியபின் திருமூலர் சிதம்பரம் சென்று தில்லை நாதனுடன் கலந்து தனது குருவாகிய நந்தியிடம் தஞ்சம் அடைந்தார்.

திருமூலர் திருமந்திரம் எழுதி முடித்தவுடன் அதை வெளியிடவில்லை. யாரும் அறியாதவாறு தான் அமர்ந்திருந்த திருவாவடுதுறை ஆலயத்தின் கொடி மரத்தின் அடியில் தான் எழுதிய திருமந்திரம் அடங்கிய ஓலைச் சுவடிகளைப் புதைத்து வைத்துவிட்டு அவர் சிதம்பரம் சென்று நந்தீசுவரருடன் கலந்து விட்டார். அதன் பிறகு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சைவக் குரவர்கள் என்று போற்றப்படும் நால்வர்களில் ஒருவருமான திருஞான சம்பந்தர் திருவாவடுதுறை திருத்தலத்தின் வாயிலுக்குள் நுழைந்தவுடன் இறைவனின் திருவருளால் திருமூலர் அருளிய திருமந்திரத்தின் அற்புதமான தமிழ் வாசனை அவரை வந்தடைய அதனால் ஈர்க்கப்பட்டுத் தன்னுடன் வந்தவர்களிடம் இங்கே அருமையான தமிழ் வாசனை வருகின்றதே என்ன என்று பாருங்கள் என்று கூறி கொடி மரத்தின் அடியில் உள்ள மண்ணைத் தோண்டச் செய்து அங்கே திருமூலர் புதைத்து வைத்திருந்த திருமந்திர ஓலைச் சுவடிகளை கண்டு எடுத்தார். அவற்றை படித்து உணர்ந்து அதன் அருமை பெருமைகளை உலகோர் அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்று வெளியிட்டு அனைவருக்கும் ஓதி அருளச் செய்தார்.

பிற்காலத்தில் வந்த சேக்கிழார் பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றித் தான் எழுதிய பெரிய புராணத்தில் திருமூலரை நாற்பத்து ஆறாவதாக சேர்த்து திருமூலரின் வாழ்க்கை வரலாற்றையும் திருமந்திரப் பாடல்களின் குறிப்பும் எழுதி வைத்தார். அவருக்குப் பின் வந்த நம்பியாண்டார் நம்பி சைவ சான்றோர்கள் பலர் அருளியிருந்த சைவத் திருமுறைகளை ஒன்றாகத் தொகுத்த போது திருமூலர் அருளிய திருமந்திரத்தையும் பத்தாவது திருமுறையாகத் தொகுத்து அருளினார்.

திருமந்திரம் முன்னுரை

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் படைப்பு ஆகும். இது ஒன்பது தந்திரங்களுடன் மூவாயிரம் பாடல்கள் உடையது. ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும் ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும் அந்த ஒவ்வொரு வரியிலும் புள்ளி எழுத்துக்கள் நீங்கலாக 12 எழுத்துக்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

வேதம் ஆகமம் ஆகிய இரண்டிற்கும் திருமந்திரம் விளக்கம் தருகிறது. திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக பெரியோர்களால் வைக்கப்பட்டுள்ளது. தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்று சான்றோர் கூறுவர். மேலும் சிவமே அன்பு அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. திருமூலர் திருமந்திரத்தில் மூன்று அதிமுக்கியமான வாக்கியங்களை இன்றளவும் நாம் பயன்படுத்தும் விதமாக அருளியுள்ளார் அவையாவன:

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
அன்பே சிவம்

திருமந்திரம் நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்ற பெயரே முதலில் இருந்தது. அந்த நூலில் இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாக உள்ளதால் அந்த நூல் திருமூலர் திருமந்திரம் என்று பின்னர் வழங்கப்பட்டது.

எமது முன்னுரை

திருமந்திரம் பாயிரம் பகுதியில் திருமந்திரத் தொகை சிறப்பில் திருமூலர் திருமந்திரத்தை பற்றி விவரிக்கிறார்.

திருமூலனாகிய யாம் வழங்கிய இந்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களும் யாம் பெற்ற இன்பம் இந்த உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் பெற வேண்டும் என்ற அன்பினாலேயே எம் குருநாதன் இறைவனின் அருளால் வழங்கப் பெற்றது. இந்த மந்திரங்களைக் காலையில் எழுந்து அவற்றின் பொருளை ஓதி உணர்ந்து அதில் உள்ள கருத்துக்களைக் கடைபிடித்து வந்தால் உலகங்கள் அனைத்திற்கும் தலைவனாகிய சதாசிவமூர்த்தியைச் சென்று அடைந்து யாம் பெற்ற பேரின்பத்தை அனைவரும் பெறலாம் என்று பாடல் #99 இல் அருளுகிறார்.

உயிர்கள் அனைத்தும் இறைவனை உணர்ந்து வீடு பேறு அடைய வேண்டும் என்கின்ற அன்பினால் யாம் உயிர்களுக்கு வைத்த பேரின்ப பரிசு திருமந்திரம் என்னும் பேரின்ப நன்மை தரும் நூலாகும். இந்த நூலிலுள்ள மூவாயிரம் பாடல்களில் யாம் வழங்கியிருப்பது இறைவனை அடைந்து முக்தி பெறும் வழிகளும் அதன் முடிவில் இறைவனோடு என்றும் கலந்து இருக்கும் பேரின்பத்தின் விளக்கங்களும் ஆகும். இறைவனின் அருளால் அறிவுப்பூர்வமாக இயற்றப்பெற்ற இந்த மூவாயிரம் பாடல்களும் அனைவருக்கும் பொதுவானவையாகும். இந்த மூவாயிரம் பாடல்களையும் தமது சிந்தையில் வைத்து அவற்றின் பொருளுணர்ந்து போற்றி வருபவர்களுக்கு அனைத்துவிதமான சிறப்புகளையும் கொடுக்குமென பாடல் #100 இல் அருளுகிறார்.

இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாகவும் சொல்லினால் விவரிக்க முடியாத இந்த சிறப்பு வாய்ந்த திருமந்திரம் பாடல்களுக்கு திருமூலரின் அருளாலும் எமது குருநாதர் ஆதி அருணாசல சித்தர் கே.வி. நாராயணன் அவர்களின் அருளாலும் தினம் ஒரு திருமந்திரம் பாடலுக்கு சில வருடங்களாக விளக்கம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

இன்னும் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. எழுதியவரை பாடல்களை சில வருடங்களாக தினந்தோறும் முகநூல் [பேஸ்புக்] வழியாகவும் புலனம் [வாட்ஸ்அப்] வழியாகவும் கேவிஎன்திருமூலர்.காம் வலைதளத்தின் வழியாகவும் பதிவேற்றிக் கொண்டிருக்கின்றோம். தினமும் ஒரு திருமந்திரம் பாடலுடன்

விளக்கத்தை இவற்றின் மூலம் படித்து பயன் பெறுமாறு அன்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். திருமந்திர விளக்கங்கள் அனைத்தும் இறுதியானவைகள் அல்ல. தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது அதன் உண்மை தன்மை விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டு திருத்தப்படுகின்றன. படிப்பவர்கள் தங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு விடை தெரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள எமது மின்னஞ்சல் [ஈமெயில்] வழியாகவும் வலைதளம் மற்றும் முகநூல் [பேஸ்புக்] புலனம் [வாட்ஸ்அப்] வழியாகவும் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.

திருமந்திரம் பாடல்களை 3000 வருடங்கள் தவம் இருந்து 3000 பாடல்கள் எழுதியிருக்கின்றோம் என்று திருமூலர் தனது பாடல்கள் வழியாகவே அருளியிருக்கின்றார். ஆனால் பல தலைமுறைகள் தாண்டி தற்போது நமக்கு கிடைத்திருப்பவை 3047 பாடல்கள். இதில் அதிகமாக இருக்கும் 47 பாடல்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் தெரிந்து கொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது எழுத்துப்பணிக்கு உதவி புரிந்த நண்பர் ஸ்ரீநிவாசன் அவரின் பணி மிகவும் மகத்தானது. அவருக்கு வணக்கத்துடன் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தினந்தோறும் எழுதிய திருமந்திரத்தை புத்தக வடிவாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எம்மை உற்சாகப்படுத்திய இணையதள நண்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

PDF புத்தகமாக உள்ள திருமந்திரம் பாடல்களின் விளக்கங்கள் கொண்ட இந்த முதல் தந்திரத்தின் தொகுப்பு அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்றும் அனைவரும் படித்து பயன் பெற வேண்டும் என்றும் அமேசான் கிண்டிலிலும் பேஸ்புக் வாட்ஸ்அப் மற்றும் வலைதளங்களிலும் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. இறை பணியாக செய்யும் இச்செயலை தயவு செய்து யாரும் தவறாக பயன்படுத்த வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

த. சரவணன்
https://kvnthirumoolar.com
https://www.facebook.com/groups/thirumandhiram.daily/
saravana.0801@gmail.com

வாழ்த்துரை

குருவருளும் திருவருளும் கொண்டு திரு. சரவணன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிதனைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

ஆதி அருணாசல சித்தர் குருஜி ஸ்ரீ நாராயணன் அவர்களின் அன்பும் ஆசியாலும் காக்கப்பட்ட எங்களுக்கு சற்குரு பகவான் திருமூலரின் பேரருளும் வழிகாட்டுதலும் கிடைக்கப் பெற்றோம். திரு. சரவணன் அவர்கள் சிறு வயது முதலே சிறந்த பக்தியும் ஆன்மீக நாட்டமும் உள்ளவர். பல வழிபாடுகளில் அவர்தம் ஆற்றிய பணிகள் பல. அவரை "தம்பி சரவணன்" என சற்குரு பகவான் திருமூலரின் அருள்வாக்கில் அழைக்கப்பட்டு பாரட்டு பெற்று ஒரு எடுத்துக் காட்டாக திகழ்பவர்.

அவரது ஆர்வத்தினால் தொடர்ந்து பல ஆன்மீக நூல்களைப் படிப்பது மட்டுமல்லாது திருமந்திரத்தை பல முறை படித்து உட்பொருள் அறிந்து யாவருக்கும் பயன்படுமாறு எளிய முறையில் பதிவிட்டு வருகிறார். தன்னுடைய முதன் முயற்சியாக முதல் இரண்டு தந்திரங்களின் பாடலுடன் பொருளினை சிறந்த விளக்கத்துடன் யாவரும் பயனுறும் வண்ணம் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் PDF வடிவில் வெளியிட உள்ளார்.

இவரது முயற்சி தொடர வேண்டும். அதில் யாவரும் பயன் பெற சற்குரு பகவான் திருமூலரின் திருவடிகளை வணங்கி போற்றி அவருக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

வ.செ. தணிகைநாயகம்.
செயற் பொறியாளர் [ஓய்வு]
தமிழ்நாடு மின்சார வாரியம்.
சென்னை.

பாடல் #884: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்நம் பிரானின்ஓர் எழுத்தே.

விளக்கம்:

ஞானங்களிலெல்லாம் மேன்மையானது என்று ஞானியரால் புகழப்படுகின்ற சிவஞானத்தையே யான் போற்றிக் கொண்டாடுகிறேன். எனது சிந்தனையில் அனைத்திற்கும் தலைவனாகிய இறைவனின் போற்றுதற்குரிய திருவடிகளையே சிந்தித்து சிவஞானத்தில் தெளிவு பெறுகிறேன். யான் தெளிந்து பெற்ற சிவயோகத்தை உங்களுக்கும் சொல்லுகின்றேன் கேளுங்கள். சிவயோகமாவது நமது இறைவனைப் போற்றும் மந்திரங்கள் அனைத்திற்கும் மேலானதாகிய ஓங்காரம் எனும் ஒற்றை எழுத்து மந்திரத்தை உச்சரிக்காமல் எண்ணத்தில் வைத்து மூச்சுக்காற்றோடு கலந்து ஜெபித்துக் கொண்டே இருப்பதாகும். இதையே யானும் எப்போதும் செய்து கொண்டே இருக்கிறேன்.



பாடல் #885: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

ஓரெழுத் தாலே உலகெங்குந் தானாகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கம துற்றதே.

விளக்கம்:

பிரணவமாகிய ஓம் என்னும் ஓரெழுத்து மந்திரத்தால் அண்ட சராசரங்கள் அனைத்தும் தாமாகி விரிந்து பரவி இருக்கும் இறை சக்தியே அகாரம் உகாரம் ஆகிய இரண்டு எழுத்துக்களால் சிவம் சக்தி எனும் இருவராக இருந்து பிறகு அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்று எழுத்துக்களால் ஒன்றாகி மாபெரும் ஜோதியாக உருவெடுப்பதை மாயை எனும் பேரெழுத்தில் மறைக்கப்பட்டிருக்கும் உலத்தவர்கள் அறிந்துகொள்ளாமல் இறை சக்தியை பலதில் தேடி மயங்குகின்றார்கள்.



பாடல் #886: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தேவர் உறைகின்ற சிற்றம் பலம்என்றும்
தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றும்
தேவர் உறைகின்ற திருவம் பலமே
தேவர் உறைகின்ற தென்பொதுவே ஆமே.

விளக்கம்:

தேவாதி தேவர்களுக்கெல்லாம் தலையான தேவனாகிய இறைவன் தங்கியிருக்கும் இடமே சிற்றம்பலம் என்றும், சிதம்பரம் என்றும், திரு அம்பலம் என்றும், தென் நாடு என்றும் போற்றப்படுகின்றது. அந்த தென்நாட்டில் வீற்றிருக்கும் இறை சக்தி உலகத்திலுள்ள அனைவருக்கும் பொதுவானது ஆகும்.



பாடல் #887: நான்காம் தந்திரம் - 1. அசபை (உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்)

ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத் தனவரத் தாண்டவம்
ஆமே பிரளய மாகும்அத் தாண்டவம்
ஆமே சங்காரத் தருந்தாண் டவங்களே.

விளக்கம்:

பாடல் #886 ல் உள்ளபடி உலகத்திலுள்ள அனைவருக்கும் பொதுவான இறை சக்தி வீற்றிருக்கும் தென் நாட்டு சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலம் இறைவனின் ஐந்து வகையான திருக்கூத்துக்களை [நடனம்] காட்டி நிற்கின்றது. அவை அண்ட சராசரங்களில் இருக்கும் அனைத்து உயிர்களையும் படைக்கின்ற அற்புத தாண்டவம், அந்த உயிர்களில் உண்மை ஞானம் பெற்றவருக்கு பேரின்பத்தைக் கொடுக்கும் ஆனந்த தாண்டவம், அனைத்து உயிர்களின் வாழ்க்கை முழுதும் அவற்றைத் தாங்கிக் கொண்டு மூச்சாய் உயிராய் இயங்குகின்ற அனவரத் தாண்டவம், அவற்றின் விதி முடியும் போது உலக வாழ்க்கையை அழித்து அருளுகின்ற சங்காரத் தாண்டவம், உலகங்களையும் அதிலிருக்கும் உயிர்களையும் முற்றாக அழித்துத் தம்மோடு மீண்டும் சேர்த்துக்கொள்ளும் ஊழிக்காலப் பிரளயத் தாண்டவம் ஆகிய பெருமை வாய்ந்த ஐந்து தாண்டவங்களே ஆகும்.



பாடல் #888: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்
தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்
தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரந்
தாண்டவக் கூத்துத் தமனியத்திற் தானே.

விளக்கம்:

ஈடு இணையில்லாத தனியெழுத்தான ஓம் என்கிற பிரணவ மந்திரமே இறைவன் ஆடும் தாண்டவத் திருக்கூத்து ஆகும். அந்த தாண்டவமாக இருப்பது அனைத்து உயிர்களுக்கும் மாபெருங்கருணையில் அருள்புரியும் இறைவனது அருளல் தொழிலாகும். தாண்டவத் திருக்கூத்து ஆதியும் அந்தமுமின்றி தனித்து நிற்கும் இறைவனின் தன்மை ஆகவும் இருக்கிறது. இந்தத் தாண்டவத் திருக்கூத்துதான் தில்லையில் பொன்னம்பலத்தில் எப்போதும் நடந்துகொண்டு இருக்கின்றது.



பாடல் #889: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலமுந் தானே.

விளக்கம்:

ஆதி அந்தமில்லாத இறை சக்தியாகிய பரம்பொருளே பேரொளியின் ஒளி உருவத் தத்துவமாகவும் ஓங்கார மந்திரத்தின் அகார உகார எழுத்துக்களாகவும் பேரொளியின் ஒளி உருவத் தாண்டவத் திருக்கூத்தாகவும் அண்ட சராசரங்கள் அனைத்தையும் தாங்கி அருட் சக்தியாகிய தம்மையும் தாங்கி நிற்பதாகவும் இருக்கின்றது.



பாடல் #890: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தராதல மூலைத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமவா சியவாந்
தராதலஞ் சொல்லிற் றான்வா சியவாகுந்
தராதல யோகந் தயாவாசி யாமே.

விளக்கம்:

அண்ட சராசரங்களிலுள்ள அனைத்து உயிர்களையும் தாங்கி நிற்கும் ஆதி அந்தமில்லாத பரம்பொருளாகிய இறை சக்தியே இந்த உலகத்திலுள்ள உயிர்களுக்குள் மூலாதாரத்தில் நமசிவாய என்றும் அதைச் சுற்றியுள்ள அக்கினி மண்டலத்தில் நமவாசிய என்றும் உடலைச் சுற்றியுள்ள சூரிய மண்டலத்தில் வாசிய என்றும் உடலைத் தாண்டி யோக நிலையில் பெறும் கருணையான பரவெளியைச் சுற்றியுள்ள சந்திர மண்டலத்தில் வாசி என்றும் மந்திரச் சொற்களாக இருக்கின்றது.



பாடல் #891: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா விடம்என்ப
ஆமே திருக்கூத் தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதியே ஆனந்த மாமே.

விளக்கம்:

பிரணவ மந்திரமான ஓங்காரத்தில் அகாரம் சிவமாகவும் உகாரம் சக்தியாகவும் இருக்கின்றது. இந்த இரண்டு பரம்பொருள்களைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் அது சிற்றறிவினால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும். இவற்றை இறைவன் ஆடும் திருக்கூத்தின் உண்மையான ஞானத்தைப் பெற்ற யோகியர்களால் மட்டுமே அறிந்து உணர முடியும். ஞானத்தை பெற்று அகார உகாரமாக இருக்கும் சிவசக்தியை அறிந்து உணர்ந்து விட்டால் அதுவே அவர்களுக்கு இறைவனிடத்தில் சரணாகதியாகவும் பேரின்பம் கொடுக்கும் பேரானந்தமாகவும் இருக்கும்.



பாடல் #892: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

ஆனந்தம் மூன்றும் அறிவிரண் டொன்றாகும்
ஆனந்தம் சிவாய அறிவார் இங்கில்லை
ஆனந்த மோடும் அறியவல் லார்கட்கு
ஆனந்தக் கூத்தாகவே அகப்படுந் தானே.

விளக்கம்:

ந என்கின்ற சிகார எழுத்தும் ம என்கின்ற வகார எழுத்தும் அறிவெழுத்துக்கள் ஆகும். ந எழுத்து அறிவைச் செலுத்துவதும் ம எழுத்து செலுத்தியவாற்றிலே சென்று அறிவதும் ஆகும். அறிவதாகிய வகாரம் தன்னைச் செலுத்துவதாகிய சிகாரத்திலே அடங்கி விடும். அதோடு யகரமாகிய சிவம் சேர்க்க வரும் சிவாய என்னும் மூன்றெழுத்து ஆன்மாக்களுக்கு ஆனந்தத்தை வழங்குவதை அறிபவர் மிகச் சிலரே. இவற்றை அறிந்து கொள்பவர்களுக்கு சிவன் ஆனந்த கூத்தனாய் இருப்பதும் அவன் ஆனந்தக்கூத்தும் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #893: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

படுவ திரண்டு பலகலை வல்லார்
படுகுவ தோங்காரம் பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே.

விளக்கம்:

இறைவனை பல வகையான யோகத்தாலும் ஞானத்தாலும் தமக்குள் உணர்ந்து அடைந்த இறைவனை உணர்ந்து கொள்ளும் முறைகளாக யோகியர்களாலும் ஞானியர்களாலும் சொல்லப்படுகிறது. அவை அம் சம் என்கிற இரண்டு பீஜங்களும் ஓங்காரம் [ஓம்] பஞ்சாட்சரம் [நமசிவாய] எனும் இரண்டு ஆதார மந்திரத் தத்துவங்கள் அடங்கி இருக்கும் இறைவனின் சங்காரத் தாண்டவத்தின் அருளல் தொழிலுமாகிய இவை அனைத்தும் உயிர்களின் உடலுக்குள் இருக்கும் ஆறு சக்கரங்களிலும் பரவி இருக்கும் முறைகளும் ஆகும்.



பாடல் #894: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்டுறை புன்னையும்
வாறே திருக்கூத் தாகம வசனங்கள்
வாறே பொதுவாகு மன்றின் அமலமே.

விளக்கம்:

ஓங்காரத்தின் அகார உகாரங்களே சதாசிவ தத்துவமாகவும், எக்காலத்திலும் மாறாத ஆகமங்களாகவும், வண்டுகள் மகிழ்ந்து தங்கும் புன்னை மரம் போல் அடியவர்கள் மகிழ்ந்து தங்கும் சிவ பரம்பொருளின் சரணாகதி திருவடிகளாகவும் தில்லையில் ஆடும் திருக்கூத்தாகவும் ஆகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிமுறைகளாகவும் உலகங்கள் அனைத்திற்கும் பொதுவான தென்னாட்டு சிற்றம்பலத்தின் மலமாசுக்களை நீக்கும் பொன் மன்றமாகவும் இருக்கின்றன.



பாடல் #895: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

அமலம் பதிபசு பாசம் ஆகமம்
அமலம் திரோதாயி யாகுமா னந்தம்
அமலம் சொல்ஆணவ மாயை காமியம்
அமலம் திருக்கூத்தா டுமிடந் தானே.

விளக்கம்:

பதி பசு பாசம் என்ற சைவ சித்தாந்தத்தை உணர்வது அமலமாகும். ஆகமங்களை உணர்வதின் மூலம் மாயையை நீங்கி கிடைக்கும் பேரானந்தம் அமலமாகும். ஆணவம் மாயை கன்மம் ஆகிய மூன்று மலங்களும் இல்லாதது அமலமாகும். இறைவன் திருக்கூத்தாடுகின்ற இடங்களெல்லாம் மல மாசுக்கள் இல்லாத தூய்மையான அமலமாகும்.

குறிப்பு: ஆணவம் மாயை கன்மம் ஆகிய மாசுக்கள் இல்லாத தூய்மை அமலம் எனப்படும்.



பாடல் #896: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தானே தனக்குத் தலைவனு மாய்நிற்குந்
தானே தனக்குத் தன்மலையு மாய்நிற்குந்
தானே தனக்குத் தன்மயமு மாய்நிற்குந்
தானே தனக்குத் தலைவனு மாய்ஆமே.

விளக்கம்:

இறைவன் தனக்குத் தானே குருவாக நின்றும் அனைத்தையும் தாங்கி தன்னையும் தாங்கி நிற்கும் மலையாக நின்றும், அனைத்திலும் பரவி தனக்குள்ளும் பரவி நின்றும் தனக்கு தானே இறைவனாகவும் இருக்கின்றான்.

குறிப்பு: இறைவன் தனக்குத் தானே என்னவாகவெல்லாம் இருக்கின்றார் என்பதை இப்பாடலில் அருளுகின்றார்.



பாடல் #897: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே.

விளக்கம்:

அனைத்திற்கும் தலைவனான இறைவன் அனைத்திற்கும் மேலான திருக்கூத்தின் தலைவனாகவும் அனைத்தையும் தாங்கி நிற்கும் சத்திய பாத்திரத்தின் தலைவனாகவும் பேரறிவான ஞானத்தின் தலைவனாகவும் இணையில்லாத திருவடிகளுக்கு தலைவனாகவும் இருக்கின்றான்.

குறிப்பு: இறைவன் எதற்கெல்லாம் தலைவனாக இருக்கின்றார் என்பதை இப்பாடலில் அருளுகின்றார்.



பாடல் #898: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யீரைஞ்ச தாகும்
இணையார் கழலிணை ஐம்பத்தொன் றாகும்
இணையார் கழலிணை ஏழா யிரமே.

விளக்கம்:

ஈடுஇணையில்லாத இறைவனின் திருவடிகளின் உருவமே அகாரம் உகாரம் மகாரம் எனும் மூன்று எழுத்துக்கள் சேர்ந்த ஓங்காரமாகவும் நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரமாகவும் இருக்கின்றது. அந்தத் திருவடிகளே உயிர்களின் உடலுக்குள் பத்துவித காற்றுக்களாகவும் மொத்தம் 51 இதழ்கள் கொண்ட ஆறு ஆதார சக்கரங்களின் 51 யோக நாடிகளாகவும் ஆதார ஏழாயிரத்திலிருந்து அதன் பரிணாமங்களில் மொத்தம் ஏழு கோடி வரையிலும் இருக்கும் மந்திரங்களாகவும் இருக்கின்றன.

குறிப்பு: இறைவனுடைய இணையில்லாத திருவடிகள் எதுவாகவெல்லாம் இருக்கின்றது என்பதை இப்பாடலில் அருளுகின்றார்.



பாடல் #899: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்தும் எழுகோடி தானாகி
ஏழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழா யிரண்டாக இருக்கின்ற வாறே.

விளக்கம்:

பாடல் #898 ல் உள்ளபடி ஆதார மந்திரங்கள் ஏழாயிரமாக இருந்தாலும் அதன் பரிணாமங்கள் இருபதாயிரமாகவும் முப்பதாயிரமாகவும் பெருகி முடிவில் ஏழு கோடி வரையில் இருக்கின்றது. இந்த மந்திரங்கள் அனைத்தும் இறைவனின் சொரூபமாகவே இருக்கின்றது. ஆதாரமான இந்த ஏழாயிரம் மந்திரங்களே ஏழு கோடி மட்டுமில்லாமல் இன்னும் பல பரிணாமங்களில் எண்ண முடியாத அளவு பெருகிக் கொண்டே இருக்கின்றன. இருந்தாலும் அத்தனை மந்திரங்களும் அகார உகாரமாகிய சிவசக்தியிலேயே அடங்கி இருக்கின்றன.



பாடல் #900: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்
இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரம் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே.

விளக்கம்:

அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கின்ற மந்திரங்கள் ஏழாயிரமாகும். இந்த மந்திரங்களுக்குள் இல்லாத சக்திகளே இல்லை. இந்த மந்திரங்கள் அனைத்தும் இறைவனின் திரு உருவமாக இருக்கின்றது. உள்ளம் உருக சொன்னால் பலனளிக்கக் கூடியதாக இருக்கும் அனைத்து மந்திரங்களும் இறைவனின் திருஉருவமாகவே இருக்கின்றன.



பாடல் #901: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

தானே தனக்குத் தகுநட்டந் தானாகும்
தானே அகார உகாரம தாய்நிற்கும்
தானே ரீங்காரத்து தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடனந் தானே.

விளக்கம்:

உலகில் இறைவன் ஆடுகின்ற திருக்கூத்து தாண்டவங்களுக்கு தகுந்த தாளமாகவும் தாள மந்திரமான ஓங்காரத்தில் அகார உகாரமாகவும் தாளங்களின் ஓசையாகவும் தாண்டவ நடனமாகவும் இறைவன் ஒருவனே இருக்கின்றான்.

குறிப்பு: இறைவனின் தாண்டவங்களில் எதுவாகவெல்லாம் அவனே இருக்கின்றான் என்பதை இப்பாடலில் அறியலாம்.



பாடல் #902: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

நடமிரண் டொன்றே நளினம தாகும்
நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து
நடமிரண் டொன்றே நகைசெயா மந்திரம்
நடம்சிவ லிங்கம் நலம்செம்பு பொன்னே.

விளக்கம்:

இறைவன் தாம் ஒருவனாகவே ஆடுகின்ற திருநடனங்கள் இரண்டு வகையாகும். அதில் முதலாவது அனைத்தையும் உருவாக்குகின்ற அழகிய ஆனந்த நடனம். இரண்டாவது அனைத்தையும் அழிக்கின்ற ருத்ர தாண்டவ கூத்தாகும். இந்த நடனம் கூத்து இரண்டையும் மகிழ்ச்சியோ துன்பமோ இல்லாமல் சமமாகப் பார்க்க வைக்கும் பிரணவ மந்திரத்தை உணர்ந்து இந்த இரண்டு திருநடனங்களின் உருவமாக இருக்கும் சிவலிங்கத் தத்துவமே தமக்குள்ளும் இருக்கிறது என்பதை உணர்ந்த சாதகர்களுக்கு செம்பு போன்ற கடினமான உடல் பொன் போல் ஜொலிக்கின்ற ஒளி உடம்பு ஆகிவிடும்.



பாடல் #903: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

செம்புபொன் னாகுஞ் சிவாய நமஎன்னில்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்
செம்புபொன் னாவது திருவம் பலமே.

விளக்கம்:

சிவாயநம என்னும் மந்திரத்தை மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கினால் பாடல் #902 ல் உள்ளபடி செம்பு போன்ற கடினமான உடல் பொன் போல் ஜொலிக்கின்ற ஒளி உடம்பு ஆகிவிடும். அதன் பின்பு இறைவன் ஆடுகின்ற சித்தர்களின் அம்பலத்தில் சாதகர்களின் எண்ணங்கள் சென்று சேரும். அதன்பிறகு அகார உகாரத்தின் எழுத்து வடிவங்களான ஸ்ரீம் கிரீம் என்னும் மந்திரங்கள் சாதகர்களின் எண்ணத்தில் உருவாகும். அதன் பிறகு சாதகர்களின் பொன்னாக மாறிய ஒளி உடம்பு இறைவன் திருக்கூத்து ஆடுகின்ற திருஅம்பலமாகும்.

குறிப்பு: பொன்னாக மாறிய ஒளி உடம்பில் இறைவன் திருக்கூத்து ஆடுகின்றார் என்பதை அறிந்து கொள்ளலாம்.



பாடல் #904: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக இருபத் தைஞ்சு
திருவம் பலமாச் செபிக்கின்ற வாறே.

விளக்கம்:

இறைவன் திருக்கூத்தாடுகின்ற திருவம்பலத்தை ஸ்ரீ சக்கரமாக வடிவமைக்க மேலிருந்து கீழாக ஆறு கோடுகளும் இடமிருந்து வலமாக ஆறு கோடுகளும் வரைந்தால் அதில் இருபத்தைந்து கட்டங்கள் வரும். இந்த கட்டங்களுக்குள் சிவயநம எனும் மந்திர எழுத்துக்களை மாற்றி எழுதி அதை உச்சரிக்காமல் ஜெபிக்க சாதகரின் உடம்பு இறைவன் திருக்கூத்து ஆடுகின்ற திருஅம்பலமாகும்.

குறிப்பு: இப்பாடலில் வரும் ஸ்ரீசக்கரம் என்பது புடம் செய்யப்பட்ட கட்டம் வரைந்து சிவயநம என்னும் எழுத்தை எழுத தகுதிவாய்ந்த உலோகத்தை குறிக்கும்.



பாடல் #905: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே.

விளக்கம்:

பாடல் 904ல் உள்ளபடி சிவயநம என்ற மந்திரத்தை இடைவிடாது பல காலம் உச்சரிக்காமல் மூச்சுக்காற்றோடு சேர்த்து ஜெபித்தால் பிறப்பில்லாத நிலையை அடையலாம். இறைவன் அருளால் திருவம்பலக் கூத்தின் தரிசனம் காணலாம். சாதகரின் செம்பு போன்ற கடினமான உடல் பொன் போல் ஜொலிக்கின்ற ஒளி உடம்பு ஆகிவிடும்.



பாடல் #906: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னாக வல்லோர்க் குடம்புபொற் பாதமே.

விளக்கம்:

பாடல் #904 இல் உள்ளபடி ஸ்ரீ சக்கரத்தில் பொறிக்கப்படும் சிவயநம எனும் மந்திரம் பொன் போன்ற மந்திரமாகும். அந்த மந்திரத்தை வாயால் உச்சரிக்காமல் மூச்சுக்காற்றோடு சேர்த்து ஜெபித்தால் உடலுக்குள் இருக்கும் ஐம்புலன்களும் இறையருளால் செம்மையாகும். அதன் பிறகு மந்திரத்தோடு இழுக்கப்பட்ட மூச்சுக்காற்றை உடம்பின் அனைத்து பகுதிக்கும் செலுத்தக்கூடிய சாதகர்களின் உடம்பே இறைவனின் பொன்னான பாதங்களாக மாறும்



பாடல் #907: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

பொற்பாதம் காணலாம் புத்திர ருண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே.

விளக்கம்:

பாடல் #906 இல் உள்ளபடி சாதகர்களின் உடம்பே இறைவனின் பொன்னான பாதங்களாக மாறிய பிறகு இறைவனும் தானும் வேறில்லை எனும் ஞானம் கிடைக்கும். இறைவனின் திருவடி மேல் ஆணையாக செம்பு போன்ற உடல் பொன் போன்ற ஒளி உடம்பாகும். இறைவனின் திருவடிகளை தமக்குள் தரிசிக்க இறைவனின் திருஉருவமே தாமாக உணரலாம். அவ்வாறு தரிசித்த சாதகர்களுக்கு பேரறிவு ஞானம் அடையும் வழிகள் சிந்தனையாக கிடைக்கும்.



பாடல் #908: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லினும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் சூக்குமமுந் தானே.

விளக்கம்:

பாடல் #907 இல் உள்ளபடி சாதகருக்கு கிடைத்த சிந்தனைகளை செயல்படுத்தினால் உடலை விட்டு ஆத்மா வெளியே சென்று பேரின்பத்தை அனுபவிக்கும். சாதகரின் உடலை விட்டு ஆன்மா வெளியே சென்றாலும் ஆன்மாவிற்கும் நல்ல உடலுக்குமான இணைப்பு விட்டு பிரியாமல் தானாகவே இணைந்து இருக்கும். இதனால் பாசமாகிய பற்று அறுந்து குண்டலினி சக்தி உடலைவிட்டு வெளியே சென்று பாடல் #858 இல் உள்ளபடி தலைக்கு மேல் இருக்கும் சந்திரமண்டலத்தோடு இணைந்துவிடும். இதனால் கிடைக்கும் ஞானம் இறைவன் ஆடுகின்ற திருக்கூத்துகளின் சூட்சுமங்களாகும்.

குறிப்பு: நல்ல உடல் என்பது பாடல் #902 இல் உள்ளபடி சாதகருக்கு கிடைக்கும் பொன் போன்ற ஒளி உடம்பாகும்.




பாடல் #909: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

சூக்குமம் எண்ணா யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான சிவனதா னந்தமே.

விளக்கம்:

பாடல் #908 இல் உள்ளபடி திருக்கூத்தின் சூட்சுமமாக இருக்கும் சிவயநம மந்திரத்தை அறிந்து எட்டாயிரத்திற்கும் மேலான எண்ணிக்கையில் உச்சரிக்காமல் மூச்சுக்காற்றோடு சேர்த்து ஜெபிக்கும் சாதகர்கள் இறைவனை அடையும் சூட்சுமமான பாதையை கண்டு அதில் செல்லும் சாதகர்கள் தங்களின் பல ஜென்மங்களாக தொடரும் சூட்சுமமான வினைகளை அழித்துவிடலாம். வினைகள் அழிந்த பின் இறைவனை உணர்ந்து பேரின்பத்தில் திளைத்திருக்கலாம்.



பாடல் #910: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]


ஆனந்த மென்றென் றறைந்திட மானந்த
மானந்த மாயீயூ யேயோமென் றைந்திட
மானந்த மஞ்சு மாதாயிடு மானந்த
மானந்த மம்மிரீ மம்க்ஷமா மாகுமே.

ஓலைச் சுவடியில் உள்ள திருமந்திர பாடலை எளிதாக படிக்க பிரித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனந்தம் என்று என்று அறைந்த இடம் ஆனந்தம்
ஆனந்தம் ஆ ஈ ஊ ஏ ஓம் என்ற ஐந்து இடம்
ஆனந்தம் அஞ்சும் அது ஆயிடும் ஆனந்தம்
ஆனந்தம் அம்–ஹ்ரீம்–ஹம்–க்ஷம்–ஹாம் ஆகுமே.

விளக்கம்:

பாடல் எண் 909 இல் உள்ளபடி கிடைத்த பேரின்பம் என்று அழைக்கப்படுகின்ற அனைத்தும் அடங்கியிருக்கும் இடமே பேரின்பமாகும். இந்த பேரின்பம் ஆ, ஈ, ஊ, ஏ, ஓம் ஆகிய ஐந்து ஆதார மந்திரங்களில் அடங்கியிருக்கின்றது. இந்த ஐந்து மந்திரங்களும் பேரின்பத்தின் வடிவமாக இருக்கின்றது. இந்த ஐந்து மந்திரங்களின் ஒலி வடிவமாக அம், ஹ்ரீம், ஹம், க்ஷம், ஹாம் ஆகிய ஐந்து பீஜங்கள் இருக்கிறன.



பாடல் #911: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

மேனி யிரண்டும் விலங்காமன் மேற்கொள்ள
மேனி யிரண்டு மிகாரவி காரியா
மேனி யிரண்டுமூ வாயியே யோவென்று
மேனி யிரண்டுமீ யோவூவா வேகூத்தே.

ஓலைச் சுவடியில் உள்ள திருமந்திர பாடலை எளிதாக படிக்க பிரித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மேனி இரண்டும் விலங்காமல் மேற்கொள்ள
மேனி இரண்டும் மிகார விகாரியா
மேனி இரண்டும் ஊ ஆ ஈ ஏ ஓ என்று
மேனி இரண்டும் ஈ ஓ ஊ ஆ ஏ கூத்தே.

விளக்கம்:

இறைவனது சொரூபமும் உயிர்களுடைய ஆன்மாவின் சொரூபமும் ஒன்றை விட்டு ஒன்று விலகிவிடாமல் மூச்சுக்காற்றோடு சேர்த்து ஜெபிக்கும் போது இறைவனது சொரூபமும் சாதகருடைய ஆன்மாவின் சொரூபமும் ஒன்றுக்கு ஒன்று அளவில் மாறுபடாமலும் ஒன்றோடு ஒன்று வேறுபடாமலும் இருக்கும். இறைவனது சொரூபமானது ஊ ஆ ஈ ஏ ஓ ஆகிய ஐந்து ஆதார மந்திரங்களாகவும் உயிர்களுடைய ஆன்மாவின் சொரூபமானது ஈ ஓ ஊ ஆ ஏ ஆகிய ஐந்து ஆதார மந்திரங்களாகவும் இருக்கின்றது. சாதகர்கள் இந்த மந்திரங்களை உச்சரிக்காமல் ஜெபிக்கும் போது இரண்டு சொரூபமும் ஒன்றாக கலப்பதே திருக்கூத்து ஆகும்.

குறிப்பு: இறைவனது சொரூபம் அனைத்திலும் கலந்திருக்கும் பேரொளியாகும். ஆன்ம சொரூபம் என்பது ஒவ்வொரு உயிர்களுடைய சிறிய ஒளி உருவமாகும். இறைவனது பேரொளியும் ஆன்மாவின் சிறிய ஒளியும் ஒன்றாக பாவித்து சாதகம் செய்யும் போது இறையருளால் ஆன்ம ஒளியானது பேரொளியால் காந்தம் போல் கவர்ந்திழுக்கப்பட்டு ஒன்றாக கலப்பதே திருக்கூத்தாகும்.



பாடல் #912: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]

கூத்தே சிவாய நமமசி வாயிடுங்
கூத்தே யாயீயூ யேயோ நமசிவாய வாயிடுங்
கூத்தே யோவாவீ யூயே யநமசிவா வாயிடுங்
கூத்தே யேயோவா யீயூவா யநமசி கோளொன்றுமாறே.


ஓலைச் சுவடியில் உள்ள திருமந்திர பாடலை எளிதாக படிக்க பிரித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கூத்தே சிவாயநம மசிவா ஆயிடும்
கூத்தே ஆ ஈ ஊ ஏ ஓம் நமசிவாய ஆயிடும்
கூத்தே ஓம் ஆ ஈ ஊ ஏ யநமசிவா ஆயிடும்
கூத்தே ஏ ஓம் ஆ ஈ ஊ வாயநமசி கோளொன்றும் ஆறே.

விளக்கம்:

இறைவன் ஆடுகின்ற திருக்கூத்தே சிவாயநம என்னும் மந்திரமாக இருக்கின்றது. இந்த மந்திரத்திற்கான ஆதார எழுத்துக்கள் ஊ ஏ ஓம் ஆ ஈ எனும் ஐந்து எழுத்து வடிவங்களாக இருக்கின்றது. இதை பாடல் 904 இல் உள்ளபடி மேலிருந்து கீழாக ஆறு கோடுகளும் இடமிருந்து வலமாக ஆறு கோடுகளும் வரைந்து எழுத்துக்களை மாற்றி மாற்றி அமைத்தால் வரும் திருவம்பலத்தை ஸ்ரீ சக்கரமாக வடிவமைத்தால் அதில் ஒன்பது கோள்களும் அடங்கி இருக்கும்.

குறிப்பு: பாடலில் உள்ளபடி ஸ்ரீ சக்கரம் அமைத்து ஆதார மந்திரங்களை உச்சரிக்காமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் சாதகர்களுக்கு ஒன்பது கோள்களும் இறையருளால் வசப்படும்.



பாடல் #913: நான்காம் தந்திரம் – 1. அசபை [உச்சரிக்கப் படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் மந்திரம்]


ஒன்றி லிரண்டாட வோரொன் றுடமாட
வொன்றினின் மூன்றாட வோரேழு மொத்தாட
வொன்றினி னாலாட வோரொன் பதுமாட
மன்றினி லாடினான் மாணிக்கத்து கூத்தே.

ஓலைச் சுவடியில் உள்ள திருமந்திர பாடலை எளிதாக படிக்க பிரித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றில் இரண்டு ஆட ஓர் ஒன்று உடன் ஆட
ஒன்றினில் மூன்று ஆட ஓர் ஏழும் ஒத்து ஆட
ஒன்றினிர் நால் ஆட ஓர் ஒன்பதும் ஆட
மன்றினில் ஆடினான் மாணிக்கத்து கூத்தே.

விளக்கம்:

அசையா சக்தியாக இருக்கின்ற இறைவன் அசையும் சக்தியோடு சிவசக்தியாக ஆடுகின்ற போது அவரோடு சேர்ந்து அண்டசராசரங்கள் அனைத்தும் ஆடுகின்றன. அசபை மூலம் சாதகம் செய்யும் சாதகர்களின் ஆன்மாவும் சிவசக்தியோடு சேர்ந்து ஆட அவர்களின் உடலிலுள்ள ஏழு சக்கரங்களும் அந்த சக்திகளோடு சேர்ந்து ஒன்றாக இணைந்து ஆடுகின்றது. நான்கு திசைகளும் ஒன்பது கோள்களும் சேர்ந்து இறைவன் அண்டசராசரத்தில் ஆடுகின்ற திருக்கூத்தே சாதகரின் உடலாகிய பிண்டத்தில் இறையருள் நிறைந்து மாணிக்க ஜோதியாக திருக்கூத்தாடும்.



பாடல் #914: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

இருந்தஇவ் வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்
றிருந்த மனையொன்றி லெய்துவன் றானே.

விளக்கம்:

இறைவன் திருக்கூத்தாடுகின்ற திருவம்பல சக்கரத்தை வடிவமைக்க மேலிருந்து கீழாக பன்னிரண்டு கோடுகளும் இடமிருந்து வலமாக பன்னிரண்டு கோடுகளும் வரைந்தால் மொத்தம் 121 கட்டங்கள் வரும். இந்த கட்டங்களுக்குள் சிவயநம எனும் மந்திர எழுத்துக்களை மாற்றி மாற்றி எழுதி அமைத்தால் அந்த சக்கரத்தோடு இறைவன் அமர்ந்திருப்பான்.

சி	வ	ய	ந	ம	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	வ
ந	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ய
ய	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ந
வ	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	ம
சி	ம	ந	ய	வ	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	வ
ந	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ய
ய	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ந
வ	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம
சி	ம	ந	ய	வ	சி	ம	ந	ய	வ	சி

திருவம்பலச்சக்கரம்

பாடல் #915: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

தானொன்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்
தானொன்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந்
தானொன்று நாற்கோணந் தன்னைந் தெழுத்தாகுந்
தானொன்றி லேயொன்று மவ்வரனும் தானே.

விளக்கம்:

பாடல் #914 இல் உள்ளபடி சக்கரத்தில் அமர்ந்திருக்கும் இறைவன் வாழுகின்ற இடம் சக்கரத்தின் நடுவில் இருக்கும் சி என்கின்ற முதல் எழுத்தாகும். அந்த சக்கரத்தில் இருக்கும் மற்ற நான்கு எழுத்துக்களாகிய வ ய ந ம ஆகியவை இறைவனின் பேரெழுத்தாகும். சக்கரத்தின் நான்கு மூலைகளிலும் இறைவன் வாழுகின்ற சி என்ற முதல் எழுத்தே அரனாக இருந்து மொத்தம் ஐந்து எழுத்தாகின்றது. சக்கரத்தில் உள்ள அனைத்து எழுத்துக்களும் வேறு வேறாக இருந்தாலும் அவை அனைத்தும் இறைவனின் திருவுருவமாக இருக்கும் ஓம் என்னும் ஓங்கார எழுத்தாகவே இருக்கின்றது.



பாடல் #916: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே.

விளக்கம்:

இறைவனின் திருஉருவாக இருக்கும் ஓங்கார மந்திரத்தைக் குறிப்பதே ஹரஹர எனும் மந்திரமாகும். இதுவே திருவம்பலச் சக்கரத்தில் சிவசிவ என்று அமர்ந்திருக்கும். இதைவிட அறிந்து உணர்ந்து கொள்வதற்கு மிகவும் கடினமான மந்திரம் வேறொன்று இல்லை. அதனாலேயே உலகத்து உயிர்கள் இதை அறிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். இந்த மந்திரத்தை அறிந்து உணர்ந்து செபித்தால் அனைத்து பிறவிகளும் அன்றே அழிந்து பிறவி இல்லாத நிலையை அடைந்து தேவர்களாகவே ஆகிவிடுவார்கள்.

குறிப்பு: திருவம்பல சக்கரத்தை வரைந்து செபிப்பவர்களுக்கு சிவசிவ மந்திரம் பயனளிப்பது போல ஹரஹர மந்திரத்தை அறிந்து உணர்ந்து செபித்தாலே பலன் அளிக்கும்.



பாடல் #917: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

எட்டு நிலையுள எங்கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்
ஓட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரமும் பான்மொழி பாலே.

விளக்கம்:

திருவம்பல சக்கரத்தில் நடுவில் இருக்கும் சி மந்திர எழுத்தை சுற்றி உள்ள எட்டு கட்டங்களும் எமது தலைவனாகிய இறைவன் வீற்றிருக்கும் இடங்களாகும். இந்த எட்டு கட்டங்களில் பாடல் #915 இல் உள்ளபடி மறைந்திருக்கும் ஓங்கார எழுத்தும் சக்கரத்தில் எழுதியிருக்கும் சிவயநம எழுத்துக்களும் ஒன்றாக சேரும் போது ஓம் நமசிவாய என்னும் மந்திரமாகிறது. தூய்மையான எண்ணங்களோடு இந்த மந்திரத்தை ஜெபிக்க ஈரேழு பதினான்கு உலகங்களிலும் ஒலியாகவும் ஒளியாகவும் விளங்குகின்ற சிவசக்தி திருவம்பல சக்கரத்தில் சிறந்து வீற்றிருக்கும்.



பாடல் #918: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஓட்டி யிருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிரைக் காக்கவல் லாரே.

விளக்கம்:

உயிர்கள் தமக்குள் இருக்கும் சகஸ்ரதள ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரில் இறைவன் சிவசக்தியாய் ஒன்றிணைந்து வீற்றிருக்கும் விதத்தை அறிவதில்லை. திருவம்பல சக்கரத்தில் பாடல் #915 இல் உள்ளபடி மறைந்திருக்கும் ஓங்கார எழுத்தையும் மறையாமல் வீற்றிருக்கும் சிவயநம எழுத்துக்களையும் ஒன்றாக சேர்த்து தூய்மையான எண்ணத்தோடு ஜெபிக்க முடிந்தவர்களின் சகஸ்ரதள தாமரை மலர் மலர்ந்து என்றும் இறவாத நிலையை அடைவார்கள்.





பாடல் #919: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்
ஆலய மாக அமர்ந்தவித் தூலம்போய்
ஆலய மாக அறிகின்ற சூக்குமம்
ஆலய மாக அமர்ந்துஇருந் தானே.

விளக்கம்:

திருவம்பல சக்கரத்தை ஆலயமாக கொண்டு அமர்ந்திருக்கும் இறைவன் நமசிவாய எனும் பஞ்சாட்சர மந்திரமாக இருக்கின்றான். திருவம்பலச் சக்கரத்தில் வரிவடிவமாக இருக்கும் சிவயநம மந்திர எழுத்துக்கள் ஆலயமாகும். பாடல் #915 இல் உள்ளபடி அதற்குள் சூட்சுமமாக மறைந்திருக்கும் ஓங்கார மந்திரத்தை அறிந்து கொண்டால் அதில் இறைவன் வீற்றிருப்பதை உணரலாம். உடலாக இருக்கும் சிவயநம மந்திரத்திற்குள் இறைவன் வந்து அமரும்போது அதில் சூட்சுமமாக இருக்கும் ஓங்காரமும் சேர்ந்து ஓம் நமசிவாய எனும் திருமந்திரமாக மாறுகிறது. இந்த மந்திரத்திர சக்கரத்திற்குள் இறைவன் அமர்ந்து இருப்பதால் அதுவே ஆலயமாக இருக்கின்றது.


பாடல் #920: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

இருந்தஇவ் வட்டம் இருமூன்றி ரேகை
இருந்த வதனுள் இரேகை யைந்தாக
இருந்த அறைகள் இருபத்தஞ் சாக
இருந்தறை யொன்றி லெய்து மகாரமே.

விளக்கம்:

திருவம்பல சக்கரம் வடிவமைக்க இடமிருந்து வலமாக ஆறு கோடுகள் வரைந்து அதனோடு இணைந்து மேலிருந்து கீழாக ஆறு கோடுகளும் வரைந்தால் வரும் சக்கரத்தில் இருபத்தைந்து கட்டங்கள் இருக்கும். இந்த கட்டங்களுக்கு நடுவில் இருக்கும் ம எழுத்து உயிர்களின் ஆன்மாவாக திருவம்பல சக்கரத்தோடு இணைந்து இருக்கின்றது.




பாடல் #921: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

மகாரம் நடுவே வளைத்திடுஞ் சத்தி
ஓகாரம் வளைத்திட்டு மப்பிளந் தேற்றி
யகாரந் தலையா யிருகண் சிகாரமாய்
நகார வகார நற்காலு நாடுமே.

விளக்கம்:

பாடல் #920 இல் உள்ளபடி நடுவே எழுதப்பட்டுள்ள ம என்ற எழுத்தை சுற்றி வ என்ற எழுத்தை எழுதி பின்பு அந்த இரண்டையும் ஓ என்ற எழுத்தால் வளைத்து அந்த ஓ எழுத்துக்கள் உ என்ற எழுத்தை தொடங்கி அடுத்த அறைகள் இரண்டு இரண்டாகும் படி பிரித்து மேலே ஏறும்படி வரைந்து வெளிப்புற வட்டத்தில் இருபக்கமும் இருக்கும் அறைகளைத் தலைகளாகவும் கீழ்ப்புற வட்டத்தில் இருபக்கமும் இருக்கும் அறைகளைக் கால்களாகவும் கருதிக் கொண்டு தலைகளாகின்ற அறைகளில் ய என்ற எழுத்தையும் கால்களாகின்ற அறைகளில் இடதுபுறம் ந என்ற எழுத்தையும் வலதுபுறம் அ என்ற எழுத்தையும் எழுதி செபித்தால் அதனோடு இறைவன் ஒன்றி இருப்பான்.

குறிப்பு: எழுத்து முறை அமைத்து தலை, கண், கால் முதலிய உறுப்புக்களோடு அமைந்த ஓர் உருவமாக பாவித்தால் திருவம்பல சக்கர நடுவில் இறைவனை மனித உருவமாகக் காணலாம்.



பாடல் #922: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நாடும் பிரணவ நடுவிரு பக்கம்
ஆடு மவர்வாய் அமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநம சிவாய
வாடுஞ் சிவாயநம புறத் தாயதே.

விளக்கம்:

பாடல் #921 இல் உள்ளபடி எழுதி அமைத்த உருவத்தின் நடுவில் இருக்கும் ஓம் எனும் பிரணவ மந்திரத்திற்கு மேலே இருக்கும் ய எழுத்துக்கு இரண்டு பக்கமும் இருக்கும் சி எழுத்துக்கள் திருவம்பலத்தில் ஆடுகின்ற நடராஜரின் திருவாயாகவும் அதற்கு நடுவில் நிற்கின்ற நமசிவாய மந்திரம் நடராஜரின் திருமுகமாகவும் அதற்கு கீழே இருக்கின்ற சிவாயநம மந்திரம் நடராஜரைச் சுற்றியுள்ள நெருப்பு வட்டமாகவும் இருக்கின்றது.



பாடல் #923: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆயுஞ் சிவாய நமமசி வாயந
வாயு நமசிவா யயநம சிவா
வாயு வாய நமசியெனு மந்திர
மாயுந் சிகாரந் தொட்டந்தத் தடைவிலே.

விளக்கம்:

சிவாயநம என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஆராய்ந்து தியானிக்க சிவாயநம, மசிவாயந நமசிவாய யநமசிவா வாயநமசி என்று ஐந்து வகையாக சி எழுத்தில் ஆரம்பித்து ந எழுத்தில் முடியும் வகையில் அமையும்.

[நுண்மையாய் சிவாயநம என்னும் மந்திரத்தினை நான்கு முறை எழுத்துக்களை மாற்றியமைத்து ஒவ்வோர் எழுத்தும் முதலெழுத்தாக வரும்படி எழுதினால் திருவம்பலச்சக்கரத்தில் உள்ள இருபத்தைந்து கட்டத்திலும் சிவாயநம ஐந்தெழுத்து அமைந்திருக்கும் உண்மை தெரியும்.]




பாடல் #924: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்
அடையும் அறையொன்றுக் கீரெழுத் தாக்கி
அடையு மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்தைம் பத்தொன்றும் அமர்ந்தே.

விளக்கம்:

இடமிருந்து வலமாக ஆறு கோடுகளும் மேலிருந்து கீழாக ஆறு கோடுகளும் வரைந்தால் இருபத்தைந்து கட்டங்கள் வரும். அதில் ஒரு கட்டத்திற்குள் இரண்டு எழுத்துக்களாக மொத்தம் ஐம்பது எழுத்துக்கள் வரும்படி எழுதி அமைத்து அதைச் சுற்றி ஓம் எனும் எழுத்தை பெரியதாக எழுதி அதன் இறுதியில் க்ஷ ஹ எழுத்துக்களை எழுதி முடித்தால் வரும் சக்கரத்தில் மொத்தம் ஐம்பத்தொரு எழுத்துக்கள் இருக்கும்.

குறிப்பு: திருவம்பலச் சக்கரத்தின் இன்னொரு வடிவத்தை இந்தப் பாடலில் அருளுகின்றார். இந்த திருவம்பலச் சக்கரத்தின் தொடர்ச்சி அடுத்தப் பாடலில் தொடரும்.



பாடல் #925: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்


[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமா னுள்வட்டம்
அமர்ந்த அசபை யாம்அத னுள்வட்டம்
அமர்ந்த இரேகை ஆகின்ற சூலமே.

விளக்கம்:

பாடல் #924 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரம் வரைந்து அதனைச் சுற்றி வெளிப்புற வட்டத்தில் ஹர ஹர என்று தொடர்ச்சியாக எழுதி அதற்கு அடுத்த நடு வட்டத்தில் ஹரி ஹரி என்று தொடர்ச்சியாக எழுதி அதற்கு அடுத்த உள் வட்டத்தில் அம் சம் எனும் மந்திரத்தின் பீஜங்களான ஹம்ஸ ஸொஹம் என்ற எழுத்துக்களை தொடர்ச்சியாக எழுதி அதற்குள் வட்டமாக ஓம் எனும் எழுத்தை எழுதினால் வருவது திருவம்பலச் சக்கரத்தின் சூலமாகும்.

குறிப்பு: இந்த திருவம்பலச் சக்கரத்தின் தொடர்ச்சி அடுத்தப் பாடலிலும் தொடரும்.



பாடல் #926: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்


[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினிற் சூழும்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தாலப் பதிக்கும் அடைவு அதுதானே.

விளக்கம்:

பாடல் #925 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்தின் நடுவில் அமைந்த சூலத்தின் நான்கு புறங்களின் தலைப்பகுதியிலும் சக்தி மந்திரத்தின் பீஜமான ஹ்ரீம் என்ற எழுத்தை எழுதி அதைச் சுற்றி இருக்கும் ஓம் என்ற எழுத்துக்குள்ளிருக்கும் சூலங்களுக்கு நடுவில் இருக்கின்ற கட்டத்தின் மேல் ஐந்து பூதங்களைக் குறிக்கும் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துக்களை எழுதி அமைக்கப்படும் திருவம்பலச் சக்கரமே அனைத்திற்கும் தலைவனாகிய இறைவன் வீற்றிருக்கும் இடமாகும்.

குறிப்பு: இந்த திருவம்பலச் சக்கரத்தின் தொடர்ச்சி அடுத்தப் பாடலிலும் தொடரும்.



பாடல் #927: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்


[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஓகார மதஞ்சாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்கநம் பேரே.

விளக்கம்:

பாடல் #926 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்திற்குள் இருக்கும் சூலங்களுக்கு இடைப்பட்ட கட்டத்தின் மேல் எழுதப்படுகின்ற அ, இ, உ, எ, ஓ என்கிற ஐந்து எழுத்துக்களும் இறைவனுடைய பெயராக விளங்குகின்றது.

குறிப்பு: இந்த திருவம்பலச் சக்கரத்தின் தொடர்ச்சி அடுத்தப் பாடலிலும் தொடரும்.




பாடல் #928: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியின்
நேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற்று இருந்த இயல்பிது வாமே.

விளக்கம்:

பாடல் #927 இல் உள்ளபடி இறைவனின் பெயராக விளங்குகின்ற அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுதுக்களின் ஆதார மந்திரமாகிய நமசிவாய மந்திரமே திருவம்பலச் சக்கரத்தின் மூலமந்திரம் ஆகும். இந்த மந்திரங்களைச் சுற்றி பாடல் #924 மற்றும் #925 இல் உள்ளபடி மூன்று வட்டங்களுடன் திருவம்பலச் சக்கரம் முழுமையாக முறையாக அழகுடன் அமைந்து விடும்.



பாடல் #929: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]


இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்தின் முன்னா இருந்ததே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தில் மந்திரங்களை பாடல் #924 முதல் #928 வரை சொல்லியபடி வரையும் வழியையும் பாடல் #916, #917 #918 வரை சொல்லியபடி வழிபட வேண்டிய முறைகளையும் முயற்சி செய்பவர்களுக்கு இறைவன் குருவாக நின்று அவர்களது அறிவு தெளிவு பெறும்படி செய்வான். காற்று, நீர், நெருப்பு, நிலம், ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களின் பீஜ மந்திரங்களாகிய யம், வம், ரம், லம், ஹம் ஆகியவற்றை சக்கரத்தில் வரையப்பட்டுள்ள மந்திரங்களுக்கு முன்பாக சேர்த்து வழிபட வேண்டும்.

திருவம்பலச் சக்கரத்தில் உள்ள மந்திரங்களுக்கு முன் பஞ்ச பூத பீஜங்களை சேர்க்கும் முறை:

1. நிலம் = லம் யநமவாசி
2. நீர் = வம் வாயநமசி
3. நெருப்பு = ரம் நமசிவாய
4. வாயு = யம் மசிவாயந
5. ஆகாயம் = ஹம் சிவாயநம




பாடல் #930: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆறெட் டெழுத்தின்மே லாறும் பதினாலும்
ஏறிட் டதன்மேலே விந்துவும் நாதமுஞ்
சீறிட்டு நின்று சிவாய நமவென்னக்
கூறுஇட்டு மும்மலம் கூப்பிட்டுப் போமே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தில் உள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களில் நாற்பத்து எட்டாவதாக உள்ள 'ஸ' எழுத்துடன் ஆறாவதாக உள்ள 'ஊ' எழுத்தை சேர்த்து 'ஸூம்' என்ற பீஜ மந்திரமாகவும், 'ஸ' எழுத்துடன் பதினான்காவதாக உள்ள 'ஔ' எழுத்தையும் சேர்த்து 'ஸௌ' என்ற பீஜ மந்திரமாகவும் சேர்த்துக் கொண்டு அதற்கு முன்பு ஒளியும் ஒலியுமாகிய ஓங்கார மந்திரத்தையும் அதற்கு பின்பு 'சிவாயநம' மந்திரத்தையும் சேர்த்து 'ஓம் ஸூம் ஸௌ சிவாயநம' என்று உச்சரித்தால் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் தனித்தனியாகப் பிரிந்து சென்றுவிடும்.



பாடல் #931: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அண்ணல் இருப்ப தவளக் கரத்துளே
பெண்ணிநல் லாளும் பிரானக் கரத்துளே
எண்ணி இருவர் இசைந்தங் கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே.

விளக்கம்:

‘நமசிவாய’ மந்திரத்தில் இறைவியைக் குறிக்கும் ‘வ’ எழுத்துக்குள் இறைவனும் அடங்கியிருக்கிறான். அது போலவே இறைவனைக் குறிக்கும் ‘சி’ எழுத்துக்குள் இறைவியும் அடங்கியிருக்கிறாள். பாடல் #930 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரம் வரைந்து மந்திரத்தை செபிக்கும் சாதகர்கள் திருவம்பலச் சக்கரத்தில் இருக்கும் இறைவனும் இறைவியும் ‘சிவ’ மற்றும் ‘வசி’ எனும் மந்திர எழுத்துக்களில் சேர்ந்து இருப்பதை அறிவார்கள்.

குறிப்பு: திருவம்பலச் சக்கரத்தை முறைப்படி தியானிக்கும் சாதகர்களே புண்ணியவாளர்கள் ஆவார்கள்.



பாடல் #932: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்


[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கம தாய்நிற்கும்
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந்து ஆமே.

விளக்கம்:

அடிப் பகுதியில் இறைவனைக் குறிக்கும் 'அ' எழுத்தை பீடமாக வைத்து எழுதி நடுப் பகுதியில் சிவசக்தியை குறிக்கும் 'ஹர' எழுத்துக்களை எழுதி மேல் பகுதியில் இறைவியைக் குறிக்கும் 'இ' எழுத்தை எழுதினால் வரும் வடிவம் இலிங்க சொரூபமாகும். அந்த லிங்க உருவத்தோடு உயிர்களைக் குறிக்கும் 'ம' எழுத்தையும் சேர்த்து மூச்சுக்காற்றோடு தியானித்தால் இறைவனின் திருநடனத்தை இசையோடு சுடர் விட்டு எரியும் ஒளி உருவமாக காணலாம்.

குறிப்பு: பாடல் #765 இல் அகார உகார மகார எழுத்துக்களின் விளக்கத்தை காணலாம். பாடல் #931 இல் உள்ளபடி இறைவனும் இறைவியும் சேர்ந்திருக்கும் 'சிவ' 'வசி' எழுத்துக்களுக்கு நடுவில் ஆன்மாவை குறிக்கும் 'ய' எழுத்தை சேர்த்து சிவயவசி எனும் மந்திரமாக தியானிக்க வேண்டும்.




பாடல் #933: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்ட சத்தியும் சதாசிவன் தானே.

விளக்கம்:

பாடல் #931 இல் உள்ளபடி 'சி' என்ற எழுத்தின் அட்சரமான 'ச' எழுத்தில் அடங்கியிருக்கும் சக்தியும் 'வ' என்ற எழுத்தின் அட்சரமான 'அ' எழுத்தில் அடங்கியிருக்கும் சிவமும் ஒன்றாக சேர்ந்த சிவசக்திக்குள் அண்டசராசரங்கள் அனைத்தும் அடங்கியிருப்பதை யாரும் அறியவில்லை. பாடல் #932 இல் உள்ளபடி தியானித்து இதை அறிந்து கொண்ட சாதகர்கள் இரண்டாக பிரிந்து இருக்கும் சிவசக்தியானது ஒன்றான சதாசிவமூர்த்தியாகவே இருப்பதை உணர்ந்து கொள்வார்கள்.

குறிப்பு: பாடல் #931 இல் உள்ள குறிப்பின்படி 'சிவயவசி' என்று இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் ஆன்மாவை வைத்து தியானிக்கும் சாதகர்கள் இறைவன் இறைவி என்று இரண்டாகப் பார்த்த பொருள் ஒன்றான சதாசிவம் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.



பாடல் #934: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துஉள்ளே அமர்ந்திருந் தானே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தில் உள்ள நமசிவாய என்னும் மந்திரத்தை எண்ணி தியானித்தால் உள்ளுக்குள் இருந்து இறைவனே குருவாக வந்து வழி காட்டுவார். குருவாக அமர்ந்த இறைவனின் வழிகாட்டுதலின் படி நமசிவாய மந்திரத்தின் ஐந்து அட்சரங்களான அ, இ, உ, எ, ஒ என்கிற எழுத்துக்கள் இறைவனின் வடிவமாகவே இருப்பதை உணர்ந்து திருவம்பலச் சக்கரத்தில் அமைந்திருக்கும் இந்த ஐந்து அட்சரங்களும் சதாசிவமூர்த்தியாகவே இருப்பதை அறிந்து கொள்ளலாம்.



பாடல் #935: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

கூத்தனைக் காணும் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினார்
கூத்தனொ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணும் குறியுமது வாமே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தில் திருநடனமாடும் இறைவனைக் கண்டு அடைய வழிகள் பல இருக்கிறது என்று பேசினாலும் இறைவனின் வடிவமாக இருக்கும் நமசிவாய மந்திரத்தின் முதலெழுத்தான 'ந' அல்லது அதன் அட்சரமான 'அ' என்ற எழுத்தை செபித்தால் இறைவனாகிய அந்த எழுத்தோடு ஒன்றாக சேர்ந்து நிற்பார்கள். இதுவே திருவம்பலச் சக்கரத்தில் திருநடனமாடும் இறைவனைக் கண்டு அடையும் வழியாகும்.

குறிப்பு: 'ந' அல்லது 'அ' என்ற முதலெழுத்தை ஒலியலை சிறிதும் மாறாமல் தொடர்ந்து உச்சரித்து செபிக்க வேண்டும்.



பாடல் #936: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அத்திசைக் குள்நின் றனலை எழுப்பியே
அத்திசைக் குள்நின்ற நவ்வெழுத் தோதினால்
அத்திசைக் குள்நின்ற அந்த மறையனை
அத்திசைக் குள்ளுறவு ஆக்கினன் தானே.

விளக்கம்:

பாடல் #935 இல் உள்ளபடி ‘நமசிவாய’ மந்திரத்தின் முதலெழுத்தாகிய ‘ந’ எழுத்தை செபித்து திருவம்பலச் சக்கரத்தின் நான்கு திசையிலும் உள்ள சூலத்தின் அக்கினியை எழுப்பும் சாதகர்கள் நான்கு திசைகளுக்குள்ளும் மறைந்து நிற்கின்ற இறைவனோடு தாமும் கலந்து நின்று திருவம்பலச் சக்கரத்தை தமக்குள் உணர்வார்கள்.




பாடல் #937: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

தானே யளித்திடுந் தையலை நோக்கினால்
தானே யளித்திட்டு மேலுற வைத்திடுந்
தானே யளித்த மகாரத்தை ஓதிடத்
தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே.

விளக்கம்:

பாடல் #936 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்தை தமக்குள் உணர்ந்தபின் அதிலிருந்து வெளிவரும் சக்தியை தமக்குள் உணர்ந்து கொண்டே இருந்தால் சக்கரத்திலிருந்து வரும் சக்திமயம் சாதகரின் உடலைச் சுற்றி உறைபோல் மூடிக்கொள்ளும். அதன் பிறகு 'நமசிவாய' மந்திரத்தின் இரண்டாவது எழுத்தாகிய 'ம' எழுத்தை செபித்தால் சாதகரின் சதையால் ஆன உடலும் மாணிக்கக் கல்லைப் போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.



பாடல் #938: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

கல்லொளி யேஎன நின்ற வடதிசை
கல்லொளி யேஎன நின்றனன் இந்திரன்
கல்லொளி யேஎன நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் காட்டிநின் றானே.

விளக்கம்:

பாடல் #937 இல் உள்ளபடி சாதகரின் உடலிலிருந்து பிரகாசிக்கும் ஒளி கீழிருந்து மேல் நோக்கி எழும் சுடர் போல உணர்ந்தால் தமது உடலில் இருக்கும் பஞ்ச பூதங்களுக்கும் தலைவனாக இருப்பதை உணர்வார்கள். அதன்பிறகு 'நமசிவாய' மந்திரத்தின் மூன்றாவது எழுத்தாகிய 'சி' எழுத்தை செபித்தால் சாதகரின் உடலிலிருந்து பிரகாசிக்கும் ஒளியாகத் தாமே இருப்பதை இறைவன் காட்டி நிற்பான்.



பாடல் #939: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

தானே யெழுகுணந் தண்சுட ராய்நிற்குந்
தானே யெழுகுணம் வேதமு மாய்நிற்குந்
தானே யெழுகுண மாவதும் ஓதிடில்
தானே யெழுந்த மறையவ னாமே.

விளக்கம்:

பாடல் #938 இல் உள்ளபடி சாதகருக்குள் ஒளியாக தன்னை காட்டி நின்ற இறைவன் குளிர்ந்த சுடர் ஒளியாக நிற்பதையும் அந்த இறைவனே வேதங்களின் பொருளாகவும் அதில் கூறியுள்ள பலவித குணங்களாகவும் தமக்குள் நிற்பதை உணர்ந்து பாடல் #936 #937 #938 இல் உள்ளபடி 'ந' 'ம' 'சி' எழுத்தை செபித்துக்கொண்டே இருந்தால் தனக்குள் மட்டுமில்லாமல் தனக்கு வெளியில் இருக்கும் அனைத்திலும் மறைந்து நிற்பது இறைவனின் தன்மையே என்பதை சாதகர் அறிந்து கொள்வார்.




பாடல் #940: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

மறையவ னாக மதித்த பிறவி
மறையவ னாக மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுத் துண்ணிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுத் தாமவ ராமே.

விளக்கம்:

உயிர்கள் இறைவனின் தன்மையை தமக்குள் உணர்ந்து கொள்ள மனிதப் பிறவியை பெற்றுள்ளன. அதனை அறிந்து அனைத்து உயிர்களையும் இறைவனாகப் பார்த்து உணர்பவர்கள் ஐந்தெழுத்தான 'நமசிவாய' என்னும் மந்திரத்தில் மறைவாக இருக்கும் பரம்பொருளை உள்ளத்தில் வைத்து தியானிக்க அவர்களும் இறைவனாகும் பேறு பெற்று ஐந்தெழுத்து மந்திரத்தை தாமாகவே உணர்வார்கள்.




பாடல் #941: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுட ரவ்வியல்பு ஆமே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தில் ஆடுகின்ற இறைவனுக்கு பாதமாக 'ந' எழுத்து திருவடியாய் நிற்கும். நாபியாக [தொப்புள்] 'ம' எழுத்து நிற்கும். 'சி' எழுத்து இருதோள்களாக நிற்கும். 'வ' எழுத்து வாயாக நிற்கும். இறைவன் தமக்குள் எழுத்து வடிவாக நிற்பதை கண்டு உணர்ந்த சாதகரின் உயிர் ஒளி மயமாகி இறைவனின் திருவைந்தெழுத்தின் இயல்பை அடைந்து அதன் கடைசி எழுத்தாகிய 'ய' எழுத்தாக அவர்களின் ஆன்மா நிற்கும்.



பாடல் #942: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அவ்வியல் பாய இருமூன் றெழுத்தையும்
செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ்வியல் பாக ஒளியுற நோக்கிடின்
பவ்வியல் பாகப் பரந்துநின் றானே.

விளக்கம்:

பாடல் #941 இல் உள்ளபடி இறைவனின் திருவைந்தெழுத்தின் இயல்பை அடைந்த சாதகர்கள் அதனுடன் ஓங்காரம் சேர்த்து 'ஓம் நமசிவாய' எனும் மந்திரத்தின் அனைத்து இயல்புகளையும் அடைவதற்கு அவர்களுக்குள் குருவாக இருக்கும் இறைவன் சிறப்பான வழிகாட்டுவார். அப்படி சிறப்பான நிலையை அடைந்த பிறகு சாதகர்கள் தங்களின் ஆன்மாவின் ஒளி வழியாக இறைவனின் பேரொளியைப் பார்த்து மனம் ஒன்றி இருந்தால் அவர்களுக்குள் ஆன்ம ஒளியாக இருக்கும் இறைவனே அண்ட சராசரங்கள் எங்கும் பேரொளி ஜோதியாக பரவி நிற்கின்றான் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.



பாடல் #943: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓம்என் றெழுப்பே.

விளக்கம்:

‘ஓம்’ எனும் பிரணவ மந்திரம் அனைத்து உயிர்களுக்குள்ளும் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. எதையும் கொடுக்கும் வல்லமை பொருந்து அந்த மந்திரத்தை முறைப்படி குரு உபதேசித்து பெற்று தம்மை பகைவர்கள் போல் சூழ்ந்திருக்கும் வினையால் உருவாகும் இன்ப துன்பங்கள் அனைத்தும் போகும்படி அந்த பிரணவ மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

கருத்து: உயிர்களுக்குள் மூச்சுக்காற்றாக ஓடிக்கொண்டிருக்கும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்துடன் குருநாதரின் உபதேசம் பெற்ற மந்திரத்தையும் சேர்த்து செபித்து கொண்டே இருந்தால் வினைகளால் உருவாகும் இன்ப துன்பங்கள் அனைத்தும் சென்றுவிடும்.



பாடல் #944: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஓமென் றெழுப்பித்தன் உத்தம நந்தியை
நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை
ஆமென் றெழுப்பியவ் வாறுஅறி வார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்துஇருந் தாரே.

விளக்கம்:

பாடல் #943 இல் உள்ளபடி 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை உச்சரித்து குருவாகிய இறைவனை தமக்குள் உணர்ந்து 'ஓம்' எனும் மந்திரத்தோடு 'நம' என்கிற மந்திரத்தையும் சேர்த்து உச்சரித்து மூலாதாரத்தில் பிரணவ மந்திரத்தின் வடிவமாய் இருக்கும் இறைவனை எழுப்பி விட்டு அதனோடு பாடல் #910 இல் உள்ளபடி 'அம்' என்கிற மந்திரத்தையும் சேர்த்து செபித்து மந்திரத்தைக் கைவரப் பெற்றவர்கள் தமக்குள் இறைவன் ஓயாது நடனமாடும் திருச்சிற்றம்பலக் கூத்து கண்டு பேரின்பத்தில் திளைத்து இருப்பார்கள்.

கருத்து: 'ஓம் நம அம்' எனும் மந்திரத்தை குருவருளால் உச்சரித்துக் கொண்டே இருக்கும் சாதகர்கள் திருவம்பலக் கூத்தை தமக்குள் தரிசித்து பேரின்பத்தில் இருப்பார்கள்.



பாடல் #945: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தொருவெழுத் துள்நிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் தானே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்திற்குள் இருக்கும் 'நமசிவாய' எனும் ஐந்து மந்திர எழுத்துக்கள் இனிப்போடு கலந்திருக்கும் சுவை போல நமசிவாய, மசிவாயந, சிவாயநம, வாயநமசி, யநமசிவா எனும் ஒவ்வொரு மந்திரத்திற்கும் முதலாவது எழுத்தாகவும் அந்த மந்திரத்தின் மற்ற எழுத்துக்களோடும் கலந்து இருக்கின்றது. இந்த மந்திரங்கள் சேர்த்து ஐம்பத்தோரு எழுத்துக்கள் அமைத்து வரையப்படும் திருவம்பலச் சக்கரத்தில் இனிப்போடு கலந்திருக்கும் சுவை போல இறைவனும் கலந்து நிற்பான்.



பாடல் #946: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கின் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே.

விளக்கம்:

‘சிவயநம’ என்ற ஐந்தெழுத்து மந்திரத்தில் ‘சிவ’ இறைவியையும் ‘நம’ இறைவனையும் ‘ய’ ஆன்மாவையும் குறிக்கும். இந்த ‘ய’ எழுத்தை முதலாகக் கொண்டு

சி வ ய ந ம
ய ந வ சி ம
ம வ ய ந சி
சி ய ந ம வ
வ சி ம ய ந

என்ற முறையில் வரைய வேண்டும். இதன் தொடர்ச்சி அடுத்த பாடலிலும் உள்ளது.



பாடல் #947: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே.

விளக்கம்:

பாடல் #946 இல் உள்ள 'சிவயநம' எனும் மந்திரத்தில் இருக்கும் 'சி' எழுத்து ஆகாயத்தையும் 'வ' எழுத்து நீரையும் 'ய' எழுத்து நிலத்தையும் 'ந' எழுத்து நெருப்பையும் 'ம' எழுத்து வாயுவையும் குறிக்கின்றது. அவை முறையே நிலம் – செம்மை நீர் – வெண்மை நெருப்பு – பொன்மை வாயு – புகைமை ஆகாயம் – கருமை ஆகிய நிறங்களில் பஞ்ச பூதங்களை இயக்குகின்றது. பஞ்ச பூதங்களுடன் 'சிவயநம' எனும் பஞ்சாக்கர மந்திரத்தை பாடல் #946 இல் உள்ளபடி முறையாக வரைந்த சக்கரத்தில் இறைவன் வீற்றிருப்பான்.

குறிப்பு: பாடல் #929 இல் 'சிவயநம' எழுத்துக்களுக்கான பஞ்ச பூதங்களின் அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.



பாடல் #948: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்
மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக்
கன்றது வாகக் கறந்தனன் நந்தியுங்
குன்றிடை நின்றிடுங் கொள்கைய னாமே.

விளக்கம்:

பாடல் #947 இல் உள்ளபடி பஞ்சபூதங்களுடன் அமைக்கப்பட்ட சக்கரத்தைப் போலவே சாதகரின் உடலில் இருக்கும் பஞ்ச பூதங்களும் இறைவன் ஆடுகின்ற மன்றங்களாகவும் சாதகரின் ஆன்மா இறைவனோடு இணைந்து இருக்கின்றது. ஆனால் மாயையால் இறைவனோடு கலந்திருக்கின்றோம் என்பதை அறியாமல் தனித்திருப்பதைப் போன்ற பிரம்மையிலும் இருக்கின்றது. இந்த சக்கரத்தை முறைப்படி செபிக்கும் சாதகர்களின் ஆன்மா கன்றாக இருந்து பசுவாக இருக்கும் இறைவனிடம் ஞானப்பாலை அருந்துகின்றது. அதன் பிறகு சாதகரின் தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்தில் இறைவன் ஜோதி உருவமாக தரிசனம் கொடுத்து சாதகரின் ஆன்மாவும் தாமும் ஒன்றே எனும் கொள்கையை உணர வைப்பார்.



பாடல் #949: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

கொண்டஇச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டஇச் சக்கரத் துள்ளே குறியைந்து
கொண்டஇச் சக்கரங் கூத்தன் எழுத்தைந்துங்
கொண்டஇச் சக்கரத் துள்நின்ற கூத்தே.

விளக்கம்:

பாடல் #946 இல் உள்ள முறைப்படி வரையப்பட்ட சக்கரத்திற்குள் பாடல் #929 இல் உள்ளபடி பஞ்சபூதங்களின் குறிகளும் அதன் குணங்களும் இருக்கின்றது. இந்த சக்கரத்திலுள்ள 'சிவயநம' எனும் ஐந்தெழுத்து மந்திரமாக இருக்கும் இறைவன் இச்சக்கரத்துள்ளே ஆனந்த நடனம் புரிகின்றான்.

குறிப்பு: பஞ்ச பூதங்களின் குறிகளும் அதன் குணங்களும்:

1. நிலம் = சதுரம் – வாசனை [முகர்வது]
2. நீர் = பிறைவட்டம் – சுவை [கிரகித்தல்]
3. நெருப்பு = முக்கோணம் – ஒளி [வெளிச்சம்]
4. வாயு = அறுகோணம் – ஸ்பரிசம் [தொடுதல்]
5. ஆகாயம் = வட்டம் – ஒலி [சத்தம்]




பாடல் #950: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

வெளியியி லிரேகை யிரேகையி லத்தலை
சுளியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரசாதஞ் சிவமந் திரமே.

விளக்கம்:

இடமிருந்து வலமாக ஒரு நேர் கோடு வரைந்து அதன் தலையில் ஒரு சுழி வட்டம் வரைந்து அந்த வட்டத்தையும் கோட்டையும் இணைக்கும் படி ஒரு வளைந்த கொம்பு வரைந்தால் 'உ' எனும் எழுத்து வரும். இந்த 'உ' எழுத்தின் வடிவத்தை மனதிற்குள் வைத்து தியானித்தால் அந்த எழுத்தைச் சுற்றியிருக்கும் நெருப்பில் இருந்து ஒளியும், கொம்பும் கோடும் சேர்ந்த பகுதியில் இருந்து ஒலியும் வெளிப்படுவதை உணரலாம். இந்த ஒளி ஒலியின் பொருளை உணர்ந்தால் கிடைக்கும் பிராசாதம் சிவமந்திரமாகும்.

குறிப்பு: பிள்ளையார் சுழி என்று வரையப்படும் 'உ' எழுத்தின் பொருளை அருளுகின்றார்.



பாடல் #951: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அகார உகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஓகார முதல்வன் உவந்துநின் றானே.

விளக்கம்:

‘அ’ ‘உ’ எழுத்துக்கள் அடங்கியுள்ள ‘ஓம்’ எழுத்தோடு ‘சி’ நடுவாக இருக்கும் ‘நமசிவய’ எழுத்தையும் சேர்த்து ‘ஓம் நமசிவய’ எனும் மந்திரத்தையும், ‘வ’ முதலாக இருக்கும் ‘வசியநம’ சேர்த்து ‘ஓம் வசியநம’ எனும் மந்திரத்தையும், ‘சி’ முதலாக இருக்கும் ‘சிவயநம’ சேர்த்து ‘ஓம் சிவயநம’ எனும் மந்திரத்தையும் மானசீகமாக வெளியில் இருக்கும் காற்றோடு சேர்த்து செபித்துக் கொண்டே இறைவன் மேல் சிந்தனையை வைத்திருந்தால் ஓங்காரத்தின் முதல்வனாகிய இறைவன் சாதகருக்குள் அன்போடு எழுந்தருளுவான்.




பாடல் #952: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அற்ற விடத்தே அகாரம தாவது
உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்றம் அறுத்த பொன்போலுங் குளிகையே.

விளக்கம்:

பாடல் #951 இல் உள்ளபடி சாதகருக்குள் அன்போடு எழுந்தருளிய இறைவனை 'அ' வடிவில் உணரலாம். 'அ' வடிவிற்குள் இருக்கும் மும்மலங்களும் நீங்கிய செழுமையான சுடர் போன்ற உண்மை பொருளை கண்டால் அது மாசில்லாத தூய்மையான தங்கத்தை போல் இருக்கும்.



பாடல் #953: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அவ்வென்ற போதினில் உவ்வெழுத் தாலித்தால்
உவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடும்
மவ்வென் றெண்ணுள்ளே வழிபட்ட நந்தியை
எவ்வணஞ் சொல்லுகேன் எந்தை இயற்கையே.

விளக்கம்:

பாடல் #952 இல் உள்ளபடி ‘அ’ வடிவில் மாசில்லாத தூய்மையான தங்கத்தை போல் இருக்கும் இறைவனை ‘உ’ எழுத்தால் ஆராதித்தால் ‘உ’ எழுத்தின் உச்சகட்ட பரிபூரண நிலையில் ‘அ’ எழுத்தோடு ஒன்றாகக் கலந்து ‘ம’ எழுத்தாக மாறி நிற்பான். ‘ம’ வடிவில் இருக்கும் இறைவன் குருவாக நின்று வழிகாட்டும் முறைப்படி செயல்பட்டால் ஓங்காரத்தின் உச்சகட்ட பரிபூரண நிலையை அடைந்து அதனால் கிடைக்கும் பேரின்பமானது வார்த்தைகளால் விவரிக்க இயலாத அளவு இருக்கும்.

குறிப்பு: பாடல் #950 #951 #952 #953 இல் ஓங்காரத்தில் அடங்கியிருக்கும் ‘அ’ ‘உ’ ‘ம’ எழுத்துக்களின் தன்மைகளை அருளுகின்றார்.



பாடல் #954: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நீரில் எழுத்திவ் வுலக ரறிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே.

விளக்கம்:

உலகத்து உயிர்கள் தம்மால் எழுதப்படும் எழுத்துக்களை மட்டுமே அறிந்து கொண்டுள்ளார்கள். ஆனால் எழுதப்படாத எழுத்து ஒன்று வானத்தில் இருக்கின்றது அதைத் தேடிக் கண்டு அறிந்தவர்கள் யாரும் இல்லை. வானத்தில் இருக்கும் எழுதப்படாத 'ஓம்' எனும் எழுத்தைத் தேடி அறிந்தவர்கள் கூட அந்த எழுத்துத்தான் தமது உடலுக்குள்ளும் இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள்.



பாடல் #955: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பது மாவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூலன் நடுவுற முத்தியும்தந் தானே.

விளக்கம்:

பாடல் #954 இல் உள்ளபடி தமது உடலுக்கு நடுவில் இருக்கும் ஓங்கார எழுத்தை உணர்ந்த சாதகர்கள் தினமும் காலையிலும் மாலையிலும் அதைத் தியானித்தால் அதிலிருந்து ஐம்பது அட்சரங்களும் [பாடல் #924 இல் உள்ளபடி] வெளிப்படுவதை உணரலாம். இந்த ஐம்பது அட்சரங்களுடன் ஓங்கார எழுத்தைச் சேர்த்து மொத்தம் ஐம்பத்தோரு அட்சரங்களின் பரிபூரண உச்ச நிலையை சாதகர்கள் தியானத்தின் மூலம் அடைந்தால் வேதம் சொல்லுகின்ற மூலப் பொருளாகிய இறைவன் அவர்களுக்கு முக்தியை அருளுவான்.



பாடல் #956: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலும் அறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்துஇருந் தானே.

விளக்கம்:

தொப்புளுக்கு கீழே இருக்கும் மூலாதாரத்தில் ஓம் என்னும் நன்மை தரும் பிரணவ எழுத்து ஒன்று உள்ளது. தீவினையாளர்கள் அந்த பிரணவ எழுத்தின் பயன்களை அறியாமல் இருக்கின்றார்கள். ஓம் பிரணவ எழுத்தின் பொருளை பிரம்மன் முதலான தேவர்களும் கூட அறிந்து கொள்ள முடியாது. ஓம் என்னும் அந்த எழுத்தில் இறைவியோடு தானும் சேர்ந்து இறைவனும் இருக்கின்றான்.



பாடல் #957: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே.

விளக்கம்:

'ஔ' 'சௌ' என்ற எழுத்துக்கள் இறைவன் இருக்கின்ற மந்திரமாகும். இவை இரண்டையும் சேர்த்து உச்சரித்தால் 'ஹௌ' எழுத்தாகி அதன் உச்சரிப்பால் 'ஹ' என்றும் அதனோடு 'ம்' என்ற எழுத்தை சேர்த்து உச்சரித்தால் 'ஹம்' என்ற மந்திரமாக மாறிவிடும். அதன்படியே 'சௌ' எழுத்தோடு 'ம்' என்ற எழுத்தை சேர்த்து உச்சரித்தால் 'சௌம்' என்ற மந்திரமாக மாறிவிடும். இந்த இரண்டு மந்திரங்களையும் சேர்த்தால் 'அம்சம்' எனும் மந்திரமாக இருக்கும். இந்த மந்திரத்தின் அருமையை யாரும் அறியவில்லை. இந்த மந்திரத்தின் அருமையை அறிந்தவர்கள் அந்த மந்திரத்தில் மூலப் பரம்பொருளாகிய சதாசிவமூர்த்தி இருப்பதை அறியலாம்.



பாடல் #958: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியி னுள்ளே உதயம்பண் ணாநிற்குஞ்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்
அந்தி தொழுதுபோ யார்த்தகன் றார்களே.

விளக்கம்:

பாடல் #957 இல் உள்ள 'ஹம்சம்' மந்திரம் பாடல் #925 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்தின் நடுவில் இருக்கிறது. இந்த மந்திரத்தை சாதகம் செய்து அதன் சக்தியை அறியாமல் இருக்கின்றார்கள். அதன் சக்தியை அறிந்தவர்களும் வெறுமனே காலையிலும் மாலையிலும் உரக்க செபித்துவிட்டு மந்திரத்தின் பரிபூரண நிலையை அறியாமலேயே சென்றுவிடுகிறார்கள்.



பாடல் #959: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குசமு மாமே.

விளக்கம்:

பாடல் #957 இல் உள்ள 'ஹம்சம்' மந்திரத்தை மனதிற்குள் செபித்து அதன் அதிர்வலைகளை மானசீகமாக அனைத்து திசைகளும் பெறும்படி அனுப்ப வேண்டும். அப்படி செய்தால் அந்த மந்திரம் உயிருக்குள் மரத்தின் வேர் போல ஆதாரமாக நிற்கும். இந்த மந்திரத்தை நெஞ்சத் தாமரைக்குள் பதித்து மனதில் சலனங்கள் இன்றி தியானித்தால் உயிருக்குள் இருக்கும் மந்திரம் மதம் பிடித்த யானையைக் கட்டுப்படுத்தும் அங்குசம் போல மனதையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்தி இறைவனை நோக்கி வழிநடத்திச் செல்லும்.

குறிப்பு: 'ஹம்சம்' மந்திரத்தை ஆத்மார்த்தமாக மனதிற்குள் பதித்து எந்தவித சலனமும் இன்றி தியானித்து அதன் அதிர்வலைகளை நான்கு திசைகளுக்கும் சென்று பரவும்படி செய்து வந்தால் அந்த மந்திரம் உயிருக்குள் வேர் போல ஊன்றி நின்று நம்மை இறைவனை நோக்கி செல்லும் பாதையை விட்டு விலகாமல் கட்டுப் படுத்தி வைக்கும்.



பாடல் #960: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அருவினில் அம்பரம் அங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகார நடுவாய்
உருவிட லாறு முறுமந் திரமே.

விளக்கம்:

உருவம் இல்லாததும் கண்ணுக்கு தெரியாததுமான பரகாயத்தில் [பரவெளி] எழுகின்ற ஓம் எனும் ஒலியிலிருந்து பெருகி வரும் சக்தியானது மின்னல் ஒளியைப் போல வெளிச்சமாக வெளிவரும். இந்த ஒலியும் ஒளியும் சேர்ந்த சக்தியானது மருவி 'நமசிவய' மந்திரத்தில் இருக்கும் 'ய' எழுத்துக்கும் 'சி' எழுத்துக்கும் நடுவில் இருக்கும் 'வ' எழுத்தாக மாறுகிறது. இப்படி இருக்கும் மூன்று எழுத்து 'சிவய' மந்திரத்தை செபித்து அதனோடு லயித்து இருந்தால் அது ஆறு எழுத்துக்கள் கொண்ட 'ஓம் நமசிவாய' எனும் மந்திரமாக மாறி உயிருக்குள் ஆதாரமாக நிற்கும்.

குறிப்பு: தூய தமிழ் சொற்கள் நடைமுறைத் தமிழில் மருவி மாறுவதைப் போல ஒலியும் ஒளியும் சேர்ந்து மருவி மந்திரமாகிறது.



பாடல் #961: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே.

விளக்கம்:

பாடல் #960 இல் உள்ளபடி ஒலியும் ஒளியும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து சாதகரின் மனதிற்குள் ஒருநிலைப்பட்டால் மனம் இருக்கும் புருவ மத்திக்கு மேலிருக்கும் உச்சந்தலையில் அமிர்தம் ஊறும். அந்த அமிர்தம் ஊறும் இடத்திலிருந்து உருவாகும் மந்திரமானது சாதகருக்குள் வேள்வியாக இருக்கும்.

குறிப்பு: இந்த பாடலில் குறிப்பிட்டுள்ள மந்திரம் ‘ஓம் நமசிவாய’ ஆகும். இதன் குறிப்பு பாடல் #962 இல் உள்ளது.



பாடல் #962: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்


[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலர்
ஆறெழுத் தொன்றாக ஓதி உணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு
ஓரெழுத் தாலே உயிர்பெற லாமே.

விளக்கம்:

பாடல் #961 இல் உள்ளபடி சாதகருக்குள் வேள்வியாக இருக்கும் 'ஓம் நமசிவாய' எனும் ஆறெழுத்து மந்திரத்தை செபிக்கும் முறை அறிந்தவர்கள் கூட அந்த ஆறு எழுத்துக்களும் ஒரு எழுத்திலேயே அடங்கியிருப்பதை அறிந்து அதை ஓதி உணராமல் இருக்கின்றார்கள். இந்த ஆறெழுத்துக்களும் அடங்கியிருக்கும் 'ஓம்' எனும் ஓரெழுத்தை மட்டும் வேறு எழுத்துக்கள் எதுவும் துணையின்றி ஓதி உணரக்கூடியவர்களுக்கு அந்த ஓரெழுத்தே உயிருக்குள் இருக்கும் இறைவனை உணர வைக்கும்.

குறிப்பு: 'ஓம் நமசிவாய' என்னும் ஆறெழுத்து மந்திரத்தை பல கோடி முறை செபிக்கும் சாதகர்கள் அந்த ஆறெழுத்து மந்திரத்தை ஓரேழுத்து மந்திரமாக உணர்வார்கள்.



பாடல் #963: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே.

விளக்கம்:

பாடல் #962 இல் உள்ளபடி 'ஓம்' எனும் ஓரெழுத்தாக ஓதி உணரக்கூடியவர்களுக்கு அதன் உயிர்க்கலைகளாக மொத்தம் 15 எழுத்துக்கள் இருப்பதை உணர முடியும். இந்த 15 எழுத்துக்கள் 'நமசிவாய' எனும் ஐந்து எழுத்து மந்திரமும் அதன் ஆதார எழுத்துக்களாகிய அ, இ, உ, எ, ஓ [பாடல் #927] ஆகிய ஐந்து எழுத்துக்களும் அதன் பீஜங்களாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஓம் [பாடல் #912] ஆகிய ஐந்து எழுத்துக்களும் ஆகும். இந்த 15 எழுத்துக்களே மாற்றி மாற்றி எழுதப்பட்டு திருவம்பலச் சக்கரத்தில் மொத்தம் 51 எழுத்துக்களாக இருக்கின்றது [பாடல் #924]. இந்த 15 எழுத்துக்களில் அ, உ இரண்டும் ஆதி எழுத்துக்களாகும். மீதியுள்ள 13 எழுத்துக்களும் சோதி எழுத்துக்களாகும். இந்த சோதி எழுத்துக்களை பீஜங்களாக்கி அவற்றின் ஒலியை உடலுக்குள் பரவச் செய்து இதன் தத்துவத்தை உணரலாம்.



பாடல் #964: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலை பதினாறு கலையதாங்
கந்தர வாகரங் காலுடம் பாயினாள்
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன் றாயதே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தில் உள்ள ஒளியைச் சுற்றிக்கொண்டு இருக்கும் ஒலியை எழுப்பினால் அதிலிருந்து வெளிப்படும் சக்தியானது 16 கலைகளாகப் பிரிந்து திருவம்பலச் சக்கரத்தின் தலை [மேல் பகுதி] உடல் [நடுப் பகுதி] கால் [கீழ்ப் பகுதி] என்று பல அங்கங்கங்களாக செயலாற்றுகின்றது. எப்போதும் முடிவில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த சக்தி மயமே திருவம்பலச் சக்கரத்தில் இருக்கும் 51 எழுத்துக்களாக இருக்கின்றது.




பாடல் #965: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஐம்ப தெழுத்தே அனைத்தும்வே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத்து ஆமே.

விளக்கம்:

பாடல் #964 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்தின் நடுவிலுள்ள கட்டத்தில் இருக்கும் ஐம்பது எழுத்துக்களுக்குள் அனைத்து வேதங்களும் ஆகமங்களும் அடங்கியுள்ளன. இதனை அறிந்து கொண்ட சாதகர்கள் ஐம்பது எழுத்துக்களும் 'நமசிவாய' எனும் ஐந்து எழுத்துக்குள் அடங்கிவிடுவதை உணரலாம்.

குறிப்பு: பாடல் #912 இல் உள்ளபடி உச்சரிக்காமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயக்கும் சாதகர்கள் திருவம்பலச் சக்கரத்திலுள்ள ஐம்பது எழுத்துக்களின் தத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.



திருமந்திரம் – பாடல் #966: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம் [ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் றானே.

விளக்கம்:

பாடல் #965 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்தில் உணர்ந்த ஐந்தெழுத்து ‘நமசிவாய’ எனும் மந்திரத்தின் மூலம் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் இறைவன் படைத்தான். இந்த பஞ்ச பூதங்களையும் ஆதார சக்தியாக வைத்து பல அண்ட சராசரங்களையும் இறைவன் படைத்தான். ஐந்தெழுத்து மந்திரத்தின் மூலம் படைத்த அண்ட சராசரங்கள் அனைத்தையும் காக்கின்றான் இறைவன். ஐந்தெழுத்து மந்திரத்தின் மூலம் படைத்துக் காத்த அனைத்துமே தாமே என்பதை காட்டி நின்றான்.



பாடல் #967: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

வீழ்ந்தெழ லாம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் என்னும் புரிசடை யோனே.

விளக்கம்:

வினைகளில் வீழ்ந்து கிடப்பவர்கள் யாராலும் உருவாக்கப்படாத இறைவனின் திருநாமமாகிய 'நமசிவாய' என்னும் மந்திரத்தை முறைப்படி மனம் சோர்வடையாமல் ஓதிக்கொண்டிருந்தால் அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் வினைகள் மற்றும் அவற்றால் உண்டாகும் துன்பங்களையும் நீக்கி அருளுவான் விரிந்த சடையணிந்த இறைவன்.



பாடல் #968: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்துஅஞ்சு மாகிநின் றானே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தை முறையாக சாதகம் செய்யும் சாதகர்கள் உண்ணும் அமிழ்தமாகவும் அவர்கள் வாழும் அழிவில்லாத காலமாகவும் இசைக்கின்ற இசையாகவும் அதிலிருக்கும் கேள்வியாகவும் பாடுகின்ற பாடல்களாகவும் வாணுலகத் தேவர்களும் விரும்பி தொழுகின்ற திருவடிகளாகவும் எண்ணிலடங்காத எழுத்துக்களின் மூலமாகவும் இருப்பது ஐந்து எழுத்து ‘நமசிவாய’ எனும் மந்திரமே ஆகும்.



பாடல் #969: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஐந்தின் பெருமை அகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமை யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு ஆமே.

விளக்கம்:

பரந்து விரிந்து கிடக்கும் இந்த உலகம் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் ஆற்றலினால் இயங்கிக் கொண்டிருக்கிறது. இறைவன் இருக்கும் ஆலயங்கள் அனைத்தும் 'நமசிவாய' மந்திரமாகவே இருக்கின்றது. இந்த ஐந்து எழுத்து மந்திரத்தின் பெருமையே அறநெறி தவறாமல் வாழுகின்றவர்கள் வாழ்க்கைப் பாதையாக இருந்து அந்த வழியில் செல்பவர்களை என்றும் இளமையுடன் வைத்திருக்கின்றது.



பாடல் #970: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

வேரெழுத் தாய்விண்ணாய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலந் தாங்கியும் அங்குளன்
சீரெழுத் தாய்அங்கி யாயுயி ராமெழுத்
தோரெழுத்து ஈசனும் ஒண்சுட ராமே.

விளக்கம்:

அனைத்து எழுத்துக்களுக்கும் வேர் போல இருக்கும் ‘ஓம்’ எனும் எழுத்தாகவும், ‘நமசிவாய’ எனும் மந்திர எழுத்துக்களில் ‘சி’ எழுத்து குறிக்கும் ஆகாயமாகவும் அதைத் தாண்டி இருக்கும் அண்ட சராசரங்களாகவும், ‘வா’ எழுத்து குறிக்கும் நீராகவும், ‘ய’ எழுத்து குறிக்கும் நிலத்தை தாங்கி அங்கு இருப்பவனாகவும், ‘ந’ எழுத்து குறிக்கும் நெருப்பாகவும், ‘ம’ எழுத்து குறிக்கும் உயிர் காற்றாகவும் பஞ்ச பூதங்களில் ஐந்தெழுத்து மந்திரமாக இருக்கின்ற இறைவனே ‘ஓம்’ எனும் ஓரெழுத்தின் வடிவத்தில் பேரொளிப் பிழம்பாகவும் இருக்கின்றான்.



பாடல் #971: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்துஅது நன்னெறி தானே.

விளக்கம்:

'நமசிவாய' எனும் மந்திரத்தில் நான்காவது எழுத்தாகிய 'வா' எழுத்தின் ஒலி வடிவமாகவே இந்த உலகம் இருக்கின்றது. 'வா' எழுத்திற்குள் உலகம் அனைத்தும் அடங்கியிருக்கின்றது. இந்த 'வா' எழுத்தின் முழுப்பொருளை அறிந்து உணரக் கூடியவர்களுக்கு அதுவே ஆதாரமாய் நின்று மேன்மையான நல்நெறியினை கொடுக்கும்.



திருமந்திரம் – பாடல் #972: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம் [ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

இயைந்தனள் ஏந்திழை என்னுள மேவி
நயந்தன ளங்கே நமசிவ என்னும்
பயந்தனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனன் மற்றும் பிதற்றறுத் தேனே.

விளக்கம்:

பாடல் – 971 ல் உள்ளபடி 'வ' எழுத்தை ஓதிய எம்முள்ளே சிவசக்தி அடியேனின் உள்ளத்தோடு சேர்ந்து இருந்து எமது பக்குவம் அறிந்து அதன்படி வழிகாட்டினாள். அதன்படி 'நமசிவ' எனும் மந்திரத்தை எப்போதும் தியானித்துக் கொண்டே இருந்து சிந்தனை மாறுபடாமல் சிவசக்தியின் திருவடியை பற்றிக் கொண்டு திருவடியைத் தவிர்த்த மற்ற அனைத்தையும் எம்மிடமிருந்து அறுத்து விட்டேன்.

குறிப்பு: 'நமசிவ' எனும் மந்திரத்தை முறைப்படி குருவின் மூலம் கற்றுக் கொண்டு அதை தியானம் செய்பவர்களுக்கு இறைவனைத் தவிர மற்ற பற்றுக்கள் அனைத்தும் விலகிவிடும்.




பாடல் #973: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை
ஓமத்தி லேயுதம் பண்ணும் ஒருத்திதன்
நாம நமசிவ என்றிருப் பாருக்கு
நேமத் தலைவி நிலவிநின் றாளே.

விளக்கம்:

உயிர்கள் வாழ உதவும் உணவு தானியங்களாகவும் அதை பக்குவமாக சமைத்த உணவின் சுவையாகவும் இருந்து அந்த உணவை வயிற்றில் செரிக்க வைக்கின்ற நெருப்பாகவும் இருக்கும் சிவசக்தின் பெயர் 'நமசிவ' ஆகும். இந்த மந்திரத்தை எப்போதும் தியானித்துக் கொண்டே இருப்பவர்களுக்கு தியானத்தின் பலனைத் தரும் தலைவி வெளிப்பட்டு துணையாக நிற்பாள்.



பாடல் #974: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

பட்ட பரிசே பரமஞ் செழுத்ததின்
இட்ட மறந்திட் டிரவு பகல்வர
நட்டம தாடு நடுவே நிலயங்கொண்
டட்டதே சப்பொரு ளாகிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #973 இல் உள்ளபடி தியானத்தின் பயனால் பரிசாகக் கிடைத்த தலைவி வழிகாட்டும் தலைவனுக்கு உரிய மந்திரம் 'நமசிவாய' மந்திரமாகும். இந்த மந்திரத்தை இறை நினைப்பிலிருந்து சிறிதும் விலகாமல் [கண் இமைக்கும் நேரம் கூட இறைவனை மறக்காமல் இருப்பது] இரவு பகல் எப்போழுதும் உச்சரித்தால் பாடல் #917 இல் உள்ளபடி திருவம்பலச் சக்கரத்தின் நடுவே இருக்கும் 'சி' எழுத்தில் நின்று ஆடுகின்ற சிவத்தை பாடல் #936 இல் உள்ளபடி தமக்குள் உணர்ந்து அந்த சிவப் பரம்பொருளே சக்கரத்தின் எட்டுத் திசைகளிலும் சக்தியாக நிற்பதை உணரலாம்.



பாடல் #975: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வருமுப் பதத்திற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமாய்
யகாரம் உயிரென் றறையலு மாமே.

விளக்கம்:

ஓங்கார மந்திரத்தில் ‘அ’ எழுத்து உயிர்களாகவும் ‘உ’ எழுத்து இறைவனாகவும் ‘ம’ எழுத்து மாயையாகவும் இருக்கின்றது. இந்த மூன்று எழுத்துக்கள் சேர்ந்த ‘ஓம்’ எழுத்துக்குள் ‘சிவய’ மந்திரமும் அடங்கியுள்ளது. ‘சிவய’ மந்திரத்தில் ‘சி’ எழுத்து இறைவனையும், ‘வ’ எழுத்து இறைவியையும், ‘ய’ எழுத்து உயிர்களையும் குறிக்கும்.

குறிப்பு: ‘சிவய’ மந்திரத்தில் இறைவனும் இறைவியும் உயிர்களும் இருப்பதைப் போலவே ‘ஓம்’ மந்திரத்திலும் இறைவனும் இறைவியும் உயிர்களும் சேர்ந்து இருக்கின்றது.



பாடல் #976: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நகார மகார சிகாரம் நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஓகார முதற்கொண் டொருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.

விளக்கம்:

'சி' எழுத்தை நடுவில் கொண்டிருக்கும் 'நமசிவாய' மந்திரத்தை மூச்சுக்காற்றை உள்ளிழுக்கும் போதும் வெளிவிடும் போதும் மூச்சுக்காற்றோடு சேர்த்து அதற்கு முன்பு 'ஓம்' சேர்த்துக் கொண்டு மனதிற்குள் செபித்து வந்தால் இறைவன் சாதகரின் மனதிற்குள் எழுந்தருளுவான்.

குறிப்பு: மூச்சுக்காற்றை இழுக்கும் போது 'ஓம்' என்றும் வெளிவிடும்போது 'நமசிவாய' என்றும் செபிக்க வேண்டும்.



பாடல் #977: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே.

விளக்கம்:

உடல் எனும் காட்டிற்குள் ஐந்து புலன்களாகிய யானைகள் வாழ்கின்றது. இந்து ஐந்து யானைகளையும் கட்டுப் படுத்தும் அங்குசமாக இருப்பது ஐந்தெழுத்து 'நமசிவாய' மந்திரமாகும். இந்த மந்திரத்தின் மூலம் ஐந்து புலன்களாகிய யானைகளை அடக்க முடிந்த சாதகர்களுக்கு ஐந்தெழுத்தின் அதிபதியாகிய இறைவனை அறிந்து தமக்குள் இருக்கும் இறைவனை அறிந்து கொள்ளலாம்.



பாடல் #978: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஐந்து கலையில் அகராதி தன்னிலே
வந்த நகராதி மாற்றி மகராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரையொடுஞ்
சந்திசெய் வார்கட்குச் சடங்கில்லை தானே.


விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்திலுள்ள ஐந்து கலைகளின் ஆதாரமாக இருக்கின்ற 'அ' எழுத்திலிருந்து வந்த 'ஓம்' எழுத்தை முதலாகக் கொண்ட 'நமசிவாய' மந்திரத்தை மாற்றி 'சிவாயநம' எனும் மந்திரமாக்கி பரிபூரணமாக குருவை நாடி சிவசக்தியை அடைந்தவர்களுக்கு தினமும் செய்யும் சடங்குகள் எதுவும் தேவையில்லை.

திருவம்பலச் சக்கரத்திலுள்ள ஐந்து கலைகள்:

1. நிவர்த்தி = பலன் கொடுத்தல்
2. பிரதிட்டை = மந்திரத்தை நிலை நிறுத்துதல்
3. வித்தை = சக்தியைப் பெருக்குதல்
4. சாந்தி = அமைதியை உண்டாக்குதல்
5. சாந்தியாதீதம் = சத்தம் / ஒலி

குறிப்பு: கலைகள் என்பது என்னவெனில் திருவம்பலச் சக்கரம் எப்படி வேலை செய்கிறது என்பதை குறிப்பதாகும்.



பாடல் #979: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

மருவுஞ் சிவாயமே மன்னும் உயிரும்
அருமந்த யோகமும் ஞானமு மாகுந்
தெருள்வந்த சீவனார் சென்றிவற் றாலே
அருள்தங்கி யச்சிவ மாவது வீடே.

விளக்கம்:

பாடல் #978 இல் உள்ளபடி மாறிய 'சிவாயநம' எனும் மந்திரமே உலகத்திலுள்ள அனைத்து உயிர்களாகவும் கிடைப்பதற்கு அரிய யோகமாகவும் ஞானமாகவும் இருக்கின்றது. இறையருளால் இந்த மந்திரத்தை சாதகம் செய்து கைவரப்பெற்ற சாதகர்கள் தமக்கு கிடைத்த அருள் காட்டிய வழிபடியே அந்த அருளை நிலைபெறச் செய்து தாமே சிவமாவது முக்தியாகும்.



பாடல் #980: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே.

விளக்கம்:

பாடல் #979 இல் உள்ளபடி மாறிய 'சிவாயநம' மந்திரத்தின் உண்மையை உணர்ந்த சாதகர்களின் ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதாயி ஆகிய ஐந்து மலங்களும் நீங்கி அவர்களின் நெஞ்சத்திற்குள் முழுவதும் சிவசக்தியே நிரம்பியிருக்கும். அவர்களுக்கு எதிர்ப்பானது எதுவும் இல்லை உடலுக்கும் எப்போதும் அழிவு இல்லை. இதுவே இறைவனை சரணடையும் வழியென்று எடுத்துரைக்கின்றோம்.



பாடல் #981: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

சிவாயவொ டவ்வே தெளிந்துளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவொ டவ்வுந் தெளியவல் லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே.

விளக்கம்:

பாடல் #980 இல் உள்ளபடி 'சிவாயநம' எனும் மந்திரத்தில் உள்ள 'சிவாய' உடன் 'அவ்' சேர்த்து 'சிவாயஅவ்' என்று அதன் பொருளை தெளிவாக அறிந்து வாயால் உச்சரிக்காமல் உள்ளத்திற்குள் ஜெபித்தால் அந்த மந்திரமே சாதாகரின் உள்ளத்தில் இறைவனின் திரு உருவமாக இருக்கும். அப்படி உள்ளத்திற்குள் மந்திர வடிவாக இறைவன் வீற்றிருந்தபின் மலமாசுகள் அகன்று இறைவனை உணர்ந்த சாதாகர்கள் தாமே மந்திர வடிவான இறைவனாக இருக்கிறார்கள்.

குறிப்பு: 'சிவாய அவ்' என்று பாடலில் இருந்தாலும் இந்த மந்திரத்திற்கான பீஜம் பாடல் #957 இல் உள்ளபடி 'சிவாய ஔ' ஆகும்.




பாடல் #982: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே ஓருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றானே.

விளக்கம்:

'சிவாய' எனும் மந்திரத்தோடு 'நம' சேர்த்து 'சிவாயநம' எனும் மந்திரத்தை மூச்சுக்காற்றை உள்ளிழுக்கும் போதும் வெளிவிடும் போதும் மூச்சுக்காற்றோடு சேர்த்து அதற்கு முன்பு 'ஓம்' சேர்த்துக் கொண்டு மனதிற்குள் செபித்து வந்தால் மாயையின் தலைவனாகிய இறைவன் சாதகரின் உடலையே தனக்கு தகுதியான வீடாக்கி வீற்றிருப்பான்.



பாடல் #983: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நம்முதல் ஓரைந்தின் நாடுங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் சதாசிவந் தானே.

விளக்கம்:

‘நமசிவாய’ எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை பாடல் #962 இல் உள்ளபடி ஓரெழுத்து மந்திரமாக உணர்ந்து செபித்துக் கொண்டிருந்தால் நினைத்த செயல் கைகூடும். ‘நமசிவாய’ எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை செபித்து வர கொடிய வல்வினைகளும் பிறவித்துயரும் போகும். ‘சிவாயநம’ மந்திரத்தை உள்ளத்துக்குள்ளே உணர்ந்து அறிந்தவர்களுக்கு சதாசிவ பரம்பொருளே வெளிப்பட்டு அருள் புரிவார்.



பாடல் #984: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நவமுஞ் சிவமும் உயிர்பர மாகும்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யாய்பவ ராதர வால்அச்
சிவமென்ப தானெனுந் தெளி வுற்றதே.

விளக்கம்:

‘நமசிவாய’ ‘சிவாயநம’ ஆகிய இரண்டு மந்திரங்களுமே உயிர்கள் சிவமாவதற்குரிய மந்திரமாகும். இந்த ஐந்தெழுத்துக்கள் நிலைபெற்ற இறைவனின் திருவடிப்பேற்றைத் தரும் மெய்யுணர்வு ஆகும். இந்த மெய்யுணர்வு பெற்று சிவத்துடன் சேர்ந்த ஐந்தெழுத்தின் உண்மையால் பேரன்பு பூண்டவர்கள் தானும் அவனும் வேறில்லை என்னும் ஞானத் தெளிவு உண்டாகி தானே சிவமாகத் திகழ்வார்கள்.




பாடல் #985: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

கூடிய எட்டும் இரண்டுங் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்துள் ளேவைத்து
ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்
தேடி அதனைத் தெளிந்துஅறி யீரே.

விளக்கம்:

சாதகர்கள் தேடுகின்ற இறைவனை தமக்குள்ளேயே அறிவு வடிவமாக உணர்ந்து அந்த அறிவைப் பெறுதற்கு அகார உகாரங்களின் கூட்டாகிய 'ஓம்' எனும் மந்திரத்தை தியானித்தால் இறைவனே குருவாக நின்று வழிகாட்டுவார். அவரின் வழிகாட்டுதலின் படி இதுவரை தம்மோடு மாறுபட்டுப் போராடி வந்த ஐந்து புலன்களும் தம் வயப்பட்டு துணைசெய்து நிற்கும். ஐந்து புலன்களையும் தம் வயப்படுத்த தேடிக்கொண்டிருந்த வழியை இவ்வாறு தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.



பாடல் #986: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.

விளக்கம்:

எட்டு என்பது அகராமாகிய சிவம். இரண்டு என்பது உகாரமாகிய சக்தி. இருமூன்றும் நான்கும் சேர்ந்த பத்து என்பது யகாரமாகிய உயிர். குறிப்பு மொழியால் உணர்த்தப்பட்ட இப்பொருள்களை அனுபவமாக உணராதவர்கள் 'அ உ ய' எனும் எழுத்துக்களை அறியத் தொடங்கும் தொடக்க அறிவுகூட இல்லாதவரேயாவர். சாதகர்கள் இந்த எழுத்துக்களின் உட்பொருளை உணர்வதன் மூலம் தன்னை அறிந்து சதாசிவத்தை அடையும் உபாயத்தை உணர்த்துவதே இந்த ஞானப் பாதையாகும்.





பாடல் #987: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

எட்டு வரையின்மே லெட்டு வரைகீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்
சிட்ட அஞ்செழுத்துஞ் செபிசக் கரமே.

விளக்கம்:

இடமிருந்து வலமாக எட்டு கோடுகளும் மேலிருந்து கீழாக எட்டு கோடுகளும் வரைந்தால் அதற்குள் நாற்பத்தொன்பது கட்டங்கள் வரும். இதில் நடுவிலுள்ள கட்டத்தில் இறைவனின் வடிவமான 'ஓம்' எழுத்தை எழுதி அதைச் சுற்றியுள்ள நாற்பத்தெட்டு கட்டங்களிலும் 'சிவாயநம' எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை மாற்றி மாற்றி எழுதி அமைத்தால் வரும் சக்கரம் செபிப்பதற்கு உகந்ததாகும். [இந்த சக்கரத்தின் அமைப்பு அடுத்த பாடலிலும் தொடரும்]




பாடல் #988: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆனஇம் மூவரோ டாற்றவ ராதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையும் செய்யச்சிவ சக்கரந் தானே.

விளக்கம்:

தானவராகிய சேத்திர பாலகர் [பைரவர் – காலத்தை காப்பவர்], சட்டராகிய வீரபத்திரர் சதிரர்களாகிய பிள்ளையார் முருகர் என இந்த மூன்று வகையினரோடு இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் நந்தி இடபன் மாகாளன் பிருங்கி சண்டன் விருஷபர் சண்டிகேசுவரர் ஆகிய 15 பேருடன் பிரம்மா திருமால் மகேசுவரன் சதாசிவன் உருத்திரன் ஆகிய ஐவரும் சேர்ந்து மொத்தம் 24 தெய்வங்களின் பீஜ எழுத்துக்களை பாடல் #987 இல் உள்ள சக்கரத்தை சுற்றி 24 கட்டங்களிலும் எழுத சிவசக்கரம் அமையும்.

குறிப்பு: அசையா சக்தியாகிய இறைவனிடமிருந்து முதலில் தோன்றிய ஒலி ஒளியிடமிருந்து உருவாகிய ஐந்து மூர்த்திகளே சேனைகளாவார்கள்.



பாடல் #989: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

பட்டன மாதவ மாறும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நமஎன்பர்
எட்டனை யாயினும் ஈசன் திறத்திறம்
ஓட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே.

விளக்கம்:

திருவம்பலச் சக்கரத்தை முறைப்படி 'ஓம் சிவாயநம' என்ற ஆறெழுத்து மந்திரத்தை செபித்து சாதகம் செய்து சதாசிவமூர்த்தியை அடைபவர்கள் 'தான்' எனும் நினைப்பை அறுத்து இறைவனே சரணாகதி என்று இருக்கின்றார்கள். அளவில்லாத இறைவனின் பெருமைகளை எம்மால் இயன்றவரை எடுத்துரைத்து போற்றிப் புகழ்வதைத் தவிர வேறொன்றும் யாம் அறியேன்.



பாடல் #990: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றான
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே.

விளக்கம்:

'சிவாய' என்ற மூன்று எழுத்தோடு 'நம' என்ற இரண்டு எழுத்து சேர்ந்து 'சிவாயநம' எனும் சிறந்த ஐந்தெழுத்து மந்திரத்தோடு ஆதார 12 எழுத்துக்களும் சேர்ந்து ஒன்றோடு ஒன்றாகக் கலந்து இருக்கும் திருவம்பலச் சக்கரத்தில் ஒளி ஒலியாக சிவசக்தி சிறந்து விளங்கும் நிலையில் அது சங்கரன் சக்கரம் ஆகும்.




பாடல் #991: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

வித்தாஞ் செகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப்பின்
உத்தாரம் பன்னிரண் டாதி கலைதொகும்
பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே.

விளக்கம்:

36 தத்துவங்களைக் குறிக்கும் 36 கட்டங்கள் வரைந்து அதனுள் இடது பக்கம் மூன்றாவது அடுக்கு முதல் ஆறாம் அடுக்கு வரை ஒவ்வொரு அடுக்கிலும் 4 கட்டங்கள் வீதம் மொத்தம் 16 கட்டங்களில் சந்திரகலையின் 'க்ஷ' எழுத்து முதலாக 'ட' எழுத்து வரை உள்ள 16 எழுத்துக்களை எழுதி, முதல் இரண்டு அடுக்குகளில் 6 கட்டங்கள் வீதம் மொத்தம் 12 கட்டங்களில் 'ஊ' எழுத்து முதலாக 'ஒ' எழுத்து வரை உள்ள 12 எழுத்துக்களையும் எழுதி சக்கரம் அமைத்து 'சிவாயநம' எனும் மந்திரத்தை செபித்து வந்தால் சக்கரத்திலுள்ள இரண்டு கலைகளும் ஒன்றாகி சக்கரத்தின் வலது பக்கம் இருக்கும் எட்டு கட்டங்களோடு மேலே தலைப் பகுதியுள்ள இரண்டு கட்டங்களும் சேர்த்து மொத்தம் பத்து அக்னி கலைகள் உருவாகும். அப்படி உருவான பிறகு சக்கரத்திலிருக்கும் சந்திர, சூரிய, அக்னி கலைகள் மூன்றையும் சேர்த்து சாதகம் செய்ய வேண்டும்.



பாடல் #992: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

கண்டெழுந் தேன்கம லம்மல ருள்ளிடை
கொண்டெழுந் தேன்உடன் கூடிய காலத்துப்
பண்டழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே.

விளக்கம்:

பாடல் #991 இல் உள்ளபடி திரிமண்டல சக்கரத்தை இதயத்தாமரைக்குள் வைத்து பலகாலமாக சாதகம் செய்து விழுப்புணர்வு பெற்று ஆதியிலிருந்தே அழியாமல் என்றும் உடனிருக்கும் இறைவனை கண்டுகொண்டு அவன் காட்டிய வழியே சென்று என்றும் அழியாமல் அவனே சரணாகதி என்று இருக்கலாம்.

குறிப்பு: சக்கரத்தை வெளியில் பூசிப்பதால் பயனில்லை சக்கரத்தை மனதில் எண்ணி தியானிப்பதாலேயே பயன் கிடைக்கும் என்பதை இப்பாடலின் மூலம் உணரலாம்.



பாடல் #993: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

புண்ணிய வானவர் பூமழை தூவிநின்
றெண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நமஎன்று நாமத்தைக்
கண்ணென உன்னிக் கலந்துநின் றாரே.

விளக்கம்:

புண்ணியத்தால் வானுலக வாழ்வு பெற்ற தேவர்கள் இறைவனுக்கு இணையான 'நமசிவாய' ஐந்தெழுத்து மந்திரத்தால் இறைவனை பூ மழை போல் அர்ச்சனை செய்து தியானித்து நமசிவாய மந்திரத்தை உணர்ந்து கண்ணிலிருந்து காணும் அனைத்தையும் அந்த மந்திரமாகவே கண்டு அதனுடன் கலந்து இருப்பார்கள்.



பாடல் #994: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆறெழுத் தாவது வாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்
சாவித் திரியில் தலையெழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே.

விளக்கம்:

'ஓம் நமசிவாய' என்னும் ஆறு எழுத்தே இறைவனை அடையும் ஆறுவித வழிகளின் விரிவாகும். சமஸ்கிருத எழுத்தில் காயத்திரி மந்திரத்தில் உள்ள 24 எழுத்துக்களை [புள்ளி வைத்த மூன்று எழுத்துக்கள் தவிர்த்து] நான்கு முறை செபிப்பது 'ஓம் நமசிவாய' எனும் ஆறு எழுத்துக்களை ஒரு முறை செபிப்பதற்கு சமமாகும். காயத்ரி மந்திரத்திலுள்ள முதல் எழுத்தாகிய 'ஓம்' எனும் மூல மந்திரத்தையும் காயத்ரி மந்திரத்தையும் பிரித்து அறிந்து உணர வல்லவர்கள் பிறவி இல்லாத நிலையை அடைவார்கள்.

குறிப்பு: சமயங்கள் என்பதன் பொருள் இறைவனை அடைவதற்கு முறைப்படி கடைபிடித்து செல்லும் வழிகளாகும்.

இறைவனை அடையும் ஆறுவித வழிகள்:

1. தியானம் – மந்திரத்தை மனதிற்குள் தியானித்தல்
2. செபம் – அக வழிபாடு மூலம் செபித்தல்
3. பூஜை – புற வழிபாடு மூலம் செபித்தல்
4. சக்கரம் – சக்கரங்கள் அமைத்து செபித்தல்
5. ஞானம் – மந்திரத்தின் பொருளை தேடி ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல்
6. புத்தி – மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல்



பாடல் #995: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்


[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

எட்டினில் எட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய ஒன்றெட்டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட் குமாபதி யானுண்டே.

விளக்கம்:

குறுக்கும் நெடுக்குமாக நான்கு கோடுகள் வரைந்து வருகின்ற ஒன்பது அறைகளில் நடு அறையில் 'சி' எழுத்தை எழுதி அந்த எழுத்தையே எட்டு எழுத்துக்களாகவும் காணும்படி சுற்றியிருக்கும் எட்டு கட்டங்களிலும் 'சி' எழுத்தையே எழுதி நிரப்பி இந்த சக்கரத்தை முழுவதும் சுற்றியிருக்கும்படி 'ஓம்' எனும் எழுத்தை எழுதி தியானிக்கும் சாதகர்களுக்கு இறைவனும் இறைவியும் உடன் இருப்பார்கள்.

குறிப்பு: இந்தப் பாடலின் மூலம் உமாபதி சக்கரம் அமைத்து தியானிக்கும் முறையை அறியலாம்.




பாடல் #996: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்

[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நம்முதல் அவ்வொடு நாவின ராகியே
யம்முத லாகிய எட்டிடை யுற்றிட்டு
உம்முத லாக வுணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் றானே.

விளக்கம்:

'ந' முதல் 'ய' வரை இருக்கும் 'நமசிவாய' ஐந்தெழுத்து மந்திரத்தை நாவினில் எப்பொழுதும் உச்சரிப்பவர்கள் பாடல் #995 இல் உள்ள உமாபதி சக்கரத்தின் நடு அறையை சுற்றியுள்ள எட்டு அறைகளிலும் இருக்கும் 'சி' எழுத்துக்கு முன்பு 'ய' எழுத்தைச் சேர்த்து 'யசி' என்று எழுதி அதை மூச்சுக்காற்றோடு சேர்ந்து தியானித்து உணர்பவர்களின் தலை உச்சியில் பிரணவத்தின் தலைவனாகிய இறைவன் சாதகரோடு வீற்றிருப்பான்.



பாடல் #997: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு ஓலையிற் சாதகந்
துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே.

விளக்கம்:

பட்டுப் போகாத அரச மரத்தின் பலகையை நேராக வைத்து அதன் மேலே நன்றாகப் பதியுமாறு 'மசிவாயந' என்று எழுதி அது போலவே பனை ஓலையிலும் எழுதி அந்த ஓலையின் மேலே தேன் கூட்டைச் சுட்டால் கிடைக்கும் மெழுகினால் பூசி அந்த மெழுகு ஓலையோடு ஒட்டி பக்குவப்படும் அளவிற்கு நெருப்பில் காட்டி அவ்வாறு பக்குவப்பட்ட ஓலையை அரசம் பலகையின் மேல் வைத்து அதில் எழுதியுள்ள 'மசிவாயந' என்ற மந்திரத்தை ஓதி வருபவர்களுக்கு தம்பனம் எனும் சித்தி கிடைக்கும்.

குறிப்பு: தம்பனம் என்பது இறைவனை அடையத் தடையாக இருக்கும் எதையும் கட்டுதல் அல்லது அடக்குதல் என்று பொருள்படும்.



பாடல் #998: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

கரண விரளிப் பலகை யமன்றிசை
மரணமிட் டெட்டின் மகார வெழுத்திட்டு
வரணமி லைங்காயம் பூசி யடுப்பிடை
முரணிற் புதைத்திட மோகன மாகுமே.

விளக்கம்:

பட்டுப்போகாத கொன்றை மரத்தின் பலகையை எடுத்து அதை யமனுடய திசையாகிய தெற்குத் திசையை நோக்கி வைத்து அதில் பாடல் #997 இல் உள்ளபடி 'மசிவாயந' என்று எழுதி அதன்பின் அந்தப் பலகையின் மேல் மறைப்பில்லாமல் நன்றாகத் தெரியும்படி ஐந்துவித காயங்களாகிய சுக்கு, மிளகு, கடுகு, பூண்டு மற்றும் பெருங்காயம் ஆகியவற்றைப் பூசிவிட்டு அந்தப் பலைகையைத் தலைகீழாக மண்ணில் புதைத்துவிட்டு அதன் மேலே அமர்ந்து அதில் எழுதி மந்திரத்தை தியானித்து செபித்து வந்தால் மோகனம் எனும் வித்தை கைகூடும்.

குறிப்பு: மோகனம் வித்தை என்பது வேண்டியவற்றை வசியம் செய்வதாகும். உணவுப் பொருளை சுட்டு பக்குவப்படுத்தும் அடுப்பு போல பலகையைப் பக்குவப்படுத்த வேண்டும் என்பதே இங்கு அடுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.



பாடல் #999: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்
டோங்காரம் வைத்திடு உச்சாட னத்துக்கே.

விளக்கம்:

வடமேற்கில் சிவபெருமானின் அழிக்கும் முகத்தில் ஒன்றாகிய ஐயனார் கோயிலில் அழகாகத் தெரியும்படி பட்டுப்போகாத பூவரசம் பலகையின் மேல் ஓலையை வைத்து அதை நெருப்பிலிருந்து வரும் புகை மேல் காட்டி முழுவதும் கரி படரும் வரை வைத்து அதன்மேல் விஷத்தினைப் பூச வேண்டும். அதன் பிறகு ஓலை மேல் ஓங்காரம் எழுதி வைத்து மந்திரம் செபித்து வந்தால் உச்சாடனம் எனும் வாக்கு பலிதம் உண்டாகும்.

குறிப்பு: ஐயனார் கோயில் என்பது ஊரின் வட மேற்கு எல்லையைக் குறிக்கும். வாக்கு பலிதம் என்றால் சாதகர் சொல்லும் வார்த்தைகள் அப்படியே நடப்பதாகும்.



பாடல் #1000: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திட
அச்சமற மேலோர் மாரணம் வேண்டிலே.

விளக்கம்:

நண்பகல் நேரத்தில் சிவன் உருத்திரனாக தாண்டவம் ஆடும் முதுகாட்டில் பச்சை ஓலையில் ஐந்துவித காயங்களான சுக்கு, மிளகு, கடுகு, பூண்டு மற்றும் பெருங்காயம் ஆகியவற்றை அரைத்துப் பூசி அதை எடுத்துச் சென்று அக்கினி மூலையில் [தென்கிழக்கு மூலையில்] மூன்று சதுரங்களின் மத்தியில் [முக்கோணத்திற்கு நடுவில்] புதைத்து வைத்துவிட்டால் நமது உள்ளத்தில் அச்சமூட்டும்படி இருக்கும் தீய சக்திகளை எல்லாம் மேலுலகில் இருக்கும் தேவர்களின் துணையோடு அழிக்கும் மாரணம் எனும் சக்தியைப் பெறலாம்.




பாடல் #1001: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்லம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே.

விளக்கம்:

பொருத்தமான அரிதாரக் கலவையை ஒரு ஓலையின் மேல் பூசி அதன் மேல் பொருத்தமாக 'அ' மற்றும் 'உ' எழுத்துக்களை எழுதி சொல்லும் மந்திரத்தை கிரகிக்கக்கூடிய உத்தமமான வில்வ மரப் பலகையின் மேல் வைத்து மந்திரத்தை எண்பதினாயிரம் [80000] முறை உச்சரித்தால் வசியம் எனும் வித்தை கைகூடும்.

குறிப்பு: வசியம் எனும் வித்தை பகைவர்களாக இருப்பவர்களை நண்பர்களாக மாற்றி எப்போதும் அன்போடு இருக்கச் செய்வது.




பாடல் #1002: நான்காம் தந்திரம் – 2. திருவம்பலச் சக்கரம்
[ஆனந்தக் கூத்தாடும் இறைவன் அருட்சக்தியோடு மந்திரவடிவாய் இருக்கும் எந்திரம்]

எண்ணாக் கருடனை ஏட்டில் யகாரமிட்
டெண்ணாப் பொன்னாளில் எழுவெள்ளி பூசிடா
வெண்ணாவற் பலகை யிட்டுமேற் கேநோக்கி
எண்ணா வெழுத்தொடெண் ணாயிரம் வேண்டிலே.

விளக்கம்:

தகுந்த வியாழக் கிழமை அன்று ஓலைச்சுவடியில் 'யநமசிவா' என்று எழுதி அதன் மேல் புடம் போட்ட வெள்ளிப் பற்பத்தைப் பூசி பட்டுப்போகாத ஒரு வெள்ளை நிற நாவல் மரப் பலகையின் மேல் வைத்து அந்தப் பலகையை மேற்குத் திசை நோக்கி வைத்து எழுதிய 'யநமசிவா' மந்திரத்தை எட்டாயிரம் முறை உச்சரித்தால் ஆகருடணம் [ஆகர்ஷணம்] எனும் வித்தை கைகூடும்.

குறிப்பு: ஆகருடணம் என்பது எண்ணத்தால் கவர்தல் அல்லது வசீகரித்தல் ஆகும்.



பாடல் #1003: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே.

விளக்கம்:

தாமரை மலர் [அம்புயம்], கருங்குவளை மலர் [நீலம்] செழுங்கழுநீர் மலர் [கழுநீர்] அழகாக கட்டிய நெய்தல் மலர் மாலை மணம் விரிக்கும் பாக்கு மலர் [பூகம்] மாதவி மலர் மந்தாரை மலர் தும்பை மலர் மகிழம்பூ மலர் [வகுளம்] சுரபுன்னை மலர் மல்லிகை மலர் செண்பகம் மலர் பாதிரி மலர் செவ்வந்தி மலர் ஆகிய பதினான்கு வகைப் பூக்களும் இறைவனுக்கு அருச்சினை செய்ய ஏற்ற மலர்கள் ஆகும்.



பாடல் #1004: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்
தேங்கமழ் குங்குமங் கர்ப்பூரங் காரகிற்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே அணிந்துநீர் அர்ச்சியும் அன்பொடே.

விளக்கம்:

புனுகு கஸ்தூரி ஆகிய கலவைகளுடன் சேர்த்து அரைத்த சந்தனம் வாசம் மிகுந்த குங்குமம் பச்சைக் கற்பூரம் கருமையான அகில் கட்டையை அரைத்த சாந்து ஆகியவற்றை சரியான அளவு எடுத்து முறைப்படி அவற்றை பன்னீரால் குழைத்து அந்தக் கலவையை இறைவனின் திருமேனியின் மேல் அழகுடன் காப்புப் போல பூசிவிட்டு அன்போடு அருச்சனை செய்தல் வேண்டும்.



பாடல் #1005: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

அன்புட னேநின் றமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந்து எய்திடும் முத்தியே.

விளக்கம்:

இறைவனுக்கு அன்போடு சமைத்த அமுதத்தை [உணவு] படையல் செய்து பொன்னொளி விட்டுப் பிரகாசிக்கும் அளவிற்கு தூய்மையான விளக்குகளில் தீபத்தை ஏற்றி வைத்து அனைத்து திசைகளுக்கும் தூபம் [சாம்பிராணிப் புகை] காட்டித் தாம் அனுபவிக்கின்ற துன்பங்கள் அனைத்தும் இறைவன் அளிக்கும் அருளாகக் கருதி இன்பமுடனே வழிபட்டு வருபவர்கள் நினைத்த நேரத்தில் இறைவனின் இன்னருளால் முக்தியை எய்துவார்கள்.



பாடல் #1006: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

எய்தி வழிப்படில் எய்தா தனவில்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே.

விளக்கம்:

பாடல் #1003 #1004 மற்றும் #1005 இல் உள்ள முறைப்படி இறைவனை அன்போடு மனம் ஒன்றி வழிபட்டால் கிடைக்காத பேறுகளே இல்லை. இந்திரனிடம் உள்ள செல்வமும் எட்டு வகை சித்திகளும் பிறவியில்லா முக்தியும் கிடைக்கும்.



பாடல் #1007: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத் தியமனு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னு
மன்னு மனபவ னத்தொடு வைகுமே.

விளக்கம்:

தன்னை விரும்பி வரும் பிறர் மனைவியை விரும்பாதவர்களாகவும் ஐந்து புலன்களையும் அடக்கியவர்களாகவும் பாடல் #1003 #1004 மற்றும் #1005 உள்ள முறைகளின்படி தினந்தோறும் வழிபடுபவர்களாகவும் உடலிலுள்ள நெற்றி இரண்டு முழங்கைகள் மற்றும் இரண்டு முழந்தாள்கள் ஆகிய ஐந்து அங்கங்களும் தரையில் படும்படி இறைவன் முன்பு விழுந்து வணங்குபவர்களாகவும் குருவின் மூலமாக பெற்ற மந்திரத்தை செபிப்பவர்களாகவும் உடலும் மனமும் பிராணனோடு [மூச்சுக்காற்றோடு] சேர்ந்து இருக்கும்படி வழிபடுபவர்களாகவும் இறைவனை அருச்சிப்பவர்கள் இருக்க வேண்டும்.

குறிப்பு: இறைவனை பூஜிப்பதில் ஒழுக்கமும் மனமும் எண்ணங்களும் முக்கியம் என்பதை இப்பாடல் விளக்குகின்றது. அவ்வாறு செய்யாத பூஜை பாடல் #1005 மற்றும் #1006 இல் உள்ள பலன்கள் எதையும் தராது.



பாடல் #1008: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்மம் மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோ ராய்ந்தன்பே.

விளக்கம்:

இறைவன் ஆட்கொண்ட அடியவர்கள், இறைவனை அடைய வேண்டி மேலும் மேலும் கர்மங்களை சேர்த்துக் கொள்ள விரும்பாதவர்கள், மிகப்பெரிய சிவ யோகிகள், இறைவன் மேல் மிகவும் ஆழ்ந்த அன்பு கொண்டவர்கள் ஆகியோர் அருச்சினை செய்ய விரும்ப மாட்டார்கள்.

குறிப்பு: நீண்ட காலம் அருச்சினை செய்து இறையருளை பெற்றவர்களும் சிவ சிந்தனையிலேயே இருக்கும் யோகிகளும் அருச்சினை செய்யும் அவசியம் இல்லை.



பாடல் #1009: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

அறிவரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலும் ஆமே.

விளக்கம்:

அறிவின் மூலம் உணர்ந்து அடையக்கூடிய ஞானத்தை யாரும் தெரிந்து கொள்வதில்லை. பூசை வழிபாடு மந்திரம் யந்திரம் என்று தங்களின் புலன்கள் காட்டும் வழியிலேயே சென்று இறைவனைத் தேடிக் கிடைக்கவில்லை என்று புலம்புகின்றார்கள். தமக்குள்ளே முறைப்படி அருச்சினை செய்து பார்த்தால் அங்கே ஒளிவீசும் மாணிக்கம் போல இருக்கும் இறைவனைக் காணலாம்.

குறிப்பு: இப்பாடலின் வழியாக மானசீக பூஜையின் மூலம் இறைவனை அடையலாம் என்பதை அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1010: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

இருளும் வெளியும்போல் இரண்டாம் இதயம்
அருளறி யாமையும் மன்னு மறிவு
மருளிவை விட்டறி யாமை மயங்கு
மருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே.

விளக்கம்:

ஆகாயத்தில் இருட்டு வெளிச்சம் என்று இரண்டும் இருப்பது போல் மனதிலும் அறிவு அறியாமை என இரண்டு தன்மை உள்ளது. மயக்கத்தைத் தரும் அறியாமையும் தெளிவைத் தரும் அறிவும் ஆகிய இரண்டுமே நிலை பெற்றிருக்கும். பாடல் #1009 இல் உள்ளபடி மானசீக பூஜையின் மூலம் இறையருளைப் பெற்று உள்ளிருக்கும் மாணிக்க ஒளியைக் கண்டவர்கள் தமது அறியாமையை அன்றே அழித்தவர்கள் ஆவார்கள்.



பாடல் #1011: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

தானவ னாக அவனேதா னாயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவ னன்பிது நாலாம் மரபுறத்
தானவ னாகுமோ ராதித்த தேவரே.

விளக்கம்:

உயிர்கள் அருச்சனை செய்து தனது பக்தியினால் தம்மை சிவமாகவும் சிவமே தானாகவும் ஆகிய இரு வழிகளிலும் சிவத்தை அறிந்து உணர்ந்தவர்களின் பேரன்பினால் இறைவனை அடையும் வழிகளில் நான்காம் நிலையாகிய சாயுச்சிய நிலையை அடைவார்கள். அப்படி சாயுச்சிய நிலையை அடைந்தவர்கள் பேரொளியாகிய ஆதித்ய [சூரிய] தேவராவார்கள்.

குறிப்பு: இறைவன் பேரொளி வடிவில் உயிர்களின் கர்மங்களை பொசுக்கும் நிலையே ஆதித்ய தேவர் ஆகும்.

இறைவனை அடையும் நான்கு முறைகள்:

சாலோகம் – இறைவன் இருக்கும் இடத்தில் அவனோடு சேர்ந்து வாழ்வது.
சாமீபம் – இறைவனுக்கு பக்கத்தில் அமர்ந்து நெருக்கமாக வாழ்வது.
சாரூபம் – இறைவனுக்கு பிரதிநிதியாக அவருக்கு செய்வதை ஏற்றுக்கொள்வது.
சாயுச்சியம் – இறைவனோடு எப்போதும் சேர்ந்து இருப்பது.



பாடல் #1012: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

ஓங்கார முந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகராமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் நகாரம் பயில்நெற்றி யுற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே.

விளக்கம்:

அடி வயிற்றுக்குக் கீழே எப்போதும் மூலாதாரத்துடன் ஒளியாக உடனிருக்கும் சக்தியை தினந்தோறும் மனதை ஒரு நிலைப்படுத்தி தியானித்து வந்தால் அந்த ஒளியான சக்தி கீழிருந்து எழுந்து வந்து கழுத்தில் நிற்கும். இந்தப் பயிற்சியை முறைப்படி விடாமல் செய்து வந்தால் நெற்றியின் நடுவில் ஒலியாக இருக்கும் இறைவன் வெளிப்படுவான். அதனைத் தொடர்ந்து நெற்றிக்கு நடுவில் இருக்கும் ஒலியையும் கீழிருந்து மேலே வந்த ஒளியையும் ஒன்றாகச் சேர்த்து மனதை ஒரு நிலைப்படுத்தி தியானித்தால் அந்த ஒளியும் ஒலியும் உடல் முழுவதும் பரவி உடலுக்கு மேலே செல்லும்.

குறிப்பு: இப்பாடலில் மானசீக பூஜையின் மூலம் இறைவனை உணரலாம் என்பதை அறிந்து கொள்ளலாம்.



திருமந்திரம் – பாடல் #1013: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

நமவது வாசன மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவது அன்றாஞ்
சிவமாகு மாமோனஞ் சேர்தல்மெய் வீடே.

விளக்கம்:

உயிர்களின் ஆன்மா தன் ஆசைகளினால் நான் எனும் அகங்கார மாயையோடு பல பிறவி எடுக்கிறது. ஆன்மாவின் தலைவனாகிய இறைவன் சிவமாக உயிர்களுக்குள் தாமாகவே மறைந்து இருக்கின்றான். சாதகர்கள் பாடல் #1003 #1004 மற்றும் #1005 இல் உள்ளபடி அருச்சினை செய்து நான் எனும் அகங்காரம் இல்லாமல் இறைவனை நாடும் போது அன்றே எண்ணங்களே அற்ற நிலையை பெற்று இறைவனோடு சேர்வதே உண்மையான வீடுபேறாகும்.



பாடல் #1014: நான்காம் தந்திரம் – 3. அருச்சனை [பூக்கள் நைவேத்யம் மற்றும் தூப தீபங்களின் மூலம் இறைவனை வழிபடும் முறை]

தெளிவரு நாளிற் சிவஅமு தூறும்
ஒளிவரு நாளில் ஓரெட்டில் உகளுங்
ஒளிவரு அப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே.

விளக்கம்:

பாடல் #1013 இல் உள்ளபடி உண்மையான வீடுபெற்றை பெற்ற சாதகரின் உடலுக்குள் சிவ அமுது ஊறி தலை உச்சிக்குச் சென்றவுடன் பேரொளி தோன்றி உடலை சுற்றியுள்ள எட்டு தத்துவங்களும் விலகும். அப்படி தோன்றிய பேரொளியை ஒலியாகவும் ஒளியாகவும் தரிசித்தால் பரவெளியில் வீற்றிருக்கும் இறைவன் தமக்குள்ளிருந்து வெளிப்படுவான்.

எட்டு தத்துவங்கள்:

பாடல் #460 இல் உள்ளபடி உயிர்கள் உருவாகும் போது அந்தக் கருவின் முற்பிறவிகளிலிருந்து தொடர்ந்து வினைப் பயன்களால் வரும் கன்மத்துடன் [மும்மலங்களில் ஒன்று] மாயேயம் என்கிற அசுத்த மாயையின் ஏழுவித காரியங்களும் [காலம் நியதி கலை வித்தை இராகம் புருடன் மாயை] சேர்ந்து மொத்தம் எட்டுவித மாயைகளை அந்தக் கரு பெற்றுவிடும். இதுவே எட்டு தத்துவங்களாகும்.



பாடல் #1015: நான்காம் தந்திரம் – 4 நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

நவகுண்ட மானவை நானுரை செய்யின்
நவகுண்டத் துள்ளெழு நற்றீபந் தானும்
நவகுண்டத் துள்ளெழு நன்மைகள் எல்லாம்
நவகுண்ட மானவை நானுரைப் பேனே.

விளக்கம்:

நவகுண்டங்களைப் பற்றி யாம் கூறுவது என்னவென்றால் மந்திர சித்தி பெற்றவர்கள் தங்களின் எண்ணம் நிறைவேற குண்டங்கள் [ஹோமக் குழிகள்] அமைத்து அதில் ஹோமம் வளர்க்கும்போது அதனுள்ளிருந்து இறைவனுடைய ஒளி உருவமாகிய அக்கினிப் பிழம்பு மேலெழும்பும். இந்த ஹோமக் குண்டங்களின் மூலம் இறைவனை வழிபடும் வழிபாட்டினால் எல்லா நன்மைகளையும் அடையலாம். ஒன்பது குண்டங்களின் வகைகளையும் அவற்றின் முறைகளையும் யாம் இங்கு கூறுகின்றோம்.

நவகுண்டங்களின் வகைகள்:

1. முக்கோணம் [மூன்று கோணங்கள்]
2. சதுரம் [நான்கு கோணங்கள்]
3. பஞ்சகோணம் [ஐந்து கோணங்கள்]
4. அறுகோணம் [ஆறு கோணங்கள்]
5. அட்டகோணம் [எட்டு கோணங்கள்]
6. பிறை [அரை நிலா]
7. பதுமம் [தாமரை வடிவு]
8. இலை வடிவு
9. வட்டம்



பாடல் #1016: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

உரைத்திடுங் குண்டத்தி னுள்ளேமுக் காலும்
நகைத்தெழு நாற்கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
மிகைத்திடு குண்டங்கள் மேலறி யோமே.

விளக்கம்:

சொல்லப்படும் குண்டத்தை முக்கோண்த்தில் அமைத்து அதனுள்ளே ஹோமத்தீயை எழுப்பினால் அதிலிருந்து நான்கு பக்கத்திலிருந்தும் இன்பமாக ஐந்து விதமான நன்மைகள் மேலெழுந்து வரும். இந்த ஹோமத்தில் இருக்கும் அக்னி வழியாக உயிருக்கு துன்பம் தரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் அழியும். இந்த நவகுண்டங்களில் செய்யப்படும் ஹோமத்திற்கு மேலான ஹோமமாக யாம் ஒன்றையும் அறியவில்லை.



பாடல் #1017: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

மேலறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந் தண்டஞ் சிறகற நின்றது
நானறிந்து உள்ளெழ நாடிக்கொண் டேனே.

விளக்கம்:

ஆகாயத்திலுள்ள காற்றை அறிந்து அதை தமக்குள் தலை உச்சி வழியாக உள்வாங்கி மூச்சுப் பயிற்சிகளின் வழியாக மூலாதாரத்திற்கு கொண்டு சென்று அங்கிருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பினால் அது அக்னிச் சுடராக மேலெழும்பும். உலகத்தைத் தாண்டி அண்டசராசரங்களையும் தாண்டி எல்லைகளற்று பரந்து விரிந்து இருக்கும் பேரொளியான இறைவனை எமக்குளிருந்து எழும்பிய குண்டலினியின் அக்னிச் சுடராக யான் அறிந்து கொண்டு அதை தேடி அடைந்தேன்.

கருத்து: உலகத்தைத் தாண்டி அண்டசராசரங்களையும் தாண்டி எல்லைகளற்று பரந்து விரிந்து இருக்கும் பேரொளியான இறைவனே உயிர்களுக்குள் இருக்கும் குண்டலினியின் அக்னிச் சுடராகவும் இருக்கின்றான்.

குறிப்பு: வெளியில் நவகுண்டத்தில் அக்னி வளர்த்து செய்யும் யாகத்தைப் போலவே தமக்குள்ளும் மானசீகமாக அக்னியை வளர்த்து யாகம் செய்து அண்டங்களைத் தாண்டி நின்ற இறைவனின் பேரொளியாக அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1018: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

கொண்டஇக் குண்டத்தின் உள்ளெழு சோதியால்
அண்டங்கள் ஈரேழு மாக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொல் நூலாய் எடுத்துஉரைத் தேனே.

விளக்கம்:

பாடல் #1017 இல் உள்ளபடி யாம் அறிந்து அடைந்த குண்டமாகிய எமது உடலுக்குள் இருந்து எழுந்த ஜோதியின் மூலமாக ஈரேழு அண்டங்களையும் உருவாக்கவும் செய்யலாம் அழிக்கவும் செய்யலாம். ஆதிகாலத்திலிருந்தே அருளப்பட்ட வேதங்களாகவும் பரந்து விரிந்து இருக்கும் உலகங்களாகவும் இருக்கும் அந்த ஜோதியை யாம் இன்று நூலாக கோர்த்து எடுத்துரைத்தோம்.

குறிப்பு: உயிர்கள் தமக்குள் மானசீகமாக அக்னியை வளர்த்து யாகம் செய்தால் உள்ளிருந்து எழுந்த ஜோதியின் தன்மைகளை அறிந்து கொள்ளாலாம்.



பாடல் #1019: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

எடுத்தவிக் குண்டத் திடம்பதி னாறிற்
பதித்த கலைகளும் பாலித்து நிற்குங்
கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே
கொதித்தெழும் வல்வினை கூடகி லாவே.

விளக்கம்:

வினையினால் எடுத்து வந்த குண்டமாக இருக்கும் இந்த உடலை இயக்கும் 16 கலைகள் உள்ளது. இந்த கலைகளுக்கு சக்தியூட்டும் கனலை குண்டலினியிலிருந்து எழுந்து வரும் அக்னியில் கண்டு அறிந்து கொள்பவர்களின் பிறவியோடு தொடர்ந்து வருகின்ற கொடிய வினைகள் எல்லாம் விலகிச் சென்றுவிடும்.

பதினாறு கலைகள் [நாடிகள்]:

1. மேதைக்கலை 2. அருக்கீசக்கலை 3. விடக்கலை 4. விந்துக்கலை
5. அர்த்தசந்திரன் கலை 6. நிரோதினிக்கலை 7. நாதக்கலை 8. நாதாந்தக்கலை
9. சக்திக்கலை 10. வியாபினிக்கலை 11. சமனைக்கலை 12. உன்மனைக்கலை
13. வியோமரூபினிக்கலை 14. அனந்தைக்கலை 15. அனாதைக்கலை
16. அனாசிருதைக்கலை




பாடல் #1020: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

கூடமுக் கூடத்தி னுள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம்புற மாய்நிற்கும்
பாடிய பன்னீ ரிராசியும் அங்கெழ
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே.

விளக்கம்:

உடலுக்குள் மானசீகமாக உருவகப்படுத்திய முக்கோண குண்டத்திலிருந்து எழுகின்ற அக்னியில் ஆடுகின்ற பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் எனும் ஐந்து வாயுக்களும் உடலுக்குள்ளும் வெளியிலும் இருக்கின்றது. அந்தக் குண்டத்திலிருந்து எழும் அக்னியிலிருந்து 12 விதமான ஒலிகள் வெளிவரும். அந்த ஒலிகளைத் தேடி அறிந்து கொள்ளும் சாதகர்கள் தமக்குள் நல்ல சுடரொளியை அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1021: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் மேனி பதைப்புற் றிலிங்கமும்
நற்சுட ராயெழு நல்லதென் றாளே.

விளக்கம்:

பாடல் #1020 இல் உள்ளபடி அறிந்து கொண்ட சுடரின் உச்சிக் கொழுந்தின் தலைப் பகுதி வட்ட வடிவ முகமாகவும், சுடரைச் சுற்றிலும் பரவுகின்ற நெருப்புக் கதிர்கள் கைகளாகவும், சுடரின் நடுவில் இருக்கும் அழகிய பகுதி உடலாகவும் இருந்து அசைகின்ற சுடரே சிவலிங்க வடிவமாக இருக்கின்றது. இந்த சிவலிங்க வடிவத்தில் எழும் நல்ல சுடர் நன்மையைத் தரும் என்று சக்தி அருளினாள்.



பாடல் #1022: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

நல்லதென் றாளே நமக்குற்ற நாயகஞ்
சொல்லதென் றாளே சுடர்முடி பாதமா
மெல்லநின் றாளை வினவகில் லாதவர்
கல்லதன் றாளையுங் கற்குறுமின் னாளே.

விளக்கம்:

பாடல் #1021 இல் உள்ளபடி நன்மையைத் தரும் சுடர் இது என்று அருளிய சக்தியே சாதகருக்குள் அனைத்தையும் இயக்குகின்ற மந்திரங்களையும் அந்த மந்திரங்களையே தனக்கு தலை முதல் பாதம் வரை அருளோடு நிற்கின்றாள். அப்படி நிற்கின்ற சக்தியின் அருளைத் தேடி அடையாமல் தான் கற்றுக் கொண்ட மந்திரங்களை மட்டும் ஓதி யாகம் செய்பவர்கள் அவளது சக்தியை உணர மாட்டார்கள்.

கருத்து: குண்டம் அமைத்து யாகம் செய்பவர்கள் வெளியில் செய்தாலும் உள்ளுக்குள் மானசீகமாக செய்தாலும் மந்திரங்களை மட்டும் ஓதிக்கொண்டு இருக்காமல் அதற்குள் இருக்கும் இறைசக்தியையும் அறிந்து கொள்ள வேண்டும்.



பாடல் #1023: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

மின்னா இளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னால் இரண்டுஞ் சுடர்நாகந் திக்கெங்கும்
பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என்ஆகத் துள்ளே இடங்கொண்ட வாறே.

விளக்கம்:

வில்லின் இரு பக்க நுனிகளும் வளைந்து இளம்பிறை விடிவில் இருக்கும் பிறை [அரை நிலா] குண்டத்தில் இரு நுனிகளிலும் பாம்பு போல் வளைந்து எழுகின்ற அக்னி எல்லாத் திசைகளிலும் சுடர்விட்டு விளங்கும். அப்படி எல்லாத் திசைகளிலும் பரவியிருக்கும் சுடரொளி எமது உடலுக்குள் மேருவாக இருக்கும் முதுகுத் தண்டின் உச்சியில் வீற்றிருக்கிறது.

குறிப்பு: வெளியில் செய்யும் பிறை [அரை நிலா] குண்டத்தில் எழும் அக்னியைப் போலவே மானசீகமாக உடலை பிறை குண்டமாக பாவித்து செய்யும் யாகத்திலும் குண்டலினி சக்தி அக்னியாக எழுந்து முதுகுத் தண்டின் உச்சியில் வீற்றிருக்கும்.



பாடல் #1024: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

இடங்கொண்ட பாதம் எழிற்சுட ரேக
நடங்கொண்ட பாதங்கள் நன்னீ ரதற்குச்
சகங்கொண்ட கையிரண் டாறுந் தழைப்ப
முகங்கொண்ட செஞ்சுடர் முக்கண னார்க்கே.

விளக்கம்:

பாடல் #1023 இல் உள்ளபடி உடலில் இருக்கும் முதுகுத்தண்டின் உச்சியை அடிப்பாகமாகக் கொண்டு எழும் சுடர் ஒரே ஜோதியாக அழகாக அசைந்தாடும். அப்போது அங்கிருந்து அமிழ்தம் சுரந்து சகஸ்ரதளத்தில் இருக்கும் ஆயிரம் இதழ் தாமரை மலர்ந்து விரிவடையும். இந்த செழுமையான சுடர் முக்கண்களையுடைய இறைவனின் திருமுகமாக இருக்கிறது.

கருத்து: மானசீகமாக உடலைக் குண்டமாக பாவித்து இந்த யாகத்தை செய்தால் இறைவனின் மூன்றாவது கண்ணைக் குறிக்கும் பேரறிவு ஞானத்தை அடையலாம்.




பாடல் #1025: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

முக்கணன் றானே முழுச்சுட ராயவன்
அக்கணன் றானே அகிலமும் உண்டவன்
திக்கண னாகி திசையெட்டுங் கண்டவன்
எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே.

விளக்கம்:

பாடல் #1024 இல் உள்ளபடி மூன்று கண்களையுடைய இறைவனே உடலாகிய குண்டத்தில் எழும் முழுமையான சுடராகவும் இருக்கின்றான். அந்த மூன்று கண்களை உடைய இறைவனே எட்டுத் திசைகளுக்கும் கண்களை உடையவனாய் இருந்து எட்டுத் திசைளையும் கண்டு எல்லா உலகங்களையும் அதிலிருக்கும் உயிர்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு எல்லா தேவர்களுக்கும் தேவகணங்களுக்கும் தலைவனாகவும் இருப்பவனே எம்மையும் சேர்த்து அண்டசராசரங்களுக்கும் தந்தையாகவும் இருக்கின்றான்.



பாடல் #1026: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தை தன்முன்னமே சண்முகந் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்த னிவனென்று மாட்டிக்கொள் ளீரே.

விளக்கம்:

பாடல் #1025 இல் உள்ளபடி அண்டசராசரங்களுக்கும் தந்தையாகிய இறைவனோடு இறைவனின் மகனாக ஆன்மாவும் இருக்கின்றது. சகஸ்ரதளத்தில் வீற்றிருக்கும் பேரொளியான இறைவனை அறிவதற்கு முன்பு உடலுக்குள் சக்தி மயங்களாக இருக்கும் ஆறு சக்கரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். உடலை நவகுண்டமாக வைத்து அதிலிருக்கும் ஆறு சக்கரங்களிலும் அக்னியை ஏற்றி யாகம் செய்து ஆன்மா இறைவனின் மகனாக இருப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.



பாடல் #1027: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

மாட்டிய குண்டத்தி னுள்ளெழு வேதத்துள்
ஆட்டிய காலொன் றிரண்டும் அலர்ந்திடும்
வாட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ
நாட்டுஞ் சுரரிவர் நல்லொளி தானே.

விளக்கம்:

நவகுண்டத்தினுள் எழும் அக்னியுடன் ஓதுகின்ற மந்திரங்களும் சேர்ந்து ஒன்றாக எழும்புகின்றது. அவ்வாறு எழும்புகின்ற அக்னி அடியும் முடியுமாக [நெருப்புச் சுடரின் அடிப்பாகமும் உச்சியும்] இரண்டாக குண்டத்தினுள்ளே அலைகின்றது. அவ்வாறு அலைகின்ற அக்னி ஒரு கையாகவும் காற்று ஒரு கையாகவும் ஆகிய இரண்டு கைகளும் ஒன்றாகச் சேர்ந்து விரைவாக எரிகின்றது. அப்படி விரைந்து எரியும் அக்னியில் நல்ல ஒளியாய் தேவர்கள் வந்து நின்று நல்லாசிகள் வழங்குவார்கள்.



பாடல் #1028: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

நல்லொளி யாக நடந்த துலகெங்குங்
கல்லொளி யாகக் கலந்துள் ளிருந்திடுஞ்
சொல்லொளி யாகத் தொடர்ந்த வுயிர்க்கெலாம்
கல்லொளி கண்ணுளு மாகிநின் றானே.

விளக்கம்:

பாடல் #1027 இல் உள்ளபடி நவகுண்டத்தில் நல்லொளியாய் இருக்கும் இறைவனே மாணிக்கக் கல்லில் கலந்திருக்கும் ஒளி போல உலகெங்கும் பரவி கலந்து இருக்கிறான். அந்த இறைவனே குருவாக தமக்குள்ளிருந்து அருளிக் கூறிய முறைப்படி யாகம் செய்யும் உயிர்களின் கண்களில் ஒளியாக கலந்து நிற்கின்றான்.



பாடல் #1029: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

நின்றஇக் குண்ட நிலையாறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்தெழு மாறாறுங்
கொண்டஇத் தத்துவ முள்ளே கலந்தெழ
விண்ணுளு மென்ன எடுக்கலு மாமே.

விளக்கம்:

இங்கு சொல்லப்படுகின்ற நவகுண்டம் அறுகோண வடிவுடையதாகும். இது உடலுக்குள்ளிருக்கும் ஆறு சக்கரங்களை குறிப்பதாகும். நவகுண்ட யோகத்தில் சக்கரங்களை வட்டமாக சுற்றி பிரணவமானது முப்பத்தாறு தத்துவங்களுடன் கலந்து எழுகின்றது. இந்த முப்பத்தாறு தத்துவங்களே அண்டத்திலும் உள்ளது என்பதை தமக்குள் கண்டு உணரலாம்.

குறிப்பு: அண்டத்திலுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் மானசீகமாக நவகுண்ட யாகம் செய்வதன் மூலம் நமது உடலுக்குள்ளும் கண்டு உணரலாம் என்பதை இந்தப் பாடலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1030: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

எடுக்கின்ற பாதங்கண் மூன்றெழு கையுங்
கடுத்த முகமிரண் டாறுகண் ணாகப்
படித்தெண்ணு நாவேழு கொம்பொரு நாலும்
அடுத்தெழு கண்ணான தந்தமி லாற்கே.

விளக்கம்:

நவகுண்டத்திலிருந்து எழுகின்ற அக்னியில் வெளிச்சம் சத்தம் காற்று ஆகிய மூன்றும் கைகளாக எழுகின்றது. இடகலை பிங்கலை ஆகிய நாடிகள் கூர்மையான முகங்களாக இருக்கின்றது. ஆறு சக்கரங்கள் கண்களாக இருக்கின்றது. இதன் மூலம் உடலை குண்டமாக வைத்து நான்கு வேதங்களில் உள்ள மந்திரங்களை விடாமல் ஓதி உச்சரித்து மூலாதாரத்திலுள்ள குண்டலினியை ஆறு சக்கரங்களுக்கும் மேலெழுப்பிச் செல்லும் போது அந்த சக்கரங்களில் வீற்றிருக்கும் முடிவில்லாத இறை சக்தியை அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1031: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

அந்தமில் லானுக் ககலிடந் தானில்லை
அந்தமில் லானை அளப்பவர் தாமில்லை
அந்தமில் லானுக் கடுத்தசொற் றானில்லை
அந்தமில் லானை அறிந்துகொள் பத்தே.

விளக்கம்:

பாடல் #1030 இல் உள்ளபடி நவகுண்டத்திலிருந்து எழுந்த முடிவில்லாத இறை சக்தியானது அண்டத்திலுள்ள அனைத்திலும் இருக்கின்றது. அந்த சக்தியின் அளவை அளக்கக் கூடியவர்கள் யாருமே இல்லை. அந்த இறைசக்தியைக் குறிக்கும் மந்திரத்திற்கு மேலான மந்திரம் வேறு எதுவும் இல்லை. முடிவில்லாத இந்த இறைசக்தியை நவகுண்டத்தின் மூலம் யாகம் செய்து தமக்குள் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1032: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

பத்திட்டங் கெட்டிட்டு ஆறிட்டு நாலிட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே.

விளக்கம்:

பாடல் #1031 இல் உள்ளபடி தமக்குள் அறிந்து கொண்ட இறை சக்தியானது உடலினுள் ஆறு சக்கரங்களில் மேன்மை கொண்ட சக்தி மயங்களாக இருக்கின்றது. நான்கு இதழ்கள் கொண்ட மூலாதாரத்தில் அடங்கியிருக்கும் குண்டலினியை நவகுண்ட யாகத்தின் மூலம் எழுப்பி ஆறு இதழ்கள் கொண்ட சுவாதிட்டானம் வழியே மேலேற்றி அதற்கு மேலிருக்கும் நான்கு சக்கரத்திலும் ஒவ்வொன்றாக நிலை நிறுத்திக் கொண்டு சென்று தலை உச்சியில் இருக்கும் எழாவது சக்கரமான சகஸ்ரதளத்தில் வீற்றிருக்கும் இறை சக்தியோடு கலந்துவிட்டால் சாதகம் செய்பவர்கள் இறைவனாகவே மாறிவிடுவதை உலகத்தின் தலைவனாகிய இறைவனின் அருளால் உணர்ந்து கொள்வார்கள்.




பாடல் #1033: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

பார்ப்பதி பாகன் பரந்தகை நாலைஞ்சு
காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி
நாற்பது சோத்திரம் நல்லிரு பத்தஞ்சே.

விளக்கம்:

பாடல் #1032 இல் உள்ளபடி தம்மை இறைவனாக உணர்ந்த சாதகர்கள் தமக்குள் ஒரு பாகமாக இருக்கும் இறைவன் இருபது கைகள், இருபது கால்கள், பத்து முகங்கள், இருபது கண்கள், மலர் போன்ற இரண்டு திருவடிகள், அடி முடியாக இருக்கும் இரண்டு சுடரொளி ஆகியவற்றைக் கொண்டு இருப்பார்.
நன்மையாகவே இருக்கும் இந்த இறைவனை தஞ்சம் என்று சரணடைவார்கள்.



பாடல் #1034: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்
மஞ்சிட்ட குண்டம் மலர்ந்தங் கிருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே.

விளக்கம்:

உயிர்களின் ஆன்மா தனக்கு உகந்த இருப்பிடமாக எடுத்த அழியக்கூடிய இந்த உடலில் நவகுண்ட யாகம் செய்து குண்டலினியை எழுப்பி பாடல் #1033 இல் உள்ளபடி சகஸ்ரதளத்தில் சேர்த்த ஜோதியாக இருக்கிறது. அங்கே ஐந்து முகங்கள் கொண்ட சதாசிவமூர்த்தியாகிய இறைவனை அறிய எண்ணினால் அவர் இருபத்தைந்து தத்துவங்கள் கொண்ட ஜோதியாக இருப்பதை அறிந்து கொள்ளலாம். அந்த பரஞ்சுடராகிய இறை சக்தியோடு இந்த ஆன்ம ஜோதியை கலந்தால் கிடைக்கும் பேரின்பமே முக்தியாகும்.

குறிப்பு: ஐந்து முகங்கள் கொண்ட சதாசிவமூர்த்தியாகிய இறைவன் அளவில் இருபத்தைந்து தத்துவங்களாக சகஸ்ரதளத்தில் ஜோதியாக இருக்கின்றார். உயிர்களின் ஆன்மா தனக்கு உகந்த இருப்பிடமாக எடுத்த அழியக்கூடிய இந்த உடலில் நவகுண்ட யாகம் செய்து குண்டலினியை எழுப்பி சகஸ்ரதளத்தில் சேர்த்த ஜோதியாக இருக்கிறது. சகஸ்ரதளத்தில் பேரொளி ஜோதியாக பரவி இருக்கும் பரஞ்சுடராகிய இறை சக்தியோடு இந்த ஆன்ம ஜோதியை கலந்தால் கிடைக்கும் பேரின்பமே முக்தியாகும்.



பாடல் #1035: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

முத்திநற் சோதி முழுச்சுட ராயவன்
கற்றற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்றற நாடிப் பரந்தொளி யூடுபோய்ச்
செற்றற்று இருந்தவர் சேர்ந்திருந் தாரே.

விளக்கம்:

பாடல் #1034 இல் உள்ளபடி சகஸ்ரதள ஜோதியோடு கலந்த பின் அங்கே முழுமையான நல்ல சுடரொளியாக இருக்கும் பரம்பொருள் ஆட்கொள்கிறது. உலக ஞானங்கள் அனைத்தையும் கற்று அறிந்திருந்தாலும் கூட அதைவிட மேலான இந்த இறை ஞானத்தை உணர்ந்தவர்களின் எண்ணத்துள்ளே அவன் இருப்பான். அந்த எண்ணங்களையும் விட்டு விலகி எங்கும் பரவியிருக்கும் இறைவனின் பேரொளியை விரும்பி சென்று அடைந்து அங்கே இறைவனோடு பேரின்பத்தில் சேர்ந்து இருப்பார்கள்.

கருத்து: நவகுண்ட யாகத்தை முறைப்படி செய்த சாதகர்கள் தமது மூலாதாரத்திலுள்ள அக்னியை எழுப்பி சகஸ்ரதளத்தில் இருக்கும் இறை சக்தியோடு சேர்த்து விட்டால் இறையருளால் அனைத்து எண்ணங்களும் அற்ற நிலையை அடைந்து இறைவனோடு ஒன்றாகச் சேர்ந்து இருப்பார்கள்.



பாடல் #1036: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

சேர்ந்த கலையஞ்சுஞ் சேருமின் குண்டமும்
ஆர்ந்த திசைகளு மங்கே யமர்ந்திடும்
பாய்ந்தஐம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவ ரென்றுங் கலந்தவர் தாமே.

விளக்கம்:

பாடல் #1035 இல் உள்ளபடி இறைவனோடு சேர்ந்து இருக்கும் சாதகர் இறைவனுடைய ஐந்துவித தொழில்களையும் நவகுண்டமாகிய இந்த உடலுக்குள்ளிருந்து இயக்கலாம். அதன் பிறகு அனைத்து திசைகளையும் முழுமையாக சாதகர் அறிந்து கொள்வார். ஐம்பூதங்களும் தங்களின் உச்சத் தன்மையில் சாதகரின் உடலுக்குள் இருந்து தாமாகவே மூலாக்கினியை ஏற்றிக்கொண்டே இருக்கின்றன. இந்த நிலையை அடைந்த சாதகர் இறைவனோடு என்றும் கலந்து இருப்பார்.

குறிப்பு: நவகுண்ட யாகம் செய்யும் சாதகர் அனைத்து திசைகளிலுள்ள எங்கும் செல்லும் தன்மையைப் பெறுவார். இதுவரை சாதகர் தனது சாதகத்தின் மூலம் எழுப்பிய மூலாக்னியை இனி அவரது உடலுக்குள்ளிருக்கும் ஐந்து பஞ்ச பூதங்களும் [நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம்] மூலாக்கினியை தொடர்ந்து ஏற்றிக் கொண்டே இருக்கும்.



பாடல் #1037: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

மெய்கண்ட மாம்விரி நீருல கேழையும்
உய்கண்டஞ் செய்த வொருவனைச் சேருமின்
செய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்
பொய்கண்ட மில்லாப் பொருள்கலந் தாரே.

விளக்கம்:

இறைவனால் முறையாக வகுக்கப்பட்டு படைக்கப்பட்ட பரந்து விரிந்த கடல்களைக் கொண்ட ஏழு உலகங்கள் இருக்கின்றன. இந்த ஏழு உலகங்களிலுள்ள உயிர்களனைத்தும் முக்திபெற வேண்டும் என்ற கருணையினால் அவை முக்திபெறும் வழிமுறைகளையும் முறையாக இறைவன் வகுத்திருக்கின்றான். அவனை உயிர்கள் சென்று அடைந்தால் முறையாக வகுக்கப்பட்ட நவகுண்ட யாகத்தின் மூலம் கிடைக்கும் ஞானங்கள் அனைத்தும் அறிந்து உயிர்கள் தேவர்களாக உயர்ந்த நிலையை அடைவார்கள். அவ்வாறு உயர்ந்த தேவர்கள் பொய் முறைகளால் வகுக்கப்பட்ட எந்தவித மாயையும் இல்லாத உண்மையான மெய்ப்பொருளான சதாசிவமூர்த்தியோடு கலந்து இருப்பார்கள்.



பாடல் #1038: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

கலந்திரு பாதம் இருகர மாகும்
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் நெற்றி
உணர்ந்திரு குஞ்சியங் குத்தம னார்க்கே.

விளக்கம்:

பாடல் #1037 இல் உள்ளபடி சதாசிவமூர்த்தியுடன் கலந்து நிற்கின்ற சாதகரின் உடலாகிய நவகுண்டத்திலுள்ள அக்கினியின் அடியாக இருப்பது இறைவனின் பாதங்களாக இருக்கின்றது. சுடராகப் பரவும் அக்கினியாக இருப்பது இறைவனின் கரங்களாக இருக்கின்றது. குண்டத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற அக்கினியின் ஜ்வாலையே இறைவனின் சிவந்த முகமாகவும் மூக்காகவும் இருக்கின்றது. அக்கினியின் கங்கானது இறைவனின் மூன்றாம் கண்ணாக இருக்கின்றது. காற்றின் போக்கில் அலையும் அக்கினியின் உச்சி நுனியாக இருப்பது இறைவனின் சடைபின்னிய முடிக்கற்றைகளாக இருக்கின்றது. இப்படி நவகுண்டத்தின் அக்கினியில் இறைவன் உத்தமமான உருவமாக இருக்கிறார்.

குறிப்பு: நவகுண்ட யாகம் செய்து உணர்ந்த இறைவன் அக்கினி உருவமாக எப்படி இருக்கின்றார் என்பதை இந்த பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1039: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

உத்தமன் சோதி யுளனொரு பாலனாய்
மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன
சத்திமா னாகத் தழைத்த கொடியே.

விளக்கம்:

பாடல் #1038 இல் உள்ளபடி உத்தமாக உணர்ந்த இறைவனோடு சேர்ந்த சாதகர் ஆரம்ப நிலையில் பாலகனாய் இருக்கின்றார். அதன் பிறகு பாடல் #1036 இல் உள்ளபடி ஐந்து பூதங்களும் அவரது சாதகத்தைத் தொடர்ந்து செய்யும் பொழுது அந்த பாலகன் ஆறு சக்கரங்களுக்கும் சென்று இளைஞனாகி மலர்ந்து இருக்கின்றார். அதன் பிறகு ஆறு சக்கரங்களிலிருந்தும் வரும் சக்தி அனைத்து திசைகளுக்கும் பரந்து விரிந்து நிரம்பி இருக்கும். அதன் பிறகு ஆறு சக்திமயங்களிலும் உள்ள சக்தியானது தமது உச்ச நிலையை அடைந்து விளங்குகின்றது.



பாடல் #1040: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]


கொடிஆறு சென்று குலாவிய குண்டம்
அடியிரு கோணமா யந்தமு மொக்கும்
படியே ழுலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதன மாமே.

விளக்கம்:

பாடல் #1039 இல் உள்ளபடி ஆறு சக்திமயங்களிலும் உச்ச நிலையில் இருக்கும் சக்தியானது உடலாகிய நவகுண்டத்தோடு பேரின்பத்தில் இருக்கும். இந்த சக்தியானது மூலாதாரத்திலிருந்து சுடரொளியாக இரண்டு கோணங்களாகச் சென்று ஏழு உலகங்களுக்கும் பரவி அதையும் தாண்டிய உச்சியாக இருக்கும். மூலாதாரத்தில் இருக்கும் இந்த சுடரொளியை தொடர்ந்து ஏற்றிக் கொண்டே இருப்பவர்கள் இறைவனின் மாபெரும் அருளைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

கருத்து: இறைவனை உத்தம ஜோதியாக உணர்ந்த சாதகரின் ஆறு சக்கரங்களிலுள்ள சக்தியானது உச்ச நிலையை அடைகிறது. இந்த உச்ச நிலையை அடைந்த சக்தியானது தந்து மூலாதாரத்திலிருந்து V போல இரண்டு கோணங்களாக சென்று ஏழு உலகங்களுக்கும் பரவி இருக்கும். இந்த நிலையை தொடர்ந்து செய்யும் சாதகர் இறைவனின் மாபெரும் அருளைப் பெற்றவர் ஆவார்.

குறிப்பு: சக்தி பரவும் விதத்தை படத்தில் காண்க.
ஏழு உலகங்கள்: 1. சத்ய லோகம் 2. தப லோகம் 3. ஜன லோகம் 4. மகர லோகம் 5. சுவர் லோகம் 6. புவர் லோகம் 7. பூலோகம்



பாடல் #1041: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

மாதன மாக வளர்கின்ற வன்னியைச்
சாதன மாகச் சமைந்த குருவென்றும்
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதன மாகப் பரிந்தது பார்த்தே.

விளக்கம்:

பாடல் #1040 இல் உள்ளபடி சாதகர் பெற்ற இறைவனின் மாபெரும் அருளானது தமக்குள்ளே இருக்கும் மூலாக்கினியை பஞ்ச பூதங்களும் கருவியாகக் கொண்டு வளர்ந்து முழுமை அடைந்து குருவாக இருந்து தமக்குள்ளே வழிகாட்டுகிறது. அப்படி குரு காட்டிய வழிகாட்டுதலின் படி நவகுண்டமாகிய உடலானது ஏழு உலகங்களுக்கும் அதனதன் தன்மைகளுக்கு ஏற்றார் போல மாறிச் செல்கிறது. அங்கே குரு கூறிய செயலை செய்யும் பொழுது அந்த உலகம் அவர் முன்பு வணங்கி நிற்பதை பார்க்கலாம்.

கருத்து: பஞ்ச பூதங்களும் சாதகரின் உடலுக்குள்ளிருக்கும் மூலாக்கினியை வளர்ந்து கொண்டே இருக்கும். அது முழுமை அடையும் போது குருவாக நின்று ஏழு உலகங்களுக்கும் செல்ல வழிகாட்டுகிறது. அதன்படி நவகுண்டமாகிய உடலுடன் ஏழு உலகங்களுக்கும் அதனதன் தன்மைக்கேற்ப மாறி செல்லலாம். அங்கே சாதகர் செய்யும் செயலுக்கு அந்த உலகங்கள் சாதகரை வணங்கி நிற்கும்.



பாடல் #1042: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே யாய்ந்தறி வாரில்லை
காத்துட லுள்ளே கருதி யிருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே.

விளக்கம்:

பாடல் #1041 இல் உள்ளபடி சாதகர் பார்க்கின்ற உலகங்கள் அனைத்திலும் பரவி எழுகின்ற ஜோதியான இறைவனது உண்மையான தன்மையை ஆராய்ந்து அறிந்து கொள்கின்றவர்கள் யாரும் இல்லை. அந்த ஜோதியின் உண்மையான தன்மையை தமக்குள் உணரும் வரை காத்திருக்கும் சாதகர்கள் அதை முழுவதும் அறிந்து உணர்ந்த பிறகு அவர்களின் நவகுண்டமாகிய உடலானது மேன்மை நிலையை அடைந்து என்றும் அழியாமல் கோடி யுகங்கள் நிலைத்திருக்கும்.



பாடல் #1043: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகங்கண்ட யோகியுள் நாடி எழுப்பும்
பகங்கண்டு கொண்டவிப் பாய்கரு வொப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாமே.

விளக்கம்:

பாடல் #1042 இல் உள்ளபடி கோடி யுகங்களாக நிலைத்திருக்கும் உடலைப் பெற்ற சாதகர் யோகியாகிறார். அந்த யோகி நவகுண்டமாகிய தமது உடலுக்குள் இருக்கும் ஒன்பது வகையான குண்டங்களிலும் தாமாகவே அக்னி எழுப்பிக்கொண்டே இருக்கின்றார். கரு உற்பத்திக்கு உயிர்சக்தி கருவியாகப் பயன்படுவதைப் போல இறையருளை தமக்குள் கண்டுகொண்ட யோகியின் நவகுண்ட உடலை உலகம் தனது நன்மைக்கு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

கருத்து: கோடி யுகங்கள் இருக்கும் யோகியின் மேன்மையான உடலை உலகம் தனது நன்மைக்கு பயன்படுத்திக் கொள்கிறது.



பாடல் #1044: நான்காம் தந்திரம் – 4. நவகுண்டம் [மந்திர சித்தி பெற்றவர் தமது தொழிலுக்கு ஏற்ப ஹோமம் செய்யும் ஒன்பது வகை குண்டங்கள்]

சாதன நாலு தழல்மூன்று வில்வயம்
வேதனை வட்டம் விளையாறு பூநிலை
போதனை போதஞ்சு பொற்கயல் வாரண
நாதனை நாடு நவகோடி தானே.

விளக்கம்:

பாடல் #1043 இல் உள்ளபடி உலக நன்மைக்கு கருவியாக இருக்கும் யோகின் உடலுக்குள் 1. நான்கு கோணம் கொண்ட குண்டம் [சதுர வடிவம்] 2. யாக குண்டத்தில் எரியும் அக்னி போன்ற முக்கோண குண்டம் [முக்கோண வடிவம்] 3. வளைத்த வில்லைப் போன்ற பிறை வட்ட வடிவம் கொண்ட பிறை குண்டம் [பிறை வடிவம்] 4. ஆரம்பமும் முடிவும் இல்லாத வேதங்களைப் போன்ற வட்ட குண்டம் [வட்ட வடிவம்] 5. சக்தி விளையும் மயங்களான ஆறு சக்கரங்கள் கொண்ட குண்டம் [அறுகோண வடிவம்] 6. உலகத்தின் எட்டுத் திசைகள் கொண்ட குண்டம் [அட்டகோண வடிவம்] 7. இலை வடிவம் போன்ற குண்டம் [இலை வடிவம்] 8. ஐந்துவிதமான பொறிகள் கொண்ட குண்டம் [பஞ்சகோண வடிவம்] 9. பொன் போன்ற தாமரை மலர் வடிவம் கொண்ட குண்டம் [பதும வடிவம்] ஆகிய ஒன்பது வகையான குண்டங்கள் இருக்கின்றது. இந்த நவ குண்டங்களின் மூலமாக யோகியானவர் ஆதி மூலமாகிய இறைவனை ஒன்பது கோடி யுகங்களானாலும் நாடிக்கொண்டே இருப்பார்.



பாடல் #1045: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [சக்தியின் வடிவமான மந்திரமும் திரிபுரை சக்கரமும்]

மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓமாயை யுள்ளொளி யோராறு கோடியில்
தாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே.

விளக்கம்:

மாமாயை மாயை வயிந்தவம் வைகரி ஓமாயை உள்ளொளி ஆகிய ஆறுவிதமான மாயையின் உச்ச நிலையில் உருவாகும் மந்திரங்கள் அனைத்தும் திரிபுரை சக்தியின் வடிவமாக இருக்கின்றது. இந்த வடிவங்களும் வடிவங்கள் இல்லாமலும் திருபுரை இருக்கின்றது.

குறிப்பு: பாடல் #401 இல் உள்ளபடி அசையும் சக்தியின் மையத்திலிருந்து தோன்றிய திரிபுரை எந்தெந்த வடிவங்களாகவும் வடிவம் இல்லாமல் இருக்கின்றது என்பதை இந்தப் பாடலில் அறியலாம்.

திரிபுரையின் ஆறு மந்திர வடிவங்கள்:

மாமாயை – வினைகள் இல்லாத சுத்த மாயை
மாயை – வினைகளோடு இருக்கும் மாயை
வயிந்தவம் – மாயையால் குழம்பி இருக்கும் ஞானசக்தி
வைகரி – முறைப்படி சத்தமாக கேட்கும் ஒலிவடிவம்
ஓமாயை – மாயையால் மறைக்கப்பட்ட பிரணவம்
உள்ளொளி – மாயையால் உருவான வெளிச்சமும் சத்தமும்




பாடல் #1046: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [சக்தியின் வடிவமான மந்திரமும் திரிபுரை சக்கரமும்]

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்
திருள்புரை யீசி மனோன்மனி யென்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே.

விளக்கம்:

பாடல் #1045 இல் உள்ளபடி உருவமாகவும் இல்லாததாகவும் இருக்கின்ற திரிபுரை சக்தி சுந்தரி, அந்தரி, சிந்து, நாரணி, மனோன்மனி ஆகிய ஐந்து பெயர்களைக் கொண்ட தேவியர்களாக இருந்து சக்தியளிக்கும் மாபெரும் சக்தியாக இருக்கின்றாள்.

ஐந்து தேவியர்கள்:

1. சுந்தரி – பேரழகு உடைய வெள்ளை நிறத்தைக் கொண்டவள் [சரஸ்வதி]
2. அந்தரி – வானம் போன்ற செம்மையான கருமை நிறத்தைக் கொண்டவள் [பார்வதி]
3. சிந்துப் பரிபுரை – செந்தூரம் போன்ற சிவப்பு நிறத்தைக் கொண்டவள் [மகேஸ்வரி]
4. நாரணி – நாராயணனுக்கு தேவியாகிய நீல நிறத்தைக் கொண்டவள் [லட்சுமி]
5. இருள்புரை ஈசி மனோன்மனி – அண்டத்து இருளைப் போன்ற கருமை நிறத்தைக் கொண்டவள் [மனோன்மனி]

குறிப்பு: பிரம்மாவின் படைப்புத் தொழிலுக்கு சக்தியாக சரஸ்வதியும் திருமாலின் காக்கும் தொழிலுக்கு சக்தியாக லட்சுமியும் உருத்திரனின் அழிக்கும் தொழிலுக்கு சக்தியாக பார்வதியும் மகேஸ்வரனின் மறைத்தல் தொழிலுக்கு சக்தியாக மகேஸ்வரியும் சதாசிவனின் அருளல் தொழிலுக்கு சக்தியாக மனோன்மனியும் இருக்கிறார்கள்.



பாடல் #1047: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [சக்தியின் வடிவமான மந்திரமும் திரிபுரை சக்கரமும்]

தானா யமைந்தவ முப்புரம் தன்னிடைத்
தானான மூவுரு வோருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானான போகமும் முத்தியும் நல்குமே.

விளக்கம்:

திரிபுரை சக்தியானது மூன்று புரங்களில் இருக்கும் தேவர்களுக்கும் அவரவர்களின் தன்மைக்கேற்ற உருவங்களைக் கொண்ட தேவியர்களாக தாமாகவே அமைந்திருக்கும். திரிபுரையாக இருக்கும் இந்த சக்தியே பொன் நிறம் கொண்ட லட்சுமியாக இருந்து போகத்தையும் வெண்மை நிறம் கொண்ட சரஸ்வதியாக இருந்து ஞானத்தையும் செம்மையான கருமை நிறம் கொண்ட பார்வதியாக இருந்து மாயையை அழித்து முக்தியையும் அருளும் சக்தியாக இருக்கின்றார்கள்.



பாடல் #1048: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரைஅபி ராமி அகோசரி
புல்கும் அருளும்அப் போதந்தந் தாளுமே.

விளக்கம்:

பாடல் #1047 இல் உள்ளபடி அருளுகின்ற திரிபுரை சக்தியானது ஒலியாகவும் அந்த ஒலியின் எல்லையாகவும் இருக்கின்றது. திரிபுரையே உணரமுடியாத பேரொளியாகவும் இருந்து உலகங்கள் அண்டசராசரங்கள் அனைத்திற்கும் பரவிப் பெருகுகின்றது. இந்த ஒலி ஒளியாக இருக்கும் திரிபுரையே அனைத்தையும் அருளுபவளாகவும், பேரழகு மிகுந்தவளாகவும் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவளாகவும் இருந்து அன்போடு ஞானத்தை அருளி ஆட்கொள்கின்றாள்.

கருத்து: பரை எனும் அசையும் சக்தியும், பேரழகு மிகுந்த அபிராமியும், ஐந்து கோசங்களுக்கும் அப்பாற்பட்ட அகோசரியும் ஆகிய இந்த மூன்று சக்தி வடிவங்களும் திரிபுரையாகும்.



பாடல் #1049: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி யங்குச பாச மெழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே.

விளக்கம்:

அழகிய சிலம்பணிந்த திருவடிகளும் சிவந்த பட்டு அணிந்த உடலும் அழகிய கச்சையணிந்த மார்பும் அம்பைப் போன்ற மலர்க்கொத்து வில்லைப் போன்ற கரும்பு அங்குசம் பாசக் கயிறு ஆகியவற்றை அணிந்த நான்கு கரங்களும் அழகிய நீண்ட கருமையான கூந்தலும் பெரிய மணிகள் பதித்த குண்டலங்களை அணிந்த காதுகளும் கொண்ட உருவமாக திரிபுரை இருக்கின்றாள்.

கருத்து:

திரிபுரை சக்தியானது உலகத்தை இயக்கும் முறைகளை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். சிலம்பிலிருந்து வரும் ஒலியும் பட்டு போல் சிகப்பாக ஜொலிக்கும் ஒளியும் உலக உருவாக்கத்தின் [படைத்தல்] காரணத்தை குறிக்கின்றது. மார்பு கச்சை உலக உயிர்களுக்கு பாதுகாப்பாக [காத்தல்] உணவு அளிப்பதை குறிக்கின்றது. நான்கு கரங்களில் உள்ளவற்றில் மலர்க்கொத்து அருளலையும் வில்லைப் போன்ற கரும்பு அழித்தலையும் பாசக் கயிறு மாயையால் மறைத்தலையும் அங்குசம் அடியவர்கள் மாயையில் சிக்கித் தவிக்கும் போது தடுப்பதையும் குறிக்கின்றது. கருமையான கூந்தல் பரந்து விரிந்த அண்டங்களைக் குறிக்கின்றது. காதுகளில் அணிந்த குண்டலங்கள் சூரிய சந்திரனைக் குறிக்கின்றது.




பாடல் #1050: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்
கொண்ட அரத்த நிறமன்னு கோலத்தள்
கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே.

விளக்கம்:

பெரிய மணிகள் பதித்த குண்டலங்களை அணிந்த காதுகளும் வில்லைப் போன்ற வளைந்த புருவங்களையும் அரக்கு நிறத்தில் இருக்கும் திருமேனியையும் சிவமணி மாலையை ஆரமாகவும் தலையில் ஒளிர் விடும் நிலாவை கிரீடமாகவும் கொண்டு சண்டிகை எனும் பெயருடன் நான்கு திசைகளையும் தாங்கி நிற்கின்றவள் திரிபுரை சக்தியாகும்.

கருத்து: திரிபுரை சக்தியானது சண்டிகை எனும் பெயருடன் நான்கு திசைகளையும் தாங்கி இருப்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். பாடல் #1049 இல் உள்ளபடி காதுகளில் அணிந்த குண்டலங்கள் சூரிய சந்திரனைக் குறிக்கின்றது. கொலை செய்யும் வில்லைப் போன்ற வளைந்த புருவங்கள் அழிப்பதைக் குறிக்கின்றது. கழுத்திலிருக்கும் சிவமணி மாலை உலகத்தைச் சுற்றி நிற்கும் நவகிரகங்களைக் குறிக்கின்றது. நிலவிலிருந்து வரும் குளிர்ந்த ஒளி போன்ற தலைமுடி உலகங்களுக்கு குளிர்ச்சியைக் கொடுத்து பாதுகாப்பதை குறிக்கின்றது. அரக்கு நிற திருமேனி எப்போதும் நில்லாமல் அசைந்து கொண்டே இருக்கின்ற சக்தியின் வேகத்தை குறிக்கின்றது.



பாடல் #1051: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றலில் மோகினி மாதிருக் குஞ்சிகை
நன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி
துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே.

விளக்கம்:

பாடல் #1050 இல் உள்ளபடி நான்கு திசைகளையும் தாங்கி நிற்கின்ற திரிபுரை சக்தி ஆதியிலிருந்தே தொடர்ந்து இருக்கின்ற பராசக்தியாகும். இவள் குறையில்லாத அழகுடன் அண்டசராசரங்கள் அனைத்தையும் வசப்படுத்தி வைத்திருப்பவள். மிகவும் அழகாக அசைந்தாடும் தலை முடியைக் கொண்டவள். நன்மையை வழங்கும் உருத்திராட்சத்தை அணிந்தவள். நான்கு கால்களுடன் கரிய உருவத்தைக் கொண்ட யானையை வாகனமாகக் கொண்ட கஜலட்சுமியானவள். இவள் சுத்தமாக மலராமல் நெருங்கி இருக்கும் தாமரை இதழ்களைப் போலத் தூய்மையானவள்.

கருத்து: திரிபுரை சக்தியானது கஜலெட்சுமி எனும் பெயருடன் அனைத்தையும் தன் வசப்படுத்தி இருப்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். புராதனி என்பது ஆதிகாலத்திலிருந்தே அண்டசராசரங்கள் இருக்கும் வரை எப்போதும் இருப்பதைக் குறிக்கின்றது. குறைவில்லாத மோகினி என்பது அண்டசராசரங்கள் அனைத்தையும் தன் செயலுக்கு ஏற்ப வசப்படுத்தி வைத்திருப்பதைக் குறிக்கின்றது. அழகாக அசைந்தாடும் தலை முடி என்பது அண்டசராசரங்கள் அனைத்தையும் தனது அசைவுக்கு ஏற்ப ஆட்டி வைப்பதைக் குறிக்கின்றது. உருத்திராட்ச மாலை என்பது பாடல் #1050 இல் குறிப்பிட்ட நவகிரகங்கள் உலகங்களுக்கு நன்மை தருவதை குறிக்கின்றது. நான்கு கால்களுடன் கரிய உருவத்தைக் கொண்ட யானை என்பது அனைத்தையும் அருளும் அஷ்ட லட்சுமிகளில் நடுநாயகமாக இருக்கும் கஜலட்சுமியைக் குறிக்கின்றது. சுத்தமான தாமரை என்பது தண்ணீரில் இருந்தாலும் தாமரையின் இதழ்களானது தண்ணீருடன் ஒட்டாமல் இருப்பதைப் போல திரிபுரையான கஜலட்சுமி அனைத்து செயல்களையும் செய்பவளாக இருந்தாலும் அதனுடன் ஒட்டாமல் விலகி இருப்பதைக் குறிக்கின்றது.



பாடல் #1052: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

சுத்தவம் பாரத் தளித்த சுகோதயள்
வத்துவ மாயா ளுமாசத்தி மாபரை
அத்தகை யான மனோரணி தானுமாய்
வைத்தவக் கோல மதியவ ளாகுமே.

விளக்கம்:

பாடல் #1051 இல் உள்ளபடி தூய்மையும் அனைத்து ஞானத்தின் மொத்த உருவமாகவும் இருக்கும் திரிபுரை சக்தி கருணையோடு பேரின்பத்தை அளிப்பவள். அவள் அனைத்தையும் ஆட்டுவிக்கும் மெய்ப்பொருளான உமா சக்தி எனும் பெயருடைய மாபெரும் சக்தியாக இருக்கின்றாள். அத்தகைய மாபெரும் சக்தி அணுவுக்குள் அணுவைப் போல நுண்ணியமாகவும் இருக்கின்றாள். இப்படி இருக்கும் இவளது திருக்கோலமே மொத்த ஞானத்தின் உருவமாகும்.

கருத்து: திரிபுரை சக்தி உமா சக்தி என்ற பெயரில் ஞானத்தின் முழு உருவமாக இருந்து அதைத் தேடுபவர்களுக்கு கருணையோடு அருளுபவளாக இருக்கின்றாள்.



பாடல் #1053: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்று இல்லை
அவளன்றி ஊர்புகும் ஆறறி யேனே.

விளக்கம்:

திரிபுரை சக்தியைத் தவிர பிறப்பு இறப்பு இல்லாத அமரர்கள் யாரும் இல்லை. திரிபுரை சக்தியை நோக்கி செய்யப்படும் தவத்தை விட சிறந்த தவம் வேறு இல்லை. திரிபுரை சக்தியின் அருள் இல்லாமல் படைத்தல் மறைத்தல் காத்தல் அருளல் அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் தெய்வங்களால் எதுவும் செய்ய இயலாது. திரிபுரை சக்தியில்லாமல் முக்தி அடையும் வேறு எந்த வழியையும் நான் அறியவில்லை.

கருத்து: பாடல் #6 இல் இதே கருத்தை சிவனுக்கு அருளியிருக்கும் திருமூலர் இப்பாடலில் சக்திக்கும் அருளியிருக்கின்றார். இதன் மூலம் அசையா சக்தியாகிய இறைவனும் அசையும் சக்தியாகிய இறைவியும் ஒன்றே என்பதை உணர்ந்து கொள்ளலாம். இதற்கு உதாரணம் [பாடல் #383 இல் உள்ளது.] நவரத்தினத்தில் உள்ள வைரமும் அந்த வைரத்தில் இருந்து வரும் ஒளியும் வேறு வேறாய் அறியப்பட்டாலும் இரண்டும் ஒன்றே ஆகும். அது போல் சிவமும் சக்தியும் ஒன்றே ஆகும்.



பாடல் #1054: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவா ரருவுரு வாம்அவள் என்பர்
அறிவார் கருமம் அவள்இச்சை என்பர்
அறிவார் பரனும் அவளிடத் தானே.

விளக்கம்:

ஞானத்தின் மொத்த உருவமாக இருக்கும் திரிபுரை சக்தியானவள் தமக்கு உண்மை ஞானத்தை வழங்க முடியும் என்பதை அறிந்து கொண்டவர்கள் பராசக்தி எனும் பெயருடைய அவளே பேரானந்தத்தின் உருவமாக இருப்பதையும். உருவம் அருவம் அருவுருவம் ஆகிய அனைத்துமாக இருப்பதையும். அனைத்தையும் தன் இச்சைப் படி ஆட்டி வைப்பதையும். இறைவனின் சரிபாதியாக இருப்பதையும் அறிவார்கள்.

கருத்து: திரிபுரை சக்தி ஞானத்தின் மொத்த உருவமாக பராசக்தி எனும் பெயருடன் இருப்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு: உருவம் என்பது பார்க்கக்கூடிய ரூபம் [உதாரணம் சிவபெருமான்], அருவம் என்பது உணரக்கூடிய சூட்சுமம் [உதாரணம் சக்தி], அருவுருவம் என்பது சூட்சுமத்தின் ரூப வடிவம் [உதாரணம் சிவலிங்கம்].



பாடல் #1055: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

தானெங் குளனங் குளதையன் மாதேவி
ஊனெங் குளவங் குளவுயிர்க் காவலன்
வானெங் குளவங் குளமந்த மாருதங்
கோனெங்கு நின்ற குறிபல பாரே.

விளக்கம்:

இறைவன் எங்கெங்கெல்லாம் இருக்கின்றானோ அங்கெங்கெல்லாம் மாபெரும் தேவியாகிய இறைவியும் இறைவனோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றாள். உலகத்தில் உடலாக இருக்கும் அசையும் மற்றும் அசையாத பொருள்கள் அனைத்திற்குள்ளும் உயிராக நின்று இறைவனும் இறைவியும் பாதுகாக்கின்றார்கள். உலகத்தில் வெற்றிடமாக இருக்கும் அனைத்து இடங்களிலும் மென்மையான தென்றல் காற்றாக இறைவனும் இறைவியும் இருக்கின்றார்கள். அனைத்தையும் ஆளுகின்ற இறைவனும் இறைவியும் எங்கெங்கெல்லாம் எப்படியெல்லாம் இருக்கின்றார்கள் என்பதை பலவிதமான குறிப்புகள் வைத்து பார்த்துக் கொள்ளுங்கள்.

கருத்து: உலகத்திலுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா பொருள்களும் ஏதோவொரு வகையில் உருமாறுகிறது. இந்த குறிப்பே இறை சக்தி அங்கே இருக்கின்றது என்பதற்கு சான்றாகும்.



பாடல் #1056: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

பராசத்தி மாசத்தி பல்வகை யாலும்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணராய்
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே.

விளக்கம்:

பாடல் #1054 இல் உள்ளபடி ஞானத்தின் மொத்த வடிவாக இருக்கும் பராசக்தியானவள் மாபெரும் சக்தியாக பலவகைகளிலும் உயிர்கள் செய்யும் அனைத்து செயல்களிலும் அந்தந்த செயல்களுக்கு ஏற்ற சக்தியாக நின்று அருளுகின்றாள். பராசக்தியின் இந்த தன்மையை உயிர்கள் உணராமல் இருக்கின்றார்கள். இந்தப் பராசக்தியே யுகம் யுகமாக தொடர்ந்து பிறவி எடுக்கும் ஆன்மாக்களுடன் உடனிருந்து பாதுகாக்கின்றாள். திரிபுரையாகிய இந்த பராசக்தியே உயிர்கள் செய்யும் செயல்களுக்கு ஏற்ற பலனை அருளி இன்பத்தை வழங்குகின்றாள்.



பாடல் #1057: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய் தாங்கே அடியவர் நாள்தொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே.

விளக்கம்:

பாடல் #1056 இல் உள்ளபடி இன்பத்தை அனுபவிக்கின்ற உயிர்களின் செயல்களுக்கேற்ப அவர்களுடன் சேர்ந்து பின்னிப் பிணைந்து இருக்கும் சடை முடியைப் போல நிற்கின்றாள் பராசக்தி. இந்தப் பராசக்தியை தினந்தோறும் தியானித்து சாதகம் செய்யும் அடியவர்களுக்கு அவர்கள் செய்த சாதகத்தின் பலனாக கொடி போல வளர்கின்ற ஞானத்தைக் கொடுத்து அந்த கொடியில் சரிபாதியாக நின்று அதைத் தாங்கி வளர்க்கின்ற கொம்பாகவும் இருக்கின்றாள்.



பாடல் #1058: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவிர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பியென் னுள்ளே நயந்துவைத் தேனே.

விளக்கம்:

பாடல் #1057 இல் உள்ளபடி ஞானத்தை தாங்கி வளர்க்கின்ற கொம்பைப் போன்றவளும் முழுமையுடன் அழகாக விளங்கும் கொங்கைகளை கொண்டவளும் மணம் கமழ்கின்ற வாசனை மலர்களை தன் கூந்தலில் சூடிக்கொண்டு இருப்பவளும் தேவர்களும் விரும்பி தேடுகின்றவளாக இருப்பவளும் பவளம் போன்ற சிகப்பான மேனியைக் கொண்ட சிறுமியாக இருப்பவளுமாகிய திரிபுரை சக்தி இராஜராஜேஸ்வரி எனும் திருநாமத்தைக் கொண்டு அருளுகின்றாள். இறைவனோடு இரண்டறக் கலக்கும் ஞானத்தை அளிக்கக் கூடியவள் இந்த சக்தியே என்று நம்பி எனது உள்ளத்திற்குள்ளே பணிவோடு வைத்திருக்கின்றேன்.

கருத்து: திரிபுரை சக்தியானது இராஜராஜேஸ்வரி எனும் பெயருடன் தேவர்களுக்கும் அமிழ்தத்தை அருளி ஞானத்தை வளர்ப்பவளாக இருப்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். கொம்பை போன்றவள் என்பது ஞானம் என்கிற கொடியைத் தாங்கி வளர்க்கின்ற கொம்பாக இருப்பதைக் குறிக்கின்றது. முழுமையான அழகுடன் விளங்கும் கொங்கைகள் என்பது தேவர்களுக்கும் அமிழ்தமான பாலை தருபவளாக இருப்பதைக் குறிக்கின்றது. மணம் கமழ்கின்ற வாசனை மலர்களை சூடியுள்ளவள் என்பது வண்டு தேனைத் தேடி வாசனையுள்ள மலரை நோக்கிச் செல்வதைப் போல தேவர்கள் இறைவனேடு இரண்டறக் கலக்கும் ஞானத்தை தேடிப் பெறுவதற்கு இராஜராஜேஸ்வரியை நாடிச் செல்வதைக் குறிக்கின்றது. செம்பவளத் திருமேனியைக் கொண்ட சிறுமி என்பது உச்ச நிலை ஞானத்தின் ஆரம்பத்தைக் கொடுத்து அருளும் இராஜராஜேஸ்வரியின் திருவுருவத்தைக் குறிக்கின்றது.



பாடல் #1059: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களும் செய்திடும்
சத்தியும் வித்தைத் தலைவியவ ளாமே.

விளக்கம்:

ஒவ்வொரு உயிர்களும் மாறி மாறி எடுக்கும் பலவிதமான பிறவிகளில் அவர்களுக்குள்ளே மறைத்து வைக்கப்பட்ட பொருளாக இருக்கின்ற இறைவனோடு சேர்ந்து இருக்கின்ற திரிபுரை சக்தி பத்து முகங்களைக் கொண்டு காக்கின்றாள். தானாக செயல்படும் அனைத்து செயல்களுக்கும் காரணமாக அசையா சக்தியான சதாசிவமூர்த்தியும் அதனை செயல்படுத்தும் கருவியாக அசையும் சக்தியான திரிபுரையும் இருக்கிறார்கள். இந்தத் திரிபுரை சக்தியானவள் ஸ்ரீவித்யா எனும் பெயருடன் உலகத்திலுள்ள அனைத்திற்கும் அதனதன் செயல்களைச் செய்யும் ஞானத்தை அருளும் தலைவியாக இருக்கின்றாள்.

கருத்து: திரிபுரை சக்தியானது ஸ்ரீவித்யா எனும் பெயருடன் உலகத்திலுள்ள அனைத்திற்கும் அதனதன் செயல்களைச் செய்யும் ஞானத்தை அருளும் தலைவியாக இருப்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். உலகத்திலுள்ள உயிர்கள் முதற்கொண்டு அசையும் பொருள் அசையா பொருள் ஆகிய அனைத்துமே தமது ஆயுளில் பலவிதமாக தன்னை மாற்றிக் கொண்டே இருப்பதற்கான அறிவை கொடுக்கும் தலைவியாக ஸ்ரீவித்யா தேவி இருக்கின்றாள்.




பாடல் #1060: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவம்செய்யும் தூய்நெறித் தோகை
கலைபல வென்றிடும் கன்னியென் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1059 இல் உள்ளபடி தலைவியாக இருக்கும் ஸ்ரீவித்யா தேவி அனைத்திற்கும் மேலான ஞானத்தின் உச்சியில் நின்று உலகத்தோடு கலந்து அனைத்து உயிர்களுக்கும் அவரவர்களின் செயல்களுக்கு ஏற்ற சரிசமமான அறிவைக் கொடுக்கும் ஞானப் பாலை அருளுகின்றாள். இந்த சக்தியானவள் என்றும் மாறாதவளாக அனைத்து செயல்களையும் செய்வதற்கு தேவையான ஞானத்தை அருளி அதில் வெற்றியும் பெற்று இருக்கின்றாள். திரிபுரை சக்தியாக இருக்கும் இந்த ஸ்ரீவித்யா தேவியை எனது உள்ளத்துக்குள்ளே வைத்து நிலை நிறுத்தியதால் அவள் எனக்குள் முழுவதும் நிறைந்து நிற்கின்றாள்.

கருத்து: அனைத்து செயல்களையும் செய்யும் ஞானத்தை வழங்குகின்ற திரிபுரை சக்தியானது ஸ்ரீவித்யா தேவி எனும் பெயருடன் உயிர்களுக்குள்ளே என்றும் மாறாமல் நிலைபெற்று நின்று அவரவர்களின் செயல்களுக்கு ஏற்ற அறிவைக் கொடுப்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1061: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றெ னகம்படிந் தேழுல குந்தொழ
மன்றது வொன்றி மனோன்மணி மங்கலி
ஒன்றெனோ டொன்றிநின் றொத்தடைந் தாளே.

விளக்கம்:

பாடல் #1060 இல் உள்ளபடி எனக்குள் நிறைந்து நின்ற திரிபுரை சக்தி தான் செய்யும் செயல்களுக்கு ஏற்ற அணிகலன்களை அணிந்து கொண்டு அனைத்து செயல்களோடு கலந்து எனது உள்ளத்தில் பதிந்து இருக்கின்றாள். ஏழு உலகத்திலும் அவளை உணர்ந்தவர்கள் வந்து தொழுகின்றபடி எனது மனமாகிய அம்பலத்தில் ஆடுகின்ற இறைவனோடு ஒன்றி மனோன்மணி எனும் பெயருடன் தான் செய்கின்ற அனைத்து செயல்களையும் மங்கலமாக்குகின்றாள். சிவம் வேறு திரிபுரை சக்தி வேறு என்று வேறுபடாமல் ஒன்றோடு ஒன்றாக ஒன்றி நின்று எப்போதும் பிரியாமல் எனது உள்ளத்துள் ஒன்றாக அடைந்திருக்கின்றாள்.

குறிப்பு: இறைவன் ஆடுகின்ற அனைத்து இடங்களும் [அடியவர்களின் உள்ளம் உட்பட] அம்பலம் என்று அறியப்படும். இறைவனோடு திரிபுரை சக்தி ஒன்றாகக் கலந்து நிற்பதை மனோன்மணி என்ற பெயரில் அறியலாம்.



பாடல் #1062: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

ஒத்தடங் குங்கம லத்திடை ஆயிழை
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்தடை கின்ற மனோன்மனி மங்கலி
சித்தடைக் கும்வழி தேர்ந்துண ரார்களே.

விளக்கம்:

பாடல் #1061 இல் உள்ளபடி எமது உள்ளத்திற்குள் ஒன்றாக அடைந்திருக்கும் மனோன்மணி சக்தியானவள் தான் செய்யும் செயல்களுக்கு ஏற்ற அணிகலன்களை அணிந்து கொண்டு முடிவில்லாமல் அனைத்து செயல்களையும் செய்து கொண்டு இருக்கின்றாள். அப்படி அவள் செய்யும் அனைத்து செயல்களுக்கும் காரணமாக இருக்கும் மிகப்பெரும் தலைவனாகிய இறைவனோடு சேர்ந்து எப்போதும் தாண்டவம் ஆடிக்கொண்டே இருக்கும் மனோன்மணியானவள் தான் செய்கின்ற அனைத்து செயல்களையும் மங்கலமாக்குகின்றாள். இவளை தனது சிந்தனைக்குள் எப்போதும் வைத்திருக்கும் வழியை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் உயிர்கள் இருக்கின்றார்கள்.



பாடல் #1063: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

உணர்ந்துட னேநிற்கு முள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே.

விளக்கம்:

பாடல் #1062 இல் உள்ளபடி திரிபுரையாக இருக்கும் மனோன்மணி சக்தியை தமது சிந்தனைக்குள் எப்போதும் வைத்திருக்கும் வழியை ஆராய்ந்து உணர்ந்து கொண்டவர்கள் அவ்வழியிலேயே சாதகம் செய்யும் போது இறைவன் அவர்களுக்கு உள்ளிருந்து ஒளியாக வெளிப்படுவான். அந்த இறைவனோடு நறுமணம் கமழும் மலர்களை தன் கூந்தலில் அணிந்து இருக்கும் இறைவியும் ஒன்றாகக் கலந்திருந்து வெளிப்படுவாள். அப்படி வெளிப்பட்ட திரிபுரை சக்தி காட்டும் வழியில் அன்போடு செல்பவர்களுக்கு அவள் நற்கதியை அருளுவாள்.



பாடல் #1064: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

அளியொத்த பெண்பிள்ளை யானந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கித்
தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளே.

விளக்கம்:

பாடல் #1063 இல் உள்ளபடி நற்கதியை அருளுகின்ற திரிபுரை சக்தியான இறைவி பேரானந்தத்தின் வடிவமாகப் பேரழகுடன் இருக்கின்றாள். புளியம் பழத்தின் மேல்பகுதி கடினமாக இருந்தாலும் அதனுள் இருக்கும் பழுத்த பழம் மென்மையாகவும் ஓடுடன் ஒட்டாமலும் இருப்பது போல திரிபுரை சக்தி தனது அருள் பார்வையால் எமது உள்ளத்திற்குள் பார்த்து எம்மை தெளிய வைத்து எமக்குள் ஒளியாக இருக்கும் இறைவனின் சிவகதியை காட்டி எம்மை மேன்மை அடைய வைத்து தன்னுள்ளே அடக்கிக் கொண்டாள்.



பாடல் #1065: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

உண்டில்லை என்ற துருச்செய்து நின்றது
வண்தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டல முன்றுற மன்னிநின் றாளே.

விளக்கம்:

திரிபுரை சக்திக்கு உருவம் உண்டு என்று சொல்பவர்களுக்கு உருவமாக இருக்கிறாள். உருவம் இல்லை என்று சொல்பவர்களுக்கு அருவமாக இருக்கிறாள். தன்னைத் தியானித்தவர்களுக்கு அவர்கள் தியானித்த உருவமாகவே அவள் காட்சி கொடுக்கின்றாள். உலகத்தின் இயக்கத்திற்கு காரணம் இறைவன் காரியம் இறைவி இவர்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து அருவுருவமாக தில்லை அம்பலத்தில் எங்கும் நிறைந்து ஆடுகின்றார்கள். இந்த அருவுருவமே உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் உய்ய வேண்டும் என்பதற்காக சூரிய சந்திர அக்னி ஆகிய மூன்று மண்டலங்களிலும் நிறைந்து திரிபுரை சக்தியாக நிற்கின்றாள்.

கருத்து: உலக இயக்கத்திற்கு வெப்பம் குளிர்ச்சி இரண்டுமே வேண்டும் இதை சூரிய சந்திர மண்டலங்களாக இருந்து திரிபுரை சக்தி அருளுகின்றாள். பிரளயத்தில் அனைத்து உயிர்களும் இறைவனோடு திரும்பவும் சென்று கலந்து விடுவதற்கு அக்னி மண்டலமாக திரிபுரை சக்தி நிற்கின்றாள். பாடல் #612 இல் உள்ளபடி உடலில் [பிண்டத்தில்] இருக்கும் மூன்று மண்டலங்களே உலகத்திலும் [அண்டத்தில்] இருக்கின்றது. இவளே திரிபுரை என்று அறியப்படுகின்றாள்.



பாடல் #1066: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

நின்றா ளவன்ற னுடலு முயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக வென்னுட் புகுந்துணர் வாகியே
நின்றாள் பரஞ்சுட ரேடங்கை யாளே.

விளக்கம்:

பாடல் #1065 இல் உள்ளபடி மூன்று மண்டலங்களிலும் நிறைந்து நிற்கின்ற திரிபுரை சக்தியானவள் இறைவனோடு ஒன்றாக சேர்ந்து எமக்குள் உடலாகவும் உயிராகவும் உணர்வாகவும் இருக்கின்றாள். அதுபோலவே அனைத்து உயிர்களிலும் இருக்கின்றாள். இவள் இறைவனை அடையும் சிவகதிக்கான வழியைக் கொடுக்கும் ஞானத்தின் மொத்த உருவமாக பராசக்தி எனும் பெயருடனும் சிவகதியை சொல்கின்ற அனைத்து சொற்களாகவும் இருக்கின்றாள்.

குறிப்பு: ஏடங்கை [ஏடு ஏந்திய கை] என்பது எழுதப்பட்ட அல்லது சொல்லப்பட்ட அனைத்து வார்த்தைகளாகவும் இருப்பவள் என்று பொருள்.



பாடல் #1067: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

ஏடங்கை நங்கை யிறைளங்கண் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பனி பாதங்கள்
சூடுமென் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.

விளக்கம்:

பாடல் #1066 இல் உள்ளபடி சிவகதியைச் சொல்கின்ற அனைத்து சொற்களாகவும் இருக்கின்ற திரிபுரை சக்தியே எங்கள் இறைவியாகும். அவள் மூன்று கண்களை உடையவள். உருவமில்லாத அவளே படிகம் போன்ற ஊடுருவிப் பார்க்கும் திருமேனியை விரும்பி வெள்ளைத் தாமரையில் அமர்ந்து கொண்டு எப்போதும் வேதங்களை ஓதிக் கொண்டிருக்கும் பிரம்மனின் தேவியான சரஸ்வதியாக இருக்கின்றாள். இவளது திருப்பாதங்களை தரிசித்து எமது தலைமேல் தாங்கி அவளின் தோத்திரங்களை எப்போதும் எமது வாய் சொல்லிக் கொண்டே இருக்கின்றது.

கருத்து: திரிபுரை சக்தியானவள் பிரம்மனின் தேவியான சரஸ்வதி எனும் பெயருடன் உயிர்கள் வாழும் வாழ்க்கைக்குத் தேவையான அறிவைக் [கல்வி] கொடுத்து அருளுவதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். முக்கண்ணி என்பது மூன்று காலங்களையும் பார்க்கின்ற இறைவியானவள் உயிர்களின் சென்ற பிறவிகளின் கர்மங்களைப் பார்த்து இந்த பிறவியை படைப்பதையும் இந்தப் பிறவியின் கர்மங்களைப் பார்த்து பின்பு வரும் பிறவிகளை தீர்மானித்து சிவகதியை அடைய வைப்பதையும் குறிக்கின்றது. வெள்ளைத் தாமரையில் அமர்ந்திருக்கும் படிகம் போன்ற உருவம் என்பது தூய்மையான எண்ணங்களுடன் அனைத்தையும் ஊடுருவிப் பார்க்கின்ற ஞானத்தின் உருவமாக இருப்பதைக் குறிக்கின்றது. திருமுறை பாடும் பார்ப்பனி எனபது உயிர்கள் சிவகதி அடைவதற்கு தமது கர்மங்களைத் தீர்க்க பல பிறவிகளை எடுக்க வேண்டும் என்பதற்காக வேதங்களை ஓதிக்கொண்டே படைக்கும் தொழிலை செய்யும் பிரம்மாவும் அவருக்கு சக்தியாக சரஸ்வதியும் இருப்பதைக் குறிக்கின்றது.



திருமந்திரம் – பாடல் #1068: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட வேத்தி வழிபடு வாரிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே.

விளக்கம்:

பாடல் #1067 இல் உள்ளபடி தோத்திரங்களை சொல்லி யாம் வழிபடும் திரிபுரை சக்தியின் திருவடிகளை யாரெல்லாம் போற்றி வழிபடுகிறார்களோ அவர்களுக்குத் துணையாக திரிபுரை இருக்கின்றாள். அவள் தனது திருக்கரங்களில் வில்லைப் போன்ற கரும்பையும் இரும்பாலான அங்குசத்தையும் பாசக் கயிறையும் வைத்துக் கொண்டு மென்மையான திருமேனியைக் கொண்ட ஆதிசக்தியாக இருக்கின்றாள்.

கருத்து: திரிபுரை சக்தியானது சரஸ்வதி எனும் பெயருடன் உயிர்களின் வாழ்க்கைக்குத் தேவையான அறிவைக் [கல்வி] கொடுத்து துணையாக இருப்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். வில்லைப் போன்ற கரும்பு மாயையை அழித்தலையும், பாசக் கயிறு மாயையால் மறைத்தலையும், அங்குசம் அடியவர்கள் மாயையில் சிக்கித் தவிக்கும் போது தடுப்பதையும் குறிக்கின்றது.




பாடல் #1069: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

ஆதி விதமிகுத் தண்டந்த மாலங்கை
நீதி மலரின்மே னேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகாற் பயில்விரேற்
சோதி மிகுத்துமுக் காலமுந் தோன்றுமே.

விளக்கம்:

ஆதியாக இருக்கும் திரிபுரை சக்தி பல விதங்களில் நிறைந்து இருக்கும் அண்டத்திலுள்ள அனைத்தையும் காத்து அருளுகின்ற திருமாலின் தங்கை என்று அழைக்கப்படுகின்ற பார்வதி தேவி அடியவர்களின் மனசாட்சியாக இருக்கும் நெஞ்சத் தாமரையில் அமர்ந்திருக்கிறாள். அவளின் திருநாம மந்திரத்தை அந்தத் தாமரைக்கு நடுவில் மானசீகமாக வைத்து அந்த மந்திரத்தை செபித்து வரும் அடியவர்களின் உள்ளொளி பெருகி முக்கால ஞானமும் அவர்களுக்கு கிடைத்துவிடும்.

குறிப்பு: திரிபுரை சக்தியாக இருக்கும் பார்வதி தேவியை வழிபடுபவர்கள் தங்களது குருவின் மூலம் அவளின் திருநாம மந்திரத்தை மந்திர தீட்சையாகப் பெற்று செபிக்க வேண்டும். அவ்வாறு செபிப்பவர்களுக்கு மூன்று காலங்களிலும் நடப்பவற்றை அறிந்து கொள்ளும் ஞானம் கிடைக்கும்.



பாடல் #1070: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

மேதாதி யீரெட்டு மாகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதார மாகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்லரு ளாளே.

விளக்கம்:

உடலை இயக்குகின்ற மேதை முதலான பதினாறு கலைகளாக இருந்து அனைத்தையும் இயக்குகின்ற மென்மையான இயல்பைக் கொண்ட வேதங்கள் கூறும் பராபரை என்பவள் திரிபுரை சக்தியாகும். அவளே அனைத்திற்கும் ஆதாரமாக இருந்து எங்கும் பரந்து வியாபித்து இருப்பவள். அவளே நாதத்தின் முதலாகிய இறைவனுடன் சேர்ந்து நல்லருளைத் தருகிறாள்.

குறிப்பு: பதினாறு கலைகள் என்பது உயிர்களின் உடலின் இயக்கத்திற்கு காரணமாக இருக்கின்றது. அவை கீழ்வருமாறு:

1. மேதைக்கலை 2. அருக்கீசக்கலை 3. விடக்கலை 4. விந்துக்கலை
5. அர்த்தசந்திரன் கலை 6. நிரோதினிக்கலை 7. நாதக்கலை 8. நாதாந்தக்கலை
9. சக்திக்கலை 10. வியாபினிக்கலை 11. சமனைக்கலை 12. உன்மனைக்கலை
13. வியோமரூபினிக்கலை 14. அனந்தைக்கலை 15. அனாதைக்கலை
16. அனாசிருதைக்கலை



பாடல் #1071: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்
பொருளுற்றுச் சேவடி போற்றுவன் யானே.

விளக்கம்:

பாடல் #1070 இல் உள்ளபடி திரிபுரை சக்தி கொடுத்த நல்லருளைப் பெற்று உணர்ந்தவர்கள் அதை எடுத்துச் சொல்லும் போது அதைக் கேட்கும் மனிதர்களே நீங்கள் கேட்டதை உணர்ந்து உலகப் பொருட்களைப் பற்றிக் கொண்டு மாயையில் மயங்கி இருக்கும் உங்களுடைய சிந்தனையை மாற்றி உலகங்கள் அனைத்தையும் இயக்குகின்ற திரிபுரை சக்தியின் தலைவனாகவும் அடியவர்கள் வணங்கிப் போற்றும் உண்மைப் பொருளாகவும் இருக்கும் இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு அவனது திருவடிகளையே போற்றி வணங்கும் என்னோடு சேர்ந்து போற்றி வணங்குங்கள்.



பாடல் #1072: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராக மிடிக்கு முசலத்தொ
டேனை யுழுபடை ஏந்திய வெண்ணகை
ஊன மறவுணர்ந் தாருள்ளத் தோங்குமே.

விளக்கம்:

பாடல் #1071 இல் உள்ளபடி இறைவனின் திருவடிகளைப் போற்றி வணங்குபவர்களின் உள்ளத்தில் திரிபுரை சக்தியானவள் வராஹி எனும் பெயர் கொண்டு பன்றியின் முகத்தோடும் அதற்கேற்ற திருவடிகளோடும் வந்து கீழ்மையான எண்ணத்தை இடித்து மாற்றுகின்ற இரும்பு உலக்கையையும் அந்த எண்ணத்தை சீர்படுத்த உழுகின்ற ஏர் கலப்பையையும் மனதை ஒருநிலைப் படுத்துகின்ற வெண்மையான சங்கையும் கைகளில் ஏந்தி இருக்கின்றாள். அவளின் உருவத்தை மறந்து உருவமற்ற திரிபுரை சக்தியை உணர்ந்தவர்களின் உள்ளத்தில் அவள் ஓங்கி நிற்கின்றாள்.

கருத்து: திரிபுரை சக்தியானது அடியவர்களின் உள்ளத்தில் வராஹி எனும் உருவத்தில் ஓங்கி நிற்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். திரிபுரை சக்தியைப் போற்றி வணங்குபவர்களின் உள்ளத்தில் அவள் வராஹி உருவம் கொண்டு வந்து தனது கைகளிலுள்ள இரும்பு உலக்கையால் கீழ்மையான எண்ணங்களை இடித்து, அதை ஏர் கலப்பையால் சீர்படுத்தி, அவர்களின் மனதை வெண்மையான சங்கினால் ஒருநிலைப் படுத்தி அவர்களின் உள்ளத்தில் ஓங்கி நிற்கின்றாள்.



பாடல் #1073: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே யைவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதுஇருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1072 இல் உள்ளபடி அனைத்திலும் ஓங்கி நிற்கின்ற திரிபுரை சக்தியானவள் ஒரு பெண் பிள்ளையாக இருக்கின்றாள். அவள் என்றுமே நீங்காத பச்சை நிறத்தை உடையவள். அவளே அனைத்திலும் மேலானவளாக நின்று ஐந்து தேவர்களான பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியோரை படைத்து அவர்களின் செயல்களாகவே எப்போதும் இனிமையுடன் இருக்கின்றாள்.

கருத்து: திரிபுரை சக்தியானவள் ஐந்து தேவர்களின் செயல்களாக இருப்பதை இந்தப் பாடலில் உருவகிக்கலாம். பெண் பிள்ளை என்பது திரிபுரை தனக்கு என்று எதுவும் செய்யாமல் அனைவருக்கும் தேவையானதை எப்போதும் செய்கின்றவளாக இருப்பதைக் குறிக்கின்றது. நீங்காத பச்சை நிறத்தை உடையவள் என்பது எப்போதும் இளமையாகவே இருப்பதைக் குறிக்கின்றது. ரீங்காரத்தின் உள்ளே என்பது நிற்காமல் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கும் சக்தியைக் குறிக்கின்றது. இனிது இருந்தாள் என்பது அவள் செய்யும் அனைத்து செயல்களும் நன்மையாகவே இருப்பதைக் குறிக்கின்றது.



பாடல் #1074: நான்காம் தந்திரம் – 5. சக்தி பேதம் [திரிபுரை சக்தியின் வடிவமும் தன்மைகளும்]

தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுயிர்வித்துத் தந்த பதினாலும்
வானோர் தலமு மனமுநற் புத்தியுந்
தானே சிவகதித் தன்மையு மாமே.

விளக்கம்:

பாடல் #1073 இல் உள்ளபடி நன்மையாகவே இருக்கும் திரிபுரை சக்தியானவள் அனைத்திற்கும் தலைவியாக ஆதியிலிருந்தே தானாகவே நிற்கின்ற அசையும் சக்தியாகும். அவளே பதினான்கு உலகங்களையும் படைத்து அவற்றிற்கு உயிரூட்டினாள். அவளே தேவர்களின் உலகலமாகவும் உயிர்களின் மனமாகவும் நல்ல புத்தியுமாகவும் இருக்கின்றாள். அடியவர்கள் சென்று அடையும் சிவகதியாகவும் அவளே இருக்கின்றாள்.



பாடல் #1075: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம் [பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

பன்னிரண் டாங்கலை யாதி வயிரவி
தன்னி லகாரமு மாயையுங் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ டந்தம் பதினாலுஞ்
சொன்னிலை சோடச மந்தமென் றோதிடே.

விளக்கம்:

பன்னிரண்டு கலைகளாக ஆதியிலிருந்தே இருக்கின்ற வயிரவியானவள் தனக்குள் அகாரக் கலையையும் [படைத்தல்] மாயைக் கலையையும் [மறைத்தல்] சேர்த்து பதினான்கு கலைகளாகவும் அதனோடு ஆதியும் அந்தமும் சேரும்போது பதினாறு கலைகளாக முடியும். இந்த பதினாறு கலைகளை சொல்கின்ற நிலையில் அவை பதினாறு எழுத்துக்கள் கொண்ட மந்திரமாக இருக்கின்றது. வயிரவியாக இருக்கும் இந்த மந்திரத்தை ஓதுங்கள்.

கருத்து: வயிரவியானவள் பன்னிரண்டு விதமான சூட்சுமமான செயல்களை செய்கின்றாள். அவள் இயக்கம் பெற்று உலக செயல்களுக்காக படைத்தல் மற்றும் மறைத்தலுக்கான காரியத்தை செய்யும் போது பதினான்கு செயல்களை செய்கின்றாள். இந்த செயல்களை எடுத்து ஒலி வடிவமாக சொல்லும் போதும் ஒளி வடிவமாக எழுதும் போதும் அவை பதினாறு எழுத்துக்கள் கொண்ட மந்திரமாக இருக்கின்றது. இந்த மந்திரத்தை ஓதுங்கள்.

குறிப்பு: இந்த வயிரவி மந்திரத்தை எப்படி பெற்றுத் தெரிந்து கொள்வது என்பதை பின்வரும் பாடல்களின் வழியாகத் தெரிந்து கொள்ளலாம் அல்லது வயிரவி மந்திரத்தை குருவிடமிருந்து மந்திர தீட்சையாகப் பெற்றுக் கொள்ளலாம்.



பாடல் #1076: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

அந்தம் பதினா லதுவே வயிரவி
முந்து நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தைக் கமலத் தெழுகின்ற மாசத்தி
அந்தமு மாதியு மாகிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1075 இல் உள்ளபடி பதினான்கு கலைகளாகவும் இருக்கின்ற வயிரவியானவள் தான் செய்கின்ற செயல்களில் முதல் நடு கடைசி என்ற மூன்று நிலைகளிலும் பதினான்கு விதமான செயல்களையும் செய்து கொண்டு கடைசியான செயலையே முதலாகவும் ஆரம்பித்து எப்போதும் செய்து கொண்டே இருக்கின்றாள். இவளின் மந்திரத்தை செபிக்கும் சாதகர்களின் தலை உச்சியிலுள்ள சகஸ்ரதளத்தில் இருக்கும் ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலரிலிருந்து வெளிப்பட்டு எழும்பும் மாபெரும் சக்தியே ஆதியாகவும் அந்தமாகவும் நிற்கின்றாள்.

கருத்து: வயிரவியானவள் செய்யும் செயல்களில் முதல் நடு கடைசி எனும் மூன்று நிலைகள் இருக்கின்றன. இந்த மூன்று நிலைகளில் அவள் எதைச் செய்தாலும் அதை முதலாவதாகவே இருந்து செய்கின்றாள்.




பாடல் #1077: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆகின்ற மூவரு மங்கே யடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வுழிச் சாரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோருக்கே.

விளக்கம்:

பாடல் #1076 இல் உள்ளபடி ஆதியும் அந்தமுமாகி நிற்கின்ற வயிரவி மந்திரத்தில் பிரம்மன் விஷ்ணு உருத்திரன் ஆகிய மூன்று தேவர்களும் அடங்கி இருக்கின்றனர். பஞ்சபூதங்களால் ஆன அழியக்கூடிய உலகத்தைச் சார்ந்து இருக்கின்ற வாழ்க்கை முறையை விரும்பாமல் முக்தி எனும் பெரும்பயன் பெறுவதற்கு மூன்று தேவர்களும் அடங்கி இருக்கும் வயிரவி மந்திரத்தை சாதகம் செய்கின்ற சாதகர்களாகவும் அவர்கள் செய்கின்ற சாதகமாகவும் செய்யப்படுகின்ற நோக்கமாகவும் இருந்து புண்ணியத்தை வயிரவி அருளுகின்றாள்.



பாடல் #1078: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்க ளிருபத்தேழ் சூழ்மதி
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய சிந்தைதன் றென்னனும் ஆமே.

விளக்கம்:

பாடல் #1077 இல் உள்ளபடி வயிரவியிடம் புண்ணித்தைப் பெற்று குருவாக இருப்பவர்கள் இறைவனின் தன்மையில் இருந்து வயிரவி மந்திரத்தையும் அதைச் சொல்லும் முறையையும் அருளுவார். குரு சொன்ன முறைப்படி வயிரவி மந்திரத்தை எண்ணத்தில் வைத்து இருபத்தேழு நாட்களும் சூரிய கலை சந்திர கலை ஆகியவற்றின் மூலம் உள்ளிழுத்த மூச்சுக்காற்றால் மூலாதாரத்தில் இருக்கும் அக்னியை வளர்த்து அதை முழுவதுமாக ஆராய்ந்து அதன்படி தொடர்ந்து சிறிதும் மாறாத சிந்தனையுடன் மானசீகமாக செபித்து சாதகம் செய்து வருபவர்களின் சிந்தனையில் பேரழகுடைய சிவபெருமான் வந்து வீற்றிருப்பான்.

கருத்து: குரு கூறிய முறைப்படி வயிரவி மந்திரத்தை சாதகம் செய்யும் போது நொடிப் பொழுது நேரம் கூட இறைவனைத் தவிர வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் செய்பவர்களின் சிந்தனையில் இறைவன் வந்து வீற்றிருப்பான்.



பாடல் #1079: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

தென்னன் றிருநந்தி சேவகன் தன்னொடும்
பொன்னங் கிரியுள பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி யந்தம் பகவனோ
டுன்னுந் திரிபுரை யோதிநின் றானுக்கே.

விளக்கம்:

திருக்கயிலாய மலையில் உலகங்கள் யாவும் போற்றி வணங்கும் மாபெரும் குருவாகவும் அனைத்திற்கும் காவலனாகவும் வீற்றிருக்கும் பேரழகுடைய சிவபெருமானுடன் திரிபுரை சக்தியாகிய அம்மையும் சேர்ந்து இருக்கின்றாள். அதுபோலவே வயிரவி மந்திரத்தை இடைவிடாது செபித்து வரும் சாதகர்களின் உள்ளத்தையே கயிலாய மலையாகக் கொண்டு இறைவன் வந்து வீற்றிருக்கும் போது அவனுடனே ஒன்றாகக் கலந்து திரிபுரையும் வந்து வீற்றிருப்பாள்.



பாடல் #1080: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஓதிய நந்தி யுணரும் திருவருள்
நீதியில் வேத நெறிவந் துரைசெயும்
போத மிருபத் தெழுநாள் புணர்மதி
சோதி வயிரவி சூலம்வந் தாளுமே.

விளக்கம்:

பாடல் #1079 இல் உள்ளபடி சாதகர்களின் உள்ளத்திற்குள் திரிபுரையோடு ஒன்றாகக் கலந்து வீற்றிருக்கும் இறைவனின் திருவருளால் தமக்குள்ளே அவரை குருவாக உணரலாம். அப்படி குருவாக உணர்ந்த இறைவனே தருமத்தின் படி தகுதியானவர்களுக்கு வேதங்களில் உள்ள முறையில் வயிரவி மந்திரத்தையும் அதை சாதகம் செய்யும் முறையையும் அருளுகின்றார். அவர் அருளிய முறையின் படி இருபத்தேழு நாட்கள் வயிரவி மந்திரத்தை சாதகம் செய்தால் அதன் சக்தி பெருகிக் கொண்டே இருந்து வயிரவியானவள் சூலம் தாங்கிய சோதி வடிவாக வந்து சாதகரை ஆட்கொள்வாள்.




பாடல் #1081: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

சூலங் கபாலங்கை யேந்திய சூலிக்கு
நாலங் கரமுள நாகபா சாங்குசம்
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே.

விளக்கம்:

பாடல் #1080 இல் உள்ளபடி சோதி வடிவாக வந்து ஆட்கொள்கின்ற வயிரவியானவள் சூலி என்கிற பெயருடன் நான்கு கரங்களில் முறையே சூலம் கபாலம் நாக பாசாணம் அங்குசம் ஆகியவைகளை ஏந்திக்கொண்ட உருவமாக அருளுகின்றாள். இவள் திருமாலும் பிரம்மனும் அறிய முடியாத அடிமுடி காணாத பெரும் உருவமாக அனைத்திற்கும் மேலானவளாக மெல்லிய உருவம் கொண்டு நிற்கின்றாள்.

கருத்து: வயிரவி என்பவள் சூலி என்கிற பெயருடன் இருப்பதை இப்பாடலில் உருவகிக்கலாம். அவளுடைய கைகளில் உள்ள சூலம் அடியவர்களை காப்பதையும் கபாலம் அடியவர்களின் பிறவிகளாகத் தொடரும் வினைகளை அறுப்பதையும் நாக பாசாணம் பிறவியோடு வரும் பந்தபாசங்களை அறுப்பதையும் அங்குசம் அடியவர்கள் மாயையில் சிக்கித் தவிக்கும் போது தடுப்பதையும் குறிக்கின்றது.



பாடல் #1082: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறமன்னு சேயிழை
கல்லிய லொப்பது காணுந் திருமேனி
பல்லிய லாடையும் பன்மணி தானே.

விளக்கம்:

பாடல் #1081 இல் உள்ளபடி அனைத்திற்கும் மேலானவளாக மெல்லிய உருவம் கொண்டு நிற்கின்ற வயிரவி மென்மையான கொடி போன்ற இடையைக் கொண்டும், விஷம் போன்ற கடினத் தன்மையின் உருவமாகவும், கிளிமூக்கு போன்ற சிவந்த நிறமுள்ள இதழ்களைக் கொண்டும், அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டும், நீலக்கல்லைப் போன்ற நீல நிறம் கொண்ட திருமேனியையும், பலவிதமான ஆடைகளை அணிந்து கொண்டும், பலவிதமான நவரத்தினங்களை சூடிக்கொண்டும் இருக்கின்றாள்.

கருத்து: வயிரவியின் திருமேனியை இப்பாடலில் உருவகிக்கலாம். மெல்லியல் என்பது மென்மையான தன்மையைக் குறிக்கும். வஞ்சி என்பது சாதகர்களை சோதித்து அவர்களை மேன்மைப் படுத்தும் தன்மையைக் குறிக்கும். விடமி கலைஞானி என்பது உயிர்களின் வினைகளுக்கேற்ப வஞ்சித்தலும் தண்டித்தலும் செய்யும் தன்மையைக் குறிக்கும். கிஞ்சுக நிறம் என்பது சாதகர்கள் மேல் அன்பைப் பொழியும் தன்மையைக் குறிக்கும். சேயிழை, பல்லியல் ஆடை, பன்மணி ஆகிய அனைத்தும் தான் செய்யும் செயல்களுக்கு ஏற்ற ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டு இருப்பதைக் குறிக்கும். நீல நிறத்தைக் கொண்ட திருமேனி என்பது மழை போல வரங்களை அள்ளித் தருகின்ற தன்மையைக் குறிக்கும்.



பாடல் #1083: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தாள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே.

விளக்கம்:

பாடல் #1082 இல் உள்ளபடி பலவிதமான நவரத்தினங்களை சூடிக்கொண்டு இருக்கின்ற வயிரவியின் திருமுடியானது கோடி சந்திரனைப் போல பிரகாசிக்கின்றது. அவளின் காதுகளில் மணியோசையை எழுப்பும் அழகிய குண்டலங்களை அணிந்திருக்கின்றாள். அவளின் கண்கள் அழகிய மானின் கண்களைப் போல இருக்கின்றது. சிறந்த மணிகளைப் போல பிரகாசிக்கும் சூரியனையும் சந்திரனையும் அவளின் இரு கண்களாக வைத்திருக்கின்றாள். அவளின் திருமுகம் அக்னியில் உருக்கும் தங்கம் போல் ஜொலித்துக் கொண்டு பேரானந்தத்தில் இருக்கின்றாள்.

கருத்து: கோடி சந்திரனைப் போல பிரகாசிக்கும் திருமுடி என்பது அனைத்து உயிர்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுப்பதைக் குறிக்கின்றது. மணியோசை எழுப்பும் குண்டலங்கள் என்பது உயிர்களுக்குள் இருக்கும் ஓங்கார நாதத்தை எழுப்புவதைக் குறிக்கின்றது. மானைப் போன்ற கண்கள் என்பது எப்போது தன்னை வந்து சரணடைவார்கள் என்று சாதகர்களைத் தேடுவதைக் குறிக்கின்றது. சூரிய சந்திர நயனத்தாள் என்பது தன்னை வந்து சரணடைய முயற்சி செய்யும் சாதகர்களுக்கு வழிகாட்டும் சோதியாக இருப்பதைக் குறிக்கின்றது. பொன்மணி வன்னி என்பது ஒளிவிடும் நெருப்புச் சுடர்போல எங்கும் நிறைந்து தன்னை நினைப்பவர்களின் மனதை மகிழ்ச்சியில் நிரப்புவதைக் குறிக்கின்றது.



பாடல் #1084: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம் [பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

பூரித்த பூவித ழெட்டினுக் குள்ளேயோர்
ஆரியத் தாளுண்டங் கோரெண்மர் கன்னியர்
பாரித்த பெண்க ளறுபத்து நால்வருஞ்
சாரித்துச் சத்தியைத் தாங்கள்கண் டாரே.

விளக்கம்:

பாடல் #1083 இல் உள்ளபடி பேரானந்தத்தில் பூரித்து இருக்கின்ற வயிரவியின் பூப்போன்ற இதழ்களிலிருந்து [வாயிலிருந்து] எட்டுவிதமான கன்னியர்கள் தோன்றி எட்டு திசைகளுக்கும் ஒவ்வொருவராக இருக்கின்றார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் எட்டுவிதமான கலைகள் தோன்றி அந்தந்த கலைகளுக்கான தேவியர்களாக மொத்தம் 64 கலைகளுக்கு 64 தேவியர்களாக இருக்கின்றார்கள். வயிரவி மந்திரத்தை சாதகம் செய்கின்ற சாதகர்கள் வயிரவியின் அம்சமான 64 தேவியர்களின் தரிசனத்தை கண்டார்கள்.



பாடல் #1085: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

கண்ட சிலம்பு வளைசங்கு சக்கரம்
எண்டிசை யோகி இறைவி பராசக்தி
அண்டமோ டெண்டிசை தாங்கு மருட்செல்வி
புண்டரி கத்தினுள்ளும் பூசனை யாளே.

விளக்கம்:

பாடல் #1084 இல் உள்ளபடி சாதகர்கள் தரிசித்த வயிரவி தனது நான்கு கைகளிலும் சிலம்பு வளையல் சங்கு சக்கரம் ஆகியவற்றை ஏந்திக்கொண்டு இருக்கின்றாள். அவள் இருக்கும் எட்டுத் திசைகளிலும் யோகம் செய்த யோகியர்களுக்கு இறைவியான பராசக்தியின் உருவமாக அண்டசராசரங்களையும் அதிலிருக்கும் எட்டுத் திசைகளையும் தாங்கிக் கொண்டு இருக்கும் அருள் வடிவாக அவர்களின் நெஞ்சத்தாமரைக்குள் வீற்றிருந்து அவர்களின் பூஜையை ஏற்றுக்கொள்பவளாக இருக்கின்றாள்.

கருத்து: வயிரவி மந்திரத்தை சாதகம் செய்து 64 கலைகளுக்கான தேவியர்களை சாதகர்கள் தரிசித்தனர். அதன் பிறகு எட்டு திசைகளிலும் இருக்கும் 64 தேவியர்களுக்கும் இறைவியான பராசக்தியை யோகம் செய்தால் அவள் அருள் வடிவாக யோகியர்களின் உள்ளத்திற்குள் வந்து வீற்றிருப்பாள். இவளே யோகியர்கள் செய்கின்ற பூஜையை ஏற்றுக்கொள்பவளாக இருக்கின்றாள். யோகியர்கள் எப்படி பூஜை செய்ய வேண்டும் என்பதை அடுத்த பாடலில் அருளுகின்றார்.



பாடல் #1086: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

பூசனை கெந்தம் புனைமலர் மாகோடி
யோசனை பஞ்சத் தொலிவந் துரைசெய்யும்
வாச மிலாத மணிமந் திரயோகந்
தேசந் திகழுந் திரிபுரை காணே.

விளக்கம்:

பாடல் #1085 இல் உள்ளபடி யோகியர்களின் உள்ளத்திற்குள் வந்து வீற்றிருக்கும் பராசக்தியை மானசீகமாக பூஜிக்கும் முறையை இந்தப் பாடலில் அறியலாம். சந்தனம் குங்குமம் பன்னீர் முதலிய நறுமணப் பொருள்களால் அபிஷேகம் செய்தும், வாசனை மிக்க மலர்களை மாலையாக செய்து அணிவித்தும், தங்களின் மூச்சுக்காற்றையே நாதஸ்வரமாகவும் இதயத் துடிப்பை மிருதங்க வாத்தியமாகவும் பல நாடிகளின் துடிப்புகள் உபவாத்தியங்களாகவும் கொண்டு இசைத்தும், மணியடித்தால் எதிரொலிக்கும் ஒலி போல வாயால் உச்சரிக்காமல் மனதிற்குள்ளேயே உள்ளுக்குள் எதிரொலிக்கும்படி மந்திரங்களை செபித்தும் யோகம் செய்து உலகங்கள் அனைத்திலும் நிறைந்து இருக்கும் திரிபுரையை தரிசிக்கலாம்.

கருத்து: மானசீக பூஜையின் மகத்துவத்தை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1087: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனுங்
காணுந் தலைவிநற் காரணி காணே.

விளக்கம்:

பாடல் #1086 இல் உள்ளபடி யோகியர்கள் தரிசித்த திரிபுரை சக்தியானவள் உலகத்தில் காணப்படுகின்ற அனைத்து விதமான தெய்வங்களின் உருவமாகவே இருக்கின்றாள். ஒரே விதமான தங்கத்திலிருந்து பலவிதமான நகைகள் செய்யப்படுவது போல ஒரே சக்தியானவள் அனைத்து தெய்வங்களாக இருக்கின்றாள். சாதகர்கள் போற்றுகின்ற மும்மூர்த்திகளான சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரும் செய்கின்ற அழித்தல், படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களுக்கு நன்மை செய்யும் காரணியாக திரிபுரை சக்தியே இருப்பதைக் கண்டுகொள்ளுங்கள்.

கருத்து: உலகத்து உயிர்கள் வணங்குகின்ற பலவிதமான தெய்வங்கள் அனைத்துமே ஒரே சக்தியான திரிபுரையின் அம்சங்களாகவே இருக்கின்றன என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1088: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம் [பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

காரணி மந்திர மோதுங் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
நாரண நந்தி நடுவங் குரைசெய்த
ஆரண வேதநா லந்தமும் ஆமே.

விளக்கம்:

பாடல் #1087 இல் உள்ளபடி முத்தொழில்களுக்கு நன்மை செய்யும் காரணியாக இருக்கும் திரிபுரை சக்தியானவள் தாமரை மலரின் மேல் அமர்ந்து கொண்டு வேதங்களை ஓதி உயிர்களைப் படைக்கின்ற பிரம்மாவின் படைத்தல் தொழில், உயிர்கள் அனைத்திற்கும் மூச்சுக்காற்றாக இயங்கிக் கொண்டு அவற்றை காப்பாற்றுகின்ற விஷ்ணுவின் காத்தல் தொழில், உலகத்தில் உயிர்கள் செய்யும் அனைத்து செயல்களுக்கும் நடுநிலையான சாட்சியாக நின்று அவரவர்களின் செயல்களுக்கேற்ப கர்மங்களை அழித்தருளுகின்ற சிவனின் அழித்தல் தொழில் ஆகிய மூன்று தொழில்களாகவும் அந்த தொழில்களால் வகுக்கப்படுகின்ற வேதத்தின் எல்லையாகவும் இருக்கின்றாள்.

குறிப்பு: வேதம் என்பது உலகத்திலுள்ள அனைத்து செயல்களுக்கும் காரணமாகவும் காரியமாகவும் இருக்கின்றது. அவற்றின் எல்லையாக [முடிவில் சென்று சேருகின்ற இடம்] திரிபுரை சக்தி இருப்பதை இந்த பாடலில் அறியலாம்.




பாடல் #1089: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

அந்த நடுவிர லாதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி யுரைசெயுஞ்
செந்தமி ழாதி தெளிந்து வழிபடு
நந்தி யிதனை நவமுரைத் தானே.

விளக்கம்:

சுண்டு விரலில் உள்ள மூன்று கோடுகளில் ஆரம்பித்து நடு விரலில் உள்ள மூன்று கோடுகளில் முடிக்கும்படி மொத்தம் ஆறு எழுத்துக்கள் கொண்ட தூய தமிழ் மந்திரத்தை குருவின் அருளால் பெற்று அதை முதலில் நேர் மறையாகவும் பின்பு எதிர்மறையாக மாற்றியும் ஓதி வழிபடுங்கள் என்று குருவாக இருக்கும் இறைவன் ஓன்பது சக்திகளை வழிபடும் முறையாக அருளினான்.



பாடல் #1090: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

உரைத்த நவசத்தி யொன்று முடிய
நிரைத்த விராசி நெறிமுறை எண்ணிப்
பிரைச்சத மெட்டுமுன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமஞ்செய் தானே.

விளக்கம்:

பாடல் #1089 இல் உள்ளபடி இறைவன் அருளிய ஒன்பது சக்திகளை வழிபடும் முறையை இப்பாடலில் அறிந்து கொள்ளலாம். வயிரவியின் ஒன்பது சக்திகளில் முதன்மையாக இருக்கும் மனோன்மணியைச் சுற்றி வயிரவி செய்யும் 12 கலைகளை (பாடல் #1075 இல் உள்ளபடி) எண்ணத்தில் வைத்து தியானித்து வயிரவி இருக்கும் திருக்கோலத்தை தமக்குள் தரிசிக்கும் முன்பே அதை எவ்வாறு செய்ய வேண்டும் அதற்கான வழி முறைகள் என்னென்ன என்பதை குருவாக இருந்து இறைவனே கொடுத்து அருளினார்.

கருத்து: வயிரவி செய்யும் பன்னிரண்டு செயல்களை எண்ணி தியானித்தால் வயிரவியின் திருக்கோலத்தை தரிசிக்கும் வழியை இறைவனே குருவாக வந்து அருளுவார்.



பாடல் #1091: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

தாமக் குழலி தயைக்கண்ணி யுண்ணின்ற
வேமத் திருளற வீசு மிளங்கொடி
யோமப் பெருஞ்சுட ருள்ளெழு நுண்புகை
மேவித்து அமுதொடு மீண்டது காணே.

விளக்கம்:

பாடல் #1090 இல் உள்ளபடி குருவாகிய இறைவன் அருளிய வழிமுறையில் சாதகம் செய்தால் நறுமணம் வீசுகின்ற மலர்களை சூடியிருக்கும் கூந்தலுடன் கருணை பொழியும் கண்களை உடைய வயிரவியானவள் சாதகர்களின் உள்ளுக்குள்ளே வீற்றிருந்து அவர்களின் ஆணவம் மலத்தை கொஞ்சம் கொஞ்சமாக நீக்கி அருளுவாள். வெளியில் செய்யும் யாகத்தீயில் வரும் நுண்மையான புகையைப் போலவே உள்ளுக்குள் இருக்கும் மூலாதார அக்னியிலிருந்து குண்டலினி சக்தியை ஒவ்வொரு சக்கரங்களாக மேலே ஏற்றிச் சென்று தலை உச்சியிலுள்ள சகஸ்ரதளத்தில் சேர்த்து அங்கே அமிழ்தத்தை சுரக்க வைத்து அதைப் பருகிய ஆன்மா ஆணவத்திலிருந்து முழுவதும் மீண்டு தூய்மையானதாக திரும்பி வருவதைக் காணுங்கள்.



பாடல் #1092: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

காணு மிருதய மந்திர முங்கண்டு
பேணு நமவென்று பேசும் தலைமேலே
வேணு நடுவு மிகநின்ற வாகுதி
பூணு நடுவென்ற வந்தஞ் சிகையே.

விளக்கம்:

பாடல் #1092 இல் உள்ளபடி தூய்மையான ஆன்மாவை சாதகர் கண்டு உணர்ந்த பிறகு இருதயத்தில் கேட்கும் இருதய மந்திரத்துடன் 'நம' சேர்த்து வயிரவியைப் போற்றி வணங்கினால் மூலாதாரத்திலிருந்து கிளம்பிய அக்னி தலைக்கு மேலே சுழுமுனை நாடியின் உச்சி வரை மிகவும் நீண்டு மாபெரும் அக்னியாக இருக்கும். இதன் பிறகு தலை உச்சிக்கும் அதிலிருந்து சிறிது தூரத்திலிருக்கும் துவாதசாந்த வெளிக்கும் நடுவில் கேட்கும் சிதாகாய மந்திரத்தை அறிந்து கொள்ளுங்கள்.



பாடல் #1093: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம் [பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

சிகைநின்ற வந்தக் கவசங்கொண் டாதிப்
பகைநின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்
தொகைநின்ற நேத்திர முத்திரை சூலம்
வகைநின்ற யோனி வருத்தலு மாமே.

விளக்கம்:

பாடல் #1092 இல் உள்ளபடி தலை உச்சியில் கேட்ட சிதாகாய மந்திரத்தின் மூலம் உயிர்கள் ஆதியிலிருந்தே தங்களின் ஆன்மாவோடு தொடர்ந்து வந்து இறைவனை அடைய விடாமல் அவர்களின் உடலைச் சுற்றி கவசம் போல தடுத்துக் கொண்டு இருக்கும் உயிர் பயத்தையும் உலகப் பற்றையும் மாற்றி அமைக்க அந்த மந்திரத்துடன் நேத்திர முத்திரையை சேர்த்து தியானித்து வந்தால் அந்தப் பயத்தையும் பற்றையும் சூலம் அழித்து இனி பிறவி இல்லாத நிலைக்கு கொண்டு செல்லும்.

கருத்து: இறைவனை அடைய விடாமல் உயிர்களைச் சுற்றி கவசமாக இருக்கும் உயிர் பயம் உலகப் பற்று ஆகிய எதிர்மறை எண்ணங்களை வயிரவியின் சிதாகாய மந்திரத்துடன் நேத்திர முத்திரையை சேர்த்து தியானிப்பதின் மூலம் இறைவனை அடையும் நேர்மறை எண்ணங்களாக மாற்றி அமைத்து இனி பிறவி இல்லாத நிலையை அடையலாம்.



பாடல் #1094: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

வருத்த மிரண்டுஞ் சிறுவிரன் மாறிப்
பொருந்தி யணிவிரல் சுட்டிப் பிடித்து
நெரித்தொன்ற வைத்து நெடிது நடுவே
பெருத்த விரலிரண் டுள்புகப் பேசே.

விளக்கம்:

பாடல் #1093 இல் உள்ள நேத்திர முத்திரையை எப்படி செய்வது என்பதை இப்பாடலில் அறிந்து கொள்ளலாம். பாடல் #1093 இல் உள்ளபடி உயிர் பயம் மற்றும் உலகப்பற்று என்ற இரண்டு விதமான பிறவித் துன்பங்களையும் போக்கக்கூடிய நேத்திர முத்திரையை செய்ய முதலில் சுண்டு விரலையும் மோதிர விரலையும் சேர்த்துப் பிடித்து அதன் பிறகு சுட்டு விரலையும் நடுவிரலையும் நீட்டிப் பிடித்து இரண்டு விரல் சேர்க்கைக்கும் நடுவில் கட்டை விரலை நுழைத்து மற்ற நான்கு விரல்களையும் மடக்கிப் பிடித்து சிதாகாய மந்திரத்தை செபியுங்கள்.



பாடல் #1095: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம் [பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

பேசிய மந்திர மிகாரம் பிரித்துரை
கூச மிலாத சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிராண னுபதேச மாகைக்குக்
கூசிய விந்து வுடன்கொண்டு கூவே.

விளக்கம்:

பாடல் #1092 இல் உள்ள சிதாகாய மந்திரத்தை எப்படி செபிப்பது என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். பாடல் #1094 இல் உள்ளபடி செபித்த சிதாகாய மந்திரத்தில் 'இ' என்ற எழுத்தை நீக்கிவிட்டு 'ச' எழுத்தை முன்னே வைத்து 'சம்' எனும் மந்திரத்தை இறைவனைத் தவிர வேறு எந்த எண்ணங்களும் இல்லாமல் உச்சரித்து மூச்சுக்காற்று உபதேசித்த [பாடல் #1092 இல் உள்ளபடி] வயிரவி மந்திரத்தை பிரகாசமான ஒளிக்கீற்றுக்களை உடைய குண்டலினி [பாடல் #860 இல் காண்க] அக்னியோடு சேர்த்து உரக்க [சத்தமாக] செபியுங்கள்.



பாடல் #1096: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம் [பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய சவ்வுடன் பண்ணு மகாரத்தை
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவுள் திகழ்ந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1095 இல் உள்ளபடி உரக்க [சத்தமாக] செபித்த சாதகர் தமது மூச்சுக்காற்றுடன் சேர்ந்து 'சம்' எனும் மந்திரத்தை உயிருடன் மாயை சேர்ந்து இருக்கும் பாவனையில் தாமாகவே விரிந்து அமைந்த சங்கு முத்திரையுடன் சமர்ப்பணம் செய்தால் வயிரவியானவள் பிரகாசமாக சாதகரின் உடலுக்குள் வந்து வீற்றிருப்பாள்.

குறிப்பு: மூச்சுக்காற்றுடன் 'சம்' மந்திரத்தை சத்தமாக சாதகர் செபிக்கும் போது அதன் உச்ச நிலையில் அவரது உடலோடு இருக்கும் மாயையால் தானாகவே அவரது விரல்கள் விரிந்த சங்கு முத்திரையை பிடிக்கும். இது மந்திரத்தை சங்கு முத்திரையுடன் இறைவிக்கு சமர்ப்பணம் செய்தால் இறைவியே சாதகருக்குள் வந்து வீற்றிருப்பாள்.



பாடல் #1097: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்று மிரண்டு மொருங்கிய வுள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே.

விளக்கம்:

பாடல் #1096 இல் உள்ளபடி பிரகாசமாக சாதகரின் உடலுக்குள் வந்து வீற்றிருக்கும் வயிரவியானவள் நீல நிற திருமேனியுடன் அடியவர்களின் உள்ளத்தில் இருக்கும் இருளுக்குள் இருளாகவே வீற்றிருக்கின்றாள். எவரொருவரின் மனமும் வாக்கும் உடலும் ஒன்றாக இருக்கிறதோ அவரின் உள்ளத்திற்குள் இறைவனுடன் இறைவியும் சேர்ந்து புகுந்து அங்கேயே வீற்றிருந்து அருள் புரிகின்றாள். அவளுடைய நன்மை தரும் அருளை அடைய விரும்பும் உயர்ந்தோர் அவளை தேடி அடைந்து வயிரவியின் மந்திர செபத்தை சமர்ப்பணம் செய்வார்கள்.

கருத்து: மனம் வாக்கு உடல் ஒன்றாக இருப்பது என்பது மனதை ஒருநிலைப் படுத்தி சிதாகாய மந்திரத்தை செபித்து நேத்திர முத்திரையை செய்யும் போது பாடல் #1096 இல் உள்ளபடி தானாகவே விரிந்து அமைந்த சங்கு முத்திரையுடன் சமர்ப்பணம் செய்தால் இறைவனும் இறைவியும் அவர்களின் உள்ளத்திற்குள் ஒன்றாக வீற்றிருந்து மழை போல அருளை வழங்குவார்கள்.

குறிப்பு: நீல நிறத்தைக் கொண்ட திருமேனி என்பது மழை போல வரங்களை அள்ளித் தருகின்ற தன்மையைக் குறிக்கும். இருளுக்குள் இருளாகவே வீற்றிருக்கிறாள் என்பது அடியவர்களின் உள்ளத்தில் இருக்கும் இருளிலும் தன்னுடைய நீல நிறத் திருமேனியுடன் வீற்றிருந்து மழை போல அருளைத் தருகிறாள் என்பதைக் குறிக்கும். உயர்ந்தோர் என்பது இறையருளைப் பெற வேண்டும் என்று சாதகம் செய்து தம்மைப் பக்குவப் படுத்திக் கொண்டவர்கள் ஆகும்.



பாடல் #1098: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

சாற்றிய வேதஞ் சராசர மைம்பூதம்
நாற்றிசை முக்கண்ணி நாடு மிருள்வெளி
தோற்று முயிர்ப்பன்மை சோதி பராபரை
ஆற்றலொ டாய்நிற்கு மாதி முதல்வியே.

விளக்கம்:

பாடல் #1097 இல் உள்ளபடி சாதகர்கள் சமர்ப்பணம் செய்த சிதாகாய மந்திரம் வேதமாகவும், அண்ட சராசரங்களாகவும், ஐந்து பூதங்களாகவும், நான்கு திசைகளிலும் தேடிப் பார்க்கும் மூன்று கண்களை உடைய இறைவியாகவும், இருண்ட அண்டமாகவும், ஒளி பொருந்திய பரவெளியாகவும், பலவிதமான உடல்களில் பிறவி எடுத்து வரும் உயிர்களாகவும், சோதி வடிவாகவும், அசையும் சக்தியான பராசக்தியாகவும், அனைத்தையும் உருவாக்குகின்ற ஆற்றலுடன் அனைத்துமாகவும் இருக்கின்ற ஆதி தலைவியாகவும் இருக்கின்றது.

கருத்து: சிதாகாய மந்திரத்தின் தன்மைகளை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1099: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
ஓதி யுணரி லுடலுயி ரீசனாம்
பேதை யுலகிற் பிறவிகள் நாசமாம்
ஓத வுலவாத கோலமொன் றாகுமே.

விளக்கம்:

பாடல் #1098 இல் உள்ளபடி ஆதி சக்தியான வயிரவியே எப்போதும் இளமையுடன் அண்ட சராசரங்களிலுள்ள அனைத்து இடத்திற்கும் அரசியாக வீற்றிருக்கின்றாள். அவளது மந்திரத்தை செபித்து தமக்குள் அவளை உணரும் சாதகர்களின் உடலும் உயிரும் இறைவனாகவே ஆகிவிடும். மாயையால் மயங்கி இருக்கும் இந்த உலகத்தில் மீண்டும் பிறவி எடுக்காமல் இருக்கும் படி எப்போதும் அழியாத உடலையும் அவர்கள் பெற்று விடுவார்கள்.



பாடல் #1100: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

கோலக் குழலி குலாய புருவத்தள்
நீலக் குவளை மலர்கின்ற கண்ணினாள்
ஆலிக்கு மின்னமு தானந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத் தாளே.

விளக்கம்:

பாடல் #1099 இல் உள்ளபடி சாதகரின் உடலும் உயிரும் இறைவனாகவே ஆகிவிடுவதற்கு காரணமான மாபெரும் கருணையுடைய வயிரவியின் வடிவத்தை இப்பாடலில் அறிந்து கொள்ளலாம். அழகிய கூந்தலுடன் வளைந்த புருவங்களைக் கொண்டு நீல நிறத்தில் இருக்கும் குவளை மலர் மலர்ந்தது போன்ற கண்களோடு இனிமையான அமிழ்தத்தோடு சேர்ந்து பேரானந்தமாக இருக்கின்ற பேரழகு பொருந்திய வயிரவியே பாடல் #1099 இல் உள்ளபடி சாதகரின் உடலும் உயிரும் இறைவனாகவே ஆகிவிடுவதற்கு காரணமாக இருந்து அனைத்திற்கும் மேலான சதாசிவத்தை வெளிப்படுத்தி அருளுகின்றாள்.



பாடல் #1101: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

வெளிப்படு வித்து விளைவறி வித்துத்
தெளிப்படு வித்தென சிந்தையி னுள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி
ஒளிப்படு வித்தென்னை யுய்யக்கொண் டாளே.

விளக்கம்:

பாடல் #1100 இல் உள்ளபடி அனைத்திற்கும் மேலான சதாசிவத்தை வெளிப்படுத்தி அருளிய வயிரவி தேவி அதன் பயனாக பேரறிவு ஞானத்தைக் கொடுத்து அந்த ஞானத்தின் பயனாக தெளிவான சிந்தனையைக் கொடுத்து அதன் பயனாக பேரின்பத்தை அடைய வைத்து அதன் பயனாக பெருஞ்சோதி வடிவான இறைவனுடன் கதிர் வடிவான எம் ஆன்மாவை சேர வைத்து அதன் பயனாக எம்மையும் சோதி உருவம் பெற வைத்து எமது ஆன்மா முக்தியடையும்படி செய்து எம்மை முழுவதும் ஆட்கொண்டாள்.



பாடல் #1102: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

கொண்டனள் கோலங் கோடியவ னேகங்கள்
கண்டன ளெண்ணென் கலையின் கணமாலை
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையுந்
தண்டலை மேல்நின்ற தையல்நல் லாளே.

விளக்கம்:

பாடல் #1101 இல் உள்ளபடி எம்மை உய்யும் படி செய்து ஆட்கொண்ட சோதியான வயிரவி உயிர்களும் உய்வதற்காக அவரவர் மனப் பக்குவத்துக்கு ஏற்ப பல கோடித் தோற்றங்களுடன் உயிர்களின் உள்ளுக்குள்ளே இருக்கின்றாள். உயிர்களின் அறியாமையை நீக்குவதற்கு அறுபத்து நான்கு கலைகளையும் அருளி அவற்றின் உச்சமாகவும் இருக்கின்றாள். உயிர்களின் வெளிப்புற இருளை நீக்குவுதற்கு ஆகாயத்தில் சூரியன், சந்திரன், மூலாதார அக்னி ஆகிய மூன்று விதமான ஒளிகளை அருளினாள். சாதகர்களின் தலை உச்சிக்கு மேல் வீற்றிருந்து உலகத்தை அவரோடு பிணைப்பு நன்மை புரிபவளாக இருக்கின்றாள்.

கருத்து: வயிரவியானவள் உயிர்களின் எண்ணங்களுக்கு ஏற்ற உருவத்துடன் அவர்களின் உள்ளுக்குள்ளே இருக்கின்றாள். சாதகர்களின் உள்ளே இருக்கும் அறியாமையாகிய இருளை அறுபத்து நான்கு கலைகளின் மூலம் நீக்கி வெளியே இருக்கும் இருளை சூரிய சந்திர அக்னி ஒளிகளின் மூலம் நீக்கி உலகத்தோடு அவரை பிணைத்து (ஒன்றோடு ஒன்று கலந்து) நன்மை புரிகின்றாள் வயிரவி.



பாடல் #1103: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நூக்கு மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவம்இனி மேவகி லாவே.

விளக்கம்:

பாடல் #1102 இல் உள்ளபடி சாதகரை உலகத்தோடு பிணைந்து நன்மை புரிகின்ற வயிரவியானவள் உலகோர் செய்யும் அனைத்து விதமான தவத்தின் தலைவியாக இருக்கின்றாள். அந்த தவத்தின் பயனாக சாதகரின் மாயையை நீக்கி அருளுகின்ற மனோன்மணியாகவும் இருக்கின்றாள். அவளை அமைதியான மன நிலையில் வேறு எண்ணங்கள் இல்லாமல் புகழ்ந்து போற்றி வணங்குங்கள். அப்படி வணங்கினால் கொடுமையான இந்த உலக வாழ்க்கையை மறுபடியும் அனுபவிக்காத படி உங்களின் பிறவிகளை நீக்கி அருளுவாள்.



பாடல் #1104: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

வேயன தோளி விரையுறு மென்மலர்
ஏய குழலி யிளம்பிறை யேந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
ஏயென துள்ளத் தினிதுஇருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1103 இல் உள்ளபடி சாதகர்களின் பிறவிகளை நீக்கி அருளுகின்ற வயிரவி தேவியானவளின் உருவத்தை இந்தப் பாடலில் தெரிந்து கொள்ளலாம். மூங்கில்களைப் போல் மெல்லிய அழகுடன் வலிமை பொருந்திய தோள்களை உடையவளும் நறுமணம் கமழுகின்ற மென்மையான மலர்களை சூடியிருப்பவளும் பேரழகு பொருந்திய கூந்தலை உடையவளும் இளம் பிறை நிலாவை தனது தலையில் ஆபரணமாக சூடியிருப்பவளும், தூய்மையான சடை முடியைக் கொண்டு இருப்பவளும் திரிசூலத்தை தனது கைகளின் ஏந்தியிருப்பவளும் பேரழகு பொருந்தியவளுமான வயிரவி தேவி எமது உள்ளத்தை அவளுக்கு விருப்பமான இடமாக ஏற்றுக் கொண்டு அதிலே இன்பத்துடன் வீற்றிருந்தாள்.



பாடல் #1105: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

இனியதென் மூலை யிருக்குங் குமரி
தனியொரு நாயகி தானே தலைவி
தனிபடு வித்தநன் சார்பு படுத்து
நனிபடு வித்துள்ளம் நாடிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1104 இல் உள்ளபடி எமது உள்ளத்தையும் தனக்கு விருப்பமான இடமாக ஏற்றுக்கொண்டு அதில் ஓர் இடத்தில் இளமையோடு எமது உள்ளத்தின் நாயகியாக தான் ஒருவளே வீற்றிருக்கும் வயிரவி தேவி பின்பு எமது உள்ளத்தின் தலைவியாகி இருக்கின்றாள். அதன் பிறகு உலகம் உடல் ஆசை பந்தம் பாசம் ஆகியவற்றின் மேலுள்ள பற்றிலிருந்து எமது உள்ளத்தை பிரித்து தனியாக்கி அதை நன்மையே உருவான இறைவனோடு சேர்ந்து இருக்க வைத்து எமது உள்ளம் முழுவதும் நன்மையே மிகுதியாக இருக்கும் படி செய்து இறைவன் வீற்றிருக்கும் எமது உள்ளத்தையே விரும்பி அங்கே வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1106: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

நாடிகண் மூன்று ணடுவெழ ஞாளத்துக்
கூடி யிருந்த குமரி குலக்கன்னி
பாடகச் சீறடிப் பைம்பொற் சிலம்பொலி
ஊடக மேவி யுறங்குகின் றேனே.

விளக்கம்:

பாடல் #1105 இல் உள்ளபடி எமது உள்ளத்தையே விரும்பி வீற்றிருக்கின்ற வயிரவியானவள் எமது உடலுக்குள் இருக்கும் இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று விதமான நாடிகளில் நடுவில் உயர்ந்து இருக்கும் சுழுமுனை நாடியின் வழியே மூலாதாரத்தில் இருந்து தமது கால்களில் தண்டையை அணிந்து கொண்டு இருக்கும் இறைவனோடு சேர்ந்து நன்மைகளின் மொத்த உருவமாக இருக்கும் இறைவியும் தனது திருவடிகளில் தூய்மையான பொன்னாலான சிலம்புகளை அணிந்து கொண்டு ஆடிக்கொண்டே மேலேழுந்து வருகின்றாள். இவர்கள் இருவரின் ஆடலில் இருந்து வரும் ஓசை எமக்குள் முழுவதும் பரவி ஒலிக்க அதிலேயே லயித்து இருக்கின்றேன்.




பாடல் #1107: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

உறங்கு மளவின் மனோன்மணி வந்து
கறங்கு வளைக்கை கழுத்தாரப் புல்லி
உறங்கொளிர் தம்பலம் வாயி லுமிழ்ந்திட்டு
உறங்கல்ஐ யாவென் றுபாயந்தந் தாளே.

விளக்கம்:

பாடல் #1106 இல் உள்ளபடி தன்னை மறந்து ஆழ்நிலையில் லயித்து இருக்கும் போது வயிரவியானவள் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் மனோன்மணி எனும் அம்சமாக எமக்குள் வந்து மென்மையாக சத்தம் செய்யும் வளையல்கள் அணிந்த தமது திருக்கரங்களால் எமது கழுத்தை வளைத்துப் பிடித்துக் கொண்டு ஆழ்நிலையில் யாம் லயித்து இருக்கும் நிலையிலேயே எமது வாயில் தாம்பூலத்தை உமிழ்ந்து கொடுத்து விட்டு அனைத்தையும் மறந்த நிலையில் லயித்துக் கொண்டே இருக்காதே அடியவனே என்று கூறி எப்போதும் விழிப்பு நிலையிலேயே பேரின்பத்தில் லயித்து இருக்கும் வழிமுறையையும் தந்து அருளினாள்.

கருத்து: பாடல் #1106 இல் அனைத்தையும் மறந்த நிலையில் இறைவனும் இறைவியும் ஆடும் ஆட்டத்திலிருந்து வரும் ஓசையிலேயே லயித்து இருக்கும் எமக்கு இறைவனும் இறைவியும் ஒன்றாக சேர்ந்து இருக்கும் அம்சமான மனோன்மணியானவள் எமது வாயில் அமிழ்தத்தை ஊட்டி அனைத்தையும் அறிந்த நிலையிலும் பேரின்பத்தில் லயித்து இருக்கும் வழிமுறையை தந்தருளினாள்.



பாடல் #1108: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

உபாய மளிக்கு மொருத்தியென் னுள்ளத்
தபாய மறக்கெடுத் தன்பு விளைத்துச்
சுவாவை விளைக்குஞ் சுழியகத் துள்ளே
அவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே.

விளக்கம்:

பாடல் #1107 இல் உள்ளபடி விழிப்பு நிலையிலேயே பேரின்பத்தில் லயித்து இருக்கும் வழிமுறையை அருளிய இறைவி எமது உள்ளத்திற்குள் இருக்கும் பயம் பற்று ஆகிய அனைத்தையும் சுத்தமாக நீக்கி அருளி உலகப் பற்றுக்களில் சிக்கிக் கொண்டு எப்போதும் அலைந்து கொண்டே இருக்கும் எமது மனதிற்குள் இருக்கும் ஆசையை அடக்கி வைத்து எதற்கும் பயப்பட வேண்டாம் நான் இருக்கின்றேன் என்று எமக்கு அபயம் அருளினாள்.



பாடல் #1109: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

அஞ்சொல் மொழியா ளருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கிஞ்சொல் லளிக்கு மிறைவியென் றாரே.

விளக்கம்:

பாடல் #1108 இல் உள்ளபடி எதற்கும் பயப்பட வேண்டாம் நான் இருக்கின்றேன் என்று எமக்கு அபயம் அருளிய இறைவியானவள் செய்வதற்கு மிகவும் அரிதான தவங்களைச் செய்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்ற ஆரம்ப நிலையில் உணருகின்ற குழந்தை போன்ற பெண் தெய்வம் ஆவாள். அவள் சிறப்பான சொல்லை சொல்லும் மழலைப் பேச்சை உடையவள். மிகவும் அழகான உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்தவள். அவளைத் தஞ்சம் என்று எண்ணி அவளது மேன்மையான திருவடிகளை போற்றி வணங்குபவர்களுக்கு பேரின்பத்தை வழங்கும் இனிமையான சொல்லை அளித்து அருளுவாள் என்று அவளை அறிந்தவர்கள் சொல்வார்கள்.

கருத்து: செய்வதற்கு மிகவும் அரிதான தவங்களைச் செய்பவர்களுக்கு அவர்களை வழிநடத்துகின்ற இறைவியின் ஆரம்ப நிலையில் மென்மையான ஒலி கேட்கும். இந்த ஒலியானது தவம் செய்த சாதகர்களை அவள் அணியும் அழகிய ஆடை அணிகலன்களாக இருந்து காக்கின்றது. இந்த இறைவின் திருவடிகளை போற்றி வணங்குபவர்களுக்கு உச்ச நிலையில் அவர்களுக்கு பேரின்பத்தை அருளும் அவளின் ஒலி கேட்கும். இதை அறிந்து உணர்ந்தவர்கள் அதை தகுதியானவர்களுக்கு எடுத்துச் சொல்வார்கள்.



பாடல் #1110: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆருயி ராயு மருந்தவப் பெண்பிள்ளை
காரிய கோதையங் காரணி நாரணி
ஊரு முயிரு முலகு மொடுங்கிடுங்
கோரியென் னுள்ளம் குலாவிநின் றாளே.

விளக்கம்:

வயிரவி தேவியானவள் செய்வதற்கு மிகவும் அரியதான தவங்களை ஆராய்ந்து செய்கின்ற யோகியர்களுக்கு மட்டுமே ஆரம்ப காலத்தில் இளமையுடன் வெளிப்படுவாள். அவளே அனைத்தையும் செயல்படுத்தும் காரியமாகவும் அந்த செயல்களுக்கான காரணமாகிய இறைவனோடு சேர்ந்து இருந்து அனைத்து செயல்களுக்கும் சக்தியை கொடுப்பவளாகவும் இருக்கின்றாள். அண்ட சராசரங்களிலுள்ள அனைத்து உலகங்களும் அதில் வாழ்கின்ற அனைத்து உயிர்களும் அழிகின்ற காலத்தில் சென்று சேருகின்ற இடமாக அவளே இருக்கின்றாள். ஊழிக் காலத்தில் கோர உருவம் கொண்டு இருக்கும் அவளே எமது உள்ளத்திற்குள் சாந்த சொரூபியாய் மிகவும் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கின்றாள்.

கருத்து: அரிய தவங்களை செய்த யோகியர்களுக்கு கிடைக்கும் வயிரவி தேவியானவள் உலகத்தில் நிகழும் அனைத்து செயல்களுக்கும் காரண காரியமாக இறைவனுடன் சேர்ந்து இருக்கின்றாள். உலகங்களும் அதிலுள்ள உயிர்களும் ஊழிக்காலத்தின் சென்று சேரும் இடமாகவும் இருக்கின்றாள். இவளே எமது உள்ளத்தில் சாந்த சொரூபமாய் இருக்கின்றாள்.



பாடல் #1111: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

குலாவிய கோலக் குமரியென் னுள்ளம்
நிலாவி யிருந்து நெடுநா ளனைத்தும்
உலாவி யிருந்துணர்ந் துச்சியி னுள்ளே
கலாவி யிருந்த கலைத்தலை யாளே.

விளக்கம்:

பாடல் #1110 இல் உள்ளபடி எமது உள்ளத்திற்குள் மகிழ்ச்சியுடன் இருந்த இறைவியானவள் எமது உள்ளம் முழுவதும் பரவி நீண்ட காலம் இருந்து குமரியாகி அதன் பிறகு எமது உடல் முழுவதும் சென்று எமக்குள் செயல்படும் கலைகள் அனைத்தையும் எமது தலை உச்சியிலுள்ள சகஸ்ரதளத்தில் ஒன்று சேர்த்து அந்த கலைகள் அனைத்திற்கும் தலைவியாக வீற்றிருந்தாள்.

கருத்து: உயிர்களின் உடலுக்குள் இருக்கும் கலைகள் என்பது உடலுக்குள் இருக்கும் அனைத்தின் இயக்கமாக இருக்கின்றது. இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து இறைவனை அடைவதற்கு பயன்படும் வகையில் இயக்குகின்ற தலைவியாக இறைவி இருக்கின்றாள்.



பாடல் #1112: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுள்
முலைத்தலை மங்கை முயங்கி யிருக்குஞ்
சிலைத்தலை யாய தெரிவினை நோக்கி
அலைத்தபூங் கொம்பின ளங்கிருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1111 இல் உள்ளபடி எமது உடலுக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து கலைகளுக்கும் தலைவியாக இருக்கும் வயிரவி தேவியானவள் தனது ஞானக்கண்ணைக் கொண்டு எமது நெற்றிக்குள் ஞானக் கண்ணாக வீற்றிருக்கிறாள். அவள் எமக்குள் இயங்கிக் கொண்டே இருந்து எம்மை சாதகம் செய்ய வைத்து அதன் பயனாக எமது மூலாதாரத்திலிருந்து குண்டலினியை மேலேற்றிச் சென்று சகஸ்ரதளத்தில் சேர்த்து அங்கிருந்து அமிர்தத்தை வழங்கி அருளுகின்றாள். அதன் பயனாக ஒலி ஒளியின் தலைவியான அந்த தேவியே எமது ஞானக் கண்ணைத் திறந்து அதன் மூலம் இருந்த இடத்திலேயே அனைத்தையும் பார்க்க வைத்து அருளுகின்றாள். அதன் பிறகு எமது உடலுக்குள் இருக்கும் குண்டலினி சக்தியில் அசைந்து கொண்டே இருந்து ஒரு பூங்கொடி கொம்பை சுற்றிக்கொண்டே மேலெழுவது போல எமது சுழுமுனை நாடியைச் சுற்றிக்கொண்டே எமக்குள் வீற்றிருக்கின்றாள்.

கருத்து: சாதகம் செய்யும் சாதகர்களுக்கு அவர்களின் உடலுக்குள் இருந்து அனைத்து கலைகளையும் இயக்கி அவர்களது சாதகத்தை தொடர்ந்து செய்ய வைப்பது வயிரவி தேவியே என்பதை இந்தப் பாடலில் தெரிந்து கொள்ளலாம்.



பாடல் #1113: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

இருந்தன ளேந்திழை யென்னுள்ளம் மேவிப்
பொருந்திய நால்விரல் புக்கனள் புல்லித்
திருந்திய தாணுவிற் சேர்ந்துட னொன்றி
அருந்தவ மெய்தின ளாதியி னாளே.

விளக்கம்:

பாடல் #1112 இல் உள்ளபடி எமக்குள் வீற்றிருந்த வயிரவி தேவியானவள் அழகிய ஆபரணங்களை சூடிய மங்கையாக எமது உள்ளம் முழுவதும் பரவி சகஸ்ரதளத்திலும் வீற்றிருந்தாள். அதன் பிறகு எமது தலைக்குள் இருக்கும் சகஸ்ரதளத்தில் வீற்றிந்தவள் அங்கிருந்து நான்கு விரற்கடை அளவு தூரத்தில் தலைக்கு மேலே உள்ள துவாதசாந்த வெளியில் வீற்றிருக்கும் இறைவனோடு சேர்ந்து பூவிதழில் வீற்றிருந்தாள். அதன் பிறகு எமக்குள் மேலும் கீழும் அலைந்து கொண்டிருந்த மூச்சுக்காற்றை சீராக்கி எமது முதுகுத் தண்டில் இருக்கும் சுழுமுனை நாடியோடு ஒன்றாகச் சேர்ந்து கலந்திருந்து எம்மை அருமையான தவங்களை செய்ய வைத்து அருளினாள் ஆதிப் பரம்பொருளாகிய இறைவி.




பாடல் #1114: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆதி யனாதி யகாரண காரணி
சோதி யசோதி சுகம்பர சுந்தரி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதியென் னுள்ளத்து உடனியைந் தாளே.

விளக்கம்:

பாடல் #1113 இல் உள்ளபடி ஆதிப் பரம்பொருளாகிய இறைவி அனைத்திற்கும் ஆரம்பமாகவும், தனக்கு என்று ஒரு ஆரம்பம் இல்லாமலும், அனைத்திற்கும் காரணமாகவும், தனக்கென்று ஒரு காரணம் இல்லாமலும், ஒளியாகவும் இருளாகவும், பேரின்பத்தை வழங்கும் அழகான இறைவியாகவும், துவாதசாந்த வெளியிலே சமாதி நிலையில் இறைவனுடன் சேர்ந்து மங்கையாக வீற்றிருந்து என்றும் நன்மையையே உடையவளாகவும் இருக்கின்றாள் என்பதை யாம் எப்போதும் போற்றிப் புகழ்ந்து கொண்டே இருக்கின்றோம். அவளும் எமது உள்ளத்திற்குள் எம்மோடு சேர்ந்து இருந்து அனைத்தையும் எம்மை செய்வித்தாள்.



பாடல் #1115: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

இயைந்தனள் ஏந்திழை என்னுள்ளம் மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
அயன்தனை ஓரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றும் பிதற்றறுத் தாளே.

விளக்கம்:

பாடல் #1114 இல் உள்ளபடி எம்மோடு சேர்ந்திருந்து அனைத்தையும் செய்வித்த இறைவியானவள் மிகவும் அழகிய ஆபரணங்களை சூடிக்கொண்டிருக்கிறாள். அவள் எமது உள்ளம் முழுவதும் பரவி நின்று மகிழ்ச்சியோடு அங்கேயே வீற்றிருந்து எம்மை 'நமசிவ' எனும் மந்திரத்தை தியானிக்க வைத்து அதன் பயனால் பிரம்மனும் ஆராய்ந்து அறிய முடியாத இறைவனின் மாபெரும் திருவடிகளை உறுதியாக பற்றிக் கொள்ள வைத்து அவனைத் தவிர மற்ற அனைத்து பற்றுக்களையும் வேறு வீணான எண்ணங்களையும் பேச்சுக்களையும் எம்மிடமிருந்து நீக்கி அருளினாள்.



பாடல் #1116: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முக்தி யருளு முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணுங் கம்பலைச் செவ்வாய்
முகத்தருள் நோக்கமு முன்னுள்ள தாமே.

விளக்கம்:

இறைவனை உணர்ந்து அடைவதற்காக வழங்கப்பட்ட பிறவியை அவனைப் பற்றி எண்ணாமல் வீணாக பல பேச்சுகளை பேசிக் கழிக்கின்றனர் மூடத்தனமான உயிர்கள். இவர்கள் தம்மை நாடி சாதகம் செய்யும் அடியவர்களுக்கு முக்தியை அருளும் ஆதியான இறைவியை அறிந்து கொள்வதில்லை. அவளை அடைய முயன்று சாதகம் செய்யும் அடியவர்களுக்கு முன்பு அவள் முட்டையிட்டு அதைப் பார்வையிலேயே பார்த்து பொரிக்க வைக்கும் மீன்களைப் போல அடியவர்களை எப்போதும் கருணையோடு பார்த்துக் கொண்டே இருக்கும் ஞானக் கண்களோடும் அடியவர்களை தம்மிடம் வந்து சேரும்படி மீண்டும் மீண்டும் அழைக்கின்ற சிவந்த வாயோடும் அடியவர்களின் மேல் கருணையோடு பார்வையை வீசும் திருமுகத்தோடும் எதிர்வந்து அருள்புரிவாள்.



பாடல் #1117: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

உள்ளத் திதையத்து நெஞ்சத் தொருமூன்றுள்
பிள்ளைத் தடமுள்ளே பேசப் பிறந்தது
வள்ளற் றிருவின் வயிற்றுனுள் மாமாயைக்
கள்ள வொளியின் கருத்தாகுங் கன்னியே.

விளக்கம்:

உயிர்கள் உலகத்தில் பிறவி எடுக்க தாயின் வயிற்றுக்குள் கருவாக உருவாகும் போதே அதனுடன் இறைவனின் சுத்த மாயையானது ஒளி அம்சமாகவும் இறைவியின் மாயை இருள் அம்சமாகவும் வந்து விடுகின்றது. இறைவியானவள் பிறவி எடுத்து வரும் பிள்ளையின் சித்தம், மனம், புத்தி ஆகிய மூன்றிலும் இறைவனைத் தெரிந்து கொள்ள முடியாதபடி மாயையால் மறைத்து வைத்திருக்கின்றாள். ஆதலால், இறைவனைத் தெரிந்து கொண்டு அவனை அடைய வேண்டும் என்று விரும்பும் சாதகர்கள் முதலில் இறைவியை எண்ணத்தில் வைத்து சாதகம் செய்தால் அவள் கருணையோடு இருளான மாயையை நீக்கி ஒளியான இறைவனை காட்டி அருளுவாள்.

கருத்து: வயிரவியானவள் உயிர்களுக்குள் இருக்கும் இறைவனை மறைத்து வைத்திருக்கும் தன்மையையும், அவளை எண்ணத்தில் வைத்து வழிபடுவதின் மூலம் இறைவனை அவள் வெளிப்படுத்தும் தன்மையையும் இப்பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1118: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

கன்னியுங் கன்னி யழிந்திலன் காதலி
துன்னியங் கைவரைப் பெற்றனள் தூய்மொழி
பன்னிய நன்னூற் பகவனு மங்குள
என்னேயிம் மாயை யிருளது தானே.

விளக்கம்:

பாடல் #1117 இல் உள்ளபடி ஒளியாகிய இறைவனை இறைவியின் இருள் தன்மை மறைத்து வைத்திருக்கின்றது. என்றும் கன்னியாகவே இருக்கும் இறைவியானவள் என்றும் அழியாத இறைவனுடன் கொண்ட அன்பினால் அவனது ஆசைப்படியே தனது எண்ணத்தாலேயே ஐந்து தெய்வங்களான பிரம்மன், திருமால், உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியோரை உருவாக்கி அருளினாள். இறைவன் சொல்லியபடியே எழுதப்பட்ட தூய்மையான வேதங்கள் கூறுகின்ற ஒளி வடிவமான இறைவனும் இருள் தன்மை கொண்ட இறைவியோடு சேர்ந்து உயிர்களுக்குள் வீற்றிருக்கின்றான். ஆனாலும், அவனையே மறைக்கின்ற அளவிற்கு இறைவியின் இருள் தன்மை இருக்கின்றது. இந்த மாயையின் சக்திதான் எவ்வளவு பெரியது?

கருத்து: சுத்த மாயையின் ஒளி அம்சமான இறைவனும் மாயையின் இருள் அம்சமான இறைவியும் உயிர்களுடன் பிறவியிலேயே சேர்ந்து வந்துவிடுகின்றனர். ஆனாலும் இறைவியானவள் தனது இருள் தன்மையான மாயையால் உயிர்கள் தங்களின் கர்மங்களைத் தீர்த்துக் கொள்ளும் வரை இறைவனை மறைத்து அருளுகின்றாள். மேஜை மேல் வைக்கப்பட்ட விளக்கின் அடியிலேயே இருள் இருப்பதைப் போல உயிர்களின் தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் ஒளியாக இருக்கும் இறைவனை மறைக்கின்ற இருளாக இறைவி இருக்கின்றாள்.

குறிப்பு: ஐந்து தெய்வங்களையும் தனது எண்ணத்தாலே உருவாக்கியதால் வேறு எந்த மாற்றமும் அடையாமல் இறைவி என்றும் கன்னியாகவே இருக்கின்றாள்.



பாடல் #1119: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

இருளது சத்தி வெளியதெம் மண்ணல்
பொருளது புண்ணியர் போகத்து ளின்பந்
தெருளுறு சிந்தையைத் தெய்வமென் றெண்ணில்
அருளது செய்யுமெம் மாதிப் பிரானே.

விளக்கம்:

உயிர்களுக்குள் ஒளியை மறைக்கின்ற இருள் தன்மையாக ஆதி சக்தியான இறைவியும் இருளை அகற்றுகின்ற வெளிச்ச தன்மையாக எமது தலைவனாகிய இறைவனும் இருக்கிறார்கள். இந்த உண்மையை அறிந்து உணர்ந்தவர்கள் புண்ணியம் செய்தவர்களாக இந்தப் பிறவியிலேயே பேரின்பத்தை பெறுகின்றார்கள். இந்த உண்மையை அறிந்து தெளிவு பெற்ற ஞானமே இறைவனை அடையும் வழியைக் காட்டும் என்று நம்பி முழுமையாகச் சரணடைந்தால் ஆதியாகிய இறைவன் அவர்களுக்குள் வெளிப்பட்டு அருள் புரிவான்.



பாடல் #1120: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆதி யனாதியு மாய பராசக்தி
பாதி பராபரை மேலுறை பைந்தொடி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதுமென் னுள்ளத்து உடன்முகிழ்த் தாளே.

விளக்கம்:

அனைத்திற்கும் முதலாகவும் தனக்கென்று ஒரு தொடக்கம் இல்லாதவளாகவும் உலக இயக்கத்திற்கு காரணமாகவும் அசையா சக்தியான சதாசிவமூர்த்தியுடன் சரிபாதியான அசையும் சக்தியாகவும் அனைத்திற்கும் மேலானவளாகவும் அனைத்திற்குள்ளும் உறைந்து இருப்பவளுமாகிய வயிரவி தேவி அனைத்தையும் பொன் வளையல் போல வளைத்து இருக்கின்றாள். அழகான மங்கையாகவும் அமைதியாகவும் இறைவனோடு சேர்ந்து உயிர்களின் மனதை இயக்குபவளாகவும் நன்மையின் வடிவமாகவும் இருக்கின்ற அவளை எப்போதும் போற்றி வணங்கும் எமது உள்ளத்திற்குள்ளிருந்து வெளிப்பட்டு அருளினாள்.



பாடல் #1121: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஓதிய வண்ணங் கலையியி னுயர்கலை
ஆதியில் வேதமே யாமென் றறிகிலர்
சாதியும் பேதமுந் தத்துவ மாய்நிற்பள்
ஆதியென் றோதின ளாவின் கிழத்தியே.

விளக்கம்:

இறைவனை அடைவதற்கு உலகத்தோர் கற்றுக்கொள்கின்ற அனைத்து கல்விகளுக்கும் மேலான கல்வியாக ஆதியிலிருந்தே இருக்கின்ற வேதங்களாக இறைவியே இருப்பதை யாரும் அறியாமல் இருக்கின்றனர். சாதி, மதம், இனம், குலம் என்கிற பலவிதமான பிரிவினைகளாக பிரிந்து இருக்கும் அனைத்திற்கும் தத்துவமாகவும் அவளே இருக்கின்றாள் என்பதையும் அவளே அனைத்திற்கும் முதல்வியானவள் என்பதையும் ஆன்மாக்களின் தலைவியாகிய இறைவியே எமக்கு ஓதி அருளினாள்.



பாடல் #1122: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆவின் கிழத்திநல் லாவடு தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடுந்
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி வினைகடிந் தாளே.

விளக்கம்:

ஆன்மாக்களின் தலைவியானவளும் எல்லாவித நன்மைகளையும் அருளுகின்ற திரு ஆவடு திருத்தலத்தில் [திருவாவடுதுறை] வீற்றிக்கின்றவளும் உயிர்களின் சொல்லிற்குத் தலைவியானவளும் அவளுடைய நன்மைகளைப் புகழ்ந்து போற்றி பாடி வணங்குகின்றவர்களுக்கு செல்வத்திற்கெல்லாம் மேலான செல்வமாகிய முக்தியை அருளுகின்றவளும் சதாசிவமூர்த்தியின் சரிபாதியாக இருக்கும் துணைவியானவளும் அனைத்திலும் பரவி இருக்கின்ற அனைத்திற்கும் தலைவியானவளும் ஆகிய வயிரவி தேவியானவள் தம்மை முழுவதுமாக சரணடைகின்ற உயிர்களின் வினைகளை எல்லாம் தடுத்து ஆட்கொண்டு அருளினாள்.

குறிப்ப: இத்தலத்தில் தான் திருமூலர் 3000 வருடங்கள் தவமிருந்து திருமந்திரம் பாடல்களை இயற்றினார்.




பாடல் #1123: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

வினைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்
தனையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்பள்
எனையடி மைகொண்ட வேந்திழை யீசன்
கணவனைக் காண வனாதியு மாமே.

விளக்கம்:

பாடல் #1122 இல் உள்ளபடி தன்னை முழுவதுமாக சரணடைகின்ற உயிர்களின் வினைகளை எல்லாம் தடுத்து ஆட்கொண்ட இறைவி அவர்களின் உள்ளத்திற்குள் ஒளியாக பரவி இருக்கின்றாள். அவளை முழுவதுமாக சரணடைந்தவர்கள் அனைவருக்கும் உண்மைப் பொருளாகவும் முக்தியை அருளுபவளாகவும் அவளே நிற்கின்றாள். எம்மையும் தடுத்து ஆட்கொண்டு தமது அடிமையாக ஆக்கிக் கொண்ட அந்த இறைவியோடு இறைவனையும் அவளது சரிபாதி துணைவனாகக் கொண்டு பார்த்தால் அவனைப் போலவே அவளுக்கும் தொடக்கம் என்று ஒன்று இல்லாதவளாக இருக்கின்றாள்.



பாடல் #1124: நான்காம் தந்திரம் – 6. வயிரவி மந்திரம்
[பைரவரின் சக்தியான பைரவியின் மந்திரம்]

ஆதி யனாதி யகாரணி காரணி
வேதம தாய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதி தனிச்சுடர் சொரூபமாய் நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே.

விளக்கம்:

ஆதிப் பரம்பொருளாகிய இறைவி அனைத்திற்கும் ஆரம்பமாகவும், தனக்கு என்று ஒரு ஆரம்பம் இல்லாமலும், அனைத்திற்கும் காரணமாகவும், தனக்கென்று ஒரு காரணம் இல்லாமலும் இருக்கின்றாள். இவளே வேதங்களை ஓதி முறைப்படி யாகம் வளர்க்கின்ற வேதியர்களுக்காக அவர்கள் ஓதுகின்ற வேதங்களின் தன்மையாகவும் பொருளாகவும் வீற்றிருந்து அவர்கள் ஓதுகின்ற முறைகளையும் அவர்களின் எண்ணிய உருவத்தையும் ஆராய்ந்து அவர்கள் வேண்டிய உருவத்திலேயே யாகத்தில் வந்து வீற்றிருந்து அருளுகின்றாள். அவளே அசையா சக்தியான சதாசிவமூர்த்தியின் பன்னிரண்டு அம்சங்களோடு சரிபாதியாக சேர்ந்தே நிற்கின்ற ஆதிசக்தியாக இருக்கின்றாள்.

குறிப்பு: ஆதிப் பரம்பொருளாகிய இறைவி உயிர்கள் இறைவனை அடைய முயற்சிக்கும் அனைத்து வகைகளிலும் அவரவர்கள் வேண்டிய உருவத்திலேயே வந்து இறைவனுடன் சரிபாதியாக வீற்றிருந்து அருளுகின்றாள்.



பாடல் #1125: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

அளந்தே னகலிடத் தந்தமு மீறும்
அளந்தே னகலிடத் தாதிப் பிரானை
அளந்தே னகலிடத் தாணொடு பெண்ணும்
அளந்தே னவனரு ளாய்ந்துணர்ந் தேனே.

விளக்கம்:

இந்த விரிந்து பரந்த உலகத்தின் முடிவாகவும் ஆன்மாக்களின் முடிவாகவும் உலகத்தின் ஆரம்பமாகவும் உலகத்திலுள்ள அனைத்து உயிர்களில் ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கின்ற இறைவனை எங்கெல்லாமோ அலைந்து தேடினோம். பின்பு அவனருளால் எமக்குள்ளேயே ஆராய்ந்து பரிபூரணமாக இருக்கும் அந்த சிவசக்தியை முழுவதுமாக உணர்ந்து கொண்டோம்.



பாடல் #1126: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

உணர்ந்தில ரீசனை யூழிசெய் சக்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே.

விளக்கம்:

பாடல் #1125 இல் உள்ளபடி யாம் உணர்ந்து கொண்ட இறைவனையும் பேரூழிக் காலத்தில் அனைத்தையும் அழிக்கின்ற சக்தியாக இருக்கின்ற இறைவி அவனோடு சேர்ந்து இருப்பதே பரிபூரணமான நிலை என்பதையும் யாரும் உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். இறைவனை அறிந்து கொண்ட அடியார்களுக்கு அருள் புரிகின்ற இறைவியானவள் இறைவனை அடையும் பூர்வ ஜென்ம புண்ணியம் பெற்றவர்களுக்கு உள்ளே குருவாக இருந்து அவரவர்களுக்கு ஏற்ற விதத்தில் அருளிய வழிமுறைகளை மேற்கொண்டு அதன் படியே கடைபிடித்து வருபவர்களின் உள்ளே இறைவன் வந்து வீற்றிருப்பான்.



பாடல் #1127: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

கும்பக் களிறைந்துங் கோலொடு பாகனும்
வம்பிற் றிகழு மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி யினிதுறை தையலும்
அன்பிற் கலவியு ளாயொழிந் தாரே.

விளக்கம்:

பாடல் #1126 இல் உள்ளபடி அடியவர்களின் உள்ளுக்குள் வந்து வீற்றிருக்கின்ற இறைவன் அவர்களின் ஐந்து புலன்களையும் அவர்களின் மனமாகிய கோலின் மூலம் ஆன்மாவாகிய பாகனைக் கொண்டு அடக்கி ஆளுகின்றான். குற்றம் குறையில்லாமல் பிரகாசிக்கும் நவரத்தினங்களால் ஆன கிரீடத்தை அணிந்து கொண்டு பிரகாசிக்கும் ஒளி வண்ணத்தில் திருமேனியை உடைய இறைவனும் அவனோடு பேரின்பத்தில் கலந்து இனிமையாக பின்னிப் பிணைந்து வீற்றிருக்கின்ற இறைவியும் உண்மையான அன்போடு இறைவனை நேசிக்கின்ற அடியவர்களின் உள்ளுக்குள் வந்து ஒன்றாக வீற்றிருப்பார்கள்.

கருத்து: அடியவர்களின் உள்ளுக்குள் வந்து வீற்றிருந்த இறைவன் அவர்களின் ஐந்து புலன்களையும் மனதால் அடக்கி அவர்களின் ஆன்மாவை அன்பினால் பேரின்பத்தில் பின்னிப் பிணைத்து வீற்றிருக்கின்றான்.

குறிப்பு: மனம் அடங்கினால் புலன்கள் தாமாகவே அடங்கிவிடும். புலன்களை அடக்கினால் மனம் அடங்காது. உதாரணம் தூங்கும்போது புலன்கள் அடங்கி இருந்தாலும் மனம் அடங்குவதில்லை.



பாடல் #1128: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

இன்பக் கலவியி லிட்டெழு கின்றதோர்
அன்பிற் புகவல்ல னாமெங்க ளப்பனுந்
துன்பக் குழம்பிற் துயருறு பாசத்துள்
என்பிற் பராசக்தி யென்னம்மை தானே.

விளக்கம்:

பாடல் #1127 இல் உள்ளபடி உன்மையான அன்போடு நேசிக்கின்ற அடியவர்களின் உள்ளுக்குள் வந்து வீற்றிருக்கின்ற இறைவன் அவர்களை பேரின்பத்தில் ஆழ்த்தி இருக்கும்படி செய்து அதிலிருந்து வெளிப்படுகின்ற தூய்மையான அன்பில் வீற்றிருந்து ஆருயிர்களின் தந்தையாக இருக்கின்றார். அடியவர்கள் இந்த உலகத்தில் ஆசையினாலும் பாசத்தினாலும் எடுத்த பிறவியில் அனுபவிக்கின்ற துன்பங்களைத் தாங்குகின்ற அன்பை அருளுகின்றவளாக பரம்பொருளாகிய இறைவியும் அவர்களுக்குள் புகுந்து வீற்றிருந்து ஆருயிர்களின் தாயாக இருக்கின்றாள்.

கருத்து: அடியவர்களின் உள்ளுக்குள் பூரண சக்தியாக இருக்கும் சிவசக்தி அம்மையும் அப்பனுமாக சேர்ந்தே வீற்றிருக்கின்றார்கள். உயிர்கள் துன்பத்தை அனுபவிக்கும் போது அதை தாங்கிக் கொள்கின்ற பக்குவத்தை அன்பாக அம்மை அருளுகின்றாள். துன்பத்தை அனுபவித்துக் கழித்த உயிர்கள் இறைவனை நினைத்து உருகி கிடைக்கும் பேரின்பத்தை அனுபவிக்கும் போது அதிலிருந்து வெளிப்படுகின்ற தூய்மையான அன்பாக அப்பன் வீற்றிருக்கின்றார்.



பாடல் #1129: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

என்னம்மை யென்னப்ப னென்னுஞ் செருக்கற்று
உன்னம்மை யூழித் தலைவனு மங்குளன்
மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்
பின்னம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே.

விளக்கம்:

எமது அம்மையாகவும் அப்பனாகவும் இறைவியும் இறைவனுமே இருக்கின்றார்கள் என்கிற பெருமையான எண்ணங்களை நீக்கிவிட்டு எவர் ஒருவர் இறைவியை நினைத்து தியானிக்கின்றார்களோ அவர்களின் உள்ளுக்குள் தாயாக வந்து வீற்றிருக்கும் இறைவியோடு பேரூழிக்காலத்தின் தலைவனாகிய இறைவனும் வந்து உடன் வீற்றிருக்கின்றான். இறைவியை நினைப்பவர்களின் மனமே இறைவியாகி அவர்களின் உலகம் சார்ந்த மாய சிந்தனைகளை மாற்றி உண்மையை சொல்லி அருளுகின்றாள். பிறகு அந்த அம்மையே இறைவனோடு சேர்ந்து நிற்கும் போது குருவாக இருந்து வழிகாட்டுகின்றாள்.




பாடல் #1130: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

தார்மே லுறைகின்ற தண்மலர் நான்முகன்
பார்மே லிருப்ப தொருநூறு தானுள
பூமே லுறைகின்ற போதகம் வந்தனள்
நாமே லுறைகின்ற நாயகி ஆணையே.

விளக்கம்:

தண்டின் மேல் வளர்ந்து விரிந்து இருக்கும் குளிர்ந்த தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் நான்கு முகங்களைக் கொண்ட பிரம்மன் உலகத்தில் வந்து பிறவி எடுக்க வேண்டி உயிர்களுக்கு அந்தந்த யுகங்களுக்கு ஏற்ப ஆயுளைக் கொடுத்து படைக்கின்றான். வெள்ளைத் தாமரை மலரின் மேல் வீற்றிருக்கின்ற சரஸ்வதி தேவியும் அவனோடு சேர்ந்து வந்து உயிர்களுக்கு ஞானத்தை அருளுகின்றாள். ஞானத்தின் தலைவியாக உயிர்களின் நாக்கின் மேல் அமர்ந்த சரஸ்வதி தேவி அருளிய அனைத்தும் ஆணையாக இருக்கின்றது.

குறிப்பு: பிரம்மன் தன்னுடைய தேவியாகிய சரஸ்வதியுடன் பூரண சக்தியாக சேர்ந்து இருந்து உயிர்களுக்கு ஞானத்தை அருளுவதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1131: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

ஆணைய மாயருந் தாதுள் ளிருந்தவர்
மாணைய மாய மனத்தை யொருக்கிப்பின்
பாணைய மாய பரத்தை யறிந்தபின்
தாணைய மாயதன் னாதனத் தானே.

விளக்கம்:

பாடல் #1130 இல் உள்ளபடி இறைவனை அடைவதற்கு வேண்டிய ஞானத்தை ஆணையாக இறைவி அருளிய படியே இன்ப துன்பங்களை அனுபவிக்காமல் உள்ளுக்குள் இறைவியை தியானித்துக் கொண்டே இருக்கின்ற அடியவர்களின் மாயையால் மயங்கி ஆசையின் வழியே செல்கின்ற மனதை அடக்கி ஒருமுகப் படுத்தி அனைத்திற்கும் மேலான பரம்பொருளாகிய இறைவனை அவர்களுக்குள் அறிந்து உணர்ந்து கொள்ளும்படி இறைவி அருளுகின்றாள். அவ்வாறு பரம்பொருளை அறிந்து கொண்ட அடியவர்களின் உள்ளத்தையே தமக்கு மிகவும் பிடித்த ஆசனமாக எடுத்துக் கொண்டு இறைவனும் வந்து வீற்றிருப்பான்.



பாடல் #1132: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

தானே யெழுந்தஇத் தத்துவ நாயகி
வானே ரெழுந்து மதியை விளக்கினள்
தேனே ரெழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்றுஅறி யீரே.

விளக்கம்:

பாடல் #1131 இல் உள்ளபடி அடியவர்களின் உள்ளத்திற்குள் இறைவனோடு ஒன்றாக வீற்றிருக்கும் அனைத்து தத்துவங்களின் தலைவியான இறைவி சிதகாய மண்டலமாகிய சித்தத்திற்குள் [சிந்தனை] இருந்து குண்டலினியை மேலேற்றும் ஞானத்தை விளக்கி அருளுகின்றாள். அதன் படியே சாதகம் செய்து தங்களின் மூலாதாரத்தில் இருந்து குண்டலினி சக்தியை எழுப்பி அதனோடு சேர்ந்து கிடைக்கும் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டே இருந்தால் அது மெதுவாக அசைந்து ஒவ்வொரு சக்கரமாக ஏற்றிச் சென்று தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்தில் ஜோதியாக வீற்றிருக்கும் இறைவனோடு கலந்த பிறகு அங்கே இறைவன் ஆடுகின்ற அம்பலத்தை தரிசிக்கலாம் என்பதை அறியாமல் பலர் இருக்கின்றனர்.



பாடல் #1133: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

அறிவான மாயையு மைம்புலக் கூட்டத்து
அறிவான மங்கை அருளது சேரிற்
பிரியா வறிவறி வாருள்ளம் பேணும்
நெறிவாய சித்த நினைந்திருந் தாளே.

விளக்கம்:

உயிர்களின் உண்மை அறிவை மாயை மறைத்து இருப்பதால் அவர்களுக்குள் இருக்கும் ஐந்து புலன்களும் உலக அறிவை மட்டுமே கொடுக்கின்றன. இதை மாற்றி அவர்களின் மாயையை நீக்கி உண்மை அறிவைக் கொடுக்கின்ற இறைவியின் அருள் அவர்களுக்கு கிடைத்து விட்டால் அவர்களுக்கு இறைவனும் தாமும் வேறில்லை என்கிற பேரறிவு ஞானம் கிடைத்து விடும். அதன் பிறகு அவர்கள் தமக்குள் இருக்கும் இறைவனை நினைத்து எப்போதும் பேரின்பத்திலேயே இருப்பதினால் இறைவியும் அவர்களின் சித்தத்தில் சேர்ந்து வீற்றிருப்பதை தமது செயலாக வைத்திருப்பாள்.

குறிப்பு: பாடல் #1132 இல் உள்ளபடி தமக்குள் இறைவன் ஆடுகின்ற அம்பலத்தை தரிசிக்க முடியும் என்கிற அறிவு இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு உண்மை ஞானத்தை கொடுக்கும் இறைவியின் அருள் கிடைத்து விட்டால் அவர்கள் தாமே இறைவனாக இருப்பதை உணர்ந்து எப்போதும் பேரின்பத்திலேயே இருப்பார்கள். இவர்கள் பேரின்பத்தில் இறைவனை எப்போதும் நினைத்துக் கொண்டே இருப்பதால் இறைவியும் அவர்களின் சித்தத்துடன் சேர்ந்திருப்பதை தனது தர்மமாக வைத்திருப்பாள்.



பாடல் #1134: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

இரவும் பகலு மிலாத விடத்தே
குரவஞ்செய் கின்ற குழலியை நாடி
அரவம்செய் யாம லருளுடன் தூங்கப்
பருவம்செய் யாததோர் பாலனு மாமே.

விளக்கம்:

காலை மாலை என்று வரையறுக்கப்பட்ட காலங்கள் இல்லாமல் எந்தக் காலத்திலும் நமக்குள்ளேயே வீற்றிருக்கின்ற நறுமணம் கமழ்கின்ற அழகிய கூந்தலை உடைய இறைவியைத் தமக்குள்ளேயே தேடி அடைந்து அவளுடைய திருவருளைத் தவிர வேறு எந்த எண்ணத்தாலும் சிறிதும் அசைந்து விடாத மனநிலையில் ஆழ்நிலை தியானத்தில் இருப்பவர்கள் எப்போதும் மாறாமல் இருக்கும் உடலைப் பெற்று என்றும் இளமையுடனே இருப்பார்கள்.

குறிப்பு: பாடல் #1133 இல் உள்ளபடி சித்தத்தில் வீற்றிருக்கும் இறைவியானவள் எப்படி வீற்றிருக்கின்றாள் அவளை எப்படி அடைந்து அவளை மட்டுமே எண்ணி இருந்து அழியாத உடலை எப்படி பெறலாம் என்பதை இப்பாடலில் அறிந்து கொள்ளலாம்.




பாடல் #1135: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

பாலனு மாகும் பராசத்தி தன்னொடு
மேலணு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம தாமெனு முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே.

விளக்கம்:

பாடல் #1134 இல் உள்ளபடி எப்போதும் இளமை மாறாத உடலைப் பெற்று என்றும் இறைவியோடு சேர்ந்து இருக்கின்ற சாதகர்கள் அதற்கும் மேலான நிலைக்கு செல்வதற்கு தடையாக இருக்கின்ற அம்மை அப்பன் எனும் பிரிவினையான எண்ணங்களை விட்டு விட்டு முக்திக்கு சரிசமமாகச் சொல்லப்படுகின்ற அனைத்துமாகவும் நிற்கின்ற இறைவியே ஆதிப் பரம்பொருளாக இருக்கின்றாள் என்பதை அறிந்து கொள்வார்கள்.

குறிப்பு: இறைவன் இறைவி என்று தனித்தனியாக நினைக்கின்ற எண்ணத்தை விடுகின்ற சாதகர்களுக்கு இறைவன் இறைவி என்று தனித்தனியாக இல்லாமல் ஒரே மூலப் பரம்பொருளாக பராசக்தியே இருப்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1136: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

நின்ற பராசக்தி நீள்பரன் தன்னொடு
நின்றறி ஞானமு மிச்சையு மாய்நிற்கும்
நன்றறி யுங்கிரி யாசக்தி நண்ணவே
மற்றன வற்றுள் மருவிடுந் தானே.

விளக்கம்:

பாடல் #1135 இல் உள்ளபடி சாதகருக்குள் அனைத்துமாக நின்ற ஆதி பரம்பொருளாகிய இறைவியே அசையா சக்தியாகிய இறைவனோடு சேர்ந்து நிற்கின்ற போது ஞானா சக்தியாகவும் இச்சா சக்தியாகவும் நிற்கின்றாள் என்பதையும் அவளை நன்மையே வடிவானவளாக அறிகின்ற போது கிரியா சக்தியாகவும் நிற்கின்றாள் என்பதையும் அறிந்து கொண்டு அவளின் எண்ணங்களிலேயே வீற்றிருக்கும் சாதகர்கள் தமக்குள் இருக்கின்ற அனைத்தும் அவளின் அம்சமாகவே மாறி விடுவதை உணர்ந்து கொள்வார்கள்.

குறிப்பு: அசையா சக்தியாக இருக்கும் இறைவனுடன் இருக்கும் பூரண சக்தியானவள் உலகங்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் தோன்றுகிற போது அது இச்சா சக்தியாகவும், அதை எப்படியெல்லாம் உருவாக்கலாம் என்று எண்ணுகின்ற போது அது ஞானா சக்தியாகவும், அதை எண்ணியபடியே உருவாக்குகின்ற போது கிரியா சக்தியாகவும் இருக்கின்றாள். அசையா சக்தியான இறைவனும் அசையும் சக்தியாகிய இறைவியும் சேர்ந்து இருக்கும் பூரண சக்தியை தமக்குள் உணர்ந்த சாதகர்கள் இந்த மூன்று சித்திகளையும் பெற்று அதை உலகத் தேவைக்கேற்ப செயல் படுத்துவார்கள்.



பாடல் #1137: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

மருவொத்த மங்கையுந் தானு முடனே
உருவொத்து நின்றமை யொன்று முணரார்
கருவொத்து நின்று கலக்கின்ற போது
திருவொத்த சிந்தைவைத் தெந்தைநின் றானே.

விளக்கம்:

பாடல் #1136 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள் இருக்கும் அனைத்து அம்சங்களாகவும் இறைவியே மாறி நிற்பதை உணர்ந்தாலும் தம்முடைய உருவமும் இறைவியாகவே மாறி நிற்பதை உணராமல் இருக்கின்றார்கள். ஆணின் அம்சமும் பெண்ணின் அம்சமும் சேர்ந்து கருவாக உருவாகுவது போலவே இறைவியும் தாமும் ஒன்றாக கலந்து நிற்பதை சாதகர்கள் உணருகின்ற போது இறைவியும் தாமும் ஒன்றே என்று சிந்திக்கும் அவர்களின் சிந்தனைக்குள் இறைவனும் வந்து வீற்றிருப்பான்.



பாடல் #1138: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதியதாம் வண்ணத் தாளே.

விளக்கம்:

பாடல் #1137 இல் உள்ளபடி இறைவியும் தாமும் ஒன்றே என்று சிந்திக்கின்ற சாதகரின் சிந்தைக்குள் வீற்றிருக்கின்ற இறைவியும் இறைவனும் சேர்ந்த பூரண சக்தி அவரின் உடலுக்குள்ளிருந்து வெளிச்சமாகவும் சத்தமாகவும் உலகம் முழுவதும் விரிந்து பரவி அனைத்தையும் இயக்குகின்றது. இறைவனைப் போலவே சாதகரும் சந்திரனை சூடிக்கொண்டு சடை முடி தரித்துக் கொண்டு சாத்வீக குணத்துடன் இறைவனும் இறைவியும் சேர்ந்த பூரண சக்தியின் உருவமாகவே ஆகிவிடுகின்றார்.



பாடல் #1139: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

ஆறி யிருந்த அமுத பயோதரி
மாறி யிருந்த வழியறி வாரில்லை
தேறி யிருந்துநற் றீபத் தொளியுடன்
ஊறி யிருந்தன ளுள்ளுடை யார்க்கே.

விளக்கம்:

அனைத்து உயிர்களுக்குள்ளும் மறைந்து இருக்கின்ற அமிழ்தமான பாலை வழங்குகின்ற இறைவியை தமக்குள்ளேயே ஆராய்ந்து அறிந்து தெளிவு பெற்று அந்த அமிழ்தமான பாலை உண்மை ஞானத்தை தரும் பேரொளியாக மாற்றுகின்ற வழியை அறிந்து கொண்டவர்கள் யாரும் இல்லை. அந்த வழியை குருவின் உபதேசத்தாலோ அல்லது இறைவியின் அருளாலோ அறிந்து கொண்டு அதன்படியே தமக்குள் ஆராய்ந்து இறைவியை அறிந்து கொண்டு தெளிவு அடைந்தவர்களின் உள்ளுக்குள் இருந்து இறைவி அமிழ்தப் பாலை உண்மை ஞானத்தையும் பேரின்பத்தையும் கொடுக்கின்ற பேரொளி தீபமாக ஊறிக் கொண்டே இருப்பாள்.




பாடல் #1140: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

உடையவ னங்கி யுருத்திர சோதி
விடையவ னேறி விளங்கி யிருக்கும்
கடையவர் போயிடுங் கண்டவர் நெஞ்சத்
தடையது வாகிய சாதகர் தாமே.

விளக்கம்:

பாடல் #1139 இல் உள்ளபடி உள்ளத்திற்குள் தெளிவு பெற்ற சாதகர்களுக்கு மீதி இருக்கும் கர்மங்களையும் பிறவிகளையும் எரித்து அழிக்கும் அக்னியாக உருத்திரனின் அம்சம் ஜோதியாக காளையின் மேல் வீற்றிருந்து சாதகருக்கு தரிசனம் கொடுக்கின்றார். இதை தரிசித்ததால் தமது நெஞ்சத்திற்குள் இறைவனை அடையும் படி வீற்றிருக்கப் பெற்றவர்கள் சாதகர்கள் ஆவார்கள்.

குறிப்பு: இறையருளால் இறைவனின் அம்சத்தை தரிசித்து தமது கர்மங்களையும் பிறவிகளையும் நீக்கப் பெற்றவர்களே சாதகர்கள் ஆவார்கள்.



பாடல் #1141: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]


தாமே லுறைவிட மாறித ழானது
பார்மே லிதழ்பதி னெட்டிரு நூறுள
பூமே லுறைகின்ற புண்ணியம் வந்தனள்
பார்மே லுறைகின்ற பைங்கொடி யாளே.

விளக்கம்:

பாடல் #1140 இல் உள்ளபடி இறைவனை தமது நெஞ்சத்திற்குள் அடையும்படி பெற்ற சாதகருக்குள் இறைவன் ஆறு இதழ்கள் கொண்ட சுவாதிஷ்டான சக்கரத்தில் வந்து பின்பு அங்கிருந்து நான்கு இதழ்கள் கொண்ட மூலாதார சக்கரத்தில் உள்ள குண்டலினி சக்தியை சாதகரின் 3600 சுவாசங்களின் மூலம் எழுப்பி விடுகிறார். அங்கிருந்து வெளிப்பட்ட சக்தியானவள் ஆறு சக்கரங்களையும் கடந்து ஏழாவதாக இருக்கும் சகஸ்ரதளத்தில் உள்ள ஆயிரம் தாமரை இதழ்களின் மேல் வீற்றிருக்கும் சக்தியை வெளிப்படுத்துவாள். உலகங்கள் அனைத்திலும் பரவி வீற்றிருக்கின்ற இறைவியே சகஸ்ரதள சக்தியாக அங்கிருந்து பசுமையான கொடி போல வெளிப்படுவாள்.

கருத்து: இறைவியும் தாமும் வேறில்லை என்று எண்ணுகின்ற சாதகரின் நெஞ்சத்தில் இறைவன் வந்து வீற்றிருக்கின்றார். அந்த இறைவன் சாதகரின் மூச்சுக்காற்றில் 3000 எண்ணிக்கையை எடுத்து சுவாதிஷ்டான சக்கரத்தை எழுப்பி விடுகின்றார். அதன் பிறகு சாதகரின் மூச்சுக்காற்றில் 3600 எண்ணிக்கையை எடுத்து மூலாதார சக்கரத்தில் இருக்கின்ற குண்டலினி சக்தியை எழுப்பி விடுகின்றார். அந்த குண்டலினி சக்தியானது அதற்கு மேலுள்ள ஐந்து சக்கரங்களையும் தாண்டி மேலே ஏறிச் சென்று ஏழாவது சக்கரமான சகஸ்ரதளத்தில் உள்ள ஆயிரம் தாமரை இதழ்களின் மேல் வீற்றிருக்கும் சக்தியை எழுப்பி விடுகின்றது. அங்கிருக்கும் சக்தியானவள் பசுமையான கொடி போல சாதகரின் உடலுக்குள்ளிருந்து வெளிப்படுவாள்.

குறிப்பு: மனிதன் ஒரு நாளுக்கு மொத்தம் 21600 முறை சுவாசிக்கின்றான். யோகப் பயிற்சிகள் செய்யும் சாதகர்களுக்கு இந்த சுவாசக் காற்றானது நுரையீரலில் இருந்து உடலுக்குள் இருக்கும் ஆறு சக்கரங்களுக்கும் முறையே 3000 சுவாசங்களாக சென்று சக்தியூட்டுகிறது (6 x 3000 = 18000). மூலாதார சக்கரத்தில் 3600 சுவாசங்களாக சென்று சக்தியூட்டுகின்றது (18,000 + 3600 = 21600). ஆக மொத்தம் 21600 சுவாசங்களும் சக்கரங்களுக்கு சென்று சக்தியூட்டுகிறது.




பாடல் #1142: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

பைங்கொடி யாளும் பரம னிருந்திடந்
திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாக விளங்கி வருதலால்
பெண்கொடி யாக நடந்தது உலகே.

விளக்கம்:

பாடல் #1141 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருக்கும் பசுமையான கொடி போல வெளிப்பட்ட சக்தியானவள் சகஸ்ரதளத்திலிருக்கும் இறைவனோடு சேர்ந்து பூரண சக்தியாக ஒரு பருமனான பிரகாசத்தைத் தருகின்ற ஜோதியாக வானம் வரை கொடி போல் வளர்ந்து உலகங்கள் அனைத்தையும் இயங்க வைக்கின்றாள்.




பாடல் #1143: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

நடந்தது அம்மலர் நாலுட னஞ்சாய்
இருந்தனர் கன்னிக ளெட்டுட னொன்றாய்ப்
படர்ந்தது தன்வழி பங்கயத் துள்ளே
தொடர்ந்தது உள்வழி சோதி யடுத்தே.

விளக்கம்:

பாடல் #1142 இல் உள்ளபடி சாதகருக்குள் இருக்கும் சகஸ்ரதளத்தில் வீற்றிருக்கும் இறைவனோடு சேர்ந்து பூரண சக்தியாக இருக்கும் இறைவி அங்கிருந்து வெளிப்பட்டு உலகங்கள் அனைத்தையும் இயங்க வைப்பதற்கு ஒன்பது விதமான அம்சங்களாக வெளிப்படுகிறாள். இந்த அம்சங்கள் எட்டு விதமான தேவியர்களாகவும் இறைவனும் இறைவியும் சேர்ந்த பூரண சக்தியின் அம்சமான மனோன்மணியும் சேர்ந்து மொத்தம் ஒன்பது விதமான சக்திகளாக அவரவர்களுக்கு ஏற்ற தனித்தன்மையான வழிகளின் மூலம் ஜோதி வடிவாய் கொடி போல சகஸ்ரதளத்திலிருந்து வெளிப்பட்டு வளர்ந்து சென்று உலகங்கள் அனைத்தையும் இயக்குகின்றார்கள். இவர்கள் தத்தமது வழிகளின் மூலம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருப்பதற்கான ஆதார சக்தியாக சகஸ்ரதளத்தில் இருக்கும் ஜோதி இருக்கின்றது.



பாடல் #1144: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

அடுக்குந் தாமரை யாதி யிருப்பிடம்
எடுக்கும் தாமரை யில்லகத் துள்ளது
மடுக்கும் தாமரை மத்தகத் தேசெல
முடுக்கும் தாமரை முச்சது ரத்தே.

விளக்கம்:

பாடல் #1143 இல் உள்ளபடி ஒன்பது விதமான சக்திகளும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருப்பதற்கு ஆதார சக்தியாக இருக்கும் சகஸ்ரதளத்திலுள்ள ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர் இறைவனின் இருப்பிடமாகும். உடலுக்குத் தேவையான சக்தியை கொடுக்கும் அமிழ்தம் சாதகரின் உடலுக்குள்ளிருந்து ஊறிக்கொண்டே இருக்கின்றது. உலகங்கள் அனைத்தையும் இயக்குகின்ற இந்த சக்தியினால் சாதகருக்கு தாமே இயக்குகின்றோம் என்கிற அகங்காரம் வந்துவிடாமல் நெற்றியின் உச்சியில் இருந்து சகஸ்ரதள சக்தி தடுத்துக் காக்கின்றது. சாதகரின் உடலை இயக்கத் தேவைப்படுகின்ற சக்தியை மூலாதாரம் சகஸ்ரதளத்திலிருந்து சிறிதளவு எடுத்து கொள்கிறது.

கருத்து: சாதகரின் தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் இருக்கும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரின் மேல் இறைவன் ஜோதி வடிவமாக இருந்து உலகங்கள் இயங்குவதின் காரணமாக இருக்கின்றார். இதனால் சாதகருக்கு தாமே இயக்குகின்றோம் என்கிற அகங்காரம் வந்துவிடாமல் இருக்க நெற்றியின் உச்சியிலிருந்து சகஸ்ரதளத்தில் இருக்கும் இறைவன் தடுத்து காப்பாற்றுகின்றார். சாதகரின் உடல் இயக்கத்திற்கு தேவையான சக்தியை சகஸ்ரதளத்திலிருந்து ஊறும் அமிழ்தத்தில் சிறிதளவு மூலாதாரத்திற்கு கொடுத்து இயங்க வைக்கின்றார்.



பாடல் #1145: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

முச்சது ரத்தி லெழுந்த முளைச்சுடர்
எச்சது ரத்து மிடம்பெற வோடிடக்
கைச்சது ரத்துக் கடந்துள் ளொளிபெற
எச்சது ரத்து மிருந்தனள் தானே.

விளக்கம்:

பாடல் #1144 இல் உள்ளபடி மூன்று கோணங்களை உடைய சதுர அமைப்பில் இருக்கும் மூலாதார சக்கரத்திலிருந்து விதை போல முளைத்துக் கிளம்பிய குண்டலினி அக்னிச் சுடரானது ஒவ்வொரு சக்கரங்களுக்கும் சென்று அங்கிருந்து தொடர்ந்து மேலே சகஸ்ரதளத்தை நோக்கிச் சென்று தலை உச்சித் துளையைக் கடந்து பரவெளிக்குள் சென்று அங்கிருக்கும் ஜோதி வடிவான இறைவனை அடைந்து அவரிடமுள்ள ஒளியைப் பெற்று விட்டால் அந்த ஒளியானது இறைவியாக சாதகருக்குள் நுழைந்து அவருக்குள் இருக்கும் அனைத்து சக்கரங்களிலும் அமர்ந்து விடுவாள்.



பாடல் #1146: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

இருந்தனள் தன்முக மாறொடு நாலாய்ப்
பரந்தனள் வாயுத் திசைதிசை தோறுங்
குவிந்தன முத்தின் முகவொளி நோக்கி
நடந்தது தேற லதோமுக மம்பே.

விளக்கம்:

பாடல் #1145 இல் உள்ளபடி சாதகருக்குள் இருக்கும் அனைத்து சக்கரங்களிலும் வீற்றிருக்கும் இறைவியானவள் பத்து திசைகளையும் காக்கின்ற தனது பத்து முகங்களையும் சாதகரது உடலிலுள்ள பத்து விதமான வாயுக்களுடன் சேர்ந்து அனைத்து திசைகளுக்கும் பரவிச் செல்கிறாள். அப்படி பரவிச் சென்ற சக்தியானது ஒருமுகமாக குவிந்து முத்திலிருந்து வெளிவரும் பிரகாசம் போல சாதகரின் முகத்திலிருந்து ஒளி வீசி வெளிப்படுகின்றது. இந்த நிலையை அடைந்த சாதகருக்கு அமிழ்தம் போன்ற பேரின்பத்தை தரும் இறைவனது கீழ் நோக்கும் முகம் விரைவாகக் கிடைக்கப் பெற்று பாடல் #523 இல் உள்ளபடி தமது உடலும் இந்த அண்டமும் வேறு வேறு இல்லை என்கிற நிலையை சாதகர் அடைவார்.

குறிப்பு: இறைவனது கீழ் நோக்கும் அதோமுகம் பற்றிய விவரங்களை திருமந்திரம் இரண்டாம் தந்திரத்திலுள்ள 20 ஆவதான “அதோமுக தரிசனம்” தலைப்பில் காணவும்.




பாடல் #1147: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

அம்பன்ன கண்ணி யரிவை மனோன்மணி
கொம்பன்ன நுண்ணிடை கோதை குலாவிய
செம்பொன்செ யாக்கை செறிகமழ் நாடொறும்
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே.

விளக்கம்:

அம்பைப் போன்ற கூர்மையான கண்களையும், என்றும் மாறாத இளமையுடனும், இறைவனோடு சேர்ந்து இருக்கும் மனோன்மணி எனும் பெயருடனும், கொம்பைப் போல மெலிந்து வளைந்த இடையுடனும், வாசனை மிக்க மலர்களைச் சூடிய கூந்தலுடனும் இருக்கின்ற இறைவியானவள் சாதகருக்குள் முழுவதும் பரவி உலாவிக் கொண்டே இருக்கின்ற போது சாதகரின் உடலானது தூய்மையான தங்கத்தால் செய்ததைப் போல மாறி அவருக்குள்ளிருந்து நறுமணம் திரண்டு நாள் தோறும் வீசிக்கொண்டே இருக்கும். இப்படி சாதகம் செய்து வீற்றிருக்கின்ற சாதகரை அன்போடு பார்த்துக் கொண்டே இறைவியும் அவருடன் விரும்பி வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1148: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

நவிலும் பெருந்தெய்வம் நான்மறை சத்தி
துகிலுடை யாடை நிலம்பொதி பாதம்
அகிலமு மண்ட முழுதுஞ்செம் மாந்து
புகலும்முச் சோதி புனையநிற் பாளே.

விளக்கம்:

பாடல் #1147 இல் உள்ளபடி சாதகருக்குள் விரும்பி வீற்றிருக்கும் மிகப் பெரும் தெய்வமாகிய இறைவியே நான்கு வேதங்களும் புகழ்ந்து சொல்லுகின்ற மாபெரும் சக்தியாக இருக்கின்றாள். இறைவன், இறைவி, சாதகரின் ஆன்மா ஆகிய மூன்று ஜோதிகளும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து நிற்கின்ற பூரண சக்தியாக அனைத்து திசைகளும் அவளுடைய அழகிய ஆடையாகவும் பூமியையும் கடந்து நிற்கின்ற திருவடிகளையும் கொண்டு நிற்கும் அவளை வேதங்களோடு அண்ட சராசரங்களும் அதிலிருக்கும் அனைத்து உலகங்களும் சிறப்பாக போற்றி வணங்குகின்றன.



பாடல் #1149: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

புனையவல் லாள்புவ னத்திர யங்கள்
வனையவல் லாளண்ட கோடிக ளுள்ளே
புனையவல் லாள்மண் டலத்தொளி தன்னைப்
புனையவல் லாளையும் போற்றியென் பேனே.

விளக்கம்:

பாடல் #1148 இல் உள்ளபடி மூன்று ஜோதிகளையும் ஒன்றாக சேர்ந்து நிற்கின்ற இறைவியானவள் மேலுலகம், பூலோகம், கீழுலகம் ஆகிய மூன்று உலகங்களுக்குள்ளும் கலந்து நின்று கோடிக்கணக்கான அண்ட சராசரங்களையும் அதற்குள் பல உயிர்களையும் உருவாக்கும் வல்லமை பெற்றவள். அந்த உயிர்களுக்கு அண்டத்தில் இருக்கும் இறைவனது பேரொளியை காட்டி அருளி சாதகர்களை அந்த ஜோதியை அடையும் வழியை அருளுகின்றாள். இவை அனைத்தையும் செய்யும் வல்லமை பெற்ற இறைவியையே யானும் போற்றி வணங்குகின்றேன்.



பாடல் #1150: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

போற்றியென் றாள்புவ னாபதி யம்மையென்
ஆற்றலுள் நிற்கு மருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றந் துரக்கின்ற கொள்பைந் தொடியே.

விளக்கம்:

பாடல் #1149 இல் உள்ளபடி அண்ட சராசரங்களையும் அதிலுள்ள அனைத்து உயிர்களையும் படைக்கும் வல்லமை பெற்றவளும், உலகங்கள் அனைத்திற்கும் அதிபதியாக இருக்கின்றவளும், யான் போற்றி வணங்குகின்றவளும், அரியதான தவங்களை செய்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்ற என்றும் இளமை ஆற்றலுடன் இருப்பவளுமாகிய இறைவியை போற்றி வணங்குகின்ற உயிர்களின் ஆற்றலுக்குள் வந்து வீற்றிருந்து அவர்களின் முகத்தில் இருக்கும் நெற்றிக்குள் அழகிய ஆபரணங்களை சூடிக்கொண்டு வீற்றிருந்து அவர்களின் அகங்காரத்தை அடக்கி விட்டு பசுமையான கொடியாக இருந்து அவர்களின் இறப்பை நீக்கி ஆட்கொள்கிறாள்.

கருத்து: உலகங்கள் அனைத்திற்கும் தலைவியாக இருக்கின்ற எமது இறைவியை போற்றி வணங்குகின்ற சாதகர்களின் நெற்றிக்குள் நீல ஜோதியாக அமர்ந்து அவர்களின் அகங்காரத்தை அடக்கி மரணமில்லா பெருவாழ்வை அளித்து ஆட்கொண்டு அருளுகின்றாள்.



பாடல் #1151: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவார் திரிபுரை யாமங்கை சங்கைச்
செடியார் வினைகெடச் சேர்வரை யேன்றேன்
றடியார் வினைகெடுத் தாதியு மாமே.

விளக்கம்:

பாடல் #1150 இல் உள்ளபடி சாதகர்களின் இறப்பை நீக்கி ஆட்கொள்கின்ற பசுமையான கொடி போன்ற இறைவியைப் பற்றிக் கொண்டவர்களின் உள்ளுக்குள் பேரின்பத்தைக் கொடுக்கின்ற அமிழ்தத்தை ஊறச் செய்து அருளுகின்ற பேரழகியான இறைவி திரிபுரை சக்தி எனும் வடிவத்தில் என்றும் இளமையுடன் இருக்கின்றாள். பலவிதமான பயத்தைக் கொடுக்கின்ற தீமையான கொடிய வினைகளை அழித்து அருள வேண்டும் என்று இறைவியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு சரணடைபவர்களை தாங்கிக் கொண்டு தமது அடியார்களான அவர்களின் தீமையான கொடிய வினைகளை முழுவதுமாக அழித்து அருளுகின்ற ஆதிப் பரம்பொருளாக இறைவி இருக்கின்றாள்.



பாடல் #1152: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போதத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே.

விளக்கம்:

மென்மையான இசையைப் போல ஒலி வடிவத்தில் இருக்கும் பேரழகுடைய இறைவி அகண்ட பரகாயத்தில் மென்மையான கொடி போல ஒளி வடிவத்தில் பரவி இருக்கின்றாள். பேரழகுடைய இறைவி கூட்டுப் பிரார்த்தனையில் பலவகையாகப் போற்றி வணங்கும் பக்தர்களின் பக்குவத்திற்கு ஏற்ப பயன்களை அருளுகின்ற பசுமையான கொடி போன்றவள். தமது அடியவர்களுக்குள் இருக்கும் பேரழகுடைய மாயையாகிய சக்தியை வெளியேற்றி துரத்திவிட்டு அருளாற்றலில் வல்லமை பொருந்திய பேரழகுடைய இறைவி அவர்களின் மனதிற்குள் புகுந்து அருளோடு வீற்றிருப்பாள்.



பாடல் #1153: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

தாவித்த வப்பொருள் தான்அவ னெம்மிறை
பாவித் துலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசக்தி மேலொடு கீழ்தொடர்ந்
தாவிக்கு மப்பொருள் தாமது தானே.

விளக்கம்:


பாடல் #1152 இல் உள்ளபடி சாதகருக்குள் புகுந்து வீற்றிருக்கும் இறைவியானவள் தானே இறைவனாகவும் இருக்கின்றாள். அசையா சக்தியாகிய இறைவன் தன்னுடைய அம்சமாகவே உலகங்கள் அனைத்தையும் உருவாக்க வேண்டும் என்று எண்ணிய போதே அவனுடன் சேர்ந்து அசையும் சக்தியாக இருந்த இறைவியும் மேலிருக்கும் 7 உலகங்களையும் கீழிருக்கும் 7 உலகங்களையும் அவனோடு சேர்ந்து உருவாக்கினாள். அது மட்டுமின்றி இந்த 14 உலகங்களில் இருக்கும் அனைத்து ஆன்மாக்களும் இறைவனின் அம்சமாக இறைவியே இருக்கின்றாள்.

மேல் ஏழு உலகங்கள்

1. சத்ய லோகம் 2. தப லோகம் 3. ஜன லோகம் 4. மகர லோகம் 5. சுவர் லோகம் 6. புவர் லோகம் 7. பூலோகம்

கீழ் ஏழு உலகங்கள்

8. அதல லோகம் 9. விதல லோகம் 10. சுதல லோகம் 11. தலாதல லோகம் 12. மகாதல லோகம் 13. ரசாதல லோகம் 14. பாதாள லோகம்




பாடல் #1154: நான்காம் தந்திரம் – 7. பூரண சக்தி [சக்தி சிவத்தோடு சேர்ந்திருக்கும் பரிபூரணத் தன்மை]

அதுஇது வென்பா ரவளை யறியார்
கதிவர நின்றதோர் காரணங் காணார்
மதுவிரி பூங்குழல் மாமங்கை நங்கை
திதமது வுன்னார்கள் தேர்ந்தறி யாரே.

விளக்கம்:

இறைவி இதுவாக இருக்கிறாள் அதுவாக இருக்கிறாள் என்று சொல்பவர்கள் இறைவியை பற்றி எதுவும் அறியாமல் இருக்கிறார்கள். இறைவியாக இருக்கும் முக்தியை அடைய வேண்டும் என்ற எண்ணத்திலேயே நிற்பதற்கு ஒரு காரணத்தையும் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். பேரின்ப மயக்கத்தை கொடுக்கும் வாசனை மிக்க மலர்களைத் தன் கூந்தலில் சூடியிருக்கும் மாபெரும் தெய்வமாகிய இறைவி இறைவனுடன் சேர்ந்து பூரண சக்தியாக இருக்கும் மாபெரும் நிலையை எண்ணிப் பார்க்காமலும் அதைத் தமக்குள்ளேயே ஆரய்ந்து அறிந்து கொள்ளாமலும் இருக்கின்றார்கள்.



பாடல் #1155: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]


நாலித ழாறில் விரிந்தது தொண்ணூறு
தானித ழானவை நாற்பத்து நாலுள
பாலித ழானவள் பங்கய மூலமாய்த்
தானித ழாகித் தரித்திருந் தாளே.

விளக்கம்:

நான்கு இதழ்கள் கொண்ட மூலாதாரத்தில் வீற்றிருக்கும் குண்டலினி சக்தியானவள் அதற்கு மேலுள்ள ஆறு சக்கரங்களுக்கும் விரிந்து சென்று உடலில் இருக்கும் 96 தத்துவங்களில் 5 சுத்த தத்துவமும் புருடனும் [ஆன்மா] தவிர மீதி உள்ள 90 தத்துவங்களாக இருக்கின்றாள். மூலாதாரத்திற்கும் புருவ மத்தியில் இருக்கும் ஆக்ஞா சக்கரத்திற்கும் இடைப்பட்ட நான்கு சக்கரங்களில் உள்ள மொத்தம் நாற்பத்து நான்கு இதழ்களாகவும் குண்டலினி சக்தியே வீற்றிருந்து அங்கிருந்து ஆக்ஞா சக்கரம் சென்று அதையும் தாண்டி தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்தில் உள்ள ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் இறைவனுடன் சேர்ந்து பூரண சக்தியாகி அங்கிருந்து கீழே இருக்கும் ஆறு சக்கரங்களையும் தாங்கிக் கொண்டு இருக்கிறாள்.

கருத்து: உயிர்களுக்குள் ஆதாரமாக இருக்கும் குண்டலினி சக்தியை இறைவி இறைவனுடன் சேர்ந்து பூரண சக்தியாக தாங்கிக் கொண்டு உடலிலுள்ள 90 தத்துவங்களை இயங்கிக் கொண்டு இருக்கின்றாள்.

குறிப்பு: ஆதாரம் [தாங்கி இருக்கும் பொருள்] = பூரண சக்தி. ஆதேயம் [தாங்கப் படும் பொருள்] = ஆறு ஆதார சக்கரங்கள். பயன் = உடலிலுள்ள 90 தத்துவங்களை இயக்குவது.



பாடல் #1156: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தரித்திருந் தாளவள் தன்னொளி நோக்கி
விரித்திருந் தாளவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாளவள் கூறிய ஐந்து
மறித்திருந் தாளவள் மாதுநல் லாளே.

விளக்கம்:

பாடல் #1155 இல் உள்ளபடி சாதகரின் தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் இறைவனோடு சேர்ந்து பூரண சக்தியாக வீற்றிருக்கும் இறைவியானவள் சாதகர் எப்போதும் தன்னுடைய ஒளி உருவத்தைத் தரிசித்துக் கொண்டே இருக்கும் படி செய்து, வேதங்களின் உண்மையான பொருளாகிய பேரறிவு ஞானத்தை அவருக்கு கொடுத்து, ஐந்து புலன்களின் வழியே வரும் வினைகளின் கொடுமையை சாதகருக்கு எடுத்துச் சொல்லி அது வந்து சேராத படி ஐந்து புலன்களையும் தடுத்து அருளி பேரழகுடன் நன்மையே வடிவாக வீற்றிருக்கிறாள்.



பாடல் #1157: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மாதுநல் லாளு மணாள னிருந்திடப்
பாதிநல் லாளும் பகவனும் ஆனது
சோதிநல் லாளைத் துணைப்பெய வல்லீரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே.

விளக்கம்:

பாடல் #1156 இல் உள்ளபடி சாதகரின் ஐந்து புலன்களையும் தடுத்தருளி பேரழகுடன் நன்மையின் வடிவமாக வீற்றிருக்கின்ற இறைவியானவள் இறைவனுடன் சேர்ந்து அவனில் சரிபாதியாக இருக்கின்ற போது ஜோதி வடிவத்தில் பூரண சக்தியாக வீற்றிருக்கின்றாள். இந்த இறைவியை தமது உயிருக்குத் துணையாக பெற்றுக் கொள்ள முடிந்த சாதகர்களுக்கு வினைகளினால் வரும் துன்பங்களைத் தீர்த்து அவர்களோடு இருக்கும் மாசு மலங்களை அகற்றி தூய்மையாக்கி அருளுகின்றாள் இறைவி.

கருத்து: இறைவி தன்னுடைய பெண் அம்சத்திலேயே இருந்தாலும் சரி பாதி ஆண் அம்சத்திலும் இறைவனோடு சேர்ந்து வீற்றிருக்கிறாள்.



பாடல் #1158: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

வெள்ளடை யானிரு மாமிகு மாமலர்க்
கள்ளடை யாரக் கமழ்குழ லார்மனம்
மள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகம் பிறவிபெண் ணாமே.

விளக்கம்:

பர வெளியில் பரந்து விரிந்திருக்கும் இறைவன் பேரன்பு மிக்க இறைவியின் இதயத் தாமரையிலும் பேரின்பத் தேனைக் கொண்டு மிகவும் நறுமணம் கமழும் மலர்களைச் சூடியிருக்கும் கூந்தலை உடைய இறைவியின் மனதிலும் வீற்றிருக்கின்றான். மாயை எனும் மயக்கத்தில் அடங்காதவனாகிய இறைவன் அடியவர்கள் வேண்டும் தன்மைக்கு ஏற்ப பலவகையாக நின்றாலும் தனது உடலில் சரி பாதி பாகம் இறைவியைக் கொண்டு இருப்பதால் இயல்பிலேயே இறைவியின் பெண் தன்மை உடையவனாகவும் இருக்கின்றான்.

கருத்து: இறைவன் தன்னுடைய ஆண் அம்சத்திலேயே இருந்தாலும் சரி பாதி பெண் அம்சத்திலும் இறைவியோடு சேர்ந்து வீற்றிருக்கிறான்.



பாடல் #1159: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை
பெண்ணிடை யாணும் பிறந்து கிடந்தது
பெண்ணுடை யானென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை யாணிடைப் பேச்சற்ற வாறே.

விளக்கம்:

பெண்ணாகப் பிறக்கும் ஒரு உயிருக்குள் பெண் தன்மை மட்டுமே இருக்கும் என்று நினைப்பது அறிவீனம். பெண் பாலாக பிறக்கும் உயிருக்குள் பாதி ஆண் தன்மையும் சேர்ந்தே பிறக்கின்றது. அதுபோலவே ஆண் பாலாக பிறக்கும் உயிருக்குள் பாதி பெண் தன்மையும் சேர்ந்தே பிறக்கின்றது. பாடல் #1157 இல் உள்ளபடி இறைவி தனது பெண் தன்மையிலேயே இறைவனின் ஆண் தன்மையையும் கொண்டிருக்கிறாள் என்பதையும் பாடல் #1158 இல் உள்ளபடி இறைவனும் தனது ஆண் தன்மையிலேயே இறைவியின் பெண் தன்மையையும் கொண்டிருக்கிறான் என்பதையும் அறிந்து கொண்ட சாதகர்கள் தமது பிறவியிலேயே இவர்களின் இரண்டு தன்மைகளும் தம்மோடு சேர்ந்தே பிறப்பதை முழுவதுமாக அறிந்து கொண்டு அதிலேயே மனம் இலயித்து சாதகம் செய்தால் பேச்சில்லாத மோன நிலையில் இறைவனை நோக்கி செல்லுவார்கள்.



பாடல் #1160: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மனோன்மணி மங்கையாங்
காச்சற்ற சோதி கடவுளுடன் புணர்ந்
தாச்சற்று எனுள்புகுந் தாலிக்குந் தானே.

விளக்கம்:

பாடல் #1159 இல் உள்ளபடி பேச்சில்லாத மோன நிலையில் இறைவனை நோக்கி செல்லுகின்ற சாதகர்கள் நன்மை தரும் பெரும் பொருளாகிய இறைவனை தமக்குள் தரிசித்த பெருமைக்கு உரியவர்கள். மாசு மருவில்லாத சோதி வடிவில் மனோன்மணி எனும் பெண் தன்மையில் என்றும் இளமையுடன் இருக்கும் இறைவி மாசற்ற சோதியான இறைவனுடன் ஒன்றாகச் சேர்ந்து பூரண சக்தியாக குற்றம் குறையில்லாத அந்த சாதகர்களின் உள்ளத்திற்குள் புகுந்து பேரின்பத்தில் அவர்களோடு வீற்றிருப்பாள்.



பாடல் #1161: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆலிக்குங் கன்னி யரிவை மனோன்மணி
பாலித் துலகிற் பரந்துபெண்ணா ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
ஆலித்து ஓருவ னுகந்துநின் றானே.

விளக்கம்:

பாடல் #1160 இல் உள்ளபடி சாதகரின் உள்ளத்திற்குள் புகுந்து பேரின்பத்தில் வீற்றிருக்கும் இறைவி என்றும் இளமையுடன் இறைவனோடு சேர்ந்து இருக்கின்ற மனோன்மணியானவள் தன்னுடைய பெண் தன்மையில் இறைவனின் ஆண் தன்மையையும் சேர்த்து உலகங்கள் அனைத்திற்கும் பரவி நின்று அருள் பாலிக்கின்றாள். இவள் உலக இயக்கத்திற்கு தலைவியாகவும் வேதங்களின் தலைவியாகவும் இறைவனோடு கலந்து நின்று அருள் புரியும் விதத்தை தமக்குள் ஆராய்ந்து உணர்ந்து கொண்ட சாதகர்கள் அவர்களோடு சேர்ந்து தாமும் பேரின்பத்தில் திளைத்து இருப்பார்கள்.



பாடல் #1162: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உகந்துநின் றான்நம்பி ஒண்ணுதற் கண்ணோ
டுகந்துநின் றான்நம் உழைபுக நோக்கி
உகந்துநின் றான்இவ் வுலகங்க ளெல்லாம்
உகந்துநின் றான்அவன் தன்தோள் தொகுத்தே.

விளக்கம்:

பாடல் #1161 இல் உள்ளபடி இறைவியோடு கலந்து பேரின்பத்தில் திளைத்து நிற்கின்ற சாதகன் தனது சாதகத்தில் முழுமையை அடைந்த பிறகு தமது ஆக்ஞா சக்கரத்தில் ஒளி பொருந்திய நெற்றிக் கண்ணாக இருக்கின்ற பேரறிவு ஞானத்தைப் பெறுகின்றான். அந்தப் பேரறிவு ஞானத்தை சகஸ்ரதளத்தில் இருக்கும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலருக்குள் புகுந்து செல்லும்படி செலுத்தி அண்ட சராசரத்தில் இருக்கின்ற அனைத்து உலகங்களையும் தாங்கியிருக்கும் இறைவியின் தோளோடு தன் தோளையும் சேர்த்து தாங்கி நிற்கின்றான்.



பாடல் #1163: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
பொத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்
தொத்த கருத்துஅது சொல்லகில் லேனே.

விளக்கம்:

திண்ணிய முலைகளையும் சங்கு போல வளைந்து செதுக்கியது போன்ற இடுப்பையும் விருப்பத்திற்கு ஏற்ப பாம்பின் தலை போல விரித்து சுருங்கும் உடலையும், தூய்மையாக சொல்கின்ற இதழ்களையும் மயிலின் இறகு போன்ற மென்மையான திருவடிகளையும் பேரழகு பொருந்திய பெண் அம்சத்தையும் கொண்டு இருக்கும் சக்தியாக சாதகரே மாறி இறைவியோடு கலந்து இருக்கும் தன்மையை எம்மால் வார்த்தைகளில் விவரித்து சொல்ல இயலாது.

கருத்து: பாடல் #1162 இல் உள்ளபடி இறைவியோடு சேர்ந்து உலகத்தை தாங்கிக் கொண்டிருக்கும் இறைவியின் காரியங்களைச் செய்யும் சாதகர்கள் இறைவியின் அம்சங்களோடு வீற்றிருந்து செய்கின்ற நிலையை எம்மால் விவரித்து சொல்ல இயலவில்லை என்று அருளுகிறார்.

தத்துவ விளக்கம்: இறைவியின் அம்சங்களில் திண்ணிய முலைகள் என்பது உயிர்களுக்குத் தேவையான அனைத்தையும் அளிக்கும் அமிழ்தப் பால் நிறைந்து இருப்பதைக் குறிக்கும். சங்கு போல வளைந்து செதுக்கியது போன்ற இடுப்பு என்பது அண்ட சராசரங்களையும் அதனதன் தன்மைக்கேற்ப தாங்கி இருப்பதைக் குறிக்கும். பாம்பின் தலை போல சுருங்கி விரியும் உடல் என்பது உலகங்கள் அனைத்தையும் தாங்கும் போது தேவைக்கு ஏற்ப தனது உருவத்தை விரிக்கவும் சுருக்கவும் கூடியவளாக இருப்பதைக் குறிக்கும். மயிலின் இறகு போன்ற மென்மையான திருவடிகள் என்பது அடியவர்களின் மனதை இனிமையாக வருடி அருளுவதைக் குறிக்கும். பேரழகு பொருந்திய பெண் என்பது அனைத்தையும் பெண் தன்மையில் இருந்து இறைவியின் சக்தி செயலாற்றுவதைக் குறிக்கும்.



பாடல் #1164: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சொல்லவொண் ணாத அழற்பொதி மண்டலஞ்
சொல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணாத வினைத்தனி நாயகி
மல்லவொண் ணாத மனோன்மணி தானே.

விளக்கம்:

வார்த்தைகளால் விவரித்து சொல்ல முடியாத அரும்பெரும் ஜோதியாக இருக்கும் இறைவனிடமிருந்து வெளிப்படும் கனிந்த நெருப்புத் தணல் பொதிந்து உள்ள பரவெளி மண்டலத்தில் பாடல் #1163 இல் உள்ளபடி இறைவியின் நிலையை அடைந்த சாதகர்கள் அந்த தணலின் வெப்பத்தை அனுபவித்து சொல்ல முடியாத திகைப்பில் அங்கேயே இருப்பார்கள். அண்ட சராசரங்களில் இருக்கும் அனைத்து உலகங்களும் இயங்குவதற்கு காரணமாகவும் எளிதில் வெற்றி கொள்ள முடியாததாகவும் இருக்கின்ற வினைகளை தனித்திருந்து ஆளுகின்ற பெருந்தலைவியாகிய இறைவியே எளிதில் அடைந்து விட முடியாத மனோன்மணி எனும் சிவசக்தியாக இருக்கிறாள்.



பாடல் #1165: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே.

விளக்கம்:

பாடல் #1164 இல் உள்ளபடி மனோன்மணி எனும் சிவசக்தியே மேலுலகம் கீழுலகம் ஆகிய இரண்டு வகையான உலகங்களையும் [பாடல் #1153 இல் உள்ளபடி மேலுலகம் கீழுலகம் என்று இரண்டு வகையில் மொத்தம் 14 உலகங்கள் இருக்கின்றன], அண்ட சராசரங்களில் விரிந்திருக்கும் ஆகாயமாகவும், உயிர்களுக்கு வெப்பத்தை தருகின்ற நெருப்பாகவும், உலகத்திற்கு ஒளியையும் சக்தியையும் தருகின்ற சூரியனாகவும், இரவில் குளிர்ச்சியான ஒளியைத் தருகின்ற நிலவாகவும், மழையைப் பொழிய வைக்கின்ற மேகங்களாகவும், உலகம் முழுவதும் விரிந்து பரந்திருக்கும் மலைகளாகவும், குளிர்ந்த நீரைக் கொண்டிருக்கும் கடல்களாகவும் இருந்து அனைத்தையும் தனது அருட் பார்வையினாலேயே செயல்படுத்துகின்றாள்.




பாடல் #1166: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கண்ணுடை யாளைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனிதரிற் கூட்டொணாப்
பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறைக் கண்டே.

விளக்கம்:

பாடல் #1165 இல் உள்ளபடி அனைத்தையும் தனது அருட் பார்வையினால் செயல்படுத்துகின்ற இறைவியோடு சேர்ந்து அவளிருக்கும் இடத்திலேயே வீற்றிருக்கும் பேறு பெற்ற சாதகர்கள் மண்ணுலகத்தை தமது இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களோடு ஒன்றாக சேர்ந்து இருக்காமல் தனித்திருந்து உண்மை ஞானத்தை உணர்ந்த பண்பைக் கொண்டவர்களாக இருப்பதால் மண்ணுலகத்தில் நிகழும் எதனாலும் பாதிக்கப்படாமல் விண்ணுலகத்தை தமது இருப்பிடமாகக் கொண்ட தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் ஆகியோர்களை தமது ஞானத்தால் கண்டு கொண்டே இருப்பார்கள்.



பாடல் #1167: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கண்டெண் திசையுங் கலந்து வருங்கன்னி
பண்டெண் திசையும் பராசக்தி யாய்நிற்கும்
விண்டெண் திசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டெண் திசையுந் தொழநின்ற கன்னியே.

விளக்கம்:

பாடல் #1166 இல் உள்ளபடி ஞானத்தால் தரிசனம் செய்து கொண்டே இருக்கின்ற சாதர்களோடு எட்டு திசைகளிலும் கூடவே சேர்ந்து வருகின்ற என்றும் இளமையான இறைவியானவள் ஆதியிலிருந்தே எட்டு திசைகளிலும் இருக்கின்ற அனைத்து உலகங்களையும் இயக்கிக் கொண்டு வீற்றிருக்கின்றாள். இதை செய்து கொண்டு விண்ணகத்தில் இருக்கும் இறைவியின் நிலையை அடைந்த சாதகர்களை எட்டு திசையிலும் இருக்கின்ற உயிர்கள் நறுமணம் வீசும் மலர்கள் தூவி அர்ச்சித்து தொண்டு செய்து எட்டுத் திசையெங்கும் அவர்களை வணங்கி நிற்கும்படி அருளுகின்றாள் என்றும் இளமையான இறைவி.



பாடல் #1168: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கன்னி யொளியென நின்றஇச் சந்திரன்
மன்னி யிருக்கின்ற மாளிகை செந்நிறம்
சென்னி யிருப்பிடஞ் சேர்பதி னாறுடன்
பன்னி யிருப்பப் பராசக்தி யாமே.

விளக்கம்:

பாடல் #1167 இல் உள்ளபடி அனைவரும் வணங்கும் அளவிற்கு என்றும் இளமையுடன் இருக்கும் இறைவியால் அருளப்பட்ட சாதகர் பேரொளியாக இருக்கும் இறைவியிடமிருந்தே எவ்வாறு சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று இரவில் நிலா பிரகாசிக்கிறதோ அது போலவே இறைவியாகிய அருட் பேரொளியிடமிருந்து தாம் ஒளியாகிய அருளைப் பெறுவதையும் அந்த அருள் நிரப்பப்பட்டதால் மாளிகை போல இருக்கும் தமது உடல் முழுவதும் அருள் நிறைந்து இருக்கின்றார். அதன் பிறகு தமது தலை உச்சியில் உள்ள சகஸ்ரதள ஜோதியோடு உடல் முழுவதும் உள்ள பதினாறு கலைகளையும் [பாடல் #713 இல் காண்க] ஒன்று சேர்த்து தமக்குள் இருக்கும் அருளைக் கொண்டு அனைத்து உலகங்களையும் இயக்கிக் கொண்டே இருப்பதால் ஆதிப் பரம்பொருளான பராசக்தியாகவே சாதகர் ஆகிவிடுகின்றார்.



பாடல் #1169: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பராசத்தி யென்றென்று பல்வகை யாலுந்
தராசத்தி யான தலைப்பிர மாணி
இராசத்தி யாமள வாகமத் தாளாகுங்
குராசத்தி கோலம் பலவுணர்ந் தேனே.

விளக்கம்:

பாடல் #1168 இல் உள்ளபடி பராசக்தியாகவே ஆகிவிடுகின்ற சாதகர் அந்த பராசக்தியின் பலவித அம்சங்களில் பல வகையான உலக இயக்கங்களை செய்து கொண்டு இருக்கும் போது அவருக்கு அருளைத் தருகின்ற சக்தியாக இருப்பது அனைத்திற்கும் தலையான பிரம்மம் என்று உணரப்படும் இறைவியாகும். இந்த இறைவியே இரா சக்தி என்று யாமள ஆகமத்தில் அழைக்கப்படுகிறாள். குருவாக வந்து அருளுகின்ற இவளது பலவிதமான திருக்கோலங்களை யாம் எமக்குள்ளே தரிசித்து உணர்ந்து கொண்டோம்.



பாடல் #1170: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உணர்ந்துல கேழையும் யோகினி சத்தி
உணர்ந்துயி ராய்நிற்கும் உன்னத னீசன்
புணர்ந்தொரு காலத்துப் போகம தாகி
இணைந்து பரமென் றிசைந்திது தானே.

விளக்கம்:

பாடல் #1169 இல் உள்ளபடி பலவிதமான திருக்கோலங்களில் எமக்குள்ளே உணர்ந்த பராசக்தியாகிய இறைவியே இறைவனை உணர்வதற்கு உயிர்கள் பிறவி எடுக்கும் ஏழு உலகங்களிலும் இறைவனை அறிவதற்காக செய்யும் யோகங்களுக்கெல்லாம் தலையான சக்தியாக இருக்கின்றாள். எமது உயிருக்கு உயிராக எம்மோடு கலந்து இருக்கும் உன்னதமான இறைவனை யாம் உணர்ந்து அவருடன் கலந்து பல காலம் இருந்து உச்ச நிலையை அடைந்த ஒரு சமயத்தில் பேரின்பத்தை யாம் பெற்று அனுபவித்தோம். அப்போது எம்மோடு கலந்து இருக்கும் இறைவனோடு ஏழு உலகங்களிலும் பரவி இருக்கும் பராசக்தியாகிய இறைவியும் கலந்து பரம்பொருள் ஆகி நின்று இறைவன் இறைவி யாம் என்கிற தனித்தன்மைகள் இல்லாமால் ஒரே பொருளாகி இருக்கின்றோம்.



பாடல் #1171: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

இதுவப் பெருந்தகை யெம்பெரு மானும்
பொதுவக் கலவியும் போகமு மாகி
மதுவக் குழலி மனோன்மணி மங்கை
அதுவக் கலவியுள் ஆயுழி யோகமே.

விளக்கம்:

பாடல் #1170 இல் உள்ளபடி ஒரே பொருளாக இருக்கின்ற எமக்குள் மிகவும் பெருமையை உடைய எமது தலைவனாகிய இறைவனும் யாமும் ஒன்றாகக் கலந்து இருக்கின்ற நிலையிலும் அதனால் கிடைக்கின்ற பேரின்பத்திலும் இருக்கும் போது மாயையாகிய மயக்கத்தை அளித்து தம்மை நாடும் அடியவர்களை கவர்ந்து இழுக்கும் நறுமணம் வீசுகின்ற மலர்களைச் சூடியிருக்கும் அழகிய கூந்தலையுடைய மனோன்மணியாகிய என்றும் இளமையான இறைவியும் எம்மோடு கலந்து ஒரே பொருளாக இருக்கும் விதத்தை எமக்குள் ஆராய்ந்து உணர்ந்து கொள்வது ஆயுழி எனும் மாபெரும் யோகமாகும்.



பாடல் #1172: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

யோகநற் சத்தி யொளிபீடந் தானாகும்
யோகநற் சத்தி யொளிமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி யுதர நடுவாகும்
யோகநற் சத்திதா ளுத்தரந் தேரே.

விளக்கம்:

பாடல் #1171 இல் உள்ளபடி ஆயுழி எனும் மாபெரும் யோகத்தில் இருக்கும் போது அதிலிருந்து அனைத்திற்கும் நன்மை தருவதற்கு வெளிப்படும் சக்தியின் ஒளி உருவத்தை தாங்குகின்ற பீடமாக சாதகரின் உடலே இருக்கின்றது. அந்த சக்தியின் ஒளியானது தெற்குத் திசையை நோக்கி பரவிக் கொண்டிருக்கின்றது. அந்த சக்தியின் ஒளி சாதகரின் வயிற்றின் நடுப்பகுதியிலிருந்து வெளிப்படுகின்றது. இந்த சக்தியாக வெளிப்படும் இறைவியின் திருவடிகளே அனைத்திற்கும் மேலானது என்பதை உங்களுக்குள் ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.



பாடல் #1173: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தேர்ந்தெழு மேலாஞ் சிவனங்கி யோடுற
வார்ந்தெழு மாயையு மந்தம தாய்நிற்கும்
ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிடக்
கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானே.

விளக்கம்:

பாடல் #1172 இல் உள்ளபடி சாதகர் தமக்குள் ஆராய்ந்து அறிந்து கொண்ட யோக ஒளியானது அதற்கும் மேலான அக்னியாக இருக்கும் இறைவனின் ஒளி உருவத்தோடு சேர்ந்து பரவும் போது அந்த பக்குவப்பட்ட சாதகரின் உள்ளிருந்து வெளிப்படுகின்ற அனைத்து விதமான மாயைகளையும் இறைவனின் அக்னி உருவமே சுட்டு எரித்து அழித்து விடுகின்றது. அதன் பிறகு உத்வேகத்துடன் சாதகருக்குள்ளிருந்து எழுகின்ற வெளிச்சமும் சத்தமும் மிகவும் உச்ச நிலையை அடையும் போது அதிலிருந்து மிகுதியாக வெளிப்படுகின்றாள் அடியவர்களின் எண்ணத்தை தம்மேல் இழுக்கின்ற அழகிய வளையல்களை அணிந்த இறைவி.



பாடல் #1174: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தானான வாறெட்ட தாம்பரைக் குண்மிசை
தானான வாறுமீ ரேழும் சமைகலை
தானான விந்து சகமே பரமெனுந்
தானாம் பரவா தனையெனத் தக்கதே.

விளக்கம்:

பாடல் #1173 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து மிகுதியாக வெளிப்பட்ட இறைவி எப்படி இருக்கின்றாள் என்ன செய்கின்றாள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். தனக்கென்று ஒரு ஆரம்பமும் இல்லாமல் தானாகவே இருக்கின்ற வழிமுறைப்படி இறைவியானவள் எட்டுவிதமான சக்திகளாக [பாடல் #1084 இல் காண்க] சாதகருக்குள்ளும் பதினான்கு உலகங்களிலும் சரிசமமாக உருவாக்கி செயல்படுத்துகின்றாள். அவளே உள்ளுக்குள் இருக்கும் ஒளி வடிவான இறைவியாகவும் அனைத்தையும் இயக்குகின்ற சக்தி வடிவம் என்று உணரப்படுகின்ற இறைவனாகவும் இருக்கின்றாள். இந்த இறைவியானவள் ஒரு குற்றமும் குறையும் சொல்ல முடியாத அளவு என்று அறிந்து உணர்ந்து கொள்வதற்கு ஏற்ற தூய்மையான பொருளாக இருக்கின்றாள்.



பாடல் #1175: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தக்க பராவித்தை தானிரு பத்தேழில்
தக்கெழு மோருத்தி ரஞ்சொல்லச் சொல்லவே
மிக்கிடு மென்சக்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையோடு தொன்முத்திரை யாளே.

விளக்கம்:

பாடல் #1174 இல் உள்ளபடி ஒரு குற்றமும் குறையும் சொல்ல முடியாத என்று அறிந்து உணர்ந்து கொள்வதற்கு ஏற்ற தூய்மையான பொருளாக இருக்கின்ற பராசக்தியின் பேரறிவைக் கொடுக்கும் தத்துவமானது தானாகவே இருபத்து ஏழு விதமான தத்துவங்களாக இருக்கின்றது. இந்த தத்துவங்களைப் பெற்று பேரறிவைப் பெறுவதற்கு ஏற்றதாக சாதகரின் உள்ளுக்குள்ளிருந்து எழுகின்ற ஒரு மந்திரத்தை அவர் திரும்பத் திரும்ப செபித்து தியானித்துக் கொண்டே இருந்தால் அவருக்குள்ளிருந்து மிகுதியாக வெளிப்பட்டு எழுகின்ற இறைவியானவள் வெள்ளை நிறத்துடனும் மூன்று கண்களுடனும் கதை ஆயுதத்தை ஏந்திக் கொண்டும் ஆதி முத்திரையைக் காட்டிக் கொண்டும் இருப்பாள்.

குறிப்பு: பேரறிவு ஞானத்தை பெறுவதற்கு ஏற்ற மந்திரத்தை சாதகருக்குள்ளிருந்து வெளிவருதற்கு செய்ய வேண்டியவைகளை இதற்கு முன்பு உள்ள பாடல்களில் மறைமுகமாக அருளியுள்ளார்.



பாடல் #1176: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

முத்திரை மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்தள்
அத்துவ மாயல்ல வாய சகலத்தள்
வைத்த பராபர னாய பராபரை
சத்தியு மானந்த சத்தியுங் கொங்கே.

விளக்கம்:

பாடல் #1175 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து வெளிப்பட்ட இறைவி எப்படி இருக்கின்றாள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். மூன்று வகை முத்திரைகளை தன் வசம் வைத்திருக்கும் உண்மையான ஞானத்தை உடையவளான இறைவி அந்த முத்திரைகளின் தத்துவங்களாகவும் தத்துவங்கள் இல்லாததாகவும் அனைத்துமாகவும் அவளே இருக்கின்றாள். சாதகருக்குள் இருக்கும் பரம்பொருளாகிய இறைவனாகவே இருந்து இயங்குகின்ற பராசக்தியான இறைவி பேரின்பத்தைக் கொடுக்கின்ற சக்தியான இறைவனோடு பூவும் அதிலிருந்து வரும் நறுமணமும் போல ஒன்றாகக் கலந்து இருக்கின்றாள்.




பாடல் #1177: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கொங்கீன்ற கொம்பின் குரும்பைக் குலாங்கன்னி
பொங்கிய குங்குமத் தொளி பொருந்தினள்
அங்குச பாச மெனுமகி லங்கனி
தங்கு மவள்மனை தானறி வாயே.

விளக்கம்:

பாடல் #1176 இல் உள்ளபடி இறைவனோடு பூவும் அதிலிருந்து வரும் நறுமணமும் போல ஒன்றாகக் கலந்து இருக்கின்ற இறைவியானவளின் திரு உருவத்தை தமக்குள் அறிந்து உணர்ந்து கொள்வதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். நறுமணத்தை தருகின்ற வாசனை மிக்க மலர்கள் பூத்திருக்கும் செடியின் கொம்பு போன்ற மெல்லிய இடையுடனும் மலரின் அரும்பு போன்ற மென்மையான முலைகளுடனும் என்றும் இளமையுடன் இருக்கின்ற இறைவியானவள் சாதகருக்குள்ளிருந்து பொங்கி வெளிப்படும் குங்குமம் போன்ற சிவந்த ஒளி வீசும் திரு உருவத்தைக் கொண்டவள். அவளது திருக்கைகளில் அங்குசத்தையும் பாசக் கயிறையும் ஏந்திக் கொண்டு அடியவர்களின் உலகப் பற்றை அடக்கி ஆளுகின்றாள். அனைத்து உலகங்களிலும் அன்போடு வீற்றிருக்கின்ற அவள் தங்கியிருக்கும் வீடாகிய சாதகரின் உடலுக்குள் தாமாகவே தேடி அறிந்து கொள்ளுங்கள்.



பாடல் #1178: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயு மறிவுங் கடந்த அரனுக்குத்
தாயு மகளுநல் தாரமு மாமே.

விளக்கம்:

பாடல் #1177 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள்ளே தேடி அறிந்து கொண்ட இறைவியானவள் இறைவனுடன் எப்படி சேர்ந்து இருக்கின்றாள் என்பதை இந்தப் பாடல் அறிந்து கொள்ளலாம். வாக்கால் சொல்ல முடியாதவளும் எண்ணங்களால் எளிதில் கற்பனை செய்து பார்க்க முடியாதவளும் ஆகிய மனோன்மணி எனும் இறைவி தனது பெண் தன்மையில் என்றும் இளமையுடன் இருந்து உலகங்களின் இயக்கம் நடைபெறுவதற்கு எண்ணங்களோடு இருக்கின்ற ஆன்மாக்களையும் தேவ கணங்களையும் அதிகமாக வைத்து இயக்குகின்றாள். கல்வி அறிவால் எவ்வளவு ஆராய்ந்தாலும் உணர்ந்து கொள்ள முடியாத இறைவனுக்கு அவளே தாயாகவும் மகளாகவும் என்றும் நன்மை தரும் துணைவியாகவும் இருக்கின்றாள்.

குறிப்பு: உலக இயக்கம் நடைபெறுவதற்கு இறைவியின் எண்ணத்திற்கு ஏற்ப ஐந்து பூதங்களையும் கணங்கள் செயல் படுத்துகின்றது. இறைவனிடமிருந்து தன் ஆசைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக பிரிந்து வந்த எண்ணங்களுடைய ஆன்மா தனது ஆசைகளையும் அதனால் சேரும் வினைகளையும் பிறவி எடுத்து தீர்த்துக் கொள்கிறது. இதுவே இங்கு பேய் என்று குறிப்பிடப் படுகின்றது.

உப குறிப்பு: சாதகர் தமக்குள் ஆராய்ந்து உணர்ந்து கொள்ளும் இறைவியானவள் முதல் நிலையில் தாயாக இருந்து சாதகரின் மேல் அன்பு செலுத்துகிறாள். இரண்டாவது நிலையில் சாதகர் தாம் உணர்ந்த இறைவியின் மேல் தன் மகளைப் போல அன்பு செலுத்துகிறார். மூன்றாவது நிலையில் இறைவியும் சாதகரும் சரிசமமாக ஒருவரோடு ஒருவர் அன்பு செலுத்துகிறார்கள்.



பாடல் #1179: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தாரமும் மாகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகுங் கலப்பினள்
பூரண விந்து பொதிந்த புராதனி
பாரள வாந்திசை பத்துடை யாளே.

விளக்கம்:

பாடல் #1178 இல் உள்ளபடி இறைவனோடு துணையாக இருக்கின்ற இறைவியின் தன்மைகளை இந்த பாடலில் அறிந்து கொள்ளலாம். இறைவனுக்குத் துணையாகவும் இருக்கின்ற இறைவி அதன் அனைத்து தத்துவங்களாகவும் நிற்கின்றாள். இறைவன் உலகங்களை உருவாக்க வேண்டும் என்று எண்ணிய போது அதன் காரணமாகவும் இறைவன் எண்ணியபடியே உலகங்களை படைக்கும் போது அதன் காரியமாகவும் எப்போதும் இறைவனோடு கலந்தே இருக்கின்றாள் இறைவி. இறைவனின் பரிபூரண ஜோதியாகிய ஒளி ஒருவத்தோடு கலந்து அதனுள்ளே சக்தியாக அடங்கி இருக்கின்ற ஆதியான இறைவி உலகங்கள் அனைத்தின் அளவுக்கும் பரந்து விரிந்து அதையும் தாண்டி பத்து திசைகளையும் தமக்குள் கொண்டவளாக இருக்கின்றாள்.



பாடல் #1180: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பத்து முகமுடை யாளெம் பராசத்தி
வைத்தன ளாறங்க நாலுடன் றான்வேதம்
ஒத்தனள் ளாதார மொன்றுட னோங்கியே
நித்தமாய் நின்றாளெம் நேரிழை கூறே.

விளக்கம்:

பாடல் #1179 இல் உள்ளபடி பத்து திசைகளையும் தமக்குள் கொண்டவளான இறைவி இறைவனோடு சேர்ந்து எப்படி இருக்கின்றாள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். பத்து திசைகளையும் பத்து முகங்களாகக் கொண்ட எமது பராசக்தியான இறைவியே உயிர்கள் உய்ய வேண்டும் என்று நான்கு வேதங்களையும் அவற்றின் ஆறு அங்கங்களையும் உருவாக்கி வைத்து அருளினாள். அவளே அனைத்திற்கும் ஆதாரமான இறைவனுடன் ஒன்றாகச் சேர்ந்து மிகவும் உயர்ந்த நிலையில் எல்லா காலத்திலும் எப்போதும் இறைவனுடன் சரிசமமான பாகமாக சேர்ந்தே நிற்கின்றாள்.

வேதத்தின் ஆறு அங்கங்கள்:

1. சிட்சை – வேதத்தின் எழுத்து மற்றும் ஒலி முதலியவற்றைப் பற்றிச் சொல்வது.
2. வியாகரணம் – சொற்களின் இலக்கணத்தை ஆராய்வது.
3. சந்தம் – செய்யுள் இலக்கணம் பற்றிச் சொல்வது.
4. சோதிடம் – கோள் நிலைகளை வைத்து காலத்தை ஆராய்வது.
5. நிருக்தம் – வேதச் சொற்களுக்கு பொருள் கூறுவது.
6. கல்பம் – வேதத்தின் செயல் முறைகளை உரைப்பது.



பாடல் #1181: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கூறிய கன்னி குலாய புருவத்தள்
சீறிய ளாயுல கேழுந் திகழ்ந்தவள்
ஆரிய நங்கை யமுத பயோதரி
பேருயி ராளி பிறிவுஅறுத் தாளே.

விளக்கம்:

பாடல் #1180 இல் உள்ளபடி இறைவனோடு பலவிதங்களில் கலந்து இருக்கும் இறைவியானவள் அவனோடு உத்தமமான உயிர்களையும் சேர்த்து அருளுவதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். எம்மால் புகழ்ந்து கூறப்படுகின்ற என்றும் இளமை பொருந்திய இறைவியானவள் வளைந்த புருவங்களோடு சீரும் சிறப்பும் கொண்டவளாக ஏழு உலகங்களிலும் திகழ்ந்து இருக்கின்றாள். வேதங்களாகவே இருக்கின்ற என்றும் இளமையான இறைவி உயிர்களுக்கு உண்மை ஞானத்தைக் கொடுக்கின்ற அமிழ்தப் பாலைக் கொண்ட தனங்களை உடையவள். தகுதியான உயிர்களுக்கு உண்மை ஞானத்தைக் கொடுக்கின்ற அமிழ்தப் பாலை அளித்து ஆட்கொண்டு இறைவன் வேறு ஆன்மா வேறு என்று பிரிந்து இருக்கும் அவர்களின் தன்மையை நீக்கி இறைவனோடு ஒன்றாகச் சேர்த்து அருளுகின்றாள்.



பாடல் #1182: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்றி நின்றன ளாருயி ருள்ளே.

விளக்கம்:

பாடல் #1181 இல் உள்ளபடி இறைவன் வேறு ஆன்மா வேறு என்று பிரிந்து இருக்கும் தன்மையை நீக்கி இறைவனோடு ஒன்றாக சேர்வதற்கு அருளுகின்ற இறைவியானவள் ஆரம்ப நிலையில் சாதகரின் ஆன்மாவை பெரும் கருணையோடு காத்து நின்று இறைவனை அடைய வேண்டும் என்று நினைக்கின்ற அவரின் எண்ணங்களோடு சேர்ந்து நின்று கொம்பின் உயரத்திற்கு ஏற்ப வளர்கின்ற பூங்கொடியைப் போல சாதகரின் எண்ணங்களுக்கு ஏற்ப அருள் புரிகின்ற அழகிய பூங்கொடியாக இருக்கின்றாள். இறைவனை அடைய வேண்டும் என்று நினைக்கின்ற சாதகரின் மனதை அதற்கு ஏற்ப பக்குவப்படுத்தி அதனோடு ஒன்றாக சேர்ந்து நின்று அவருக்கு இறைவனை அடைவதற்கு வேண்டிய உண்மை ஞானத்தை அருளி அந்த ஞானத்தோடு கலந்து ஒன்றாக சாதகரின் உயிருக்குள் நிற்கின்றாள்.



பாடல் #1183: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உள்ளத்தி னுள்ளே யுடனிருந் தைவர்தங்
கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளல் தலைவி மருட்டிப் புரிந்தே.

விளக்கம்:

பாடல் #1182 இல் உள்ளபடி உண்மை ஞானத்தோடு கலந்து ஒன்றாக சாதகரின் உயிருக்குள் நிற்கின்ற இறைவியானவள் அவருக்கு எவ்வாறு அருள் புரிகிறாள் என்பதை இப்பாடலில் அறிந்து கொள்ளலாம். சாதகரின் உள்ளத்திற்கு உள்ளே வந்து அவருடனே சேர்ந்து நிற்கின்ற இறைவியானவள் அவரின் ஐந்து புலன்களும் இறைவனை நோக்கி செல்வதை தடுத்து ஆசைகளின் வழியே செல்ல வைக்கின்ற கள்ளத் தனத்தை [வஞ்சகத் தன்மையை] அகற்றி அவருடன் ஒன்றாகக் கலந்து நின்று அவரை தம்மோடு அணைத்துக் கொண்டு அவர் கொண்ட தவத்தின் வழிப்படியே செல்வதில் இருந்து தவறிவிடாமல் காப்பாற்றி அவர் செய்கின்ற தவம் கைகூடும் காலத்தில் பேரின்பத்தை அளித்து அதிலேயே அவர் லயித்து இருக்குமாறு அருளுகின்ற பெருங்கருணை கொண்ட வள்ளல் தலைவியாக இருக்கின்றாள்.



பாடல் #1184: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற வின்ப மறியார்
பொருந்தி யிருந்த புதல்விபூ வண்ணத்
திருந்த விலக்கி லினிதிருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1183 இல் உள்ளபடி பேரின்பத்தைக் கொடுத்து அருளுகின்ற பெரும் கருணை வள்ளலாக இருக்கின்ற இறைவியானவள் சாதகருடன் எவ்வாறு சேர்ந்து இருக்கின்றாள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். சாதகருக்கு அருள் புரிந்து பேரின்பத்தைக் கொடுக்கின்ற மாபெரும் சக்தியாகிய இறைவி சாதகருக்குள் வீற்றிருந்து தமது அருளினால் புரிகின்ற பேரின்பத்தைப் பற்றி அறிந்து கொள்ளாமல் சில சாதகர்கள் இருக்கின்றனர். இந்த பேரின்பத்தை அறிந்து கொண்ட சாதகர்களுக்குள் அண்டத்தில் இருக்கும் பராசக்தியின் ஒரு துளியாக வீற்றிருக்கும் இறைவியானவள் பூவும் நிறமும் போல சாதகரும் தாமும் ஒன்றாகக் கலந்து வீற்றிருக்கின்றாள். இப்படி இறைவியோடு தாமும் கலந்து வீற்றிருக்கின்ற நிலையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வீற்றிருக்கின்ற சாதகர்களோடு அவளும் இன்பமாக வீற்றிருக்கின்றாள்.




பாடல் #1185: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

இருந்தன ளேந்திழை யென்னுள்ள மேவித்
திருந்து புணர்ச்சியில் தேர்ந்துணர்ந் துன்னி
நிரந்தர மாகிய நீர்திசை யோடு
பொருந்த விலக்கிற் புணர்ச்சி யதுவே.

விளக்கம்:

பாடல் #1184 இல் உள்ளபடி சாதகர்களோடு கலந்து இன்பமாக வீற்றிருக்கின்ற இறைவியானவள் எவ்வாறு கலந்து இருக்கின்றாள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். இறைவியானவள் பேரழகுடன் ஆபரணங்களை அணிந்து கொண்டு எமது உள்ளதிற்குள் புகுந்து வீற்றிருந்து எம்மோடு கலந்து இருப்பதில் மேல் நிலை பெற்றதை யாம் பரிபூரணமாக எமக்குள் உணர்ந்து அதையே எப்போதும் மனதிற்குள் எண்ணிக்கொண்டு இறைவியோடு இருப்பதே என்றும் நிரந்தரம் என்கிற உணர்வோடு பத்து திசைகளிலும் வீற்றிருக்கின்ற இறைவியோடு யாமும் சேர்ந்து இருப்பதையே குறிக்கோளாக வைத்து இருப்பது இறைவியோடு உண்மையாகக் கலந்து இருக்கும் நிலையாகும்.

கருத்து: இறைவி தமக்குள் கலந்து இருப்பதை உணர்ந்திருப்பதைப் போலவே தம்மைச் சுற்றி இருக்கும் பத்து திசைகளிலும் இருக்கும் இறைவியோடு தாமும் கலந்து இருப்பதே இறைவியோடு உண்மையாகக் கலந்து இருக்கும் நிலையாகும்.




பாடல் #1186: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

அதுவிது வென்னு மவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே.

விளக்கம்:

உலகப் பற்றுக்களில் அது வேண்டும் இது வேண்டும் என்று அலைகின்ற ஆசைகளை அகற்றி விட்டு இறைவியைப் போற்றி வணங்கி தியானத்தில் இருந்து சுழுமுனை நாடி வழியே மூச்சுக்காற்றை செலுத்தி மூச்சுக் காற்றையும் இறப்பையும் வென்று என்றும் இறவாமல் இருக்கும் வழி என்று சந்திர மண்டலத்தில் தாமரை மலரில் வீற்றிருக்கும் இறைவியானவள் எம்மிடம் எடுத்துக் கூறிய மண்டலங்கள் மூன்றாகும்.

கருத்து: இறைவனை அடைய விரும்பி உலக ஆசைகளை விட்டுவிட்டு இறைவியைப் போற்றி வணங்கி சாதகம் செய்பவர்களுக்கு இறைவி காட்டிய வழியில் பாடல் #612 இல் உள்ளபடி மூலாதார சக்கரத்தில் இருக்கும் அக்னி மண்டலம் ஆக்ஞா சக்கரத்தில் இருக்கும் சந்திர மண்டலம் சகஸ்ரதளத்தில் இருக்கும் சூரிய மண்டலம் ஆகியவற்றுக்கு மூச்சுக் காற்றை சுழுமுனை நாடி வழியே செலுத்தினால் மூச்சுக் காற்றை தம் வசப்படுத்தி என்றும் இறப்பு இல்லாத நிலையை அடையலாம்.



பாடல் #1187: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மூன்றுள மண்டல மோகினி சேர்விடம்
ஏன்றுள வீரா றெழுகலை யுச்சியில்
தோன்று மிலக்குற வாகுதன் மாமாயை
ஏன்றன ளேழிரண் டிந்துவோடு ஈறே.

விளக்கம்:

பாடல் #1186 இல் உள்ளபடி இறைவி கூறியபடி சாதகருக்குள் மூலாதாரத்தில் இருக்கின்ற அக்னி, ஆக்ஞையில் இருக்கின்ற சந்திரன், சகஸ்ரதளத்தில் இருக்கின்ற சூரியன் ஆகிய மூன்று மண்டலங்களிலும் இறைவி மாயையின் தலைவியாக சேர்ந்து இருக்கின்றாள். அந்த மாயை நீங்கி இறைவியை அடைவதற்கு பாடல் #1186 இல் இறைவி அருளியபடி சாதகம் செய்து மூச்சுக் காற்றை சுழுமுனை நாடி வழியே அந்த மூன்று மண்டலங்களுக்கும் செலுத்திச் சென்றால் அவளை அடைவதற்கு ஏற்ற விதத்தில் தலை உச்சியிலிருந்து பன்னிரண்டு அங்குல தூரத்தில் சுத்த மாயையின் இருப்பிடமாக இருக்கின்ற பரவெளியில் இறைவி வீற்றிருக்கின்றாள். பாடல் #871 இல் உள்ளபடி சாதகரின் உடலுக்குள் இருக்கும் ஏழு சக்கரங்களைக் கடந்து எட்டாவதாக இருக்கும் துவாதசாந்த வெளியைத் தாண்டிய ஒன்பதாவது பரவெளியில் இருக்கும் சந்திர மண்டலத்தை தமது இறுதியான இடமாகக் கொண்டு இறைவி வீற்றிருக்கின்றாள்.

கருத்து: இறைவனை அடைய வேண்டும் என்று இறைவி கூறிய வழியில் சாதகம் செய்யும் சாதகர்கள் முதலில் தமது மாயையை நீங்கி தலை உச்சியில் இருக்கும் ஏழாவது சக்கரமான சகஸ்ரதளத்தைத் தாண்டி எட்டாவதான துவாதசாந்த வெளியில் மாமாயையில் இருக்கும் இறைவியை அறிந்து கொள்வார்கள். இந்த சாதகத்தைத் தொடர்ந்து செய்தால் மாமாயை நீங்கி அதன்பிறகு ஒன்பதாவதாக இருக்கும் சந்திர மண்டலத்தில் வீற்றிருக்கும் இறைவியை உணர்ந்து கொள்வார்கள்.



பாடல் #1188: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

இந்துவி னின்றெழு நாத மிரவிபோல்
வந்தபின் நாக்கின் மதித்தெழுங் கண்டத்தில்
உந்திய சோதி இதயத் தெழுமொலி
இந்துவின் மேலுற்ற ஈறுஅது தானே.

விளக்கம்:

பாடல் #1187 இல் உள்ளபடி சந்திர மண்டலத்தில் வீற்றிருக்கின்ற இறைவியை சாதகர்கள் உணர்ந்த பிறகு அங்கிருந்து எழுகின்ற நாத [ஒலி] சக்தி சூரியனின் கதிர்களைப் போலத் திரும்பி கீழ் நோக்கி வந்து அந்நாக்கில் அடியில் சோதியாக உருவாகி அந்த சோதியை தொண்டைக்குள்ளிருந்து இதயத்திற்குள் உந்தித் தள்ளுகிறது. இதயத்திற்குள் வந்த சோதி ஒலியாக மாறி ஒலிக்கின்றது. இப்படி சந்திர மண்டலத்தில் எழுகின்ற நாத [ஒலி] சக்தி சூரிய கதிர்களைப் போல தொண்டைக்குள் சோதியாகிப் பின் இதயத்திற்குள் ஒலியாக மாறுகின்ற அனைத்தும் சென்று அடைகின்ற இறுதியான இடமாக சந்திர மண்டலத்தில் வீற்றிருக்கும் இறைவி இருக்கின்றாள்.



பாடல் #1189: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஈறது தான்முத லெண்ணிரண் டாயிரம்
மாறுத லின்றி மனோவச மாயெழில்
தூறது செய்யுஞ் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்துஇருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1188 இல் உள்ளபடி அனைத்தும் சென்று அடைகின்ற இறுதியான முடிவாக இருக்கின்ற இறைவியானவள் சாதகருக்குள் இருக்கும் சகஸ்ரதளத்தின் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரிலும் பதினாறு கலைகளிலும் முதன்மையாவளாக வீற்றிருந்து சாதகரின் தன்மைக்கு ஏற்றபடி அவருடைய மனதை தன் வசப்படுத்தி வேறு எதிலும் அதைச் செல்ல விடாமல் தடுத்துக் காப்பாற்றி அந்த மனதை தாம் வசிப்பதற்கு ஏற்ற இடமாக பேரழகுடனும் நறுமணத்துடனும் மாற்றுவதற்கு மனதில் இருக்கும் அழுக்குகளை நீக்கி சுத்தம் செய்து சாதகருக்கு பேரருளைக் கொடுத்து அதன் படி மாறிய மனதிற்குள் புதியதாக புகுந்து வீற்றிருக்கின்றாள்.

குறிப்பு: முதல் வரியில் வரும் எண்ணிரண்டாயிரம் என்பதன் பொருள் எண் + இரண்டு + ஆயிரம் என்று பிரித்து படிக்க வேண்டும். எண் என்றால் எட்டு அதன் பிறகு வரும் இரண்டால் எட்டை பெருக்கினால் பதினாறு வரும் பதினாறு என்பது உயிர்களின் உடலின் இயக்கத்திற்கு காரணமாக இருக்கும் செயல்களைக் குறிப்பதாகும். இதனை பாடல் #1070 இல் காணலாம்.



பாடல் #1191: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மங்கையு மாரனுந் தம்மொடு கூடிநின்
றங்குலி கூட்டி யகம்புறம் பார்த்தனர்
கொங்கைநல் லாளுங் குமாரர்க ளைவரும்
தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே.

விளக்கம்:

பாடல் #1190 இல் உள்ளபடி இறைவி அருளிய வழியின் படியே சிரத்தையோடு வழிபடும் முறையை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். என்றும் இளமையுடன் இருக்கும் இறைவியும் இறைவனும் ஒன்றாகச் சேர்ந்து சாதரின் நெஞ்சத்திலிருந்து ஒரு கட்டை விரல் அளவிற்கு உள்ளிருக்கும் ஆன்மாவோடு ஒன்றாகச் சேர்ந்து வீற்றிருந்து சாதகரின் உள்ளுக்குள்ளும் வெளியிலும் இருக்கின்ற இறை சக்தியை பார்த்துக் கொண்டு சாதகம் செய்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த சாதகத்தின் பயனாக பேரின்பமாகிய அமிழ்தப் பாலைக் கொடுக்கும் அழகிய முலைகளையுடைய நன்மையின் வடிவான இறைவி சாதகருக்கு ஞானத்தை உணர்த்தி அருளுகின்றாள். அந்த ஞானத்தின் மூலம் சாதகர் தமக்குள் இருக்கும் ஐந்து பூதங்களும் வெளியில் இருக்கும் ஐந்து பூதங்களும் ஒரே சக்தியாக இருப்பதை உணர்ந்து கொள்கிறார். அதன் பிறகு சாதகர் தமக்குள் இறை சக்தியாக உணர்ந்த ஐந்து பூதங்களையும் தமக்குள் உணர்ந்த இறைவன் இறைவி ஆன்மாவுடன் ஒன்றாக பொருந்தி நின்று சாதகம் செய்கின்றார்.



பாடல் #1192: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சடங்கது செய்து தவம்புரி வார்கள்
கடந்தனி லுள்ளே கருதுவ ராகில்
தொடர்ந்தெழு சோதி துளைவழி யேறி
அடங்கிடு மன்பின தாயிழை பாலே.

விளக்கம்:

பாடல் #1191 இல் உள்ளபடி ஐந்து பூதங்களையும் இறைவன் இறைவி ஆன்மாவுடன் ஒன்றாகப் பொருந்தி நின்று செய்கின்ற சாதகத்தையே தவமாக மேற்கொள்ளுகின்ற சாதகர்கள் தங்களின் உடலை மறந்து அதற்கு உள்ளே உணர்ந்து இருக்கின்ற இறை சக்தியை எண்ணிக் கொண்டே இருந்தால் அவர்களின் எண்ணத்தைத் தொடர்ந்து மூலாதாரத்திலுள்ள குண்டலினி சோதியானது எழும்பி சுழுமுனை நாடித் துளை வழியே மேலேறிச் சென்று சகஸ்ரதளத்தில் சோதியாக இருக்கின்ற பேரன்பின் வடிவான சாதகரின் அன்பிற்கு ஏற்ற அழகிய அணிகலன்களை அணிந்திருக்கும் இறைவியிடம் சென்று அடங்கி விடும்.



பாடல் #1193: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பாலித் திருக்கும் பனிமல ராறினும்
ஆலித் திருக்கு மவற்றி னகம்படி
சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திரம்
மூலத்து மேலது முத்துஅது வாமே.

விளக்கம்:

பாடல் #1192 இல் உள்ளபடி சாதகரின் குண்டலினி சோதியானது சகஸ்ரதளத்தில் இருக்கும் இறைவியோடு சேர்ந்து அடங்கி இருக்கும் போது இறைவியின் சக்தியானது சாதகருக்குள் இருக்கும் ஆறு ஆதார சக்கரங்களிலும் ஒன்றாகக் கலந்து இருக்கும். அப்போது அந்தச் சக்கரங்களின் உள்ளே படிந்திருக்கின்ற இன்பத்தை அனுபவித்துக் கொண்டே இருக்கின்ற நிலையிலிருந்து சாதகர் தம்மை நீக்கி விட்டால் அவருக்குள்ளிருந்து பிரகாசமாக ஒரு மந்திரம் மூலாதாரத்திலிருந்து மேலெழும்பி வரும். இந்த மந்திரமே கடலின் ஆழத்தில் கிடைக்கும் அபூர்வமான முத்து போன்ற மிகப் பெரும் செல்வமாகும்.




பாடல் #1194: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

முத்து வணத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி யென்னுள்ள மேவிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1193 இல் உள்ளபடி மூலாதாரத்திலிருந்து முத்துப் போல கிடைக்கும் மந்திரமானது இறைவியின் அம்சத்தில் இருப்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். இந்த மந்திரமான இறைவி முத்து போன்ற வெண்மை ஒளியாகப் பிரகாசிக்கின்றாள். தனது அனைத்து முகங்களிலும் மூன்று கண்களை வைத்திருக்கின்றாள். சக்தி மயமாக இருக்கின்றாள். அளவில்லாத ஆற்றலைக் கொண்டிருக்கின்றாள். அடியவர் வேண்டும் உருவத்தையே மேற்கொண்டு வருகின்றாள். சடை முடியை அணிந்து கொண்டிருக்கின்றாள். பத்துக் கைகளைக் கொண்டிருக்கின்றாள். அசையா சக்தியாகிய இறைவனைச் சுற்றிக் கொண்டிருக்கும் பொன் வளையலாக இருக்கின்றாள். ஞானத்தின் தலைவியாக இருக்கின்றாள். இந்த இறைவியே எமது உள்ளம் முழுவதும் பரவி வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1195: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மேவிய மண்டல மூன்றுடன் கீழெரி
தாவிய நற்பதத் தண்மதி யங்கதிர்
மூவருங் கூடி முதல்வியாய் முன்நிற்பார்
ஓவினு மேவிடு முள்ளொளி யாமே.

விளக்கம்:

பாடல் #1194 இல் உள்ளபடி சாதகரின் உள்ளத்திற்கும் பரவி வீற்றிருக்கும் இறைவியானவள் அவருக்குள் இருக்கும் மூன்று மண்டலங்களிலும் பேரொளி உருவமாக இருப்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம். சாதகருக்குள் இருக்கும் மூன்று மண்டலங்களில் அடியில் இருக்கும் அக்னி மண்டலமாகிய மூலாக்னியே இறைவியின் நன்மை தரும் திருவடிகளாகவும் சூரிய மண்டலமே இறைவியின் திருமேனியாகவும் தலை உச்சிக்கு மேலே இருக்கும் துவாதசாந்த வெளியையும் தாண்டி இருக்கும் சந்திர மண்டலமே [பாடல் #1187 இல் உள்ளபடி] இறைவியின் திருமுடியாகவும் கொண்ட பேரொளி உருவமாக இறைவி இருக்கின்றாள். சாதகர் கண்மூடி தியானத்தில் இருந்தாலும் தமக்குள் பேரொளி உருவமாக இறைவி வீற்றிருப்பதை உணர்ந்து தரிசிக்க முடியும்.



பாடல் #1196: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உள்ளொளி மூவிரண் டோங்கிய வங்கங்கள்
வெள்ளொளி யங்கியின் மேவி யவரொடுங்
கள்ளவிழ் கோனைக் கலந்துட னேநிற்கும்
கொள்ள விசுத்திக் கொடியமு தாமே.

விளக்கம்:

பாடல் #1195 இல் உள்ளபடி சாதகருக்குள் பேரொளியாக வீற்றிருக்கும் இறைவியானவள் தனது சக்தியின் மூலம் சாதகருக்குள் இருக்கும் ஆறு ஆதாரச் சக்கரங்களுக்கும் உயர்ந்த நிலையை அருளி அவருக்குள் இருக்கும் குண்டலினி சக்தியாகிய அக்னியில் பரவி அதனோடு சேர்ந்து நிற்கின்றாள். தேன் நிறைந்து இருக்கும் கொன்றை மலர்களை மாலையாகச் சூடியிருக்கும் அரசனாகிய இறைவனுடன் ஒன்றாகக் கலந்து இறை சக்தியுடனே சாதகருக்குள் வீற்றிருக்கும் இறைவியானவள் சாதகர் தம்மை உணர்ந்து அனுபவித்துக் கொள்ளும்படி தொண்டைக்கு அருகில் இருக்கும் விசுத்திச் சக்கரத்தில் இருந்து கொடி போல மேலேறிச் சென்று தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்திலிருந்து அமிழ்தமாகப் பொழிகின்றாள்.




பாடல் #1197: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கொடியதி ரேகை குறியுள் இருப்பப்
படியது வாருணைப் பைங்கழ லீசன்
வடிவது வானந்தம் வந்து முறையே
இடுமுத லாறங்க மேந்திழை யாளே.

விளக்கம்:

பாடல் #1196 இல் உள்ளபடி விசுத்திச் சக்கரத்திலிருந்து கொடி போல மேலேறிச் சென்று சகஸ்ரதளத்தில் உச்ச நிலையில் மின்னல் போன்ற ஒளியையும் சக்தியையும் கொண்டு இருக்கும் இறைவியானவள் அங்கிருக்கும் இறை சக்தியையே முதன்மையாகக் கொண்டு அதனுள் வீற்றிருக்கும் போது அங்கிருந்து கங்கையைப் போன்ற அமிழ்தம் கீழிறங்கும் படி இறை சக்தியானது ஊற்றாகப் பொழிகின்றது. இதுவே பசுமையான பொன் போன்ற திருவடிகளைக் கொண்ட இறைவனின் உருவமாக இருப்பது பேரின்பமாகும். இந்தப் பேரின்பத்தை அருளும் அமிழ்தத்தை சாதகரின் பக்குவத்திற்கு ஏற்றபடி அவருக்குள் இருக்கும் ஆறு ஆதார சக்கரங்களுக்கும் முறையாக அருளுகின்ற தலைவியாக அழகிய ஆபரணங்களை அணிந்திருக்கும் இறைவி இருக்கின்றாள்.

கருத்து: இறைவன் சகஸ்ரதளத்திலிருந்து அமிழ்தத்தின் மூலம் பேரின்பத்தை அருளும் உருவமாக இருக்கின்றார். இறைவி அதை ஆறு சக்கரங்களுக்கு கொடுக்கும் சக்தியாக இருக்கின்றாள்.



பாடல் #1198: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஏந்திழை யாளு மிறைவர்கள் மூவரும்
காந்தார மாறுங் கலைமுத லீரெட்டும்
ஆந்த குளத்தியு மந்திர ராயுவுஞ்
சார்ந்தன ரேத்த விருந்தனள் சத்தியே.

விளக்கம்:

பாடல் #1197 இல் உள்ளபடி அழகிய ஆபரணங்களை அணிந்து ஆறு ஆதார சக்கரங்களுக்கும் சக்தியளிக்கின்ற இறைவியானவள் மும்மூர்த்திகளாகிய பிரம்மன் திருமால் உருத்திரன் ஆகியோருடைய சக்தியாகவும் ஆறு ஆதாரச் சக்கரங்களிலும் வீசுகின்ற ஒளியாகவும் பதினாறு கலைகளின் மூலம் பதினாறு விதமான செயல்களைப் புரிந்து கொண்டு இருப்பவளுமாகிய இறைவியை தமது எண்ணங்கள் முழுவதும் வைத்து தியானிப்பவர்களும், வேத மந்திரங்களை ஆராய்ந்து இறைவியைத் தெரிந்து கொள்ள முயல்கின்றவர்களும், இறைவியே சரணம் என்று அவளை மட்டுமே சார்ந்து போற்றி வழிபடுபவர்களும் ஆகிய அடியவர்களுக்குள் அவள் வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1199: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சத்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி யென்ப தறிகிலர்
பத்தியைப் பாழி லுகுத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போல் கதறுகின் றாரே.

விளக்கம்:

பாடல் #1198 இல் உள்ளபடி சாதகம் செய்பவர்களின் உள்ளுக்குள் வீற்றிருக்கும் இறைவியானவள் சாதகம் செய்வதன் மூலமே அறிந்து கொள்ளக் கூடிய ஆரம்ப நிலையில் பெண் தெய்வமாக இருக்கின்றாள். இவளே முக்தியை அருளுகின்ற தலைவி என்பதை அறியாமல் பலர் இருக்கின்றனர். இப்படி இருப்பவர்களே அடியவர்கள் இறைவியின் மேல் வைக்கும் பக்தியை அறிந்து கொள்ளாமல் இழிவாகப் பேசி ஏளனம் செய்து பாவிகளாக இருக்கின்றனர். இந்தப் பாவிகள் தன்னால் புரிந்து கொள்ள முடியாததைப் பார்த்து குரைக்கின்ற நாயைப் போலவே இறைவியை அறிந்து கொள்ளாமல் பிதற்றிக் கொண்டு இருக்கின்றார்கள்.



பாடல் #1200: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆரே திருவின் திருவடி காண்பர்கள்
நேரே நின்றோதி நினையவும் வல்லார்க்குக்
காரேர் குழலி கமல மலரன்ன
சீரேயுஞ் சேவடி சிந்தைவைத் தாளே.

விளக்கம்:

இறைவியின் திருவடியை யாரால் தரிசிக்க முடியும் என்றால் இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக தியானத்தில் வீற்றிருந்து பாடல் #1193 இல் உள்ளபடி தமக்குளிருந்து கிடைத்த மந்திரத்தை ஓதிக் கொண்டே இருக்க முடிந்தவர்களுக்கு கிடைக்கும் பேறாகும். இப்படி சாதகம் செய்பவர்களுக்கு மழை பொழியும் மேகங்களைப் போல கருமையான நிறத்தில் பேரழகு பொருந்திய கூந்தலை உடைய இறைவியானவள் தனது தாமரை மலர் போன்ற சீரும் சிறப்பும் வாய்ந்த மேன்மை மிக்க திருவடிகளை அவர்களது சிந்தையில் வைத்து அருளுவாள்.



பாடல் #1201: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத் தம்மூலத்தி லேவைத்து
நிந்தையில் வையா நினைவதி லேவைத்துச்
சந்தியில் வைத்துச் சமாதிசெய் வீரே.

விளக்கம்:

பாடல் #1200 இல் இறைவி தமது சிந்தையில் வைத்து அருளிய திருவடிகளை சாதகர்கள் தமது தலைக்கு உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்திலும் சகஸ்ரதளத்திற்கு முன்பு இருக்கின்ற ஆதார சக்கரங்களிலும் இறுதியில் இருக்கின்ற மூலாதாரத்திலும் வைத்து தம்மைச் சுற்றி இருக்கும் உலகத்தில் மாயையால் நடக்கும் நன்மை தீமைகளில் எண்ணங்களைப் போக விடாமல் இறைவனைப் பற்றி மட்டுமே எண்ணுகின்ற எண்ணங்களில் இறைவியின் திருவடிகளை வைத்து பிறகு அனைத்திலும் வைத்த இறைவியின் திருவடிகளை ஒருமுகமாக ஒரே இடமாக்கி வைத்து சமாதி நிலையில் தியானித்து இருங்கள்.

கருத்து: ஏழு ஆதார சக்கரங்களிலும் எண்ணங்களிலும் இறைவியின் திருவடிகளை வைத்து தியானித்த பிறகு இப்படி எட்டு இடங்களிலும் வைத்த இறைவியின் திருவடிகளை ஒரே இடமாக்கி வைத்து தியானிக்கும் போது சமாதி நிலையை அடையலாம்.



பாடல் #1202: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சமாதிசெய் வார்கட்குத் தான்முத லாகிச்
சிவாதியி லாருஞ் சிலைநுத லாளை
நவாதியி லாக நயந்தது வோதில்
உவாதி யவளுக் குறைவில தாமே.

விளக்கம்:

பாடல் #1201 இல் உள்ளபடி இறைவியின் திருவடிகளையே தியானித்து சமாதி நிலையில் வீற்றிருக்கும் சாதகர்களுக்கு ஆதியிலிருந்து இறைவனோடு சேர்ந்து இருக்கின்றவளும் வில் போல் வளைந்த நெற்றியைக் கொண்டவளுமான இறைவியே தலைவியாக வீற்றிருந்து பாடல் #871 இல் உள்ளபடி சாதகருக்குள் இருக்கும் ஒன்பது மண்டலங்களுக்கும் முதன்மை சக்தியாக விளங்கி அவளது கருணையால் பாடல் #1193 இல் உள்ளபடி அவருக்குள்ளிருந்து எழுந்த மந்திரத்தை தானாகவே ஒன்பது மண்டலங்களுக்கும் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும் படி செய்து சாதகரின் உடலையே தமக்கு மிகவும் விருப்பமான கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1203: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உறைபதி தோறும் முறைமுறை மேவி
நறைகமழ் கோதையை நாடொறு நண்ணி
மறையுட னேநிற்கும் மற்றுள்ள நான்கும்
இறைதினைப் போதிடி லெய்திட லாமே.

விளக்கம்:

பாடல் #1202 இல் உள்ளபடி இறைவி தமக்கும் மிகவும் விருப்பமான கோயிலாகக் கொண்டிருக்கும் சாதகருடன் தொடர்ந்து பலகாலம் முறைப்படி அவரது தன்மையிலேயே கலந்து நிற்கின்ற இறைவியானவள் நறுமணம் கமழ்கின்ற மலர்களைச் சூடியிருக்கும் பேரழகு வாய்ந்த கூந்தலை உடையவளாக அவருக்குள்ளிருந்து எப்போதும் நறுமணம் வீசிக்கொண்டு சேர்ந்தே இருக்கின்றாள். இப்படி இருக்கின்ற இறைவியோடு சமாதி நிலையில் பலகாலம் இருந்தால் இறைவனுடன் அவனது அம்சமாகவும் அவனுக்கு சரிசமமாகவும் இருக்கின்ற நான்கு வேதங்களையும் இறைவனின் உண்மை ஞானத்தையும் ஒரு கண நேரத்தில் பெற்று உணர்ந்து விடலாம்.

கருத்து: சமாதி நிலையை அடைந்த சாதகருக்குள்ளிருந்து இறைவியானவள் நறுமணத்தை வீசிக்கொண்டே இருக்கின்றாள். இந்த நிலையில் பலகாலம் இருப்பவர்களுக்கு ஒரு கண நேரத்தில் இறைவனையும் அவரது அம்சமாக இருக்கின்ற வேங்களையும் உணர்ந்து கொள்ள முடியும்.




பாடல் #1204: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

எய்திட லாகு மிருவினை யின்பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாங்கன்னி
மைதவழ் கண்ணிநன் மாதுரி கையொடு
கைதவ மின்றி கருத்துறும் வாறே.

விளக்கம்:

பாடல் #1203 இல் உள்ளபடி ஒரு கண நேரத்தில் இறைவனையும் அவனது அம்சமான வேதங்களையும் உணர்ந்து கொண்ட சாதகர்கள் தங்களின் நல் வினை தீ வினை ஆகிய இரண்டு விதமான வினைகளையும் நீங்கப் பெற்று பார்த்தவுடன் கொய்ய நினைக்கும் அழகிய குருத்து இலைகளைக் கொண்ட இளம் கொடி போன்ற திருமேனியை உடையவளும் கன்னித் தன்மையோடு இருக்கும் பேரின்ப அமிழ்தத்தைக் கொடுக்கும் அழகிய திருமுலைகளைக் கொண்டு என்றும் இளமையாக இருப்பவளும் கருமையான மையைத் தீட்டியிருக்கும் பேரழகுடன் அருளுகின்ற கண்களை உடையவளும் நன்மையான இனிமையைக் கொடுக்கின்ற திருக்கரங்களை உடையவளும் ஆகிய இறைவியின் எண்ணங்களும் தமது எண்ணங்களும் ஒன்றாகப் பெற்று மாய எண்ணங்கள் எதுவும் இன்றி இருக்கும் வழியை அடைந்து விடுவார்கள்.

கருத்து: இறைவனையும் வேதங்களையும் உணரப் பெற்ற சாதகர்கள் தங்களின் இரண்டு விதமான வினைகளையும் நீங்கப் பெற்று இறைவியைப் போன்ற மென்மையான திருமேனியைப் பெற்று என்றும் இளமையுடன் இறைவியின் அருளால் பெற்ற பேரின்பத்தில் திளைத்து இருந்து இறைவியைப் போலவே தமது கண்களினால் அருளைக் கொடுக்கின்ற நிலையை அடைந்து தம்மை நாடி வந்தவர்களுக்கு அபயம் கொடுக்கின்ற திருக்கரங்களைப் பெற்று தமது மாயையான எண்ணங்கள் நீங்கி இறைவியின் எண்ணங்களும் தமது எண்ணங்களும் வேறில்லை என்ற நிலை பெற்று வீற்றிருப்பார்கள்.



பாடல் #1205: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கருத்துறுங் காலம் கருது மனமும்
திருத்தி யிருந்தவை சேரு நிலத்து
ஒருத்தியை யுன்னி யுணர்ந்திடு மண்மேல்
இருத்திடு மெண்குண மெய்தலு மாமே.

விளக்கம்:

பாடல் #1204 இல் உள்ளபடி சாதகரின் மாயையான எண்ணங்கள் நீங்கி இறைவியின் எண்ணமும் தமது எண்ணமும் வேறில்லை எனும் நிலை பெறும் போது அந்த ஒன்றுபட்ட எண்ணத்தில் வீற்றிருக்கும் இறைவியை மனதிலும் வைத்து வேறு எதிலும் செல்லாமல் தடுத்து நிறுத்தி தியானத்தில் வீற்றிருந்து எண்ணமும் மனமும் பாடல் #1201 இல் உள்ளபடி சாதகருக்குள் ஒரே இடமாக்கி அதிலிருந்து உருவாகும் மேல் நிலையான இறைவியை ஒருமுகமாக எண்ணி தியானித்தால் இந்த பிறவியிலேயே மேல் நிலையான இறைவியிடமிருந்து பெறக்கூடிய எட்டு விதமான சித்திகளையும் சாதகரால் பெற்றுக் கொள்ள முடியும்.



பாடல் #1206: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆமையொன் றேறி யகம்படி யானென
ஓமென்று வோதியெம் முள்ளொளி யாய்நிற்கும்
தாம நறுங்குழற் றையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடிநின் றாளே.

விளக்கம்:

ஆமை தனது தலையையும் நான்கு கால்களையும் ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளுவது போல சாதகர் தமக்குள் இருக்கும் ஐந்து புலன்களையும் வெளிப்புறத்தில் கவனம் செல்லாது தடுத்து தமக்குள் அடக்கி வைத்து ஓம் எனும் மந்திரத்தை ஓதிக்கொண்டே இருந்தால் சாதகருக்குள் சூழ்ந்திருக்கும் இருளுக்குள் மறைந்து உள்ளுக்குள் ஒளியாக நிற்கும் நறுமணம் வீசுகின்ற கூந்தலுடன் ஒன்றோடு ஒன்று தைப்பது போல சாதகரோடு பிண்ணிப் பிணைந்து இருக்கின்ற இறைவியை தரிசித்து விட்டால் அதன் பிறகு அவளே சாதகரின் தலை உச்சிக்கு மேலே இருக்கும் ஒன்பதாவது மண்டலமாகிய சந்திர மண்டலத்தில் நறுமணம் வீசுகின்ற மலர்களைச் சூடிக்கொண்டு இருக்கிறாள் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளலாம்.

கருத்து: சமாதியில் இருக்கும் சாதகருக்குள் மாயை எனும் இருளுக்குள் மறைந்து ஒளியாக இருக்கும் இறைவியை தனது ஐந்து புலன்களையும் அடக்கி ஓங்கார மந்திரத்தை செபிப்பதின் மூலம் தரிசித்து விட்டால் அதன் பிறகு அந்த மாயை இருள் நீங்கி பேரொளிப் பிரகாசமாக சந்திர மண்டலத்தில் வீற்றிருக்கின்ற இறைவியே தமக்குள் ஒளியாக இருக்கின்றாள் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளலாம்.



பாடல் #1207: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சூடிடு மங்குச பாசத் துளைவழி
கூடு மிருவளை கோலக்கைக் குண்டிகை
நாடு மிருபத நன்னெடு ருத்திரம்
ஆடிடு சீர்புனை யாடக மாமே.

விளக்கம்:

பாடல் #1206 இல் உள்ளபடி சந்திர மண்டலத்தில் நறுமணம் வீசுகின்ற மலர்களை சூடிக்கொண்டு இருக்கின்ற இறைவியானவள் தனது கைகளில் ஆணவத்தை அடக்குகின்றா அங்குசத்தையும் உயிர்களின் பிணைப்பாகிய பாசக் கயிறையும் வைத்துக் கொண்டு சுழுமுனை நாட வழியே சென்று அடைகின்ற இடமாக வீற்றிருக்கின்றாள். இரண்டு கைகளிலும் வளைகள் அணிந்து பேரழகு வாய்ந்த அவளது திருக்கரங்களில் உடுக்கையையும் நெருப்பு சட்டியையும் வைத்துக் கொண்டு சாதகர்கள் நாடுகின்ற இறைவன் இறைவி எனும் இரண்டு திருவடிகளைக் கொண்டு நன்மையின் வடிவமாக முலாதாரத்திலிருந்து சகஸ்ரதளம் வரை நீண்டு இருக்கும் சுழுமுனை நாடியில் உருத்திர நடராஜ வடிவமாக நின்று திருநடனம் புரிந்து கொண்டு இருக்கின்றாள். சீரும் சிறப்பும் மிக்க அவளோடு சாதகர்கள் ஒன்று சேர்ந்து விட்டால் அவரது உள்ளமே இறைவனும் இறைவியும் சேர்ந்து நடராஜ உருவமாக திருநடனம் புரிகின்ற அம்பலமாக மாறிவிடும்.

கருத்து: சந்திர மண்டலத்தில் பேரொளியாக வீற்றிருக்கும் இறைவியை தமக்குள் அறிந்து கொண்டு உணர்ந்து விட்ட சாதகர்கள் அவளோடு தாமும் ஒன்றாக சேர்ந்து விட்டால் அவரது உள்ளமே இறைவனும் இறைவியும் சேர்ந்து நடராஜ உருவமாக திருநடனம் புரிகின்ற அம்பலமாக ஆகிவிடும்.



பாடல் #1208: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆமயன் மாலர னீசன் சதாசிவன்
தாமடி சூடிநின் றெய்தினர் தம்பதங்
காமனுஞ் சாம னிரவி கனலுடன்
சோமனும் வந்தடி சூடநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1207 இல் உள்ளபடி அம்பலமாக ஆகிவிட்ட சாதகருக்குள் திருநடனம் புரிகின்ற நடராஜ உருவத் தத்துவத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்ற பிரம்மன் திருமால் உருத்திரன் மகேஸ்வரன் சதாசிவன் ஆகிய ஐந்து தேவர்களையும் தமக்குள் உணர்ந்து அவர்களின் திருவடிகளைத் தொழுது நின்று சாதகர் அவர்களின் திருவடிப் பேற்றை அடைந்தார். அவ்வாறு அடைந்த பிறகு சாதகருக்குள் தூமாயையாக இருக்கும் காமனாகிய ஆசையும் புதனாகிய பற்றுக்களும் சாதகர் சமாதி நிலையை அடைவதற்கு உதவுகின்ற சூரிய மண்டலம் மூலாதார அக்னி சந்திர மண்டலம் ஆகிய மூன்று அங்கங்களும் சேர்ந்து இறைவியை நாடி வந்து அவளின் திருவடியில் சரணாகதியாகத் தொழுது நிற்கும் போது இறைவி அவர்களை ஆட்கொண்டு வீற்றிருந்தாள்.



திருமந்திரம் – பாடல் #1209: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சூடு மிளம்பிறை சூலி கபாலினி
நீடு மிளங்கொடி நின்மலி நேரிழை
நாடி நடுவிடை ஞான முருவநின்
றாடு மதன்வழி யண்ட முதல்வியே.

விளக்கம்:

பாடல் #1208 இல் உள்ளபடி சாதகர்கள் நாடி வந்து திருவடியில் சரணாகதியாகத் தொழுது நிற்கும் போது அவர்களை ஆட்கொண்டு நிற்கின்ற இறைவியானவள் தன் திருமுடியில் இரு பக்கமும் கூர்மையான முனைகளைக் கொண்ட பிறைச் சந்திரனை சூடிக் கொண்டும் தனது திருக்கரத்தில் திரிசூலத்தை ஏந்திக் கொண்டும் திருக்கழுத்தில் மண்டை ஓடுகளை மாலையாக அணிந்து கொண்டும் நீண்டு வளர்ந்து என்றும் இளமையாக இருக்கும் பசுமையான கொடியைப் போலவும் எந்தவிதமான மலங்களும் இல்லாமல் தூய்மையானவளாகவும் அழகிய ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டும் வீற்றிருக்கின்றாள். நடுவில் இருக்கும் சுழுமுனை நாடியில் உண்மை ஞானத்தின் சொரூபமாய் நின்று பாடல் #1207 இல் உள்ளபடி அவள் ஆடுகின்ற திருக்கூத்தின் அசைவுகளுக்கு ஏற்ப அண்ட சராசரங்களையும் ஆட்டி வைத்து அனைத்திற்கும் முதல்வியாக இருக்கின்றாள்.



பாடல் #1210: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

அண்ட முதலாய் அவனி பரியந்தங்
கண்டதொன் றில்லை கனங்குழை யல்லது
கண்டனுங் கண்டியு மாகிய காரணங்
குண்டிகை கோளிகை கண்டத னாலே.

விளக்கம்:

பாடல் #1209 இல் உள்ளபடி அண்டத்தின் முதல்வியாய் இருக்கும் இறைவியே அண்ட சராசரங்கள் முதல் உலகங்கள் அனைத்திற்கும் ஆதியாகவும் அந்தமாகவும் இருந்து பரிபாலிக்கின்றாள் அவளைத் தவிர வேறொரு சக்தியை யாம் கண்டது இல்லை. இருந்தாலும் இறைவி மட்டும் தனியாக நின்று உலகங்கள் அனைத்திற்கும் முதல்வியாக இல்லாமல் சிவப் பரம்பொருளோடு கூடி நின்றே அனைத்திற்கும் முதல்வியாக இருக்கின்றதன் காரணம் உலகங்களில் இருக்கும் அனைத்து உயிர்களும் படைப்புக்கான இயற்கையில் ஆண் பெண் எனும் இரு நிலைகளில் நிற்பதே ஆகும்.



பாடல் #1211: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆலமுண் டானமு தாங்கவர் தம்பதஞ்
சாலவந் தெய்துந் தவத்தின்பந் தான்வருங்
கோலிவந் தெய்துங் குவிந்த பதவையோ
டேலவந்து ஈண்டி யிருந்தனள் மேலே.

விளக்கம்:

ஆலகால விஷத்தை தாம் ஏற்றுக் கொண்டு அமரத்துவம் தருகின்ற சிவ அமிழ்தத்தை விண்ணுலகத்தில் இருக்கும் தேவர்களுக்கு அருளிய இறைவனின் திருவடிகளை சரணாகதியாக கொண்டு வீற்றிருக்கும் சாதகர்களுக்கு இறைவன் தாம் தேவர்களுக்கு அருளிய சிவ அமிழ்தத்தைக் கொடுத்து இறப்பில்லாத நிலையை அருளுகின்றார். அதன் பிறகு அவர்கள் சிவ அமிழ்தம் அருந்தியதின் பயனாக சிவ இன்பமும் கிடைக்கப் பெற்று அதிலேயே இறைவனோடு சேர்ந்து வீற்றிருப்பார்கள். அப்போது குண்டலினி சக்தி வந்து சேருகின்ற இடமாகிய சுழுமுனை நாடியின் உச்சித் துளையில் நின்று ஆடுகின்ற இறைவியும் முன்னதாகவே வந்து இறைவனோடு சேர்ந்து தலை உச்சியிலுள்ள சகஸ்ரதளத்தில் வீற்றிருப்பாள்.



பாடல் #1212: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மேலா மருந்தவ மேன்மேலும் வந்தெய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலா நளினநின் றேத்திநட் டுச்சிதன்
மேலா மெழுத்தின ளாமத்தி னாளே.

விளக்கம்:

பாடல் #1211 இல் உள்ளபடி இறைவனோடு சேர்ந்து தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் வீற்றிருக்கும் இறைவியோடு குண்டலினி சக்தியை கொண்டு சேர்க்கும் மேன்மையான அரிய தவங்களை மேலும் மேலும் விடாமல் மேற்கொண்டு அதனால் கிடைக்கும் பலனை பெறாமலும் தமது மூச்சுக்காற்றை கட்டுப் படுத்தாமலும் உலகப் பற்றுக்களில் சிக்கி துன்பப்பட்டு தமது வாழ்நாளை வீணாகக் கழித்து ஒரு கண நேரத்தில் உயிரை விட்டுவிடுபவர்கள் பலர். அப்படி இல்லாமல் நான்கு இதழ்கள் கொண்ட மூலாதாரத்தில் அசைந்து ஆடுகின்ற குண்டலினி சக்தியை முறையாகச் செய்யும் தியானத்தின் மூலம் விடாமல் செய்து தமது உடலின் நடுவில் இருக்கும் சுழுமுனை நாடி வழியே மேலேற்றிச் சென்று அதன் உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்தில் சேர்த்து விட்டால் அங்கு அனைத்திற்கும் மேலானதாகிய ஓங்கார எழுத்தின் உருவமாக வீற்றிருக்கின்ற இறைவியானவள் சாதகருக்கு அமிழ்தத்தை கொடுத்து அதுவே உணவாக இருக்கும்படி செய்து அருளுவாள்.



பாடல் #1213: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயு மொருத்தி பொருந்தினள்
நாம நமசிவ யென்று இருப்பார்க்கு
நேமத் துணைவி நிலாவிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1212 இல் உள்ளபடி சாதகருக்கு அமிழ்தத்தை கொடுக்கின்ற இறைவியானவள் அதனால் கிடைக்கும் பேரின்பமாகவும் சாதகர் உண்ணும் உணவாகவும் இருந்து அந்த உணவைச் செரிக்க வைக்கின்ற நெருப்பாகவும் குண்டலினி சக்தியின் அக்னியாகவும் சாதகரோடு எப்போதும் சேர்ந்து இருக்கின்றாள். அவளது திருநாமமாகிய 'நமசிவ' எனும் மந்திரத்தை எண்ணி தியானத்தில் இருப்பவர்களுக்கு அவர்கள் தினந்தோறும் தவறாமல் கடைபிடிக்கும் நியமங்களுக்கு [பாடல் #556 இல் காண்க] துணையாகவும் இருந்து அவர்களுக்குள் முழுவதும் பரவி வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1214: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நிலாமய மாகிய நீள்படி கத்தின்
சிலாமய மாகுஞ் செழுந்தர ளத்தின்
சுலாமய மாகுஞ் சுரிகுழற் கோதை
கலாமய மாகக் கலந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1213 இல் உள்ளபடி சாதகருக்குள் முழுவதும் பரவி வீற்றிருக்கும் இறைவியானவள் நிலவைப் போன்ற குளிர்ந்த ஒளியை வீசும் நீண்ட படிகக் கல்லைப் போன்ற வெண்மையை உடையவள். கல்லால் செதுக்கப்பட்ட சிலையைப் போன்ற அழகிய வடிவத்துடன் சிறந்த முத்துப் போன்ற இயல்பிலேயே பிரகாசிக்கும் தன்மையை உடையவள். சுருண்டு இருக்கும் அழகிய கூந்தலில் வாசனை மிக்க மலர்களை சூடியிருப்பவள். அவள் சாதகருக்குள்ளிருந்து பாடல் #1189 இல் உள்ளபடி உடலின் இயக்கத்திற்கு உதவும் பதினாறு கலைகளாகக் கலந்து நிற்கின்றாள்.



பாடல் #1215: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

கலந்துநின் றாள்கன்னி காதல னோடுங்
கலந்துநின் றாளுயிர் கற்பன வெல்லாங்
கலந்துநின் றாள்கலை ஞானங்க ளெல்லாம்
கலந்துநின் றாள்கன்னி காலமு மாமே.

விளக்கம்:

பாடல் #1214 இல் உள்ளபடி சாதகருக்குள் கலந்து நிற்கின்ற இறைவியானவள் தாமாகத் தனித்து இல்லாமல் என்றும் இளமையுடன் இறைவனுடன் சேர்ந்தே இருக்கின்றாள். அவள் உயிர்கள் அனைத்தும் கற்கின்ற கல்விகளாகவும் அந்த கல்வியைக் கொண்டு செய்கின்ற அனைத்து செயல்களுக்கான அறிவாகவும் இருக்கின்றாள். அவளே என்றும் இளமையுடன் அனைத்து விதமான காலங்களாகவும் இருக்கின்றாள்.



பாடல் #1216: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

காலவி யெங்குங் கருத்து மருத்தியுங்
கூலவி யொன்றாகுங் கூட லிழைத்தனள்
மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி பாலவன் பாகம தாமே.

விளக்கம்:

பாடல் #1215 இல் உள்ளபடி அனைத்து விதமான காலங்களாகவும் இருக்கின்ற இறைவியே உயிர்களின் எண்ணத்தையும் அதிலிருந்து வரும் ஆசைகளையும் அவரவர்களின் கர்ம நிலைகளுக்கு ஏற்ப கைகூட வைக்கின்றவள். சாதகரோடு ஒன்றாகச் சேர்ந்து இருந்து என்றும் பிரியாமல் இருக்கும் தன்மையை அவருக்கு அருளியவள். அந்த இறைவியே திருமாலின் தங்கையாகிய பார்வதியாகவும் அனைத்திற்கும் மேலானவளாகவும் மந்திரங்களின் சக்தியாகவும் தீய சக்திகளை புயல் போல் அடித்து விரட்டுகின்ற சண்டிகையாகவும் அருள் பாலிக்கின்றவளாகவும் அருள் பாலிக்கின்ற இறைவனோடு சரிசமமான பாகமாகவும் இருக்கின்றாள்.



பாடல் #1217: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பாகம் பராசத்தி பைம்பொற் சடைமுடி
ஏக மிருதய மீரைந்து திண்புயம்
மோக முகமைந்து முக்கண் முகந்தொறும்
நாக முரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே.

விளக்கம்:

பாடல் #1216 இல் உள்ளபடி அருள் பாலிக்கின்ற இறைவனோடு சரிசமமான பாகமாக இருக்கின்ற பராசக்தியான இறைவியின் சரிபாதியாக இருக்கின்ற இறைவன் பசும் பொன்னால் பின்னப்பட்டது போல பொன் நிறத்தில் மின்னும் சடையை அணிந்த முடியை உடையவர். இறைவியும் தாமும் ஒன்றாகவே இருக்கின்ற மனதைக் கொண்டு பத்து திசைகளையும் தாங்கி நிற்கும் வலிமையான பத்து தோள்களைக் கொண்டவர். அடியவர்களைத் தம்பால் ஈர்க்கின்ற ஐந்து திருமுகங்களைக் கொண்டு அந்த ஐந்து முகத்திலும் மூன்று திருக் கண்களை உடையவர். காட்டு யானையின் தோலை உரித்து தமக்கு ஆடையாக அணிந்து போர்த்திக் கொண்டு முயலகனின் மேல் நின்று திருநடனம் ஆடுகின்ற நடராஜராக இறைவியின் சரிபாகமாக இருக்கின்றார்.



பாடல் #1218: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நாதனும் நாலொன் பதின்மருங் கூடிநின்
றோதிடுங் கூட்டங்க ளோரைந் துளஅவை
வேதனு மீரொன் பதின்மரு மேவிநின்
றாதியு மந்தமு மாகிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1217 இல் உள்ளபடி இறைவியின் சரிபாகமாக இருக்கின்ற இறைவனின் அம்சமாக இருக்கும் சாதகரின் ஆன்மாவோடு 36 தத்துவங்களும் இனிமையுடன் பெருகி ஒன்றாகக் கூடி சாதகருக்குள் வீற்றிருந்து இறைவனை வணங்குவதற்கு உதவுகின்ற ஐந்து புலன்களாகவும் உடலாகவும் இருக்கின்றன. அதன் பிறகு சாதகரின் உடலே பிரம்மனாகவும் 18 விதமான தேவ கணங்களாகவும் இனிமையுடன் பெருகிப் பரவி வீற்றிருந்து இறைவியைத் துதிக்கும் போது அவள் சாதகருக்குள் முதலாகவும் முடிவாகவும் வீற்றிருந்து அருளுவாள்.

கருத்து: சாதகருக்குள்ளிருக்கும் 36 தத்துவங்களாகவும் ஐந்து புலன்களாகவும் பிரம்மனாகிய உடலாகவும் 18 விதமான தேவ கணங்களாகவும் இறைவியே இருப்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.

பாடல் #467 இல் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

18 விதமான தேவ கணங்கள்:

1. சுரர் - உலக இயக்கத்திற்கு உதவும் தேவ லோகத்து தேவர்கள்.
2. சித்தர் - இறை நிலையில் இருப்பவர்கள்.
3. அசுரர் - அசுரர்கள்.
4. தைத்தியர் - அரசுரர்களில் ஒரு பிரிவினரான தானவர்கள்.
5. கருடர் - கருடர்கள்.
6. கின்னரர் - நடனம் ஆடுவதில் வல்லவர்கள்.
7. நிருதர் - அரக்கர்கள்.
8. கிம்புருடர் - யாளி என்று அழைக்கப்படும் சிங்க முகமும் மனித உருவமும் கொண்ட கணங்கள்.
9. காந்தர்வர் - கந்தவர்கள் (தேவர்களுக்கு அடுத்த நிலை).
10. இயக்கர் - யட்சர்கள்.
11. விஞ்சையர் - கலைகளில் பெரும் ஞானம் உடையவர்கள்.
12. பூதர் - சிவனுக்கு சேவர்களாக இருக்கும் பூத கணங்கள்.
13. பிசாசர் - கொடூரமான கோபக் குணத்துடன் வடிவமற்றவர்கள்.

14. அந்தரர் - சுவர்க்க லோகத்தில் இருக்கும் தேவர்கள்.
15. யோகர் - ரிஷிகளும் முனிவர்களும்.
16. உரகர் - நாகர்கள்.
17. ஆகாய வாசர் - விண்ணுலக வாசிகள்.
18. விண்மீன் நிறைகணம் - நட்சத்திர மண்டலங்களில் நிறைந்திருக்கும் கணங்கள்.



பாடல் #1219: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆகின்ற நாள்கலை ஐம்பத் தொருவர்கள்
ஆகிநின் றார்களி லாருயி ராமவள்
ஆகிநின் றாளுட னாகிய சக்கரத்
தாகிநின் றானவ னாயிழை பாடே.

விளக்கம்:

பாடல் #1218 இல் உள்ளபடி ஆதியும் அந்தமுமாக சாதகருக்குள் வீற்றிருக்கும் இறைவியாகவே மாறி விடுகின்ற சாதகர்கள் காலமாகவும் கலைகளாக இருக்கின்ற ஐம்பத்தொரு தத்துவங்களாகவும் ஆகி நிற்கின்ற போது அவருடைய ஆருயிராக இறைவியே இருக்கின்றாள். இவ்வாறு இறைவியாகவே ஆகி நிற்கின்ற சாதகருடன் இறைவியும் சேர்ந்து நின்று சக்தி மயங்களாக வீற்றிருக்கும் போது இறைவனும் அழகிய ஆபரணங்களை அணிந்திருக்கும் இறைவியுடன் சரிபாகமாக சேர்ந்து வீற்றிருக்கின்றார்.

கருத்து: சாதகருடைய ஆருயிராகவே இறைவி வீற்றிருக்கும் விதத்தை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1220: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆயிழை யாளொடு மாதிப் பரமிடம்
ஆயதோ ரண்டவை யாறு மிரண்டுள
ஆய மனந்தோ றறுமுக மவைதனில்
ஏயவார் குழலி யினிதுநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1219 இல் உள்ளபடி சக்திமயமாக மாறிய சாதகரின் உடலுக்குள் வந்து வீற்றிருக்கும் அழகிய ஆபரணங்களை அணிந்த இறைவியோடு ஆதிப் பரம்பொருளாகிய இறைவனும் சேர்ந்து வீற்றிருக்கின்றார். அப்போது சாதகர் தமது எண்ணத்தால் அவர்களை நோக்கி நெருங்கிச் செல்லும் போது அவர்கள் இருவரும் சேர்ந்த அம்சமானது சாதகரின் உடலுக்குள் இருக்கின்ற ஆறு ஆதாரச் சக்கரங்களும் அவரது தலை உச்சியில் இருக்கின்ற சகஸ்ரதளமும் தலை உச்சியைத் தாண்டி இருக்கின்ற துவாதசாந்த வெளியும் ஆகிய எட்டு இடங்களிலும் வந்து வீற்றிருக்கும். அதன் விளைவால் புனிதமாக மாறிய சாதகரின் மனமும் அவருக்குள் இருக்கின்ற ஆறு ஆதாரச் சக்கரங்களும் இறைவியின் திருமுகமாக மாறி அதில் நறுமணம் வீசுகின்ற நீண்ட கூந்தலையுடைய இறைவி இனிமையாக வீற்றிருக்கின்றாள்.

கருத்து: சாதகருக்குள் வீற்றிருக்கின்ற இறைவனும் இறைவியும் சாதரின் எண்ணத்தால் நெருங்கும் பொழுது அவருக்குள் இருக்கின்ற எட்டு இடங்களிலும் வீற்றிருந்து அதன் விளைவால் அவரது மனதை இறைவியின் தூய்மையான மனமாகவே மாற்றுகின்ற விதத்தை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1221: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நின்றனள் நேரிழை யோடுட னேர்பட
இன்றெ னகம்படி யேழு முயிர்ப்பெய்துந்
துன்றிய வோரொன் பதின்மருஞ் சூழலுள்
ஒன்றுயர் வோதி யுணர்ந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1220 இல் உள்ளபடி சாதகருக்குள் இனிமையாக வீற்றிருக்கும் இறைவியானவள் தமது மேலான நிலைக்கு ஏற்ற அழகிய அணிகலன்களை அணிந்து கொண்டு சாதகரோடு சேர்ந்து அவருக்குள் நீண்டு பரவி இருக்கும் ஒரு பொழுதிலேயே சாதகருக்குள் இருக்கும் ஏழு சக்கரங்களும் மேன்மையான நிலையில் சக்தியூட்டம் பெறுகிறது. அதன் பிறகு சாதகருக்குள் இருக்கும் பத்து வாயுக்களும் [பாடல் #595 இல் காண்க] ஒன்றாகச் சேர்ந்து உயர்ந்த நிலையில் பிராணனாக மாறி அதில் இறைவியின் நாமம் எப்போதும் இயல்பிலேயே இடைவிடாமல் ஓதிக் கொண்டே இருக்கும் போது இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் உண்மை நிலையை சாதகர் பரிபூரணமாக உணர்ந்து கொள்ளும்படி இறைவி அவருக்குள் நின்று அருள்புரிகின்றாள்.

கருத்து: சாதகரின் உடலுக்குள் இருக்கின்ற பத்து வாயுக்களும் ஒன்றாகச் சேர்ந்து உயர்ந்த நிலையில் பிராணனாக மாறும் பொழுது அதில் இறைவியின் நாமம் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கும் போது சாதகரால் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கின்ற உண்மை நிலையை பரிபூரணமாக உணர்ந்து கொள்ள முடியும் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1222: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உணர்ந்தெழு மந்திர மோமெனு முள்ளே
மணந்தெழு மாங்கதி யாதிய தாகுங்
குணந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காமுகை யாமே.

விளக்கம்:

பாடல் #1221 இல் உள்ளபடி இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் உண்மை நிலையை சாதகர் பரிபூரணமாக உணர்ந்து கொள்ளும் பொழுது அவருக்குள்ளிருந்து எழுகின்ற மந்திரமானது ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளாகும். சாதகர் அந்த உட்பொருளை உணர்ந்து கொள்ளும் பொழுது அவருக்குள்ளிருந்து நறுமணத்துடன் எழுகின்ற உட்பொருளே அவர் சென்று சேருகின்ற இறுதியான இடமாகவும் ஆதிப் பரம்பொருளாகவும் இருக்கின்றது. அந்த ஆதிப் பரம்பொருளான உட்பொருளின் இரண்டு தன்மைகளாக இதுவரை ஒளிந்து கொண்டிருக்கும் கள்வனாகிய இறைவனும் கள்வியாகிய இறைவியும் வெளிப்பட்டு ஒன்றாகச் சேர்ந்து இறைவனின் மேல் பேரன்பு கொண்ட இறைவியின் திருவுருவமாக சாதகருக்கு காட்சி கொடுப்பார்கள்.

கருத்து: உண்மையை அறிந்து கொண்டால் உயிர்களால் தங்களின் கர்மங்களை அனுபவத்து கழிக்க முடியாது என்பதால் மறக்கருணையால் அனைத்தையும் மாயையால் மறைந்து சூதானமாக ஓங்கார மந்திரத்தின் உட்பொருள் தத்துவமாக உயிர்களுக்குள்ளேயே மறைந்து இருக்கின்ற இறைவனும் இறைவியும் எப்படி இருக்கின்றார்கள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1223: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆமது அங்கியு மாதியு மீசனும்
மாமது மண்டல மாருத மாதியும்
ஏமது சீவன் சிகையங் கிருண்டிடக்
கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே.

விளக்கம்:

பாடல் #1222 இல் உள்ளபடி சாதகர் தமக்குள் காணும் இறைவனின் மேல் பேரன்பு கொண்ட இறைவியின் திருவுருவமானது அக்னியாகவும் ஆதிப் பரம்பொருளாகவும் இறைவனாகவும் மிகப் பெரியதாக விரிந்து பரவி இருக்கும் அக்னி சூரிய சந்திர ஆகிய மூன்று மண்டலங்களாகவும் வாயு முதலாகிய ஐந்து பூதங்களாகவும் அதிலிருந்து உருவாகி உலகத்திற்கு இறங்கி வருகின்ற உயிராகவும் அந்த உயிரைத் தாங்கி இருக்கின்ற உடலாகவும் அதற்குள் உண்மையை மறைத்துக் கொண்டு இருக்கும் மாயையாகவும் இருக்கின்றது. அந்த இறைவியே மேன்மை மிகுந்த மலர்களைச் சூடிக்கொண்டு இருக்கும் பேரழகு பொருந்திய கூந்தலுடன் சாதகரின் உடலைத் தாங்கிக் கொண்டு நடுவில் இருகின்ற சுழுமுனை நாடியாகவே இருக்கின்றாள்.

கருத்து: பாடல் #1222 இல் சாதகருக்குள் காட்சி கொடுத்த இறைவியின் திருவுருவம் சாதகருக்குள் இருக்கின்ற விதத்தை இந்த பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1224: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆகிய கோதண்டத் தாகு மனோன்மணி
ஆகிய வைம்ப துடனே யடங்கிடும்
ஆகும் பராபரை யோடப் பரையவள்
ஆகும் அவள்ஐங் கருமத்தள் தானே.

விளக்கம்:

பாடல் #1223 இல் உள்ளபடி சாதகரின் உடலைத் தாங்கிக் கொண்டு இறைவியாகவே இருகின்ற சுழுமுனை நாடியில் வீற்றிருக்கின்ற சக்தியாக இறைவனும் இறைவியும் ஒன்றாகச் சேர்ந்த மனோன்மணி இருக்கின்றாள். பாடல் #1222 இல் உள்ளபடி ஓங்காரம் எழுகின்ற இந்த சுழுமுனை நாடிக்குள் இருந்து வெளிப்படும் பாடல் #955 இல் உள்ளபடி அதன் அட்சரங்களான ஐம்பது அட்சரங்களும் மனோன்மணிக்குள்ளேயே அடங்கி விடும். மனோன்மணி சக்தியாக சுழுமுனை நாடியில் வீற்றிருப்பதே அசையா சக்தியும் அசையும் சக்தியும் ஒன்றாகச் சேர்ந்த பராபரையும் அதில் சரிபாதியாகிய அசையும் சக்தியாகிய பரை எனும் இறைவியும் ஆகும். இந்த இறைவியே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து விதமான தொழில்களைப் புரிந்து கொண்டு இருக்கின்றாள்.



பாடல் #1225: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தானிகழ் மோகினி சார்வான யோகினி
போன மயமுடை யாரடி போற்றுவர்
ஆனவ ராவியி னாகிய அச்சிவத்
தானாம் பரசிவ மேலது தானே.

விளக்கம்:

பாடல் #1224 இல் உள்ளபடி ஐந்து தொழில்களையும் புரியும் இறைவியை தமக்குள் அறிந்து கொண்ட சாதகர் அவருக்குள் எப்போதும் இயங்கிக் கொண்டு இருக்கின்ற குண்டலினி சக்தியையும் அதைச் சார்ந்து இருக்கின்ற யோகத்தின் காரியமாக விளங்கும் சக்தியையும் தாண்டி மேல் நிலைக்குச் சென்று பராசக்தியின் தன்மையை அடைந்து அவளின் திருவடியைப் போற்றி வணங்குவார்கள். அவ்வாறு இறைவியின் திருவடிகளைப் போற்றி வணங்கிக் கொண்டு இருக்கும் சாதகர்களின் ஆன்மா பரம்பொருளாகிய இறைவனின் அம்சமான சிவம் எனும் நிலையை அடைந்து அதையும் தாண்டி அனைத்திற்கும் மேலான நிலையில் இருக்கும் அசையா சக்தியாகிய பரசிவத்தோடு ஒன்றாகக் கலந்துவிடும்.

கருத்து: பராசக்தியின் நிலையை அடைந்த சாதகர்கள் அவளின் திருவடிகளை போற்றி வணங்கிக் கொண்டே இருந்தால் இறைவனின் அம்சமான சிவம் எனும் நிலையை அடைந்து அதன் பிறகு அனைத்திற்கும் மேலான அசையா சக்தியாகிய பரசிவத்தோடு கடலில் கலந்த மழை நீரைப் போல ஒன்றோடு ஒன்று வேறுபாடின்றி கலந்துவிடுவார்கள்.



பாடல் #1226: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தானந்த மேலே தருஞ்சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி யம்பொற் றிருவொடு
மோனையில் வைத்து மொழிதரு கூறது
ஆனவை யோமெனு மவ்வுயிர் மார்க்கமே.

விளக்கம்:

பாடல் #1225 இல் உள்ளபடி பரசிவமாகவே ஆகிவிட்ட சாதகருடைய தலை உச்சிக்கு மேல் இருக்கின்ற பரவெளியில் பேரொளியாக வீற்றிருக்கும் சிவத்தின் சடை முடியாக வருகின்ற ஒளிக்கீற்றுகளே பேரின்பத்தில் அசைந்து ஆடுகின்ற சக்தியாகவும் அவளது தூய்மையான பொன் போன்ற திரு உருவமாகவும் இருக்கின்றது. இவர்கள் இருவரையும் முதன்மையாக வைத்து ஓதுகின்ற அனைத்து மந்திரங்களுக்குள்ளும் சரிசமமான பாகமாக இருப்பது அனைத்துமாகிய ஓம் எனும் பிரணவ மந்திரமாகும். இந்தப் பிரணவ மந்திரத்துக்குள் அடங்கி இருக்கின்ற அனைத்து உயிர்களுக்கும் இறைவனை நோக்கி சென்று அடைகின்ற வழியாக அதுவே இருக்கின்றது.



பாடல் #1227: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மார்க்கங்க ளீன்ற மனோன்மணி மங்கலி
யார்க்கு மறிய அரியா ளவளாகும்
வாக்கும் மனமும் மருவியொன் றாய்விட்ட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாகுமே.

விளக்கம்:

பாடல் #1226 இல் உள்ளபடி பிரணவ மந்திரத்துக்குள் அடங்கி இருக்கின்ற அனைத்து உயிர்களுக்கும் இறைவனை நோக்கி சென்று அடைகின்ற வழிகளை கொடுத்து அருளிய இறைவியானவள் இறைவனும் இறைவியும் சேர்ந்த மனோன்மணியாக நன்மையின் வடிவமாகவே இருக்கின்றாள். எவராலும் அவ்வளவு எளிதில் அறிந்து கொள்வதற்கு மிகவும் அரிதானவளாக அவள் இருக்கின்றாள். சிற்றறிவின் சிந்தனைகளையும் அதன் மூலம் நிகழும் செயல்களையும் விட்டு விட்டு இறைவனோடு ஒன்றாகிவிட்ட பேரறிவை நோக்கி செல்லுகின்ற சிறப்பை பெற்ற சாதகர்களுக்கு பேரறிவின் நுண்ணியமான அறிவாக இறைவியே இருக்கின்றாள்.



பாடல் #1228: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நுண்ணறி வாகும் நுழைபுலன் மாந்தர்க்குப்
பின்னறி வாகும் பிரானறி வாற்றடஞ்
செந்நெறி யாகும் சிவகதி சேர்வார்க்குத்
தன்னெறி யாவது சன்மார்க்க மாமே.

விளக்கம்:

பாடல் #1227 இல் உள்ளபடி பேரறிவை நோக்கி செல்லுகின்ற சாதகர்களுக்கு பேரறிவின் நுண்ணியமான அறிவாக இருக்கின்ற இறைவியே அவர்களுக்கு புத்தி நுட்பமான அறிவைக் கொடுக்கின்றாள். அவர்களுக்குப் பின்னால் இருந்து ஆட்டுவிக்கின்ற அறிவாக இருப்பது இறைவனுடைய பேரறிவாகும். சிவத்தோடு ஒன்றாக கலக்க வேண்டும் என்று இறைவனது பேரறிவை அறிந்து கொண்டு அதன் வழியே செல்லுகின்ற சாதகர்களுக்கு அவர்கள் செல்லுகின்ற செம்மையான வழிமுறையாக இருப்பதுவே சன்மார்க்கம் என்று அழைக்கப் படுகின்றது.



பாடல் #1229: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சன்மார்க்க மாகுஞ் சமைதரு மார்க்கமுந்
துன்மார்க்க மானவை யெல்லாந் துரந்திடும்
நன்மார்க்க தேவரும் நன்னெறி யாவதுஞ்
சன்மார்க்க தேவியுஞ் சத்தியென் பாளே.

விளக்கம்:

பாடல் #1228 இல் உள்ளபடி இறைவனை அடைவதற்கு செல்லுகின்ற செம்மையான வழிமுறையாக இருக்கும் சன்மார்க்கமே அனைத்து சமயங்களும் இறைவனை அடைவதற்கு தருகின்ற பலவித வழிகளாக இருக்கின்றது. பொய்யான வழிகள் அனைத்தும் உண்மையான ஞான வழியில் நடப்பவர்களை விட்டு தானாகவே விலகி விடும். நன்மையான வழிகளை அருளி காப்பாற்றுகின்ற அனைத்து விதமான தேவர்களாகவும், நன்மையான வழிமுறையாகவும், உண்மையான ஞான வழியில் சென்று அடையும் அருட் சக்தியாகவும் ‘சக்தி’ என்று எந்த அடைமொழியும் இல்லாமல் அழைக்கப்படுகின்ற இறைவியே இருக்கின்றாள்.



பாடல் #1230: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சத்தியு நானுஞ் சயம்புவு மல்லது
முத்தியை யாரும் முதலறி வாரில்லை
அத்திமேல் வித்திடி லத்தி பழுத்தக்கால்
மத்தியி லேற வழியது வாமே.

விளக்கம்:

பாடல் #1229 இல் உள்ளபடி உண்மையான ஞான வழியில் சென்று அடையும் அசையும் சக்தியாகிய இறைவியும் ஆன்மாவும் தானாகவே இருக்கின்ற அசையா சக்தியாகிய இறைவனும் இல்லாமல் முக்திக்கான ஆரம்பம் எது என்பதை அறிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. மூலாதார சக்தியின் மீது மூச்சுக்காற்றைச் செலுத்தி தியானம் செய்தால் அந்த மூலாதார சக்தியானது சக்தியூட்டம் பெற்று அதன் பிறகு மூச்சுக்காற்றின் மூலம் உடலின் நடுவில் இருக்கும் சுழுமுனை நாடித் துளை வழியே மேலே ஏறிச் சென்று சகஸ்ரதளத்தை அடைவதே முக்திக்கான ஆரம்பத்தை அறிந்து கொள்ளும் வழியாகும்.

கருத்து: முக்திக்கான ஆரம்ப நிலையை அறிந்து கொள்ள ஒன்று இறைவியைத் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லது ஆன்மாவாக இருக்கும் தான் யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் அல்லது அசையா சக்தியாக இருக்கின்ற இறைவனைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த மூன்று வழிகளிலும் தெரிந்து கொள்ள முடியாதவர்களுக்கு இருக்கும் இன்னொரு வழியே குண்டலினி யோகம். அதையும் அறிந்தவர்கள் யாரும் இல்லை. அத்திப் பழத்தின் தன்மையில் அது பூப்பதையோ காய்ப்பதையோ யாரும் பார்க்க முடியாது அது பழுத்த பிறகே தெரிய வரும். அதுபோலவே மூலாதார சக்தியானது சக்தியூட்டம் பெறுவதையோ அது மேலேறிச் செல்வதையோ யாரும் அறிந்து கொள்ள முடியாது ஆனால் அது சகஸ்ரதளத்தை அடைந்த பிறகு அங்கிருக்கும் இறை சக்தியை உணர்ந்து கொள்ள முடியும் அதுவே முக்திக்கான ஆரம்பத்தை அறிந்து கொள்ளும் வழியாகும்.

[தனிக்குறிப்பு: அத்தி மரத்தில் இலையில் மூன்று நரம்புகள் இருக்கும் அதுபோலவே சுழுமுனை நாடியின் உச்சி சென்று முடியும் பகுதியில் பாடல் #339 இல் உள்ளபடி மூன்று ஒளிகள் உள்ளது இதுவே திரிசூலம் என்று மூன்று நரம்புகள் கொண்ட இலையைக் குறிக்கிறது.]



பாடல் #1231: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

அதுவிது வென்றவ மேகழி யாதே
மதுவிரி பூங்குழல் மங்கைநல் லாளைப்
பதிமது மேவிப் பணியவல் லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிட லாமே.

விளக்கம்:

பாடல் #1230 இல் உள்ளபடி முக்திக்கான ஆரம்பத்தை அறிந்து கொள்ளும் சரியான வழியை தெரிந்து கொள்ளாமல் அது என்றும் இது என்றும் பலவிதமான வழிகளில் சென்று வாழ்நாட்களை வீணாகக் கழிக்காமல் அடியவர்களை மயக்கும் தேன் கொண்டு மலர்ந்து இருக்கும் நறுமணம் மிக்க பூக்களைச் சூடியிருக்கும் அழகிய கூந்தலுடன் என்றும் இளமையுடன் இருக்கும் நன்மையின் வடிவான இறைவியும் அவளோடு சேர்ந்து இறைவனும் தமக்குள் வீற்றிருக்கும் சகஸ்ரதளத்தில் தமது குண்டலினி சக்தியை பாடல் #1230 இல் உள்ளபடி சுழுமுனை நாடியின் வழியே மூலாதாரத்திலிருந்து மேலேற்றிச் சென்று சேர்த்து அங்கிருக்கும் அமிழ்தத்தைப் பருகி அங்கிருக்கும் இறைவனையும் இறைவியையும் உணர்ந்து அவர்களைப் பணிந்து வணங்க முடிந்தவர்களுக்கு அவர்களின் விதி என்று சொல்லப்படும் அனைத்து கர்மங்களையும் ஆணவத்தையும் மாயையும் வென்றுவிட முடியும்.



பாடல் #1232: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே.

விளக்கம்:

பாடல் #1231 இல் உள்ளபடி இறைவனையும் இறைவியையும் உண்மையாக உணர்ந்து அவர்களைப் பணிந்து வணங்க முடிந்தவர்களால் விதியென்று சொல்லும் அனைத்து கர்ம வழிகளையும் அதனால் இருக்கும் ஆணவத்தையும் மாயையும், வினையினால் உருவாகும் பெரும் பந்த பாசத்தையும், ஆசையை உருவாக்கி மயக்குகின்ற ஐந்து புலன்களையும் அதனால் வருகின்ற ஆசைகளையும் வென்று விட முடியும்.



பாடல் #1233: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஓரைம் பதின்மருள் ஒன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரமிது
மாரங் குழலாளு மப்பதி தானுமுன்
சாரும் பதமிது சத்திய மாமே.

விளக்கம்:

பாடல் #1232 இல் உள்ளபடி உண்மையான ஞானத்தை உணர்ந்து தெளிந்தவர்கள் அறிந்து கொண்ட மெய்யுணர்வாக இருக்கின்ற ஐம்பத்தோரு அட்சரங்களாகவும் அந்த அட்சரங்களுக்கு தேவதைகளாக பாரம்பரியமாக தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டு இருக்கின்ற அனைத்து தேவர்களுக்குள்ளும் ஒன்றாகக் கலந்து நிற்பது பரம்பொருளாகும். அந்தப் பரம்பொருளும் நறுமணமும் மருத்துவ குணமும் கொண்ட கோடக மலர்களைச் சூடியிருக்கும் கூந்தலைக் கொண்ட இறைவியையும் முதன்மையாகக் கொண்டு அவர்களைச் சார்ந்து இருக்கின்ற மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு அருளுகின்ற திருவடிகளாகவும் சத்தியத்தின் உருவமாகவும் இருக்கின்றது சிவசக்தியே ஆகும்.



பாடல் #1234: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

சத்தியி னோடு சயம்புவும் நேர்படில்
வித்தது வின்றியே யெல்லாம் விளைந்தன
அத்தகை யாகிய ஐம்பத் தொருவருஞ்
சித்துஅது மேவித் திருந்திடு வாரே.

விளக்கம்:

பாடல் #1233 இல் உள்ளபடி இறைவனையும் இறைவியையும் முதன்மையாகக் கொண்டு அவர்களைச் சார்ந்து இருக்கின்ற சாதகர்கள் சத்தியத்தின் உருவமாக இருக்கின்ற இறைவியோடும் தாமாகவே தோன்றி எப்போதும் இருக்கின்ற இறைவனோடும் தாமும் ஒன்றாகச் சேர்ந்து இருக்கின்ற உண்மையான ஞானத்தை உணர்ந்து விட்டால் விதை போட்டால் பயிர் வளரும் என்கிற உலக நியதிக்கு எதிராக விதை போடாமலே அனைத்து பயிர்களும் விளைந்து விடும் அதிசயம் போல அனைத்து ஞானங்களும் அவர் முயற்சி செய்யாமலேயே இறையருளால் அவருக்கு கிடைக்கப் பெறும். அது போலவே பாடல் #1224 இல் உள்ளபடி அவருக்குள்ளிருந்து வெளிப்பட்ட ஐம்பத்தோரு அட்சரங்களும் அவற்றுக்கு அதிபதியான தேவர்களும் அவரின் சித்தத்தில் இருக்கும் சிவத்தோடு கலந்து அவரின் சிந்தனைக்குள் இருக்கும் மும்மலங்களால் ஆன அனைத்து எண்ணங்களும் நீங்கி மொத்தமும் நன்மையாகவே அவர் மாறிவிடுவார்.




பாடல் #1235: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

திருந்து சிவனுஞ் சிலைநுத லாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த
அருந்திட அவ்விட மாரமு தாக
இருந்தனள் தானங் கிளம்பிறை யென்றே.

விளக்கம்:

பாடல் #1234 இல் உள்ளபடி தமது சிந்தனைக்குள் இருக்கும் மும்மலங்களால் ஆன அனைத்து எண்ணங்களும் நீங்கி மொத்தமும் நன்மையாகவே மாறிவிட்ட சாதகருக்குள் வீற்றிருக்கின்ற சிவனும் வில் போன்ற வளைந்த நெற்றியைக் கொண்ட இறைவியும் அவர்களோடு சேர்ந்து வந்து வீற்றிருக்கும் விண்ணுலகத்து தேவர்களும் சாதகருக்குள் இருக்கும் ஒன்றான அம்சத்தை புகழ்ந்து போற்றி வணங்கி வழிபட அவர்கள் அருந்துவதற்கு அந்த இடத்திலேயே எப்போதும் தெகிட்டாத அமிழ்தமாகவும் வளர் பிறைச் சந்திரனாகவும் இறைவியே இருக்கின்றாள்.



பாடல் #1236: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

என்று மெழுகின்ற ஏரினை யெய்தினார்
அன்றது வாகுவர் தாழ்குழ லாளொடு
மன்றரு கங்கை மதியொடு மாதவர்
துன்றிய தாரகை சோதிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1235 இல் உள்ளபடி எப்போதும் தெகிட்டாத அமிழ்தமாக எழுச்சியோடு இருந்து கொண்டே இருக்கின்ற பேரழகு வாய்ந்த இறைவியை தமக்குள் உணர்ந்து அடைந்தவர்கள் அடைந்த அந்தப் பொழுதிலேயே இறைவியாகவே ஆகிவிடுவார்கள். அவர்களோடு நீண்ட கூந்தலை உடைய இறைவியும் தீயவற்றை நீக்கி தூய்மையைத் தருகின்ற கங்கையாகவும் குளிர்ந்த ஒளியைத் தருகின்ற நிலவாகவும் மாபெரும் தவத்தைப் புரிந்த சாதகர்களோடு எப்போதும் பொருந்தி இருக்கின்ற நட்சத்திரம் போன்ற பேரொளிப் பிழம்பாகவும் நிற்கின்றாள்.



பாடல் #1237: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நின்றனள் நேரிழை யாளொடு நேர்பட
ஒன்றிய வுள்ளொளி யாலே யுணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடு ஞானங்கள் தோன்றிடுந் தானே.

விளக்கம்:

பாடல் #1236 இல் உள்ளபடி சாதகருக்குள் எப்போதும் பொருந்தி நட்சத்திரம் போன்ற பேரொளிப் பிழம்பாகவும் நிற்கின்ற இறைவியானவள் அவரின் சக்திக்குத் தகுதியான ஆபரணங்களை சூடிக்கொண்டு இருக்கின்றாள். அவளோடு உண்மையான ஞானத்தில் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் சாதகர்கள் தங்களின் உள்ளுக்குள் இருக்கும் இறை ஒளியின் மூலம் அவளை முழுவதுமாக உணர்ந்து கொண்டு வீற்றிருக்கும் போது இதுவரை உலகத்தைக் கடந்து சென்ற ஆன்மாக்களின் எண்ணத்தில் அவர்கள் வேண்டிக் கொண்ட வேண்டுகோள்கள் அனைத்தும் வந்து சேரும். அப்போது அவர்களின் வேண்டுகோள்களுக்கு பொருத்தமான அருளை வழங்குவதற்குத் தேவையான ஞானங்கள் அனைத்தும் சாதகருக்குள் தானாகவே தோன்றிவிடும்.



பாடல் #1238: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி
ஈன்றிடு மாங்கவ ளெய்திய பல்கலை
மான்றரு கண்ணியும் மாரனும் வந்தெதிர்
சான்றது வாகுவர் தாமவ ளாயுமே.

விளக்கம்:

பாடல் #1237 இல் உள்ளபடி உலகத்தை கடந்து சென்ற ஆன்மாக்களின் வேண்டுகோள்களுக்கு பொருத்தமான அருளை வழங்குவதற்குத் தேவையான ஞானங்கள் அனைத்தும் சாதகருக்குள் தானாகவே தோன்றிவிடும் போது அப்படி வேண்டிக்கொண்ட ஆன்மாக்களின் விருப்பமான தெய்வத்தின் உருவமாகவே சாதகரும் மாறி அவர்கள் வேண்டிக் கொண்டதை அடைவதற்கான தூய்மையான வழியைக் கொடுத்து அருளும் இறைவியாகவே வீற்றிருந்து பலவிதமான செயல்களைச் செய்து அருளுகின்றார். அப்படி அருளுகின்ற போது அழகிய மானைப் போன்ற கண்களைக் கொண்ட இறைவியும் பேரழகனாகிய இறைவனும் ஒன்றாக அவருக்கு எதிரில் வந்து வேண்டிக்கொண்ட ஆன்மாக்களுக்கு அருள் புரியும் போது இறைவியாகவே ஆகிவிட்ட சாதகரும் அதற்கு சாட்சியாக வீற்றிருக்கின்றார்.



பாடல் #1239: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆயு மறிவுங் கடந்தணு வாரணி
மாயம தாகி மதோமகி யாயிடுஞ்
சேய அரிவை சிவானந்த சுந்தரி
நேயமது ஆய்நெறி யாகிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1238 இல் உள்ளபடி இறைவியாகவே ஆகிவிட்ட சாதகர்கள் நுண்ணியதாக அறியும் அறிவையும் தாண்டிய நிலையில் அணுவுக்குள் அணுவாகவும் மாயையாகவும் ஆகி நின்று அனைத்திற்கும் மேன்மையான பெருமையை உடையவளாகவும் இருக்கின்றாள். சிவந்த நிறத்தோடு என்றும் இளமையுடன் பேரானந்தத்திற்கும் மேலான சிவானந்தமாகவே இருக்கின்ற அவளே பேரழகுடன் பேரன்பின் வடிவமாகவே ஆகி சாதகர் செல்கின்ற மேன்மையான வழியாகவும் ஆகி நிற்கின்றாள்.




பாடல் #1240: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞக னோடுங்
குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்
அறிவொடு மாங்கே யடங்கிட லாமே.

விளக்கம்:

பாடல் #1239 இல் உள்ளபடி சாதகர்கள் செல்கின்ற மேன்மையான வழியாகவே ஆகி அவரது வழிகளுக்குத் தகுதியான அணிகலன்களை அணிந்து கொண்டு நிற்கின்ற இறைவியை எப்போதும் இறைவனை விட்டுத் தனியாக பிரித்து வைத்து நினைக்காமல் பிண்ணிய சடை முடியில் கங்கையையும் பிறை நிலாவையும் சூடியிருக்கும் இறைவனுடனே இறைவியை ஒன்றாக சேர்த்து வைத்து எப்போது அதை நினைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு தமது எண்ணங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் அவர்களின் மேல் வைத்து தியானிக்கும் சாதகர்கள் அம்மை அப்பராகிய அவர்கள் இருவரோடு தாமும் ஒன்றாகச் சேர்ந்து அவர்களுக்குள்ளேயே அடங்கி பேரின்பத்தில் இருப்பார்கள்.



பாடல் #1241: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

ஆமயன் மாலர னீசன்மா லாங்கதி
ஓமய மாகிய வொன்பது மொன்றிடத்
தேமய னாளுந் தெனாதென வென்றிடும்
மாமய மானது வந்தெய்த லாமே.

விளக்கம்:

பாடல் #1240 இல் உள்ளபடி அம்மை அப்பராகிய இறைவன் இறைவியோடு தாமும் ஒன்றாகச் சேர்ந்து அவர்களுக்குள்ளேயே அடங்கி பேரின்பத்தில் இருக்கின்ற சாதகர்கள் தமக்குள் இருக்கின்ற ஒன்பது மண்டலங்களிலும் ஓங்கார மந்திரத்தின் நாதமாகவே ஆகிவிட்ட ஒன்பது தெய்வங்களோடும் தாமும் சேர்ந்து ஓங்காரத்தின் நாதத் தன்மை பெற்றுவிடுவார். அதன் பிறகு தனக்குப் பிடித்த வகையான தேன் இருக்கின்ற பூவைத் தேடி மொய்த்து அதிலிருக்கும் தேனை உறிஞ்சிக் குடித்து இன்பத்தில் திளைத்திருக்கும் தேனீக்களைப் போல சாதகரும் தமக்குக் கிடைக்கப் பெற்ற ஓங்காரத்தின் நாதத் தன்மையில் கிடைக்கும் பேரின்பத்திலேயே திளைத்து இருப்பார்.

சாதகருக்குள் இருக்கின்ற ஒன்பது மண்டலங்கள்:

1. மூலாதாரம் – சூரிய மண்டலம் 2. சுவாதிஷ்டானம் – பிரம்மா 3. மணிபூரகம் – திருமால் 4. அனாகதம் – உருத்திரன் 5. விசுக்தி – மகேஸ்வரன் 6. ஆக்ஞா – சதாசிவம் 7. சகஸ்ராரம் – பரா 8. துவாதசாந்த வெளி [தலை உச்சியிலிருந்து 12 அங்குலம் தூரத்தில் உள்ளது] – பரை 9. சந்திர மண்டலம் [துவாதசாந்த வெளிக்கு மேலே ஆகாயத்தில் உள்ளது] – பராபரை



பாடல் #1242: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

வந்தடி போற்றுவர் வானவர் தானவர்
இந்து முதலாக எண்டிசை யோர்களுங்
கொந்தணி யுங்குழ லாளொடு கோனையும்
வந்தனை செய்யும் வழிநவில் வீரே.

விளக்கம்:

பாடல் #1241 இல் உள்ளபடி ஓங்காரத்தின் நாதமாகவே ஆகிவிட்ட சாதகரைத் தேடி வந்து அவரது திருவடியைப் போற்றி வணங்கி நின்று தேவர்களும் அசுரர்களும் இந்திரன் முதலாக எட்டு திசைக்கும் தலைவர்களாக இருக்கின்றவர்களும் சாதகர் தமக்குள்ளேயே நறுமணம் மிக்க மலர்களைச் சூடிக்கொண்டு இருக்கும் அழகிய கூந்தலைக் உடைய இறைவியையும் அவளோடு ஒன்றாகச் சேர்ந்து அனைத்திற்கும் அரசனாக இருக்கின்ற இறைவனையும் தமது வழிபாட்டின் மூலமே சாதகர் அடைந்ததைப் போலவே தாங்களும் சென்று அடைவதற்கான வழியை சொல்லி அருளுமாறு வேண்டிக் கொள்வார்கள்.

எட்டு திசைக்கும் தலைவர்கள் இருப்பவர்கள்:

பாடல் #69 மற்றும் #70 இல் உள்ளபடி முதல் நான்கு திசைகளுக்கும் தலைவர்களாக இருப்பவர்கள்:

1. இந்திரன் 2. சோமன் 3. பிரம்மன் 4. உருத்திரன்

மற்ற நான்கு திசைகளுக்கு தலைவர்களாக இருப்பவர்கள்:

5. எமதருமன் 6. குபேரன் 7. வருணதேவன் 8. வாயுதேவன்



பாடல் #1243: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

நவிற்றுநன் மந்திரம் நன்மலர் தூபங்
கவற்றிய கந்தங் கவர்ந்தெரி தீபம்
பயிற்று முலகினிற் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்கோர் அர்ச்சனை தானே.

விளக்கம்:

பாடல் #1242 இல் உள்ளபடி இறைவனையும் இறைவியையும் சாதகர் அடைந்ததைப் போலவே தாங்களும் சென்று அடைவதற்கான வழியைச் சொல்லி அருளுமாறு வேண்டிக் கொண்டவர்களுக்கு அவர் கூறிய வழியாவது இறைவனை நினைத்து அவரின் நன்மையான மந்திரங்களை ஓதி நறுமணம் மிக்க மலர்களைத் தூவி தூய்மையான வாசனை மிக்க தூபத்தைக் காட்டி மனதையும் ஐந்து புலன்களையும் அடக்கி வைத்து எண்ணங்கள் முழுவதையும் தூய்மைப் படுத்தி கவர்ந்து கொள்கின்ற தூய்மையான நெய்யில் எரிகின்ற தீபத்தை ஏற்றி வைத்து வேத ஆகமங்கள் அருளிய முறைப்படி இந்த உலக வாழ்க்கையிலேயே அனைத்து உலகங்களுக்கும் தலைவனாகிய இறைவனுக்கு பூசை செய்து அனைத்து உயிர்களுக்குள்ளும் சோதியாக வீற்றிருக்கின்ற அந்த இறைவனுக்கு அர்ச்சனை செய்யுங்கள். இறைவனையும் இறைவியையும் சென்று அடையும் வழி இதுவே என்று அருளுகின்றார்.



பாடல் #1244: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தாங்கி யுலகிற் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவ னுலப்பிலி
பூங்கிளி தங்கும் புரிகுழ லாளன்று
பாங்குட னேற்பப் பராசத்தி போற்றே.

விளக்கம்:

பாடல் #1243 இல் உள்ளபடி உயிர்களுக்குள்ளும் சோதியாக வீற்றிருக்கின்ற பரம்பொருளான இறைவன் அண்ட சராசரங்களையும் தாங்கி நின்று அதிலிருக்கும் அனைத்து உலகங்களாகவும் அதிலிருக்கும் அனைத்து பொருட்களாகவும் இருக்கின்றான். அனைத்தும் அழிந்து போகின்ற பேரூழிக் காலத்திலும் கூட தான் ஒருவன் மட்டும் எப்போதும் அழியாமல் இருக்கின்றான். பசுமையான கிளியை தனது திருக்கையில் ஏந்திக் கொண்டு சுருண்ட அழகிய கூந்தலை உடைய இறைவியானவள் அப்போதும் இறைவனின் மேன்மையான நிலைக்கு ஏற்பவே தாமும் அவனுடன் சரிசமமான பாகமாகக் கலந்து நின்று இருவரும் சேர்ந்து இருக்கின்ற தன்மையில் பராசக்தியாக இருக்கின்றாள். ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் இவர்கள் இருவரையும் போற்றி வழிபடுங்கள்.



பாடல் #1245: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பொற்கொடி மாதர் புனைகழ லேத்துவர்
அற்கொடி மாதுமை யார்வத் தலைமகள்
நற்கொடி மாதை நயனங்கள் மூன்றுடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே.

விளக்கம்:

பாடல் #1238 இல் உள்ளபடி இறைவியாகவே ஆகிவிட்ட சாதகரின் பேரழகுடைய திருவடிகளை தூய்மையின் உருவமாக தங்க நிறத்தில் கொடி போல மென்மையாக இருக்கும் உப சக்திகள் அனைவரும் நாடி வந்து போற்றி வணங்குவார்கள். அந்த உப சக்திகளின் நிலையை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கின்ற அனைத்து உயிர்களும் இறைவியாகவே ஆகிவிட்ட சாதகர் மாயையின் உருவத்தில் கருமை நிறத்தில் கொடி போன்ற மென்மையுடன் இருக்கும் போது அவரை நாடி வருகின்ற உயிர்களுக்கு தலைவியாகவும் இருக்கின்றார். அவரே உயிர்களுக்கு நன்மை தரும் உருவமாக கொடி போன்ற மென்மையுடன் மூன்று கண்களைக் கொண்டு மாயையை நீக்கி உண்மையை உணர்த்தும் போது இறைவியின் பேரொளியின் உருவத்தில் இருக்கும் அவரை விரும்பி போற்றி வணங்கி நீங்களும் உண்மையை விளங்கிக் கொள்ளுங்கள்.



பாடல் #1246: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

விளங்கொளி யாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்கக்
களங்கொள் மணியுடன் காம வினோதம்
உளங்கொ ளிலம்பிய மொன்று தொடரே.

விளக்கம்:

பாடல் #1245 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள் விளங்கிக் கொண்ட பேரொளியாக இருக்கின்ற இறைவியானவள் தனது கழுத்தில் எப்போதும் பிரகாசமாக ஒளி வீசுகின்ற மணி மாலையை அணிந்திருக்கின்றாள். உயிர்களுக்குள் மிகுதியாக இருக்கின்ற ஆணவ மலம் நீங்கி அவர்கள் தாம் யார் என்பதை உண்மையாக உணர வேண்டும் என்பதற்காக நீல நிறக் கழுத்துடன் இருக்கின்ற இறைவனோடு மிகுந்த அன்பு கொண்டு அவருடன் சேர்ந்து இருந்து ஆணவ மலங்களை நீக்கி அருளுகின்றாள். கிடைப்பதற்கு அரிய அந்த பெரும் பேறை நீங்களும் அடைய வேண்டும் என்றால் இறைவியோடு தியானத்தில் எப்போதும் ஒன்றி இருந்து அவளைத் தொடர்ந்து கொண்டே இருங்கள்.



பாடல் #1247: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தொடங்கி யுலகினிற் சோதி மணாளன்
அடங்கி இருப்பதெ னன்பின் பெருமை
விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை
ஓடுங்கி உமையொடு மோருரு வாமே.

விளக்கம்:

ஆரம்பத்திலிருந்தே உலகத்தில் எப்போதும் ஒளி வடிவான இறைவியுடன் துணையாகவே சேர்ந்து இருக்கும் இறைவனே எமது உள்ளத்திற்குள்ளும் பேரன்பின் உச்ச நிலையாக எப்போதும் வீற்றிருக்கின்றான். இந்த இறைவனே பாடல் #1245 இல் உள்ளபடி சாதகர்கள் எப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்ற இறைவிக்குள்ளும் எப்போதும் அடங்கி ஒரே உருவமாக தனது கழுத்தில் விஷம் கொண்ட பாம்பையும் பின்னிய நீண்ட சடையின் உச்சியில் எப்போதும் பொங்கி வழிகின்ற கங்கையையும் கொண்டு வீற்றிருக்கின்றான்.



பாடல் #1248: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உருவம் பலவுயி ராய்வல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிப்
புரிவளைக் கைச்சியெம் பொன்னணி மாதை
மருவி யிறைவன் மகிழ்வன மாயமே.

விளக்கம்:

பல்வேறு விதமான உயிர்களில் அந்தந்த உருவமாகவே இருக்கும் வல்லமையை உடையவனும் பாடல் #1247 இல் உள்ளபடி இறைவியைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்ற சாதகருக்குள் பாம்பும் கங்கையையும் அணிந்து இருக்கின்றவனும் ஆகிய இறைவனை தமக்குள் ஆராய்ந்து தேடிப் பார்த்து உணர்ந்து கொண்டால் அவனே குருநாதகராக வீற்றிருந்து பலவிதமான செயல்களைப் புரிந்து அருளும் அழகிய வளையல்களை அணிந்த திருக்கைகளையும் தங்க அணிகலன்களை முழுவதும் அணிந்திருக்கும் திருமேனியையும் உடைய இறைவியாகவே தான் மாறி இருக்கும் திருக்கோலத்தைக் காட்டி அருளுவதை பேரின்பத்தோடு பார்த்தால் ஒரு மாபெரும் அதிசயமாகவே இருக்கின்றது.



பாடல் #1249: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

மாயம் புணர்க்கும் வளர்சடை யானடித்
தாயம் புணர்க்குஞ் சலந்தீ யமலனைக்
காயம் புணர்க்குங் கலவியுள் மாசத்தி
ஆயம் புணர்க்குமவ் வியோனியு மாமே.

விளக்கம்:

அசையா சக்தியாகிய இறைவனுக்குள் அண்ட சராசரங்களையும் அதிலிருக்கும் அனைத்து உலகங்களையும் அதற்குள் அனைத்து உயிர்களையும் படைக்க வேண்டும் என்கிற எண்ணம் வரும் போது அவரிடமிருந்து அசையும் சக்தியாகப் பிரிந்து வருகின்ற இறைவியின் மாயா அம்சத்தோடு உலகங்களும் உயிர்களும் உருவாக வேண்டும் என்ற காரணத்திற்காக சேருகின்ற நீண்ட சடையை உடைய மாசற்ற இறைவன் தம்மை அறிந்து அடைய வேண்டும் என்று ஆசைப்படுகின்ற உயிர்களுக்கு அருள வேண்டும் என்கிற பெருங்கருணையில் உயிர்களின் உடலை பஞ்ச பூதங்களிலுள்ள நீரையும் நெருப்பையும் கலந்து உருவாக்கும் போது தமது திருவடியையும் சேர்த்தே வைத்து உருவாக்கி அருளுகின்றான். உயிர்கள் பிறவி எடுப்பதற்கு தேவையான உடலை உருவாக்க வேண்டி இறைவனுடன் சேர்ந்து கலக்கின்ற பராசக்தியாகிய இறைவியும் தங்களின் கலப்புக்குள்ளிருந்து பலவித உருவங்களோடு உயிர்கள் அனைத்தையும் ஒரு மாபெரும் கூட்டமாக உலகங்கள் அனைத்திலும் சேர்ந்து பிறப்பதற்கு மாபெரும் காரணமாக இருக்கின்றாள்.

உட்கருத்து: கர்மங்களைத் தீர்த்துக் கொள்ள மாயையுடன் உயிர்களைப் படைத்தாலும் அந்த மாயை நீங்கி உண்மையை உணர்ந்து தம்மிடம் வந்து அடைவதற்கான ஆதாரமாக தமது திருவடியை உயிர்களுக்குள் வைத்தே படைத்து அருளுகின்றான் இறைவன். தமக்குள் ஆதாரமாக இருக்கின்ற இறைவனின் திருவடிகளை உணர்ந்து பற்றிக் கொண்ட உயிர்களுக்கு கிடைக்கும் மாபெரும் ஆதேயமாக இறைவனின் திருவருள் இருக்கின்றது.

குறிப்பு: சர்வ சிருஷ்டியின் உள்ளபடி இறைவனும் இறைவியும் ஒலி ஒளியாகக் கலக்கும் போது அதிலிருந்து பஞ்ச பூதங்களும் வெளிப்பட்டு ஒன்றோடு ஒன்று வினை புரிந்து உலகங்களையும் உயிர்களையும் படைக்கின்றன.




பாடல் #1250: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

உணர்ந்தொழிந் தேனுவ னாமெங்க ளீசன்
புணர்ந்தொழிந் தேன்புவ னாபதி யாரை
அணைந்தொழிந் தேனெங்க ளாதிதன் பாதம்
பிணைந்தொழிந் தேன்தன் னருள்பெற்ற வாறே.

விளக்கம்:

பாடல் #1249 இல் உள்ளபடி எமக்குள் ஆதாரமாக இருக்கின்ற இறைவனின் திருவடிகளை உணர்ந்து மாயையை ஒழித்து பலவிதமான பெயர்களால் அழைக்கப்படுகின்ற பரம்பொருள் ஒருவனே என்பதை உணர்ந்து கொண்டேன். அவனோடு ஒன்றாகக் கலந்து நின்று நான் எனும் அகங்காரத்தை ஒழித்தேன். அனைத்து உலகங்களுக்கும் அதிபதியாக இருக்கின்ற அவனோடு ஒன்றாகச் சேர்ந்து நின்று அவனது திருவடிகளைத் தவிர வேறு பற்றுக்கள் அனைத்தையும் ஒழித்தேன். அவனோடு பின்னிப் பிணைந்து என்னையே நான் ஒழித்துவிட்டேன். ஆதலால் யானும் இறைவனும் ஒன்றே எனும் திருவருளை யாம் பெற்ற வழி இதுவே.



பாடல் #1251: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

பெற்றாள் பெருமை பெரிய மனோன்மணி
நற்றா ளிறைவனே நற்பய னேயென்பர்
கற்றா னறியுங் கருத்தறி வார்கட்குப்
பொற்றா ளுலகம் புகல்தனி யாமே.

விளக்கம்:

பாடல் #1250 இல் உள்ளபடி சாதகர் பெற்ற திருவடிகளின் பெருமையை உடையவள் அனைத்திற்கும் மேலான இறைவனோடு எப்போதும் சரிசமமாக சேர்ந்தே இருக்கும் மனோன்மணி எனும் இறைவியாவாள். நன்மையைத் தருகின்ற திருவடிகளைக் கொண்ட பரம்பொருளான இறைவனை சென்று அடைவதே இந்த உலகத்தில் கிடப்பதற்கு மிகவும் அரிய பயனாகும் என்பதை அவனது திருவடிகளை அடைந்தவர்கள் கூறுவார்கள். அப்படி அடைந்த திருவடிகளால் பெற்ற ஞானத்தின் மூலம் இறைவனை அறிந்து கொண்டு தமது எண்ணத்திலும் அவனை வைத்து முழுவதும் அறிந்து கொள்ள முடிந்தவர்களுக்கு பொன் போன்ற இறைவனின் திருவடிகளை இந்த உலகத்திலேயே அடைய முடியும் என்பதால் அதற்காக இந்த உலகத்தில் பிறவி எடுத்து வந்து அவனோடு ஏகாந்தத்தில் தனித்திருப்பதும் கிடைப்பதற்கு அரிய மிகப்பெரும் பேறாகும்.



பாடல் #1252: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

தனிநாய கன்றனோ டென்னெஞ்ச நாடி
இனியா ரிருப்பிட மேழுல கென்பர்
பனியான் மலர்ந்தபைம் போதுகை யேந்திக்
கனியா நினைவதென் காரண மம்மையே.

விளக்கம்:

பாடல் #1251 இல் உள்ளபடி இறைவனோடு ஏகாந்தத்தில் தனித்து வீற்றிருக்கும் கிடைப்பதற்கு அரிய பேறைப் பெற்று எமது தலைவனாகிய அவனோடு எப்போதும் ஏகாந்தத்தில் இருப்பதையே எமது நெஞ்சம் விரும்புகின்றது. இந்தப் பேறைப் பெற்று பேரின்பத்தை அனுபவித்தவர்களும் இறைவனோடு தாங்கள் ஏகாந்தத்தில் சேர்ந்து இருக்கின்ற இடம் ஏழு உலகங்களும் என்று கூறுவார்கள். இந்தப் பேற்றை யாம் பெறுவதற்கு காரணம் பனிபடர்ந்து புத்தம் புதிதாகப் பூத்து மலர்ந்திருக்கும் வாசனை மிக்க மலர்களை கையில் ஏந்திச் சென்று எமது அம்மையாகிய இறைவியின் மீதுள்ள பேரன்பினால் கசிந்து உருகிய உள்ளத்தோடு அவளை நினைத்து எப்போதும் வணங்கியதை அவள் ஏற்றுக் கொண்டு அருளியதால் ஆகும்.




பாடல் #1253: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

அம்மனை யம்மை யரிவை மனோன்மணி
செம்மனை செய்து திருமங்கை யாய்நிற்கும்
இம்மனை செய்த விருநில மங்கையும்
அம்மனை யாகி யமர்ந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1252 இல் உள்ளபடி எமது வேண்டுதலை ஏற்றுக் கொண்டு இறைவனோடு சேர்ந்து இருக்கும் ஏகாந்தத்தை அருளியவளும் இறைவனுக்கு துணைவியாக இருக்கின்றவளும் எமக்கும் அனைத்து உயிர்களுக்கும் தாயாக இருக்கின்றவளும் என்றும் இளமையுடன் இருக்கின்றவளும் இறைவனுடன் சரிசமமாக சேர்ந்து இருக்கின்ற மனோன்மணியானவளும் ஆகிய இறைவியை எமது உடலுக்குள் வந்து வீற்றிருப்பதற்கு ஏற்றபடி செழுமையான இடமாக எமது நிலைக்கு ஏற்ப எமது உடலை மாற்றி அருளியவளும் அது போலவே மேலுலகம் கீழுலகம் ஆகிய இரண்டு விதமான உலகங்களையெல்லாம் அவளுக்கு ஏற்ற படி மாற்றி அவற்றுக்குத் தலைவியாகவும் இருக்கின்றவளும் ஆகிய இறைவியே தான் வீற்றிருக்கும் எமது உடலாகவே மாறி அதற்குள் அமர்ந்து நிற்கின்றாள்.



பாடல் #1254: நான்காம் தந்திரம் – 8. ஆதார ஆதேயம் [பூரண சக்தியும் அந்த சக்தியினால் தாங்கப்படும் பொருளும்]

அம்மையு மத்தனு மன்புற்ற தல்லது
அம்மையு மத்தனு மாரறிவா ரென்னை
அம்மையொ டத்தனும் யானு முடனிருந்
தம்மையொடு அத்தனை யான்புரிந் தேனே.

விளக்கம்:

பாடல் #1253 இல் உள்ளபடி எமது உடலாகவே மாறி எமக்குள் அமர்ந்திருக்கும் இறைவியும் பாடல் #1252 இல் உள்ளபடி எம்மோடு ஏகாந்தத்தில் தனித்து இருக்கும் இறைவனும் எம்மீது பேரன்பு கொண்டதைத் தவிர வேறு எவருமே எம்மை முழுவதுமாக அறிந்து கொண்டது இல்லை. எமக்குள் இருக்கும் இறைவியோடு இறைவனும் சேர்ந்து இருக்க அவர்களோடு யானும் சேர்ந்து இருந்து இறைவியோடு இறைவனையும் முழுவதுமாக யான் புரிந்து கொண்டேன்.



பாடல் #1255: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

ஏரொளி யுள்ளெழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவி னாலெழு நாதமாம்
ஏரொளி யக்கலை யெங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர மந்நடு வன்னியே.

விளக்கம்:

உயிர்களுக்குள் இருக்கும் மூலாதாரமானது நான்கு இதழ்கள் கொண்ட தாமரை மலர் வடிவத்தில் சக்திமயமான சக்கரமாக இருக்கின்றது. அதை தியானம் தவம் ஆகிய சாதகங்களின் மூலம் மாற்றி அமைக்கும் போது அதிலிருக்கும் குண்டலினி சக்தியானது எழுச்சி பெற்று சுழுமுனை நாடி வழியே மேலெழுந்து வரும் போது பிரகாசமான வெளிச்சமாக வருகின்றது. அந்த வெளிச்சத்திலிருந்து சத்தம் வெளிவருகின்றது. இந்த வெளிச்சமும் சத்தமும் சுழுமுனை நாடியின் அடியிலிருந்து உச்சித் துளை வரை முழுவதும் நிறைந்து நிற்கும் போது அதன் நடுவில் அக்னியாக இருக்கும் சுடரே ஏரொளிச் சக்கரமாகும்.



பாடல் #1256: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

வன்னி யெழுத்தவை மாபல முள்ளன
வன்னி யெழுத்தவை வானுற வோங்கின
வன்னி யெழுத்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னி யெழுத்திடு மாறது சொல்லுமே.

விளக்கம்:

பாடல் #1255 இல் உள்ளபடி சுழுமுனை நாடியின் நடுவில் ஏரொளிச் சக்கரமாக இருக்கும் அக்னியின் எழுத்தானது ஒளி ஒலி வடிவத்தில் மிகப்பெரும் சக்திகளாக இருக்கின்றன. இந்த மாபெரும் சக்திகளே ஆகாயம் வரை நீண்டு வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த சக்திகளே மிகவும் பெரிய சக்தி மயமாக இருக்கின்றன. இந்த சக்திகளின் எழுத்துக்களை சரியாக வடிவமைக்கும் வழிமுறைகளை ஏரொளிச் சக்கரமே உள்ளிருந்து அறிய வைக்கின்றது.

கருத்து: ஏரொளிச் சக்கரம் ஒளி ஒலி வடிவத்தில் இருக்கின்ற எழுத்துக்களை சரியாக அமைக்கும் வழி முறையை உள்ளுக்குள் இருந்து அறிவுறுத்தும். அது அறிவுறுத்துகின்ற வழி முறைகளை சரியாக கடைபிடிக்கும் சாதகர்கள் இறைவனின் பேரொளியோடு இணைந்து விடுவார்கள்.



பாடல் #1257: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

சொல்லிய விந்துவு மீராறு நாதமாஞ்
சொல்லிடு மப்பதி யவ்வெழுத் தாவன
சொல்லிடு நூறொடு நாற்பத்து நாலுருச்
சொல்லிடு சக்கர மாய்வரு மேலதே.

விளக்கம்:

பாடல் #1256 இல் உள்ளபடி உள்ளுக்குள் இருந்து சொல்லப்பட்ட வழிமுறைகளின் படி மேலே ஏறி வந்த வெளிச்சத்திலிருந்து வெளிப்படும் சத்தங்கள் பன்னிரண்டு வகையான ஒலிகளாக இருக்கின்றது. இந்த பன்னிரண்டு வகையான ஒலிகளும் சாதகருக்குள் வீற்றிருக்கும் தலைவனாகிய இறைவனின் அம்சமாகவே இருக்கின்றன. இந்த பன்னிரண்டு வகையான ஒலிகளையும் அசபையாக [உச்சரிக்காமல்] மனதிற்குள் சொல்லிக்கொண்டே இருந்தால் அவை பலவிதமாக பரிணமித்து மொத்தம் நூற்றி நாற்பத்து நான்கு எழுத்துக்களின் வரிவடிவங்களாக வெளிப்படும். இந்த நூற்றி நாற்பத்து நான்கு எழுத்துக்களின் வரிவடிவங்களும் ஒன்று சேர்ந்து வெளிப்படும் போது மூலாதாரத்திலிருந்து ஏரொளிச் சக்கரம் மேல் நோக்கி ஏறி வரும்.



பாடல் #1258: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

மேல்வரும் விந்துவு மவ்வெழுத் தாய்விடும்
மேல்வரும் நாதமு மோங்கு மெழுத்துடன்
மேல்வரும் அப்பதி யவ்வெழுத் தேவரின்
மேல்வரும் சக்கர மாய்வரும் ஞாலமே.

விளக்கம்:

பாடல் #1257 இல் உள்ளபடி சாதகருக்குள் இருக்கும் மூலாதாரத்திலிருந்து ஏரொளிச் சக்கரம் மேல் நோக்கி ஏறி வரும் போது அதனுள் அடங்கியிருக்கும் எழுத்தின் வடிவமாக வெளிச்சமும் பீஜமாக சத்தமும் வெளிப்படும் போது அந்த எழுத்துடன் சாதகருக்குள் இருக்கும் இறைவனும் சேர்ந்து வந்தால் வெளிப்படும் ஏரொளிச் சக்கரமானது உலகமாகவே விளங்கும்.




பாடல் #1259: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

ஞாலம தாக விரிந்தது சக்கரம்
ஞாலம தாயிடும் விந்துவும் நாதமும்
ஞாலம தாயிடு மப்பதி யோசனை
ஞாலம தாக விரிந்தது எழுத்தே.

விளக்கம்:

பாடல் #1258 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து மேலெழுந்து வந்து உலகமாகவே விளங்குகின்ற ஏரொளிச் சக்கரமானது அண்ட சராசரங்களில் இருக்கும் அனைத்து உலகங்களாகவும் ஆகி விடுகின்றது. அந்த சக்கரத்தோடு வெளிச்சமும் சத்தமும் இறை சக்தியும் எழுத்து வடிவமும் ஒன்றாகச் சேரும் பொழுது அதிலிருந்து வெளிப்படும் எழுத்தானது பல விதமான உலகங்களாக விரிந்து சிந்திக்க முடியாத அளவு பல யோசனை தூரத்திற்கு பரவுகின்றது.



பாடல் #1260: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

விரிந்த வெழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த வெழுத்தது சக்கர மாக
விரிந்த வெழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த வெழுத்தினி லப்புற மப்பே.

விளக்கம்:

பாடல் #1259 இல் உள்ளபடி உலகங்கள் அனைத்திற்கும் விரிந்து பரவிய எழுத்தானது வெளிச்சமாகவும் சத்தமாகவும் இருக்கின்றது. சாதகருக்குள்ளிருந்து மேலெழுந்து வந்து உலகங்கள் முழுவதும் விரிந்து பரவிய அந்த எழுத்தே ஏரொளிச் சக்கரமாகவும் பிறகு பஞ்ச பூதங்களில் முதலில் நிலத்தின் தன்மையையும் அதன் பிறகு அதிலிருந்து நீரின் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது.



பாடல் #1261: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

அப்பது வாக விரிந்தது சக்கரம்
அப்பினி லப்புற மவ்வன லாயிடும்
அப்பினி லப்புற மாருத மாயெழ
அப்பினி லப்புற மாகாச மாமே.

விளக்கம்:

பாடல் #1260 இல் உள்ளபடி வெளிப்பட்ட நீரின் தன்மையாகவே உலகங்களுக்கு ஏரொளிச் சக்கரமாக விரிகின்றது. அதன்பிறகு அந்த நீரின் தன்மையிலிருந்து நெருப்பின் தன்மையாகவும் பிறகு காற்றின் தன்மையாகவும் பிறகு அதுவே ஆகாசத்தின் தன்மையாகவும் மாறுகின்றது.



பாடல் #1262: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

ஆகாச வக்கர மாவது சொல்லிடில்
ஆகாச வக்கரத் துள்ளே யெழுத்தவை
ஆகாச வவ்வெழுத் தாகிச் சிவானந்தம்
ஆகாச வக்கர மாவ தறிமினே.

விளக்கம்:

பாடல் #1261 இல் உள்ளபடி ஆகாசத்தின் தன்மையாக மாறிய எழுத்தின் வடிவமாக ஏரொளிச் சக்கரம் மாறுவது எப்படி என்று சொல்லப் போனால் பாடல் #1257 இல் உள்ளபடி ஏரொளிச் சக்கரத்தின் உள்ளே இருக்கின்ற நூற்று நாற்பத்து நான்கு எழுத்துக்களும் ஆகாசத் தன்மையில் இருக்கின்ற ஒரு எழுத்துக்குள்ளேயே அடங்கி இருக்கின்றது. ஆகாசத் தன்மையில் இருக்கும் எழுத்து வடிவமே பிறகு ஓர் எழுத்தாகி கிடைப்பதற்கு அரிய மிகப்பெரும் சிவானந்தத்தைக் கொடுக்கின்றது. ஆகாசத் தன்மையில் இருக்கும் எழுத்து வடிவமே ஓர் எழுத்தாக எப்படி மாறி சிவானந்தத்தைக் கொடுக்கின்றது என்று அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.



பாடல் #1263: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

அறிந்திடும் சக்கர மையைந்து விந்து
அறிந்திடும் சக்கரம் நாத முதலா
அறிந்திடும் அவ்வெழுத் தப்பதி யோர்க்கும்
அறிந்திடும் அப்பக லோனிலை யாமே.

விளக்கம்:

பாடல் #1262 இல் உள்ளபடி சாதகர் அறிந்து உணர்ந்து கொண்ட ஏரொளிச் சக்கரத்தில் இருக்கின்ற ஐந்து பூதங்களின் தன்மைகளும் ஐந்து மடங்கு பெருகி வெளிச்சமாகின்றது. இந்த ஏரொளிச் சக்கரத்தில் இருக்கின்ற அனைத்து தன்மைகளுக்கும் முதலாக சத்தமே இருக்கின்றது. ஏரொளிச் சக்கரத்திலிருக்கும் ஐந்து தன்மைகளும் வெளிச்சமும் நாதமும் ஒன்றாகச் சேர்ந்து மாறிய ஓர் எழுத்தே இறை நிலையில் தலைவர்களாக இருக்கின்ற தெய்வங்களாகவும் இருக்கின்றது. இதை முழுவதும் அறிந்து உணர்ந்து கொண்ட சாதகர் பேரொளியாகிய சிவசூரியனின் நிலையை அடைந்து விடுவார்கள்.



பாடல் #1264: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

அம்முத லாறுமவ் வாதி யெழுத்தாகும்
அம்முத லாறுமவ் வம்மை யெழுத்தாகும்
இம்முதல் நாலு மிருந்திடு வன்னியே
இம்முத லாகு மெழுத்தவை யெல்லாம்.

விளக்கம்:

பாடல் #1265 இல் உள்ளபடி சிவசூரியனின் நிலையை அடையக் காரணமான ஒரு எழுத்தே ஆதியான பரம்பொருளைக் குறிக்கின்ற எழுத்தாகும். சாதகருக்குள் இருக்கின்ற ஆறு ஆதார சக்கரங்களிலும் இருக்கின்ற எழுத்துக்களுக்கு இந்த ஒரு எழுத்தே முதன்மையானதாக இருக்கின்றது. சாதகருக்குள் இருக்கும் ஆறு ஆதார சக்கரங்களிலும் இருக்கின்ற எழுத்துக்கள் இறைவியின் சக்தி மயத்தைக் குறிக்கின்ற எழுத்துக்களாகும். இந்த ஆறு ஆதாரச் சக்கரங்களில் முதலில் இருக்கின்ற நான்கு சக்கரங்களுக்கு [மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம்] நடுவில் [மணிப்பூரகத்திற்கும் சுவாதிஷ்டானத்திற்கும்] இருக்கின்ற தொப்புள் கொடியில் அக்னி வீற்றிருக்கின்றது. இந்த அக்னியிலிருந்தே ஏரொளிச் சக்கரத்தில் இருக்கும் நூற்று நாற்பத்து நான்கு எழுத்துக்கள் எல்லாம் வெளிப்படுகின்றன.




பாடல் #1265: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

எழுத்தவை நூறொடு நாற்பத்து நாலும்
எழுத்தவை யாறது வந்நடு வன்னி
எழுத்தவை யந்நடு வச்சுட ராகி
எழுத்தவை தான்முத லந்தமு மாமே.

விளக்கம்:

பாடல் #1264 இல் உள்ளபடி ஏரொளிச் சக்கரத்திலிருந்து வெளிப்படுகின்ற நூற்றி நாற்பத்து நான்கு எழுத்துக்களும் சாதகருக்குள் இருக்கின்ற ஆறு ஆதார சக்கரங்களில் அடங்கி இருக்கின்ற ஆறு எழுத்துக்களாக இருக்கின்றன. அந்த ஆறு எழுத்துக்களுக்கும் நடுவில் அக்னியாகவும் அதற்கு நடுவில் இருக்கின்ற சுடராகவும் இருக்கின்றன. இவை அனைத்தும் சாதகருக்குள் முதலாகவும் பாடல் #1259 இல் உள்ளபடி அவரைத் தாண்டிய அண்ட சராசரங்களில் இருக்கின்ற அனைத்து உலகங்களுக்கும் விரிந்து இருக்கும் ஏரொளிச் சக்கரத்தின் அந்தமாகவும் இருக்கின்றன.



பாடல் #1266: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

அந்தமு மீறு முதலா னவையற
அந்தமு மப்பதி னெட்டுட னாதலால்
அந்தமு மப்பதின் மூன்றி லமர்ந்தபின்
அந்தமு மிந்துகை யாருட மானதே.

விளக்கம்:

பாடல் #1265 இல் உள்ளபடி சாதகருக்குள் முதலாகவும் அண்ட சராசரங்களில் இருக்கும் அனைத்து உலகங்களுக்கும் சென்று சேருகின்ற முடிவாகவும் இருக்கின்ற ஏரொளிச் சக்கரத்தில் சாதகரின் தலை உச்சியிலுள்ள எல்லையிலிருந்து அண்ட சராசரங்களின் முடிவாக இருக்கின்ற இடம் வரை நீங்கலாக மீதி இருக்கின்ற இடத்தில் மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியானது விசுத்தி சக்கரம் வரை உள்ள 16 விரற்கடை தூரத்தையும் அதிலிருந்து ஆஞ்சை சக்கரம் வரை உள்ள 2 விரற்கடை தூரத்தையும் அதிலிருந்து துவாதசாந்த வெளி வரை உள்ள 12 விரற்கடை தூரத்தையும் ஏறிக் கடந்து சென்று பாடல் #1113 இல் உள்ளபடி அங்கிருக்கும் துவாதசாந்த வெளியிலிருந்து 1 விரற்கடை தூரத்திலுள்ள சந்திர மண்டலத்தில் வீற்றிருந்தால் முக்காலத்தையும் தமக்குள்ளே அறிகின்ற நிலையை சாதகர் அடைந்து விடுவார்.



பாடல் #1267: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

ஆவின மானவை முந்நூற் றறுபதும்
ஆவின மப்பதி னைந்தின மாயுறும்
ஆவின மப்பதி னெட்டுட னாயுறும்
ஆவின மக்கதி ரோன்வர வந்தே.

விளக்கம்:

பாடல் #1266 இல் உள்ளபடி முக்காலத்தையும் தமக்குள்ளேயே அறிகின்ற நிலையை அடைந்த சாதகர்கள் அனைவரின் இனமாகவே [குழுக்கள்] இருப்பவை சூரியனை முதலாகக் கொண்டு வருகின்ற முந்நூற்று அறுபது நாட்கள் கொண்ட தமிழ் வருடங்களாகவும் அதற்குள் சந்திரனை முதலாகக் கொண்டு வருகின்ற வளர் பிறை மற்றும் தேய் பிறை ஆகிய பதினைந்து நாட்களாகவும் அதற்குள் இருக்கின்ற பன்னிரண்டு மாதங்களாகவும் ஆறு விதமான பருவங்களாகவும் சாதகருக்குள்ளிருந்து வெளிப்படுகின்ற ஏரொளிச் சக்கரமே ஒன்றோடு ஒன்று இணைந்து வெளிப்படுகின்றது.

கருத்து: சாதகருக்குள்ளிருந்து வெளிப்படுகின்ற ஏரொளிச் சக்கரமே உலகத்தில் இருக்கின்ற காலங்களோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றது.

தமிழ் பருவங்கள்:

1. கார்காலம் – இது தமிழ் மாதமான ஆவணி புரட்டாசியை உள்ளடக்கியது.
2. குளிர்காலம் – இது தமிழ் மாதமான ஐப்பசி கார்த்திகையை உள்ளடக்கியது.
3. முன்பனிக்காலம் – தமிழ் மாதமான மார்கழி தையை உள்ளடக்கியது.
4. பின்பனிக்காலம் – இது தமிழ் மாதமான மாசி பங்குனியை உள்ளடக்கியது.
5. இளவேனில்காலம் – இது தமிழ் மாதமான சித்திரை வைகாசியை உள்ளடக்கியது.
6. முதுவேனில்காலம் – இது தமிழ் மாதமான ஆனி ஆடியை உள்ளடக்கியது.



பாடல் #1268: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

வந்திடு மாகாச மாறது நாழிகை
வந்திடு மக்கர முப்பதி ராசியும்
வந்திடு நாளது முந்நூற் றறுபதும்
வந்திடு மாண்டு வகுத்துரை யவ்வியே.

விளக்கம்:

பாடல் #1267 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து வெளிப்பட்டு வந்திடும் ஏரொளிச் சக்கரமே ஆகாயத்தில் இருக்கும் சூரிய சந்திர நட்சத்திர அமைப்புகளின் வழியாக வருகின்ற பகலில் இருக்கின்ற முப்பது நாழிகைகளும் இரவில் இருக்கின்ற முப்பது நாழிகைகளும் சேர்ந்து மொத்தம் அறுபது நாழிகைகளாக இருக்கின்றது. இந்த அறுபது நாழிகைகள் சேர்ந்து ஒரு நாளாக இருக்கின்றது. முப்பது நாள்கள் சேர்ந்து இராசி என்று சொல்லப்படுகின்ற பன்னிரண்டு மாதங்களாக இருக்கின்றது. மொத்தம் முந்நூற்று அறுபது நாள்கள் சேர்ந்து ஒரு தமிழ் வருடமாக இருக்கின்றது. இப்படி உலகத்தவர்களால் சொல்லப்படுகின்ற காலத்தின் விதங்களாக ஏரொளிச் சக்கரமே இருக்கின்றது.

குறிப்பு:

1 நாழிகை = 24 நிமிடம்
60 நாழிகை = 1 நாள்
30 நாள் = 1 மாதம்
12 மாதம் [இராசி] = 1 வருடம்
360 நாள் = 1 வருடம்



பாடல் #1269: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

அவ்வின மூன்றுமவ் வாடது வாய்வரும்
எவ்வின மூன்றுங் கிளர்தரு வேறதாஞ்
சவ்வின மூன்றுந் தழைத்திடு தண்டதாம்
இவ்வின மூன்று மிராசிக ளெல்லாம்.

விளக்கம்:

பாடல் #1268 இல் உள்ளபடி உலகத்தவர்களால் சொல்லப்படுகின்ற காலத்தின் பல விதங்களாக இருக்கின்ற ஏரொளிச் சக்கரம் அடிப்படையில் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனும் மூன்று விதங்களாகவே இருக்கின்றது. இந்த மூன்று விதமான காலங்களும் ஏரொளிச் சக்கரம் மூலாதாரத்திலிருந்து சுழுமுனை நாடி வழியே பிரகாசத்தோடு மேலெழுந்து வரும் போது அதன் உடனே அசைந்தாடிக் கொண்டே வருகின்றது. இப்படி மேலெழுந்து வந்து செழிப்பாக வெளிப்படும் மூன்று விதமான காலங்களே உலகத்தவர்களால் நாழிகை, நாள், மாதம், வருடம், இராசி என்று குறிக்கப்படும் எல்லாமாகவும் இருக்கின்றது.

கருத்து: ஏரொளிச் சக்கரத்திலிருந்து செழுமையுடன் வெளிப்படும் காலத்தின் சக்தியூட்டம் பெற்ற சாதகர்கள் முக்காலத்தையும் உணரும் சக்தியைப் பெற்று அவற்றை கட்டுப்படுத்தவும் அக்காலத்திற்கு செல்லும் வல்லமையையும் பெறுவார்கள்.



பாடல் #1270: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

இராசியுட் சக்கர மெங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கரம் நாதமு மொத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே.

விளக்கம்:

பாடல் #1269 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து மேலெழுந்து வெளிப்படும் சக்கரமே காலங்கள் அனைத்துமாகவும் இருக்கின்றது. இப்படி காலமாகவே இருக்கின்ற ஏரொளிச் சக்கரம் அண்ட சராசரங்களில் இருக்கின்ற அனைத்து உலகங்களிலும் நிறைந்த பிறகு சக்கரம் என்று அறியப்படுவது வெளிச்சமாகும். இந்த வெளிச்சத்தோடு சத்தமும் ஒன்றாகச் சேர்ந்த பிறகு ஏரொளிச் சக்கரமாகவே காலங்கள் இருக்கின்ற வழியாக வெளிச்சமும் சத்தமும் இருக்கின்றது.

குறிப்பு: காலப் பயணத்தை செய்யக்கூடிய சாதகர்கள் வெளிச்சமாகவும் சத்தமாகவுமே செல்கிறார்கள் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.

(அறிவியலிலும் இன்றளவும் வெவ்வேறு கிரகங்களுக்கு செல்கின்ற விண்வெளிப் பயணத்தை ஒளியாண்டுகளாக கணக்கிடுகிறது. ஆகையால் அறிவியலிலால் இன்றளவும் அந்த ஆய்வில் பயணம் செய்து வெற்றி காண முடியவில்லை. தற்போது ஆய்வு செய்து கொண்டிருக்கும் ஒளியாண்டுகளுடன் திருமந்திரத்தில் சொல்லப்பட்டபடி ஒலி ஆண்டுகளையும் சேர்த்து ஆய்வு செய்தால் வெற்றி கிடைக்கும்.)




பாடல் #1271: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

நின்றிடும் விந்துவென் றுள்ள வெழுத்தெல்லாம்
நின்றிடும் நாதமு மோங்கு மெழுத்துடன்
நின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரின்
நின்றிடு மப்புறந் தாரகை யானதே.

விளக்கம்:

பாடல் #1270 இல் உள்ளபடி காலமாகவே நிற்கின்ற ஏரொளிச் சக்கரத்தில் உள்ள பிரகாசமான வெளிச்சம் என்று அழைக்கப்படும் ஒளி வடிவம் பெற்ற எழுத்துக்கள் எல்லாமும் சத்தம் என்று அழைக்கப்படும் ஒலி வடிவத்தோடு ஒன்றாகச் சேர்ந்து பரவெளியில் சென்று அடையும் போது அங்கு வீற்றிருக்கும் இறை சக்தியால் சக்தியூட்டம் பெற்ற பிறகு காலமாக நிற்கின்ற ஏரொளிச் சக்கரமே அண்டத்திலுள்ள அனைத்து நட்சத்திரங்களாகவும் மாறி விடுகின்றது.




பாடல் #1272: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திர னற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே.

விளக்கம்:

பாடல் #1271 இல் உள்ளபடி நட்சத்திரமாகவே மாறிவிட்ட ஏரொளிச் சக்கரமானது மேலும் மேலும் விரிவடைந்து மேல் நோக்கிச் சென்று கொண்டே இருக்கும் போது ஒரு நிலையில் செழிப்பு பெற்று மிகப் பெரும் பேரொளியாக மாறுகின்றது. அதன் பிறகு பேரொளியாக இருக்கின்ற நட்சத்திரம் சந்திரனாகவும் நன்மையைத் தரும் சூரியனாகவும் மாறிக் கொண்டே வந்து சூரியன், சந்திரன், கிரகங்கள் என்று உலகத்தவர்களால் அழைக்கப்படுகின்ற அனைத்து நட்சத்திரங்களாவும் மாறி இருப்பதைக் காணலாம்.

குறிப்பு: ஆகாயத்தில் இருக்கின்ற சூரியன் சந்திரன் கிரகங்கள் என்று தனித்தனிப் பெயர்களால் அழைக்கப்படுகின்ற அனைத்துமே அறிவியலின் படி நட்சத்திரங்கள் என்றே சொல்லப்படுகின்றது.



பாடல் #1273: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்
கண்டிடு நாதமுந் தன்மே லெழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தன லொத்தபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே.

விளக்கம்:

பாடல் #1272 இல் உள்ளபடி காணும் படி நட்சத்திரங்களாக மாறி இருக்கின்ற ஏரொளிச் சக்கரத்திலிருந்து வெளிப்படுகின்ற வெளிச்சமானது தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும் போது அதன் மேலிருந்து வெளிப்படுகின்ற சத்தமும் அதனோடு தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும். அதனுடன் சாதகருக்குள்ளிருக்கும் அக்னியின் சுடரானது மிகவும் வளர்ந்து கொழுந்து விட்டுப் பெரும் நெருப்பாக நீண்டு ஒன்றாகச் சேர்ந்த பிறகு அதுவே அண்ட சராசரங்களில் இருக்கின்ற அடர்ந்த இருளுக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கும் பேரொளியாக ஆகிவிடும்.



பாடல் #1274: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

காரொளி யண்டம் பொதிந்த துலகெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி யொக்க வளர்ந்து கிடந்துபின்
நேரொளி யொன்றாய் நிறைந்தங்கு நின்றதே.

விளக்கம்:

பாடல் #1273 இல் உள்ளபடி அண்ட சராசரங்களில் இருக்கின்ற அடர்ந்த இருளுக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கும் பேரொளியாக இருக்கின்ற ஏரொளிச் சக்கரமானது அண்டத்தில் பொதிந்து இருந்து உலகங்கள் அனைத்திலும் இருக்கின்ற நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களின் செயல்களுக்கு பயனளிக்கும் ஒளியாக வளர்ந்து கிடக்கிறது. அந்த ஏரொளிச் சக்கரத்தின் ஒளியானது உலகத்தில் இருக்கின்ற ஐந்து பூதங்களோடும் சரிசமாக ஒன்றாகச் சேர்ந்து முழுமைப் பெற்று ஐந்து பூதங்களால் ஆகிய உலகத்தோடே நிற்கின்றது.

கருத்து: ஏரொளிச் சக்கரத்திற்கு தொடர்ந்து சக்தியளிக்கும் சாதகர் ஐந்து பூதங்களின் செயல்களுக்கு பயனளிக்கும் ஒளியாக வளர்வது மட்டுமின்றி ஐந்து பூதங்களாகவே மாறி விடுகிறார் என்றும் அவற்றை உலக நன்மைக்கு ஏற்றார் போல் இயக்கவும் செய்கிறார் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1275: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

நின்றது வண்டமு நீளும் புவியெலாம்
நின்றவிவ் வண்ட நிலைபெறக் கண்டிட
நின்றவிவ் வண்டமு மூல மலமொக்கும்
நின்றவிவ் வண்டம் பலமது விந்துவே.

விளக்கம்:

பாடல் #1274 இல் உள்ளபடி அண்ட சராசரங்கள் முழுவதும் விரிந்து பரவி உலகத்திலுள்ள ஐந்து பூதங்களோடும் ஒளியாக நிற்கின்ற ஏரொளிச் சக்கரமானது அண்ட சராசரங்கள் முழுவதும் விரிந்து அதிலுள்ள அனைத்து உலகங்களுக்கும் பரவி நிற்கின்றது. இந்த ஏரொளிச் சக்கரம் அண்ட சராசரங்கள் முழுவதும் பரவி நின்று அனைத்தையும் தாங்கி நிற்பது எப்படி என்பதை ஆராய்ந்து பார்த்தால் அது சாதகருக்குள்ளிருக்கும் மூலாதாரத்திலிருந்து வெளிப்படும் ஏரொளிச் சக்கரத்தின் வெளிச்சத்தை சார்ந்தே இருக்கின்றது. இப்படி அண்ட சராசரங்கள் முழுவதும் தாங்கி நிற்கின்ற சக்தியைக் கொடுப்பது சாதகருக்குள்ளிருந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் ஏரொளிச் சக்கரத்தின் வெளிச்சமே ஆகும்.

குறிப்பு: இறை சக்தியின் மூலம் நேரடியாக வராமல் சாதகருக்குள் இருக்கும் மூலாதாரத்திலிருந்து மட்டுமே வெளிச்சமாகவும் சத்தமாகவும் வெளிப்படுவதால் ஏரொளிச் சக்கரத்தை இங்கே மூல மலம் என்று குறிப்பிட்டு அருளுகின்றார்.



பாடல் #1276: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

விந்துவு நாதமு மொக்க விழுந்திடில்
விந்துவு நாதமு மொக்க விரையதாம்
விந்திற் குறைந்திடு நாத மெழுந்திடில்
விந்துவை யெண்மடி கொண்டது வீசமே.

விளக்கம்:

பாடல் #1275 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து வெளிப்பட்டு வந்து அண்ட சராசரங்கள் முழுவதும் பரவி அங்கிருந்து வெளிச்சமும் சத்தமும் ஒரே அளவில் கீழுள்ள உலகங்களுக்கு விழுந்து நன்மையைக் கொடுக்கும் மூல விதையாக இருக்கின்றது. உலகத்திலுள்ள உயிர்களில் இறைவனை அடைய முயற்சி செய்யும் ஆன்மாக்களுக்கு பயன் படும்படி வெளிச்சம் குறைந்து அதை விட எட்டு மடங்கு அதிகமாக சத்தமாக வெளிப்படும் போது அது மந்திர ஒலியாக இருக்கின்றது.

கருத்து: சாதகருக்குள்ளிருந்து வெளிப்பட்டு வரும் ஏரொளிச் சக்கரமானது அண்டங்கள் முழுவதும் விரிந்து பரவி அங்கிருந்து அனைத்து உலகங்களுக்கும் நன்மையைக் கொடுக்கும் மூல விதையாக இருக்கின்றது. உலகங்களில் இறைவனை அடைய விரும்பி சாதகம் செய்யும் உயிர்கள் மேலும் மேன்மையடைய இந்த ஏரொளிச் சக்கரம் வெளிச்சத்தைக் குறைந்து சத்தத்தை அதிகமாக்கி மந்திர ஒலியாகக் கொடுக்கின்றது.



பாடல் #1277: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

வீச மிரண்டுள நாதத் தெழுவன
வீசமு மொன்று விரைந்திடு மேலுற
வீசமும் நாதமு மெழுந்துட னொத்தபின்
வீசமும் விந்து விரிந்தது காணுமே.

விளக்கம்:

பாடல் #1276 இல் உள்ளபடி ஏரொளிச் சக்கரத்திலிருந்து வெளிப்படும் சத்தத்திலிருந்து வெளிப்படும் மந்திர ஒலிகள் இரண்டு வகைகளாக இருக்கின்றது. இவை இரண்டுமே சத்தத்திலிருந்து வெளிப்பட்டு மேல் நோக்கி ஒன்றின் மேல் ஒன்றாக விரைவாக எழுந்து கொண்டே இருக்கின்றது. இந்த இரண்டு விதமான மந்திர ஒலிகளும் ஏரொளிச் சக்கரத்தின் சத்தத்துடன் சரிசமமாகச் சேர்ந்து ஒன்றாக வெளிப்பட்ட பிறகு ஏரொளிச் சக்கரத்திலிருந்து வெளிப்பட்டு அண்ட சராசரங்கள் முழுவதும் விரிந்து பரவி இருக்கின்ற வெளிச்சத்தோடும் சரிசமமாகப் விரிந்து பரவுவதை பாடல் #1276 இல் உள்ளபடி உலகத்திலுள்ள இறைவனை அடைய விரும்பி சாதகம் செய்யும் உயிர்கள் காணலாம்.



பாடல் #1278: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

விரிந்தது விந்துவும் கெட்டது வீசம்
விரிந்தது விந்துவும் நாதத் தளவினில்
விரிந்தது வுட்கட்ட மெட்டெட்டு மாகில்
விரிந்தது விந்து விரையது வாமே.

விளக்கம்:

பாடல் #1277 இல் உள்ளபடி அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் விரிந்து பரவுகின்ற வெளிச்சம் அதிகமாகும் போது மந்திர ஒலிகள் அளவில் குறைந்து மறைந்து விடும். அதன் பிறகு வெளிச்சமும் சத்தமும் அளவில் சரிசமாக விரிந்து பரவும் போது அதன் உள் அமைப்பில் ஒன்றோடு ஒன்று அறுபத்து நான்கு மடங்கு அளவில் இருக்கும்படி ஆகி விட்டால் அதுவே பாடல் #1276 இல் உள்ளபடி உலகத்திலுள்ள இறைவனை அடைய விரும்பி சாதகம் செய்யும் உயிர்கள் அனைத்திற்கும் முக்திக்கு வழிகாட்டும் வித்தாக ஆகிவிடும்.



பாடல் #1279: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

விரையது விந்து விளைந்தன வெல்லாம்
விரையது விந்து விளைந்த வுயிரும்
விரையது விந்து விளைந்தவிஞ் ஞாலம்
விரையது விந்து விளைந்தவன் றானே.

விளக்கம்:

பாடல் #1278 இல் உள்ளபடி முக்திக்கு வழிகாட்டும் வித்தாக இருக்கின்ற ஏரொளிச் சக்கரத்தின் வெளிச்சத்திலிருந்தே அண்ட சராசரங்களில் இருக்கின்ற அனைத்தும் உருவாகி இருக்கின்றன. அந்த வெளிச்சத்திலிருந்தே அனைத்து உயிர்களும் உருவாகி இருக்கின்றன. அந்த வெளிச்சத்திலிருந்தே இந்த உலகங்களும் உருவாகி இருக்கின்றன. ஏரொளிச் சக்கரத்தை தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்ற சாதகர்களும் இந்த மூல விதையின் வெளிச்சத்திலிருந்தே உருவாகி இருக்கின்றார்கள்.

குறிப்பு: அனைத்தையும் உருவாக்குகின்ற மூல விதையாக சாதகருக்குள்ளிருந்து வெளிப்படும் ஏரொளிச் சக்கரத்தின் வெளிச்சம் இருந்தாலும் இவை அனைத்திற்கும் மூல காரணமாக இருப்பது அசையா சக்தியான இறைவனே ஆகும்.



பாடல் #1281: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

மந்திர சக்கர மானவை சொல்லிடிற்
தந்திரத் துள்ளெழுத் தொன்றெரி வட்டமா
தந்திரத் துள்ளூ மிரேகையி லொன்றில்லை
பந்தமு மாகும் பிரணவ முன்னிடே.

விளக்கம்:

பாடல் #1280 இல் உள்ளபடி மூல விதையாக இருக்கின்ற எழுத்துக்களே மந்திரங்களாகவும் சக்கரங்களாகவும் ஆகின்ற விதத்தை சொல்லப் போனால், ஏரொளிச் சக்கரத்தின் மூலம் வெளிச்சமும் சத்தமும் வெளிப்பட்டு அதுவே மூல விதையாக இருக்கின்ற வழி வகைக்கு உள்ளே இருக்கின்ற எழுத்துக்களின் பலவிதமான வெளிச்ச வடிவங்களில் ஒன்றில் இருந்து எரிகின்ற நெருப்பு மயமாக ஒரு வட்டம் இருக்கின்றது. இந்த வட்டத்திற்கு உள்ளே இருக்கின்ற வடிவத்திற்கு ஏற்ற கோடுகளில் வெளிச்சத்தையும் சத்தத்தையும் ஒன்றாக பிணைக்கின்ற சக்திகள் ஒன்றும் இல்லை. ஓமெனும் பிரணவத்தின் சக்தியே வெளிச்சத்திற்கும் சத்தத்திற்கும் உள்ளிருக்கும் தியானப் பொருளாக இருந்து இரண்டையும் பிணைத்து வைத்திருக்கின்றது.



பாடல் #1282: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

உன்னிட்ட வட்டத்தி லொத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட் டெழுந்த தகைப்பறப் பின்னிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே.

விளக்கம்:

பாடல் #1281 இல் உள்ளபடி ஓமெனும் பிரணவமே தியானப் பொருளாக உள்ளிருந்து பிணைத்திருக்கும் வெளிச்சத்திற்கும் சத்தத்திற்கும் உள்ளிருக்கும் எரிகின்ற நெருப்பு வட்டத்தோடு ஒன்றாகச் சேர்ந்து எழுகின்ற மந்திரங்கள் நிலைத்து நிற்பதனால் சக்கர வடிவத்திற்கு ஏற்ப பின்னிப் பிணைந்து இருக்கின்ற கோடுகள் நிலைத்து நிற்காமல் தாமாகவே மறைந்து போய்விடும். நெருப்பு வட்டத்திலிருந்து தானாகவே வெளிப்பட்டு எழுகின்ற மந்திரம் தளர்ச்சி இல்லாமல் சக்கரத்திற்குப் பின்னால் நிலையாக நிற்கும். அப்போது தானாகவே முறைப்படுத்திக் கொண்டு நிலையாக நிற்கின்ற அந்த மந்திரத்தை ஒளி வடிவமாக தரிசிக்க முடியும்.



பாடல் #1283: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

பார்க்கலு மாகும் பகையறு சக்கரங்
காக்கலு மாகுங் கருத்திற் றடமெங்கும்
நோக்கலு மாகு நுணுக்கற்ற நுண்பொருள்
ஆக்கலு மாகு மறிந்துகொள் வார்க்கே.

விளக்கம்:

பாடல் #1282 இல் உள்ளபடி சாதகர்கள் தரிசிக்கின்ற மந்திரத்தின் ஒளி வடிவமாகிய ஏரொளிச் சக்கரமே உலகத்திற்கும் உடலுக்குமான பந்தங்களாகிய பசி, தூக்கம், சோர்வு, இயற்கை உபாதைகள் ஆகியவற்றை அறுக்கின்றது. ஆனாலும் சாதகர்கள் இந்த உலகத்திலேயே தங்களின் உடலை அழியாமல் நீண்ட காலம் பாதுகாக்க முடியும். சாதகர்கள் தங்களின் எண்ணங்கள் செல்கின்ற அனைத்து இடங்களையும் தாங்கள் அமர்ந்து இருக்கின்ற இடத்திலிருந்தே பார்க்க முடியும். இது மட்டுமின்றி ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு நுண்ணியது பெரியது என்கிற அளவுகள் இல்லாத மிகவும் அதிநுட்பமான பொருளாக இருக்கின்ற இறைவனையும் சாதகர்கள் தங்களுக்குள் அறிந்து கொள்ள முடியும். ஏரொளிச் சக்கரத்தை தமக்குள்ளிருந்து மேல் நோக்கி எழும்பச் செய்து அதன் ஒளி வடிவத்தை தரிசித்த சாதகர்களால் தான் இவை அனைத்தையும் செய்ய முடியும்.



பாடல் #1284: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

அறிந்திடும் சக்கர மாதி யெழுத்து
விரிந்திடும் சக்கர மேலெழுத் தம்மை
பரிந்திடும் சக்கரம் பாரங்கி நாலும்
குவிந்திடும் சக்கரம் கூறலு மாமே.

விளக்கம்:

பாடல் #1283 இல் உள்ளபடி பரம்பொருளான இறைவனை தமக்குள் அறிந்து கொண்ட சாதகர்களால் ஏரொளிச் சக்கரத்தின் சக்தி மயங்களில் மூல மந்திரமான ஓங்காரத்தின் முதல் எழுத்தாகிய அகாரத்தில் இறைவனும் இரண்டாவது எழுத்தான உகாரத்தில் இறைவியும் மூன்றாவது எழுத்தாகிய மகாரத்தில் நிலம், நீர், காற்று, அக்னி ஆகிய நான்கு பூதங்களும் ஒன்றாகக் குவிந்து இருப்பதை அறிந்து உணர்ந்து அதை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறவும் முடியும்.



பாடல் #1285: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

கூறிய சக்கரத் துள்ளெழு மந்திரம்
மாறியல் பாக வமைந்து விரிந்திடுந்
தேறிய வஞ்சுடன் சேர்ந்தெழு மாரண
மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே.

விளக்கம்:

பாடல் #1284 இல் உள்ளபடி சக்தி மயங்களை நன்கு உணர்ந்து தெளிந்த சாதகர்கள் எடுத்துக் கூறிய ஏரொளிச் சக்கரத்தின் உள்ளிருந்து மேலெழுந்து வருகின்ற மந்திரமானது ஆறு விதமான இயல்புகளைக் கொண்டு ஒரு தன்மையில் சக்கரமாக அமைந்து அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் விரிந்து பரவுகின்றது. அதனுடைய இயல்பிற்கு சரிசமமான நிலையை அடைகின்ற நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களும் ஒன்றாகச் சேர்ந்து எழுகின்ற போது இயல்பிலேயே அழியக்கூடிய தன்மையைக் கொண்ட சாதகரின் உடலானது அவர் இந்த சாதகத்தை இடைவிடாமல் செய்து கொண்டே இருக்கின்ற போது தனது தன்மையில் இருந்து மாறி என்றும் அழியாத இயல்பைப் பெறுகின்றது.

கருத்து: சாதகர்கள் ஏரொளிச் சக்கரத்தின் சாதகத்தை இடைவிடாமல் செய்வதன் மூலம் எவ்வாறு என்றும் அழியாத உடலைப் பெறுகின்றார் என்பதை இந்தப் பாடலில் அறிந்து கொள்ளலாம்.



பாடல் #1286: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

மதித்திடு மம்மையு மாமாது மாகும்
மதித்திடு மம்மையு மங்கன லொக்கும்
மதித்தங் கெழுந்தவை காரண மாகில்
கொதித்தங் கெழுந்தவை கூடகி லாவே.

விளக்கம்:

பாடல் #1285 இல் உள்ளபடி ஏரொளிச் சக்கரத்திற்கான சாதகத்தை இடைவிடாமல் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கின்ற சாதகர்களின் உள்ளுக்குள் இருந்து இயக்குகின்ற சக்தியே அண்ட சராசரங்களில் இருக்கின்ற பராசக்தியாகவும் இருக்கின்றது. இந்த சக்தியே சாதகர்களுக்குள் இருக்கின்ற மூலாக்கினிக்கு சரிசமமாக இருக்கின்றது. அதனால் சாதகருக்குள்ளிருந்து மேலெழுந்து வந்த ஏரொளிச் சக்கரம், பாடல் #1285 இல் உள்ளபடி ஐந்து பூதங்கள், பாடல் #1277 இல் உள்ளபடி அண்ட சராசரங்களுக்கும் விரிவடைகின்ற மந்திர ஒலிகள் போன்ற அனைத்திற்கும் இந்த சக்தியே மூல காரணமாகவும் இருக்கின்றது. அதனால் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கின்ற மூலாக்கினியும் வீறு கொண்டு எழுந்து மூலாதாரத்திலிருந்து மேலேறி வருகின்ற அனைத்தினாலும் சாதகரின் உடலுக்கும் உலகத்திற்குமான தொடர்புகளை அறுப்பதாகவும் அதுவே இருக்கின்றது.



பாடல் #1287: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

கூடிய தம்பன மாரணம் வசிய
மாடியல் பாக வமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறார்
தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே.

விளக்கம்:

பாடல் #1286 இல் உள்ளபடி ஏரொளிச் சக்கரத்திலிருந்து மேலெழுந்து வந்து ஒன்றாகக் கூடி இருக்கின்ற தம்பனம், மாரணம், வசியம் ஆகியவற்றுடன் மறைந்து இருக்கும் மோகனம், ஆகருடணம், உச்சாடனம் ஆகிய தன்மைகளும் சேர்ந்து மொத்தம் ஆறு விதமான தன்மைகளைக் கொண்ட மந்திரங்களும் அதனதன் இயல்பிலேயே ஏரொளிச் சக்கரத்துடன் அமைந்து செழிப்பான சக்தி மயமாக உருவாகும். இந்த சக்தி மயமானது சாதகரின் உடலுக்கு வெளியில் இருக்கும் ஐந்து பூதங்களின் மூலம் வருகின்ற எந்தவிதமான இடையூறுகளையும் சாதகரின் உடலுக்குள் புகுந்து பாதிப்பு ஏற்படுத்தாதவாறு பாதுகாக்கும். இந்த நிலை ஏரொளிச் சக்கரத்தின் தன்மைகளைத் தமக்குள்ளேயே தேடி தெளிவு பெற்றவர்களுக்கே கிடைக்கும்.



பாடல் #1288: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

தெளிந்திடும் சக்கர மூலத்தி னுள்ளே
யளிந்த வகாரத்தை யந்நடு வாக்கிக்
குளிர்ந்த வரவினைக் கூடியுள் வைத்து
வளிந்தவை யங்கெழு நாடிய காலே.

விளக்கம்:

பாடல் #1287 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள்ளேயே தேடி தெளிந்து கொண்ட ஏரொளிச் சக்கரத்தின் ஆதாரமான மூலாதாரத்திற்கு உள்ளே தமது ஏரொளிச் சக்கர சாதகத்தினால் அருளாகக் கிடைத்த ஓங்கார மந்திரத்தின் அகாரத்தை நடுவில் வைத்து அமைக்க வேண்டும். சாதகருக்குள்ளிருந்து வெளிவந்து அண்ட சராசரங்கள் முழுவதும் பரவி அங்குள்ள அனைத்து உலகத்தில் இருக்கின்ற உயிர்களுக்கும் அருளுவதற்கான சக்தியைப் பெறுவதற்கு மீண்டும் சாதகரின் உள்ளுக்குள் வருகின்ற எப்போதும் மாறாத சுழற்சியை செய்து கொண்டிருக்கும் குண்டலினி சக்தியோடு அந்த அகாரத்தை ஒன்றாகச் சேர்த்து அதற்கு உள்ளே வைத்தால் கிடைக்கும் அமைப்பிலிருந்து எழுகின்ற மந்திரத்தில் ஒரு ஒரு நாழிகையின் சிறிய அளவாகிய கால் பங்கு அளவு கிடைக்கும்.



பாடல் #1289: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

காலரை முக்கால் முழுதெனும் மந்திரம்
ஆலித் தெழுந்தமைந் தூறி யெழுந்ததாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே.

விளக்கம்:

பாடல் #1288 இல் உள்ளபடி சாதகர் செய்கின்ற சாதகத்தின் அமைப்பிலிருந்து எழுகின்ற மந்திரமானது கால் பங்கு, அரைப் பங்கு, முக்கால் பங்கு, முழுப் பங்கு என்ற வெவ்வேறு அளவுகளில் வேறுபட்டு எழுந்து வரும். இப்படி வந்த மந்திரங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஒரே மந்திரமாக சாதகருக்குள் முழுவதும் ஊறி எழுகின்றது. இந்த மந்திரமானது சாதகரின் உடலையும் தாண்டி வெளியே வந்து அண்ட சராசரங்களில் இருக்கின்ற அனைத்து உலகங்களுக்கும் விரிந்து பரவி நின்று அந்த உலகங்களில் இறைவனை அடைய வேண்டும் என்று சாதகம் செய்கின்ற உயிர்களுக்கெல்லாம் பிறைவியை அறுத்து அருள் பாலிக்கின்றது. தமக்குள்ளிருந்து வெளிப்படுகின்ற மந்திரத்திலேயே இலயித்து தாமும் மந்திரமாகவே மாறி மந்திரத்தை தமக்குள் முழுவதுமாக உள் வாங்கிக் கொண்ட சாதகர்களே இந்த நிலையை அடைவார்கள்.



பாடல் #1290: நான்காம் தந்திரம் – 9. ஏரொளிச் சக்கரம் [மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி எழுகின்ற ஒளி வடிவான சக்கரம்]

கொண்டவிம் மந்திரங் கூத்த னெழுத்ததாய்ப்
பண்டையுன் னாவிப் பகையற விண்டபின்
மன்று நிறைந்த மணிவிளக் காயிடும்
இன்று மிதயத் தெழுந்து நமவெனே.

விளக்கம்:

பாடல் #1289 இல் உள்ளபடி சாதகர் முழுவதுமாக உள் வாங்கிக் கொண்ட மந்திரமானது இறைவனின் அம்சமாக உலக இயக்கத்தை செய்து கொண்டே இருக்கும் ஆதி எழுத்தான ஓங்காரமாகவே மாறிவிடுகின்றது. இந்த மந்திரத்தை அன்னாக்கில் வைத்து சிறிதளவு கூட மாறுபாடு இல்லாமல் அசபையாக உச்சரித்துக் கொண்டே இருந்தால் தலை உச்சியில் இருக்கின்ற சிற்றம்பலமாகிய சகஸ்ரதளத்திலிருந்து அண்ட சராசரங்கள் முழுவதும் நிறைந்து பிரகாசிக்கும் பேரொளியாக மாறி உலக இயக்கத்திற்கான நன்மையை செய்து கொண்டிருக்கும். அதனால் மந்திரத்திலேயே இலயித்துக் கொண்டு இருக்கும் இதயத்திலிருந்து பிரிந்து நின்று இறைவனை எப்போதும் ‘நம’ என்று போற்றி வணங்கிக் கொண்டே சாதகர் இருப்பார்.



பாடல் #1291: நான்காம் தந்திரம் – 10. வயிரவச் சக்கரம்
[மானசீக சக்கர அமைப்பில் பைரவர் வழிபாடு]

அறிந்த பிரதமை யோடாறு மறிஞ்சு
அறிந்தவச் சத்தமி மேலிவை குற்றம்
அறிந்தவை யொன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்த வலமது வாக நடவே.

விளக்கம்:

உலக நடப்பில் அறிந்து கொண்ட சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தை குறிக்கும் திதிகளில் முதல் திதியாகிய பிரதமையோடு துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய ஐந்து திதிகளையும் சேர்த்து மொத்தம் ஆறு திதிகளையும் அவை வருகின்ற கால அளவுகளையும் அறிந்து கொண்டு அந்த திதிகளில் ஏழாவதான சப்தமி திதியிலிருந்து அதற்கு மேல் இருக்கும் ஒன்பது திதிகளில் சிறப்பில்லாத சப்தமி, நவமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகளை விட்டு விட்டு சிறப்பான அஷ்டமி, தசமி, துவாதசி, சதுர்த்தசி ஆகிய நான்கு திதிகளுடன் முதல் ஆறு திதிகளையும் சேர்த்து மொத்தம் பத்து திதிகளிலும் மூச்சுக் காற்றை வலது நாடியின் வழியாக உள்ளிழுத்து வெளிவிட்டு பைரவரை நினைத்து வழிபடலாம்.

வளர்பிறை திதிகள்: 1. பிரதமை 2. துவிதியை 3. திருதியை 4. சதுர்த்தி 5. பஞ்சமி 6. சஷ்டி 7. சப்தமி 8. அஷ்டமி 9. நவமி 10. தசமி 11. ஏகாதசி 12. துவாதசி 13. திரயோதசி 14. சதுர்த்தசி 15. பௌர்ணமி

தேய் பிறை திதிகள்: மேலுள்ள முதல் 14 திதிகளுடன் சேர்ந்து அமாவாசையில் முடிவது.



பாடல் #1292: நான்காம் தந்திரம் – 10. வயிரவச் சக்கரம்
[மானசீக சக்கர அமைப்பில் பைரவர் வழிபாடு]

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாட லாமே.

விளக்கம்:

பாடல் #1291 இல் உள்ளபடி குறிப்பிட்ட திதிகளில் முறைப்படி தியானம் செய்து பைரவரை மானசீகமாக வழிபடும் போது திரிசூலத்தையும் கபாலத்தையும் தமது திருக்கைகளில் ஏந்திக் கொண்டு சாதகருக்குள்ளிருந்து பைரவர் வெளிப்பட்டு இதுவரை சாதகர் கடந்து வந்த அனைத்து தீய கர்மங்களையும் தமது திருக்கண்களால் சுட்டெரித்து அழித்து அருள்வார். அதன் பிறகு இனி வரும் தீய சக்திகளும் சாதகரை பாதிக்காதவாறு தடுத்துக் காப்பாற்றும் சக்கர அமைப்பை சாதகரைச் சுற்றி படர்ந்து இருக்கும் படி செய்து அருள்வார். இனி சாதகர் தமது வழிபாட்டைத் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கும் போது அவரைச் சுற்றி படர்ந்து இருக்கும் சக்கர அமைப்பின் மூலம் இனி வரும் தீய கர்மங்களையும் நெருங்க விடாமல் பந்தாடி சாதகரால் விரட்ட முடியும்.




பாடல் #1293: நான்காம் தந்திரம் – 10. வயிரவச் சக்கரம்
[மானசீக சக்கர அமைப்பில் பைரவர் வழிபாடு]

ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவ
னாமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கையே.

விளக்கம்:

பாடல் #1292 இல் உள்ளபடி சாதகரைச் சுற்றிப் படர்ந்து சாதகர் தரித்து இருக்கும் பைரவச் சக்கரமானது ஆதி மூலமாகிய பைரவர் கொடுத்து அருளியது. பைரவரது அருளானது பைரவச் சக்கரத்தை தரித்த சாதகரின் கைகளில் சூட்சுமமாக இறப்பில்லாத தன்மையை அருளும் கபாலமாகவும் தீய சக்திகளை தடுத்து நிற்கும் திரிசூலமாகவும் நன்மை தீமை ஆகிய இரண்டு வினைகளையுமே சேர விடாமால் இரண்டு பக்கமும் வருகின்ற நாதத்தால் காத்து அருளுகின்ற தமருகமாகவும் உலகப் பற்றுக்களை அறுக்கின்ற பாசக் கயிறாகவும் பிறவி எடுப்பதற்கான கர்மங்களை அழிக்கின்ற சிரமாகவும் இனி வரும் பிறவிகளையும் அறுக்கின்ற வாளாகவும் இருக்கின்றது.

கருத்து: பைரவர் அருளால் சாதகர் பெற்ற பைரவச் சக்கரத்தின் மூலம் சாதகர் இறப்பில்லாத தன்மையையும் தீய சக்திகளை அண்ட விடாமல் தடுத்தும் பிறவி எடுப்பதற்கு காரணமாகிய நன்மை தீமை ஆகிய இரண்டு வினைகளுமே இருக்கக்கூடாது என்பதனால் அதை தடுத்தும் உலகப் பற்றுக்களை நீக்கியும் பிறவி எடுப்பதற்கான கர்மங்களை அழித்தும் ஏற்கனவே இருக்கின்ற கர்மங்களினால் இனி எடுக்க வேண்டிய பிறவிகளை அறுத்தும் பயன் பெறுகிறார்.



பாடல் #1294: நான்காம் தந்திரம் – 10. வயிரவச் சக்கரம்
[மானசீக சக்கர அமைப்பில் பைரவர் வழிபாடு]

கையவை யாறுங் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யரு ளத்தில் துளங்குமெய் யுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே.

விளக்கம்:

பாடல் #1293 இல் உள்ளபடி சாதகரிடம் சூட்சுமமாக இருக்கின்ற ஆறு கைகளிலும் ஏந்தி இருக்கின்ற பைரவர் கொடுத்து அருளிய ஆறு ஆயுதங்களையும் எண்ணத்தில் வைத்து ஆராய்ந்து பார்த்தால் சாதகரின் உடலுக்குள்ளேயே வந்து செம்மையான அருள் வடிவமாக வீற்றிருக்கும் பைரவரை அறிந்து கொள்ளலாம். அதன்படி சாதகருக்குள் வந்து வீற்றிருக்கின்ற பைரவர் தமது தூய்மையான அருளை சாதகருக்குக் கொடுத்து அவருக்குள் இருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கி பேருண்மையாக விளங்குகின்ற பரம்பொருளை உணரும்படி அருள்வார். அதன் பிறகு பொய்யான மாயை அகங்காரம் ஆகியவற்றை விட்டுவிட்டு சாதகர்கள் பைரவரை பூஜித்து வழிபாடு செய்வார்கள்.



பாடல் #1295: நான்காம் தந்திரம் – 10. வயிரவச் சக்கரம்
[மானசீக சக்கர அமைப்பில் பைரவர் வழிபாடு]

பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்ய மதுவுட னாடுமால்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே.

விளக்கம்:

பாடல் #1294 இல் உள்ளபடி பைரவரை பூஜித்து வழிபடுவதற்கு அவருக்கு ஏற்ற மந்திரத்தை ஒரு ஆயிரம் முறை மானசீகமாக உச்சரிக்க வேண்டும். தூய்மையான தேனாலும் நீராலும் அபிஷேகம் செய்ய வேண்டும். சந்தனம், ஜவ்வாது, புனுகு ஆகிய நறுமணம் வீசும் பொருட்களை பூச வேண்டும். நெய் தீபம் ஏற்ற வேண்டும். இவ்வாறெல்லாம் செய்து வழிபட்ட பிறகு திருநீறு எடுத்து பூசிக் கொள்ள வேண்டும்.




பாடல் #1296: நான்காம் தந்திரம் – 10. வயிரவச் சக்கரம்
[மானசீக சக்கர அமைப்பில் பைரவர் வழிபாடு]

வேண்டிய வாறு கலகமு மாயிடும்
வேண்டிய வாறினுள் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வரும்வழி நீநட
வேண்டிய வாறது வாகுங் கருத்தே.

விளக்கம்:

பாடல் #1295 இல் உள்ள முறைகளின் படி பைரவரை பூஜித்து வழிபாட்டின் மூலமாகவும் பாடல் #1293 இல் உள்ளபடி ஏற்கனவே பெற்ற ஆறு விதமான அருள்களின் மூலமாகவும் சாதகர்கள் தம்மை நாடி வருகின்ற தீமைகளையும் நன்மைகளாக மாற்றி விட முடியும். அந்த ஆறு விதமான அருள்களுக்கு உள்ளிருக்கும் பேருண்மையான பரம்பொருளையும் தமக்குள் பெற்று உணர்ந்த பிறகு சாதகர்களுக்குள்ளிருந்து பரம்பொருள் கொடுக்கின்ற வழியைப் பின்பற்றி அவர்கள் சாதகம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்து வந்தால் அவர்கள் என்ன நினைத்தாலும் அது அப்படியே நடக்கும்.




பாடல் #1297: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில்
ஆம்பத மெட்டாக விட்டிடின் மேலதாங்
காண்பதந் தத்துவ நாலுள் நயனமும்
நாம்பதங் கண்டபின் நாடறிந் தோமே.

விளக்கம்:

சாம்பவி என்கிற சிவமும் சக்தியும் ஒன்றாக வீற்றிருக்கின்ற சிவலிங்க அமைப்பில் அமைகின்ற சக்கரத்தைப் பற்றி சொல்லப் போனால் சக்கர அமைப்பாக இருக்கின்ற அறைகள் ஒரு வரிசைக்கு எட்டாக எட்டு வரிசையில் மொத்தம் அறுபத்து நான்கு அறைகள் கொண்ட சக்கரம் அமைக்க வேண்டும். அதன் பிறகு அதற்கு நடுவில் இருக்கின்ற மேன்மையான நான்கு அறைகளுக்குள் சிவம், சக்தி, விந்து, நாதம் ஆகிய நான்கு தத்துவங்களையும் அமைக்க வேண்டும். இப்படி அறுபத்து நான்கு அறைகள் கொண்ட இந்த சக்கர அமைப்பை மானசீகமாக தமக்குள்ளேயே வரைந்து அதை உணர்ந்து தரிசித்த சாதகர்கள் சிவலிங்க அமைப்பில் இருக்கின்ற சாம்பவி மண்டலச் சக்கரத்தை அறிந்து கொள்ளலாம்.

கருத்து: சாதகர்கள் மானசீகமாக பாடலில் குறிப்பிட்டு உள்ளபடி அறுபத்து நான்கு அறைகள் கொண்ட சக்கரத்தை அமைத்து அதன் நான்கு மூலைகளிலும் நான்கு சிவலிங்கங்களாக அமைத்து அதற்கு நடுவில் சிவம் சக்தி தத்துவங்களை ஒரே ஒரு சிவலிங்கமாகவும் விந்து நாத தத்துவங்களை ஓம் மந்திரமாகவும் அமைத்து தியானித்தால் சாம்பவி மண்டலச் சக்கரத்தை அறிந்து கொள்ளலாம்.




பாடல் #1298: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

நாடறி மண்டலம் நல்லவிக் குண்டத்துக்
கோடற வீதியுங் கொணர்ந்துள் ளிரண்டழி
பாடறி பத்துட னாறு நடுவீதி
ஏடற நாலைந்து இடவகை யாமே.

விளக்கம்:

பாடல் #1297 இல் உள்ளபடி சிவலிங்க அமைப்பில் இருக்கின்ற சக்கரமாக அறிந்து கொண்ட சாம்பவி மண்டலத்தை நன்மையான இந்த நவகுண்டமாகிய உடம்பிற்குள் சக்கரத்தில் வரைந்த கோடுகளை நீக்கி விட்டு அவற்றை சக்தி பாயும் வீதிகளாக கொண்டு வந்து உள் வாங்கிக் கொண்டு சக்கரத்தை இரண்டு பாகமாக பிரித்து வைக்க வேண்டும். இப்படி இரண்டு பாகமாக உண்டாகும் பக்கங்களை அறிந்து கொண்டு பத்து அறைகளுடன் ஆறு அறைகளும் சேர்த்து மொத்தம் பதினாறு அறைகளில் இரண்டு சிவலிங்கங்களையும் நடுவில் இருக்கின்ற நான்கு அறைகளில் உள்ள சிவலிங்கமும் ஓம் மந்திரமும் சேர்த்து வைக்க வேண்டும். அதன் பிறகு மனதில் இறைவனைத் தவிர வேறு எந்த சிந்தனைகளும் இல்லாமல் இருபது அறைகளாக இருக்கின்ற இடது பக்கமும் வலது பக்கமும் ஆகிய பகுதிகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

குறிப்பு: கீழ் கொடுக்கப்பட்டுள்ள படத்தில் அனைவருக்கும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இருபது எண்களும் இருபது அறைகள் இருக்கின்ற இடம் வலது ஆகிய பக்கங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நீலம் மற்றும் பச்சை கலர்களில் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது.




பாடல் #1299: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

நாலஞ் சிடவகை யுள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நல்ல விலிங்கமாய்
நாலுநற் கோணமும் நன்னா லிலிங்கமாய்
நாலுநற் பூநடு வண்ணலவ் வாறே.

விளக்கம்:

பாடல் #1298 இல் உள்ளபடி இருபது அறைகளாக இருக்கின்ற இடது பக்கமும் வலது பக்கமும் ஆகிய பகுதிகளை சேர்த்து இருக்கும் சாம்பவி மண்டலச் சக்கரத்தில் நன்மையைத் தருகின்ற சக்தி பாயும் வீதிகளாக அறைகளை அமைக்க வேண்டும். அதில் நான்கு திசைகளாக இருக்கின்ற மூலைகளிலும் நான்கு நான்கு இலிங்கங்களாக மொத்தம் பதினாறு இலிங்கங்களை அமைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு மூலையிலும் அமைந்திருக்கும் நான்கு இலிங்கங்களுக்கு நடுவிலும் சாதகர்கள் தங்களின் மனதை வைத்து இறைவனைத் தவிர வேறு எந்த சிந்தனைகளும் இல்லாமல் தியானித்தால் இறைவனும் அவர்களின் எண்ணங்களுக்கேற்ப வந்து சக்கரத்தின் நடுவில் வீற்றிருப்பான்.




பாடல் #1300: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

ஆறிரு பத்துநா லஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறிநீ ரும்மிற் சிவாய நமவென்று
கூறுமின் கூறிற் குறைகளு மில்லையே.

விளக்கம்:

ஆதிகாலத் தமிழில் இருக்கும் 51 எழுத்துக்களும் உண்மை ஞானத்தைக் கொடுப்பவை ஆகும். இவை வெவ்வேறு உருவங்களில் [எழுத்து வடிவங்களில்] சூட்சுமமாக சாம்பவி மண்டலச் சக்கரத்தில் வளர்ச்சி பெற்று பரவிக் கிடக்கின்றது. இவற்றின் உண்மைப் பொருளை ஆராய்ந்து உணர்ந்து சாதகர்கள் தமக்குள் 'சிவாய நம' எனும் மந்திரத்தை அசபையாகச் செபித்துக் கொண்டே இருந்தால் அவர்களுக்கு எந்தவிதமான குறைகளும் இருக்காது.



பாடல் #1301: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

குறைவது மில்லை குரைகழற் கூடு
மறைவது மாரண மவ்வெழுத் தாகித்
திறமது வாகத் தெளியவல் லார்கட்
கிறவில்லை யென்றென் றியம்பினர் காணே.

விளக்கம்:

பாடல் #1300 இல் உள்ளபடி எந்த விதமான குறைகளும் இல்லாத நிலையை அடைந்த சாதகர்கள் மேன்மையான சாம்பவி மண்டலச் சக்கரத்திற்கு ஏற்ப ஞானமும் அருளும் எப்போதும் குறைவில்லாமல் இருப்பார்கள். ஒலிக்கின்ற சிலம்புகளை அணிந்திருக்கும் இறைவனின் திருவடிகளும் சாதகர்களை விட்டு எப்போதும் பிரியாமல் அவர்களுடனே சேர்ந்து இருக்கும். வேதங்கள் சிறப்பித்து சொல்லுகின்ற உண்மை ஞானமாகவே இருக்கின்ற 51 எழுத்துக்களையும் அதனதன் இயல்புக்கு ஏற்ப முழுவதுமாக அறிந்து உணர்ந்து கொள்ள முடிந்தவர்களுக்கு இறப்பு என்பதே இல்லை என்று இந்த நிலையை அடைந்தவர்கள் உறுதியாக சொல்வார்கள். இதை சாதகர்களும் முழுவதுமாக உணர்ந்து கண்டு கொள்ள வேண்டும்.



பாடல் #1302: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

காணும் பொருளுங் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமு
மூணு முணர்வு முறக்கமுந் தானாயக்
காணுங் கனகமுங் காரிகை யாமே.

விளக்கம்:

பாடல் #1301 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள் கண்டு உணர்ந்து கொண்ட பேருண்மையான பரம்பொருளே அவர்களின் எண்ணத்திற்கு ஏற்றபடியான வடிவங்களைக் கொண்ட தெய்வமாக அவர்களுக்குள் வீற்றிருக்கின்றார். தமது உடலுக்குள் பரம்பொருளே தெய்வமாக வீற்றிருப்பதால் சாதகர்கள் முறையாகப் பேணிப் பாதுகாக்கின்ற உடலும், அதனால் சாதகர்களுக்குள் ஊற்றெடுத்துப் பெருகுகின்ற அமிழ்தமும், சாதகர்களின் ஆன்மா நுகர்கின்ற இன்பமும், அதனால் கிடைக்கின்ற பேரின்ப உணர்வும், அந்த உணர்விலேயேஎ இலயித்து இருகின்ற நிலையும், இந்த நிலையை அடைந்ததும் அவர்கள் காணும் படி தானாகவே பொன் போல மாறுகின்ற உடலும் ஆகிய இவை அனைத்துமே சாம்பவி மண்டலச் சக்கரத்தின் செயலாக இருக்கின்ற இறை சக்தியின் அருளால் கிடைக்கின்ற பேறுகள் ஆகும்.

கருத்து: சாம்பவி மண்டலச் சக்கர சாதகத்தை செய்கின்ற சாதகர் பேருண்மையான பரம்பொருளைத் தமக்குள் கண்டு உணர்ந்து இறைவன் வீற்றிருக்கும் தமது உடலையே கோயிலாக எண்ணிப் பேணிப் பாதுகாத்து உள்ளிருக்கும் இறைவனைப் போற்றி வணங்கி வழிபடும் போது அவரது ஆன்மா இன்பத்தை நுகருகின்றது. அதன் பிறகு அவருக்குள் அமிழ்தம் ஊற்றெடுக்கின்றது. அந்த அமிழ்தத்தைப் பருகியப் பேரின்ப உணர்விலேயே சாதகர் இலயித்து இருக்கும் போது அவரின் உடல் பொன் போல மாறி என்றும் அழியாத நிலை பெறுகின்றது. இவை அனைத்தும் சாம்பவி மண்டலச் சக்கரத்தின் செயலாக இருக்கின்ற இறை சக்தியினால் அவருக்கு கிடைக்கின்றது.



பாடல் #1303: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

ஆமே எழுத்தஞ்சு மாம்வழி யேயாகப்
போமே யதுதானும் போம்வழி யேபோகா
னால்நாமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மே லொருவர் பகையில்லை தானே.

விளக்கம்:

பாடல் #1302 இல் உள்ளபடி சாம்பவி மண்டலச் சக்கரத்தின் செயலாக இருக்கின்ற சக்தியின் அருள் பெற்ற சாதகர்கள் பாடல் #1300 இல் உள்ளபடி அசபையாக உச்சரிக்கின்ற 'சிவாய நம' எனும் மந்திரத்தில் உள்ள ஐந்து எழுத்துக்களே இறைவனை நோக்கி சாதகரின் எண்ணங்களை எடுத்துச் செல்லும் வழியாக இருக்கின்றன. சாதகர்கள் தன்னுடைய எண்ணங்களை சிந்தனை போகும் போக்கில் போக விடாமல் சிவாயநம என்னும் எழுத்துக்களின் வழியாக இறைவனை நோக்கிச் செலுத்திக் கொண்டே இருந்தால் சாதகர்கள் நினைக்கின்ற அனைத்தையும் செயலாக்க முடியும். அதன் பிறகு உலகத்தில் உள்ள எந்தவொரு பற்றுக்களும் சாதகர்களுக்கு இல்லாமல் போய்விடும்.



பாடல் #1304: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

பகையில்லை யென்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாளும் நன்மைக ளாகும்
வினையில்லை யென்றும் விருத்தமு மில்லைத்
தகையில்லைத் தானுஞ் சலமது வாமே.

விளக்கம்:

பாடல் #1303 இல் உள்ளபடி உலகத்தில் உள்ள எந்தவொரு பற்றுக்களும் சாதகர்களுக்கு இல்லாமல் போய்விடும். இறைவனை வணங்கித் தொழுகின்ற சாதகருக்கு அவரைச் சுற்றி இருக்கின்ற உலகத்தால் நன்மை தீமைகள் எதுவும் இல்லை. அனைத்து நாட்களும் அவருக்கு நன்மையான நாட்களாகவே இருக்கும். நல்வினை தீவினை ஆகிய எதுவுமே அவருக்கு இல்லாமல் போய்விடும். இனி எப்போதும் புதியதாக வினைகள் எதுவும் வந்து சேராது. தமது சாதகத்திற்கு தடைகள் எதுவும் இல்லாமல் தாமும் தடை இல்லாமல் உலக நன்மைக்காகச் சுழற்சியாகத் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டே இருக்கின்ற நிலையை அடைந்து விடுவார்.



பாடல் #1305: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

ஆரு முரைசெய்ய லாமஞ் செழுத்தாலே
யாரு மறியாத வானந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலு மதியதி
யூனு முயிரு முணர்வது வாமே.

விளக்கம்:

சாம்பவி மண்டலச் சக்கரத்தில் உள்ள மந்திரமாகிய 'சிவாய நம' எனும் ஐந்து எழுத்துக்களை யாரும் அசபையாக உச்சரிக்கலாம். அதை முறைப்படி உச்சரித்து சாதகம் செய்பவர்களுக்கு யாராலும் எளிதில் அறிந்து கொள்ள முடியாத பேரின்ப உருவமாக இருக்கின்ற சாம்பவி மண்டலச் சக்கரத்தை அறிந்து கொள்ளலாம். அதை அறிந்து கொண்ட சாதகர்களுக்கு உலகமாகவும், ஆகாயமாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும், பாடல் #1302 இல் உள்ளபடி பொன் போன்ற உடலாகவும், உயிராகவும், உணர்வாகவும் அந்த சாம்பவி மண்டலச் சக்கரத்தின் பேரின்ப உருவமே இருக்கின்றது.



பாடல் #1306: நான்காம் தந்திரம் – 11. சாம்பவி மண்டலச் சக்கரம் [சிவசக்தி சேர்ந்திருக்கும் சிவலிங்கத் திருமேனி சக்கரம்]

உணர்ந்தெழு மந்திர மோமெனு முள்ளே
யணைந்தெழு மாங்கதி யாதிய தாகுங்
குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணு மக்காமுகை யாமே.

விளக்கம்:

பாடல் #1305 இல் உள்ளபடி சாதகர் தமக்குள் சாம்பவி மண்டலச் சக்கரத்தை பேரின்ப உருவமாக உணரும் பொழுது அவருக்குள்ளிருந்து எழுகின்ற மந்திரமானது ஓம் என்று நீட்டி உச்சரிக்கும் ஓங்காரத்தின் ஓரெழுத்திலேயே அடங்கி விடும். அப்போது சாதகரோடு சேர்ந்து எழுகின்ற ஓங்காரமே சாதகர் சென்று அடையும் கதி மோட்சமாகவும் அவர் ஆரம்பித்த ஆதி மூலமாகவும் இருக்கின்றது. இதை சாதகர் முழுவதுமாக உணரும் போது இதுவரை அவருக்குள் மாயையால் மறைந்து விளையாடிக் கொண்டு இருந்த இறைவனும் இறைவியும் மாயை நீங்கி வெளிப்பட்டு சாதகரோடு ஒன்றாகக் கலந்து சாம்பவி மண்டலச் சக்கரத்தின் பேரின்ப வடிவமாகவே இருப்பார்கள். அதன் பிறகு சாதகரும் அந்த பேரின்பத்திலேயே இறைவனோடும் இறைவியோடும் என்றும் இலயித்து இருப்பார்.

கருத்து: சாம்பவி மண்டலச் சக்கரத்தில் உள்ள மந்திரத்தின் ஐந்து எழுத்துக்களும் அவருக்குள் ஓங்காரத்தின் ஓரெழுத்தாகவே சேர்ந்து எழும் போது சாதகர் சாம்பவி மண்டலச் சக்கரமாகவே ஆகி அதில் இருக்கும் இறைவனோடும் இறைவியோடும் கலந்து அதிலேயே இலயித்து இருப்பார்.



பாடல் #1307: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

ககராதி யோரைந்துங் காணிய பொன்மை
யகராதி யோரக் கரத்தமே போலுஞ்
சகராதி நாலஞ்சு தான்சுத்த வெண்மை
மகராதி மூவித்தை காமிய முத்தியே.

விளக்கம்:

ககர எழுத்திற்கு [க] மூலமாக இருக்கின்ற ஐந்து எழுத்துக்களையும் சாதகர்கள் தங்களுக்குள் தரிசித்துப் பார்த்தால் அவை பொன் நிறத்தில் இருக்கும். அது போலவே இரண்டாவது எழுத்தான அகர எழுத்திற்கு [அ] மூலமாக இருக்கின்ற எழுத்துக்கள் அனைத்துமே சுத்தமான சிவப்பு நிறத்தில் இருக்கும். அது போலவே மூன்றாவது எழுத்தான சகர எழுத்திற்கு [ச] மூலமாக இருக்கின்ற இருபது எழுத்துக்களும் சுத்தமான வெள்ளை நிறத்தில் இருக்கும். உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கின்ற புவனாபதி சக்கரத்தில் இருக்கின்ற இந்த மூன்று எழுத்துக்களையும் அதன் மூல எழுத்துக்களாகிய இருபத்தாறு எழுத்துக்களையும் மானசீகமாகத் தமக்குள் தரிசிக்கும் சாதகர்களுக்கு ஆதியிலிருந்தே உயிர்களைத் தொடர்ந்து வருகின்ற படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றின் பிறவிச் சுழற்சியில் சிக்கி இருக்கும் சுத்த வித்தையிலிருந்து இந்த மூன்று எழுத்துக்களையும் ஞானமாகத் தெரிந்து கொள்கின்ற அபர வித்தை பெற்று அதன் பிறகு அதை தமக்குள்ளேயே அனுபவ பூர்வமாக உணருகின்ற பர வித்தையைப் பெற்றால் ஆதியிலிருந்தே தம்மைத் தொடர்ந்து வருகின்ற அனைத்து கர்ம வினைகளும் நீங்கி முக்தியை இறையருளால் அடைவார்கள்.



பாடல் #1308: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

ஓரு மிதுவே யுரையுமித் தெய்வத்தைத்
தேரிற் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் திரிகோண் மனவின்ப முத்தியுந்
தேரி லறியுஞ் சிவகாயந் தானே.

விளக்கம்:

பாடல் #1307 இல் உள்ளபடி சாதகர்கள் தங்களுக்குள் ஆராய்ந்து அறிந்து கொண்ட மூன்று வித்தைகளால் தெரிந்து கொண்ட புவனாபதி சக்கரத்தில் வீற்றிருக்கும் இந்த தெய்வத்தைப் பற்றியே யாம் எடுத்துச் சொல்கிறோம். இந்த தெய்வத்தை முழுவதுமாக உணர்ந்து கொண்டால் வேறு ஒரு தெய்வம் எதுவும் தேவை இல்லை. யாம் சொல்கின்ற ஒரு விஷயத்தை கவனமாகக் கேளுங்கள். சாதகர்கள் தங்களுக்குள் மானசீகமாக வருவித்த மூன்று கோணங்களைக் கொண்ட இந்த புவனாபதி சக்கரத்தில் தங்களின் மனதை அசையாமல் வைத்து தியானித்தால் பேரின்பமும் முக்தியும் என்ன என்பதை முழுவதுமாக அவர்களால் அறிந்து கொள்ள முடியும். அப்படி அறிந்து கொண்ட பிறகு சிவ உருவம் எது என்பதையும் அவர்களால் அறிந்து கொள்ள முடியும்.



பாடல் #1309: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

ஏகப் பராசத்தி யீசற்கா மங்கமே
யாகப் பராவித்தை யாமுத்தி சித்தியே
யேகப் பராசத்தி யாகச் சிவகுரு
யோகப் பராசத்தி யுண்மை யெட்டாமே.

விளக்கம்:

பாடல் #1308 இல் உள்ளபடி சாதகர்கள் அறிந்து கொண்ட சிவ உருவமாக இருப்பவள் ஒன்றாகிய பரா சக்தியே. அவளே இறைவனுக்கு சரி பாதி அங்கமாகவும் இருக்கின்றாள். தனது திருமேனியில் சாதகர்கள் அனுபவத்தில் உணருகின்ற பரா வித்தையாகவும், சாதகர்களுக்கு கிடைக்கும் முக்தியாகவும், அவர்கள் அடையக் கூடிய சித்திகளாகவும் அவளே இருக்கின்றாள். ஒன்றாகிய பரா சக்தியே சாதகர்கள் பார்க்கின்ற குருவாக இருக்கும் இறைவனாகவும் இருக்கின்றாள். சாதகர்கள் தங்களின் யோகத்தினால் அடையக் கூடிய எட்டு விதமான சித்திகளில் பேருண்மையாக இருக்கின்ற எட்டு விதமான சக்திகளாகவும் பரா சக்தியே இருக்கின்றாள்.



பாடல் #1310: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம்
[உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

எட்டா கியசத்தி யெட்டாகும் யோகத்துக்
கட்டாகி நாதாந்தத் தெட்டுங் கலப்பித்
தொட்டாத விந்துவுந் தானற் றொழிந்து
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே.

விளக்கம்:

பாடல் #1309 இல் உள்ளபடி சாதகர்கள் தங்களின் யோகத்தினால் அடையக் கூடிய எட்டு விதமான சித்திகளில் இருக்கின்ற எட்டு விதமான சக்திகளே எட்டு விதமான யோகங்களுக்கும் பூரண சக்திகளாக இருக்கின்றார்கள். இந்த எட்டு விதமான சக்திகளும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து நாத எல்லையாக இருக்கின்ற பராசக்தியோடு ஒன்றாகக் கலந்து நிற்கும் போது அவர்களோடு ஒட்டாமல் தனியாக பிரிந்து நிற்கின்ற சாதகரின் ஆன்ம ஒளியும் தான் எனும் அகங்காரம் நீங்கி அழிந்து போகும். தான் என்பது முற்றிலும் அழிந்து இறைவியோடு ஒன்றாக நிற்கின்ற இந்த நிலை இறைவனைப் பற்றிய ஞானம் கிடைத்தும் அதை சரியாகப் பயன்படுத்தாத கீழ்மையான முட்டாள்களுக்கு கிடைக்காமல் அழிந்து போகும்.




பாடல் #1311: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

ஏதும் பலமா மியந்திரா சன்னடி
யோதிக் குருவி னுபதேச முட்கொண்டு
நீதங்கு மங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே.

விளக்கம்:

பாடல் #1310 இல் உள்ளபடி அட்டாங்க யோகத்தின் மூலம் பெறுகின்ற அட்டமா சித்திகளைப் போன்ற எந்த விதமான சக்திகளையும் பெறுவதற்கு உதவும் புவனாபதிச் சக்கரத்திற்கு சரிசமமான அதிபதிகளாக இருக்கின்ற இறைவன் இறைவியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு போற்றி வணங்க வேண்டும். அதன் பலனாக இறைவன் சாதகருக்கு சரியான குருவைக் காண்பித்து அருளுவார். அந்த குருவிடம் முறைப்படி உபதேசம் பெற்ற மந்திரங்களையும் நியமங்களையும் முழுவதுமாக உள் வாங்கி உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு குரு உபதேசித்த மந்திரங்களையும் நியமங்களையும் அவர் உபதேசித்த முறைப்படியே ஓதி தமது உடல் அங்கங்களால் சரியாகச் செய்து தமக்கு இனிப் பிறவியே வேண்டாம் என்று வேண்டி செப்புத் தகட்டில் ஆறு கோணங்கள் வரும்படி இரண்டு பெரிய முக்கோணங்களை வரைந்து வைக்க வேண்டும்.




பாடல் #1312: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

சட்கோணம் தன்னிற் சிரீயிரீ தானிட்டு
வக்கோண மாறின் றலையிலிரீங் காரமிட்
டெக்கோண முஞ்சூழெ ழில்வட்ட மிட்டுப்பின்
மிக்கீரெட் டக்கர மம்முதல் மேலிடே.

விளக்கம்:

பாடல் #1311 இல் உள்ளபடி செப்புத் தகட்டில் ஆறு கோணங்கள் வரும்படி இரண்டு பெரிய முக்கோணங்களை வரைந்து அதற்கு நடுவில் 'ஸ்ரீம்' மற்றும் 'ஹ்ரீம்' ஆகிய இரண்டு பீஜ எழுத்துக்களை எழுத வேண்டும். அந்த ஆறு கோணங்களுக்கும் தலைப்பகுதியாக இருக்கின்ற ஒவ்வொரு முனையிலும் 'ஹ்ரீம்' பீஜ எழுத்தை எழுத வேண்டும். இந்த ஆறு கோணங்களையும் சூழ்ந்து இருக்கும் படி அழகான வட்டமாக வரைய வேண்டும். அந்த வட்டத்திற்கு மேல் ஆதி காலத் தமிழ் எழுத்துக்களில் 'ஹம்' முதலாக இருக்கும் பதினாறு அட்சர எழுத்துக்களை சுற்றி இருக்கும் படி எழுத வேண்டும்.




பாடல் #1313: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

இட்ட விதழ்க ளிடையந் தரத்திலே
யட்ட வாவிட்டதின் மேலே யுவ்விட்டுக்
கிட்ட விதழ்களின் மேலே குரோஞ்சுரோம்
விட்ட வாமாத்தாங் குரோங்கென்று மேவிடே.

விளக்கம்:

பாடல் #1312 இல் உள்ளபடி வரைந்த பதினாறு அட்சர எழுத்துக்களைக் கொண்ட வட்டத்தைச் சுற்றி எட்டு இதழ்களை வரைந்து அந்த இதழ்களின் நடுவில் இருக்கும் வெற்று இடத்தில் எட்டு முறை 'ஹா' எனும் எழுத்தை வரைந்து அதற்கு உச்சியில் 'உ' எழுத்தை சேர்த்து எழுத வேண்டும். இப்படி நெருக்கமாக வரையப்பட்ட எட்டு இதழ்களுக்குள் அவை அமர்ந்திருக்கும் வட்டத்திற்கு மேல் இதழ்களை ஒட்டியவாறு 'க்ரோம்' 'ஸ்ரோம்' என்ற பீஜங்களை எழுதி விட்டு அந்த இதழ்களுக்கு மேலே 'ஹாம் ஹாத்' மற்றும் 'ஹாம் க்ரோம்' ஆகிய பீஜங்களை எழுத வேண்டும்.




பாடல் #1314: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யடைவே குரோங்சுரோங் கென்றிட்டுத்
தாவிலீறீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவை புவனா பதியைப்பின் பூசியே.

விளக்கம்:

பாடல் #1313 இல் உள்ளபடி வரையப்பட்ட இறைவனது கோயிலாக இருக்கும் புவனாபதி சக்கரத்தைச் சுற்றி அடைத்து இருக்கும் படி நான்கு வாசல்கள் வைத்து இரண்டு வரிகள் கொண்ட ஒரு கட்டத்தை வரைந்து அதில் வலது புறத்திலும் இடது புறத்திலும் 'க்ரோம்' 'ஸ்ரோம்' எனும் பீஜங்களை எழுதி விட்டுத் தாமரைப் பூ போன்று இருக்கின்ற வடிவத்தில் 'ஹ்ரீம்' எனும் பீஜ எழுத்தை மறுபடியும் மறுபடியும் சக்கரத்தை முழுவதுமாக சுற்றி இருக்கும் படி எழுத வேண்டும். பாடல் #1311 இலிருந்து பாடல் #1314 வரை கொடுக்கப்பட முறைகளின்படி வரையப்பட்ட பிறகு தாமரைப் பூ போல இருக்கின்ற உலகங்களுக்கு அதிபதியாக சேர்ந்து இருக்கின்ற இறைவன் இறைவியின் புவனாபதி சக்கரத்தை பூஜை செய்ய வேண்டும்.




பாடல் #1315: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

பூசிக்கும் போது புவனாபதி தன்னை
யாசற் றகத்தினி லாவாகனம் பண்ணிப்
பேசிப் பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே.

விளக்கம்:

பாடல் #1314 இல் உள்ளபடி புவனாபதி சக்கரத்தை முறைப்படி வரைந்து அதற்கு பூஜைகள் செய்யும் போது உலகங்களுக்கு அதிபதியாக இருக்கின்ற இறைவனையும் இறைவியையும் சாதகர் தமது மனதினில் எந்த விதமான அழுக்குகளும் இல்லாமல் தூய்மையான மனதிற்குள் மானசீகமாக வெளியில் இருக்கின்ற புவனாபதி சக்கரத்தின் ஆற்றலை உள்ளுக்குள் வரும்படி செய்ய வேண்டும். அதன் பிறகு சக்கரத்திலுள்ள மந்திர பீஜங்களை சத்தமாக உச்சரிக்காமல் அசபையாக மனதிற்குள் செபித்து மூச்சுக் காற்றின் மூலம் அதற்கு உயிர் கொடுத்து தமக்குள் வைக்க வேண்டும். அதன் பிறகு இறையின் பேரொளி பொருந்திய ஆற்றலை மனதிற்குள் வைத்த சக்கரத்தோடு ஒன்றாகப் பொருந்தும் படி செய்து முறைப்படி தியானம் செய்ய வேண்டும்.



பாடல் #1316: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

செய்ய திருமேனி செம்பட் டுடைதானுங்
கையிற் படையங்குச பாசத் தோடவை
மெய்யி லணிகல னிரற்றின மாமேனி
துய்ய முடியு மவையத்தின் ரோற்றமே.

விளக்கம்:

பாடல் #1315 இல் உள்ளபடி பூஜை செய்தால் இறைவனுடன் சேர்ந்து இருக்கும் இறைவியானவள் தனது திருமேனியில் செம்மையான பட்டு போல் பிரகாசிக்கும் உடையை அணிந்து கொண்டு தனது திருக்கரங்களில் ஆசையை அடக்கி அருளும் அங்குசமும் உலகப் பற்றை அறுத்து அருளும் பாசக் கயிறும் தரித்துக் கொண்டு நவரத்தினங்கள் போல பிரகாசிக்கின்ற தனது திருமேனியில் நகைகளை அணிந்து கொண்டு தனது தலையில் தூய்மையான திருமுடியையும் [கிரீடம்] அணிந்து கொண்டு சாதகரின் முன்பு உலகத்தின் தோற்றமாகவே வந்து நிற்பாள்.



பாடல் #1317: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

தோற்போர்வை நீகத் துதித்தடைவிற் பூசித்துப்
பாற்போ னகமந் திரத்தாற் பயின்றேத்தி
நாற்பாய னாரதா யாசுவா காவென்றுச்
சீற்பாகச் சேடத்தை மாற்றிப் பின்சீவியே.

விளக்கம்:

பாடல் #1316 இல் உள்ளபடி இறைவனோடு சேர்ந்து இருக்கும் இறைவியானவள் சாதகரின் முன்பு தோன்றிய பின் போர்வை தோலால் ஆகிய போர்வை போல் முடியிருக்கும் உடம்பின் உணர்ச்சி போகும் வரை போற்றி வணங்க வேண்டும். அதன் பிறகு தமது உள்ளத்திற்குள் இறைவியின் உருவத்தைப் பதிய வைத்து உள்ளே வீற்றிருக்கும் இறைவிக்கு மானசீகமாக பூஜைகள் செய்ய வேண்டும். பூஜையின் பலனாக நான் எனும் பாலுணர்வு போன பின்பு உள்ளுக்குள் இருந்து எழுந்து வரும் மந்திரத்தை செபித்து போற்றி வணங்க வேண்டும். பின்பு மனதிற்குள் நான்கு திசைகளையும் காத்தருள்பவளே அனைத்து உயிர்களாலும் ஆராதிக்கப் படுபவளே உனக்கு இந்த மந்திரத்தை அர்ப்பணிக்கின்றேன் என்று நினைத்து உருவமாக இருக்கின்றவளை மாற்றி சிறப்பான அருவமாக இறைவியை பாவித்துக் கொண்டு அவளையே போற்றி வணங்குங்கள்.



பாடல் #1318: நான்காம் தந்திரம் – 12. புவனாபதி சக்கரம் [உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் இறைவனும் இறைவியும் சேர்ந்து இருக்கும் சக்கரம்]

சீவிப் பதன்முன்னே தேவியையுத் துவாகனத்தாற்
பாவித் திதைய கமலத்தே பதிவித்தங்கி
யாவற்கு மெட்டா வியந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தெதுந் தருமே.

விளக்கம்:

பாடல் #1317 இல் உள்ளபடி போற்றி வணங்கும் சாதகர் தமக்கு முன்பு எண்ணத்தில் இருக்கும் இறைவியை மனதில் உறுதியோடு உருவமாக இருக்கின்றவளை அருவமாக மாற்றி பாவித்து இதயத் தாமரையில் நிலை பெறச் செய்ய வேண்டும். அதன் பிறகு அவளின் நன்மை தரும் நெருப்பு உருவத்தோடு எவருக்கும் எளிதில் கிடைக்காத புவனாபதி சக்கரத்தின் அதிபதியாகிய இறைவனையும் சேர்த்து வைக்க வேண்டும். இப்படிச் சேர்த்து வைத்திருக்கும் சக்கரத்திலிருந்து கிடைக்கும் சக்தியை சேமித்து வைத்தால் சாதகர் நினைத்தது எதுவாக இருந்தாலும் அதை புவனாபதி சக்கரம் தந்து அருளும்.



பாடல் #1319: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நவாக்கிரி சக்கரம் நானுரை செய்யில்
நவாக்கிரி யொன்று நவாக்கிரி யாக
நவாக்கிரி யெண்பத் தொருவகை யாக
நவாக்கிரி யாகக்கிலீஞ் சௌம் முதலீறே.

விளக்கம்:

ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கின்ற அட்சரங்களைக் கொண்ட நவாக்கிரி சக்கரத்தைப் பற்றி யான் உங்களுக்கு எடுத்துக் கூறினால் அது ஒரே சக்தியாக இருக்கின்ற இறைவியின் திருமேனியாக விளங்கும் அட்சரமே ஒன்பது அட்சரங்களாக மாறி இருக்கின்ற சக்கரமாகும். இந்த சக்கரத்தில் இருக்கின்ற ஒன்பது அட்சரங்களையும் ஒன்பது அறைகளில் மாறி மாறி எழுதினால் மொத்தம் எண்பத்தொன்று அறைகளைக் கொண்டு விரிவடைந்து இருக்கும். ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கின்ற இந்த ஒன்பது அட்சரங்களும் நேராகப் பார்க்கும் போது 'ஸௌம்' எனும் அட்சரத்தில் ஆரம்பித்து 'க்லீம்' எனும் அட்சரத்தில் முடிவதாக இருக்கின்றது. ஆனாலும் தலை கீழாகப் பார்க்கும் போது 'க்லீம்' எனும் அட்சரத்தில் ஆரம்பித்து 'ஸௌம்' எனும் அட்சரத்தில் முடிவதாகவும் இருக்கின்றது.



பாடல் #1320: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

சௌம் முதல் வௌவொடு ஹௌவுளுமீறிக்
கௌவுளு மையுளுங் கலந்தி றீசிறீயென்
றொவ்வி லெழுங்கிலீ மந்திர பாதமாச்
செவ்வி லெழுந்து சிவாய நமவென்னே.

விளக்கம்:

'ஸௌம்' எனும் அட்சரம் முதலாக 'ஔம்' எனும் அட்சரத்தோடு சேர்த்து 'ஹௌம்' எனும் அட்சரத்தின் உள்ளும் இறுதியில் 'கௌம்' எனும் அட்சரத்தின் உள்ளும் 'ஜம்' எனும் அட்சரத்தின் உள்ளும் ஒன்றாகக் கலந்து 'ஹ்ரீம்' எனும் அட்சரமாகவும் 'ஸ்ரீம்' எனும் அட்சரமாகவும் வெளிப்பட்டு 'ஓம்' எனும் அட்சரத்திலிருந்து எழுகின்ற 'க்லீம்' எனும் அட்சரம் வரை உள்ளது. இந்த ஒன்பது அட்சரங்கள் கொண்ட மந்திரத்தை முதலாகக் கொண்டு மந்திரத்தை செபிப்பதற்கு ஏற்ற சமயத்தில் மனதை ஒருநிலைப் படுத்தி இந்த மந்திரத்தை சொல்லி பின்பு சிவாய நம என்று தொடர்ச்சியாகச் சொல்லுங்கள்.



பாடல் #1321: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நவாக்கிரி யாவது நானறி வித்தை
நவாக்கிரி யுள்ளெழும் நன்மைக ளெல்லாம்
நவாக்கிரி மந்திரம் நாவுள்ளே யோத
நவாக்கிரி சத்தி நலந்தருந் தானே.

விளக்கம்:

ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கின்ற அட்சரங்களைக் கொண்ட நவாக்கிரி சக்கரமாவது யான் அறிந்து கொண்ட கலைகளாகிய கர்மாக்களை அழித்து பிறவி அறுத்தல், இனியும் கர்மங்கள் சேராமல் தடுத்தல், இறைவனை தமக்குள் உணர்ந்து அடைவது ஆகியவை ஆகும். இந்த மூன்று விதமான நன்மைகளும் இந்த சக்கரத்திற்குள்ளிருந்தே கிடைக்கும். அதனை அடைய வேண்டுமென்றால் இந்த மந்திரத்தை நாக்கை மட்டும் அசைத்து சத்தமில்லாமல் ஓதினால் இந்த சக்கரத்தில் வீற்றிருக்கும் சக்திகள் அனைத்து நலங்களையும் தானே கொடுத்து அருளுவார்கள்.



பாடல் #1322: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நலந்தரு ஞானமுங் கல்வியு மெல்லா
முரந்தரு வல்வினை யும்மை விட்டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே.

விளக்கம்:

நவாக்கிரி சக்கரத்தை சாதகம் செய்கின்ற சாதகர்களுக்கு பாடல் #1321 இல் உள்ளபடி மூன்று விதமான நன்மைகள் அனைத்தையும் கொடுத்து, இறைவனை அடைய வேண்டிய ஞானத்தையும் கொடுத்து, உலக அறிவை அறிகின்ற கல்விகள் அனைத்தையும் கொடுத்து, மன பலத்தையும் கொடுத்து அதன் பயனாகப் பல பிறவிகளாகத் தொடர்ந்து வருகின்ற வலிமையான வினைகள் அனைத்தும் சாதகரை விட்டு விட்டு ஓடி விடும்படியும் செய்து, மேன்மையான நிலையைக் கொடுத்து அதன் பயனாக இனி மேலும் தீமையான வினைகளை எதுவும் செய்து விடுகின்ற நிலையையும் இல்லாமல் செய்து, நினைத்ததை அடையும் வரங்களையும் கொடுத்து, இறைவனின் சோதி வடிவத்தை அடைகின்ற நிலையும் கிடைக்கப் பெறுவதைக் காணலாம்.



பாடல் #1323: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கண்டிடுஞ் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடு முன்னே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கு
நின்றிடு சக்கரம் நினைக்கு மளவே.

விளக்கம்:

பாடல் #1322 இல் உள்ளபடி சாதகர் கண்டு அறிந்த நவாக்கிரி சக்கரத்தை சாதகத்தின் மூலம் வெள்ளி போன்ற தூய்மையுடனும், பொன் போன்ற பிரகாசத்தோடும், செம்பு போன்ற உறுதியுடனும் மனதிற்கு உள்ளே உள் வாங்கி வைக்கும் போது சாதகரின் இந்த பிறவிக்கு முன் பிறவியிலிருந்தே தொடர்ந்து வரும் அனைத்து வினைகளையும் இந்த சக்கரத்தின் சக்தி மண்டலமானது வென்று அழித்துவிடும். ஐந்து புலன்களையும் வெற்றி பெறுவதற்கும் வழி கொடுக்கும். இந்த நவாக்கிரி சக்கரமானது எந்த அளவிற்கு சாதகர் தியானிக்கின்றாரோ அந்த அளவுக்கு நிலை பெற்று நிற்கும்.



பாடல் #1324: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நினைத்திடு மச்சிறீயிக் கிறீ யீரா
நினைத்திடு சக்கர மாதியு மீறு
நினைத்திடு நெல்லொடு புல்வினை யுள்ளே
நினைத்திடு மற்சனை நேர்தரு வாளே.

விளக்கம்:

பாடல் #1323 இல் உள்ளபடி சாதகர் நினைத்து தியானிக்கின்ற நவாக்கிரி சக்கரத்தில் உள்ள ஸ்ரீம் எனும் அட்சரம் ஹ்ரீம் எனும் அட்சரம் ஆகிய இரண்டு அட்சரங்களையும் முதலாகவும் முடிவாகவும் வைத்து தியானிக்க வேண்டும். அப்படி தியானிக்கும் போது நெல்லை விதைத்தால் அதிலிருந்து புல்லாக முளைத்து விளைவிக்கும் செயலைப் போலவே மனதிற்குள் சாதகர் நினைத்து தியானிக்கின்ற மந்திரத்தை சாற்றுகின்ற போது அதற்கு இணையான பலன்களை சக்கரத்திலிருக்கும் சக்தியானவள் தந்து அருளுவாள்.



பாடல் #1325: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நேர்தரு மத்திரு நாயகி யானவள்
யாதொரு வண்ண மறிந்திடும் பொற்பூவை
கார்தரு வண்ணங் கருதின கைவரும்
நாள்தரு வண்ணம் நடத்திடு நீயே.

விளக்கம்:

பாடல் #1324 இல் உள்ளபடி தியானிக்கின்ற மந்திரத்தை சாற்றுகின்ற போது அதற்கு இணையான பலன்களை தந்து அருளுகின்ற திருவருள் தலைவியான இறைவியானவள் எந்த விதமான வண்ணத்தில் இருக்கின்றாள் என்பதை தமக்குள் தரிசித்து அறிந்து கொண்டால் அவள் தங்கம் போல ஜொலிக்கும் பிரகாசத்துடனும் மென்மையான பூவைப் போலவும் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். மழையைக் கொடுக்கின்ற மேகத்தைப் போலவே இறைவியானவள் தன்னை நினைத்து வணங்கும் எவருக்கும் அவர்கள் எண்ணியது கிடைக்கும் படி செய்து அருளுவாள் என்பதை உணர்ந்து கொண்டு தினந்தோறும் அவள் அருளுகின்ற விதத்திலேயே உலக நன்மைக்குத் தேவையானதை சாதகர்கள் நடத்துவார்கள்.




பாடல் #1326: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நடந்திடும் பாரி னன்மைக ளெல்லாங்
கடந்திடுங் காலனு மெண்ணிய நாளும்
படர்ந்திடு நாமமும் பாய்கதிர் போல
வடைந்திடு மவ்வண்ண மடைந்திடு நீயே.

விளக்கம்:

பாடல் #1325 இல் உள்ளபடி உலக நன்மைக்குத் தேவையானதை சாதகர்கள் எண்ணியபடியே நவாக்கிரி சக்கரம் சக்தியால் அனைத்து விதமான நன்மையான காரியங்களும் உலகினில் நடக்கும். எமன் சாதகர்களுக்கு குறித்த ஆயுள் முடியும் நாளும் அவர்களைக் கடந்து போய்விடும். சாதகரின் பெயரும் புகழும் சூரியனிலிருந்து பாய்ந்து வருகின்ற ஒளிக் கதிர்களைப் போலவே உலகம் முழுவதும் பரந்து செல்லும். இப்படி தாம் செய்கின்ற சாதகத்தின் மூலம் உலகத்திற்கு நன்மைகள் செய்து இறையை நோக்கிச் சென்று அடைவார்கள் சாதகர்கள்.




பாடல் #1327: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுட னெல்லா
மடைந்திடு மாதி யருளுந் திருவு
மடைந்திடு மண்டத் தமரர்கள் வாழ்வு
மடைந்திடு மவ்வண்ண மறிந்திடு நீயே.

விளக்கம்:

பாடல் #1326 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தை சாதகம் செய்கின்ற சாதகர்கள் பொன் போல பிரகாசிக்கின்ற உடல், வெள்ளி போல தூய்மையாக மலங்கள் நீங்கிய ஆன்மா, வைரக் கல்லைப் போல எதனாலும் அசையாத உறுதியான மனம் ஆகிய அனைத்தும் அடைவார்கள். அது மட்டுமின்றி ஆதிப் பரம்பொருளான இறைவனின் திருவருளும் இறைவனது திருமேனியையும் அடைவார்கள். மேலும் அண்ட சராசரங்களில் வீற்றிருக்கும் இறவா நிலை பெற்ற அமரர்களின் தெய்வீக வாழ்க்கையும் அடைவார்கள். இப்படி நவாக்கிரி சக்கரத்தை சாதகம் செய்வதன் மூலம் அனைத்தையும் அதனதன் முறைப்படியே அடையும் முறைகளை சாதகர்கள் அறிந்து கொள்வார்கள்.



பாடல் #1328: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அறிந்திடு வார்க ளமரர்க ளாகத்
தெரிந்திடும் வானோருந் தேவர்கள் தேவன்
பரிந்திடும் வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடு வானை முயன்றிடு நீயே.

விளக்கம்:

பாடல் #1327 இல் உள்ளபடி அனைத்தையும் அதனதன் முறைப்படியே அறிந்து கொண்ட சாதகர்கள் அமரர்களாகவே ஆகிவிடுகின்ற முறைகளை அறிந்து கொள்வார்கள். அதனால் அவர்களுக்குத் தெரிந்திடும் விண்ணவர்களுக்கும் தேவர்களுக்கும் தலைவனானவனும், பெருங்கருணையில் உலகங்களுக்கு மழை போல் பொழியும் வானத்தைப் போன்றவனும், பாய்ந்து வருகின்ற கங்கையை உலக நன்மைக்காகத் தன் தலையின் மேல் தாங்கி அதன் வேகத்தைத் தடுத்து அருளுகின்றவனும் ஆகிய இறைவனை முழுவதும் உணர்ந்து அடைவதற்கு முயற்சி செய்வார்கள் சாதகர்கள்.



பாடல் #1329: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நீர்தரு சக்கர நேர்தரு வண்ணங்கள்
பார்மதி யும்மிறீ மன்சிறீ யீரான
தாரணி யும்புகழ்த் தையல் நல்லாடன்னைக்
காரணி யும்பொழிற் கண்டு கொள்ளீரே.

விளக்கம்:

பாடல் #1328 இல் உள்ளபடி சாதகர்கள் சாதகம் செய்து பெற்ற நவாக்கிரி சக்கரமானது அவரது சாதகத்திற்கு சமமாகத் தருகின்ற பல விதமான பலன்களில் முதலில் உலகத்தில் உள்ள மொத்த அறிவும் 'ஹ்ரீம்' மற்றும் 'ஸ்ரீம்' ஆகிய இரண்டு விதமான பீஜ மந்திரங்களின் மூலமே பெறுகின்றார். அதன் பிறகு அழகிய பூக்களை மாலையாக அணிந்திருக்கும் அனைத்து விதமான புகழ்களுக்கும் உரியவளான இறைவியோடு சேர்ந்து உலக நன்மைக்காக திருக்கூத்து ஆடிக்கொண்டு இருக்கும் இறைவனையும் மேகங்கள் மூடியிருக்கும் அழகிய பூக்கள் பூத்து விளங்கும் சோலையில் சாதகர்கள் தமது கண்களால் தரிசனம் செய்து கொள்வார்கள்.



பாடல் #1330: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கண்டுகொ ழுந்தனி நாயகி தன்னையு
மொண்டுகொ ழுமுக வசியம தாயிடும்
பண்டுகொ ழும்பர மாய பரஞ்சுடர்
நின்று கொளுநிலை பேறுடை யாளே.

விளக்கம்:

பாடல் #1329 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள் தரிசிக்கும் இறைவனோடு சேர்ந்தும் நவாக்கிரி சக்கரத்தில் தனி நாயகியாகவும் இருக்கின்ற இறைவியையும் இறைவனையும் ஒன்றாகச் சேர்த்து தியானிக்கும் அளவுக்கு ஏற்ப இறைசக்தியை தனக்குள் கிரகித்துக் கொள்ளும் கருவியாக நவாக்கிரி சக்கரம் ஆகி விடும். அதன் பிறகு ஆதியிலிருந்தே அனைத்திற்கும் தலைவனாகவும் பரம்பொருளாகவும் இருக்கின்ற இறைவனையும் பராசக்தியின் பேரொளியான இறைவியையும் சாதகர்கள் தமக்குள் மானசீகமாக வடித்துக் கொண்ட நவாக்கிரி சக்கரத்தில் நிலை நிறுத்திக் கொள்கின்ற உயர்வான நிலையைப் பெறுகின்ற மிகப் பெரிய வரத்தை இறைவியானவள் கொடுத்து அருளுவாள்.



பாடல் #1331: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பேறுடை யாடன் பெருமையை யெண்ணிடில்
நாடுடை யார்களும் நம்வச மாயிடு
மாறுடை யார்களும் வாழ்வது தன்னிலைக்
கூறுடை யாளையுங் கூறுமின் னீரே.

விளக்கம்:

பாடல் #1330 இல் உள்ளபடி அருளுகின்ற அனைத்து வரங்களையும் தன் வசத்தில் வைத்திருக்கும் இறைவியின் அருமை பெருமைகளை ஆராய்ந்து எண்ணிப் பார்த்தால் கிடைப்பது என்னவென்றால் இந்த உலகம் செயல்படுவதற்கான நன்மைகளை தன் வசத்தில் வைத்திருக்கும் ஞானிகளும் சாதகர்களின் மேல் அன்பு கொண்டு அவரை நாடி வருவார்கள். இறையருளை அடைவதற்கான வழிகளைத் தன் வசத்தில் வைத்திருக்கும் அந்த ஞானிகள் வாழுகின்ற நிலையை சாதகர்கள் தாமும் கண்டு கொண்டு அதன் படியே வாழ்வார்கள். இந்த வழியில் வாழுகின்ற அனைவரிலும் ஒரு பகுதியாகவும் இருந்து அவர்களைத் தன் வசத்தில் வைத்திருக்கும் இறைவியானவளின் பெருமைகளை சாதகர்களான நீங்களும் போற்றி தகுதியானவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.



பாடல் #1332: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கூறுமின் னெட்டுத் திசைக்குந் தலைவியை
மாறுமின் ணடத் தமரர்கள் வாழ்வென
மாறுமின் வையம் வரும்வழி தன்னையுந்
தேறுமின் னாயகி சேவடி சேர்ந்தே.

விளக்கம்:

பாடல் #1331 இல் உள்ளபடி எட்டு விதமான திசைகளுக்கும் தலைவியாக இருக்கின்ற இறைவியின் அருமைகளையும் பெருமைகளையும் போற்றி தகுதியானவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். அப்போது இந்த உலகத்தில் நன்மைகளை நடத்துகின்ற இறப்பு இல்லாத நிலையைப் பெற்ற அமரர்களின் வாழ்க்கையைப் போலவே சாதகர்களின் வாழ்க்கையும் மாறும். அதன் படியே இந்த உலகத்தில் இயற்கையாகவே வருகின்ற வழிகள் [தாகம், பசி, தூக்கம், கழிவு வெளியேற்றம், முதுமையடைதல்] அனைத்தையும் அமரர்களின் வாழ்க்கை முறைக்கேற்ற வழிகளாக நீங்களும் மாற்றுங்கள். அனைத்திற்கும் தலைவியாக இருக்கின்ற இறைவியின் வணங்கத் தக்கத் திருவடிகளை எப்போதும் சேர்ந்தே இருந்து இதையெல்லாம் செய்யும் முறைகளை தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.




பாடல் #1333: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

சேவடி சேரச் செறிய விருந்தவர்
நாவடி யுள்ளே நவின்றுநின் றேத்துவர்
பூவடி யிட்டுப் பொலிய விருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே.

விளக்கம்:

பாடல் #1332 இல் உள்ளபடி இறைவியின் வணங்கத் தக்க திருவடிகளை சேர்ந்தே இருந்து அதை இடைவிடாமல் நினைத்து பக்குவம் பெற்று இருக்கின்ற சாதகர்கள் தமது அடி நாக்கின் உள்ளுக்குள் வைத்து உதடு அசையாமல் நாக்கை லேசாக அசைத்து மந்திரங்களை ஓதி தியானத்தில் இருந்து போற்றி வணங்குபவர்களாகவும், இறைவியின் பூப்போன்ற திருவடிகளை தமது மனதில் பதிய வைத்து பிரகாசம் பெற்று இருக்கின்றவர்களாகவும், இறைவியின் மாபெரும் திருவடிகளை கண்டு தரிசிக்கும் முறைகளை முழுவதும் அறிந்தவர்களாகவும் இருப்பார்கள்.



பாடல் #1334: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஐமுத லாக வலர்ந்தெழு சக்கரம்
மைமுத லாக வலர்ந்தி நீயீராகு
மைமுத லாகி யவற்குடை யாள்தன்னை
யைமுத லாக வளித்திடு நீயே.

விளக்கம்:

'ஐம்' எனும் பீஜத்தை முதலாக வைத்து பரந்து விரிந்து எழுகின்ற நவாக்கிரி சக்கரமானது விரிவடையும் போது 'ஹ்ரீம்' எனும் பீஜத்தோடு சேர்ந்து இரண்டாக ஆகிவிடும். 'ஐம்' எனும் பீஜமாகவே ஆகிவிட்ட சாதகர்கள் தன் வசத்தில் வைத்திருக்கும் இறைவியானவளின் திருவருளையும் தகுதியானவர்களுக்கு கொடுக்கும் போது 'ஐம்' எனும் பீஜத்தை முதலாக வைத்தே நீங்களும் அளிப்பீர்களாக.

கருத்து: நவாக்கிரி சக்கரத்திற்கு இறைவியே முதலாக இருப்பதைப் போலவே அவளின் திருவருளை பெற்றுத் தரும் மந்திர பீஜங்களுக்கு 'ஐம்' எனும் பீஜமே முதலாக இருக்கின்றது.



பாடல் #1335: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அளித்திடு நாவுக் கரசிவள் தன்னைப்
பழுத்திடும் வேதமெய் யாகம மெல்லாந்
தொகுத்தொரு நாவிடைச் சொல்ல வல்லாளை
முகத்துளு முன்னெழக் கண்டு கொளீரே.

விளக்கம்:

பாடல் #1334 இல் உள்ளபடி இறைவியானவளின் திருவருளை தகுதியானவர்களுக்கு அளிக்கும் சாதகர்களின் நாக்குக்கு அரசியாக இருக்கும் இறைவியானவளை முழுவதும் அறிந்து கொண்டு முக்தி பெறுவதற்கு வழி கொடுக்கும் வேதங்கள், பேருண்மையான ஆகமங்கள் ஆகிய அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்து தனது ஓரே நாக்கின் நடுவில் வைத்து எடுத்துச் சொல்லும் வல்லமை பொருந்திய இறைவியானவளை எந்த வடிவத்தில் சாதகர்கள் நினைத்து வழிபடுகிறார்களோ அந்த வடிவத்திலேயே அவர்களின் முன்னால் எழுந்தருளுவதை தங்களின் கண்களால் அவர்கள் பார்த்து தரிசிப்பார்கள்.



பாடல் #1336: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கண்டவிச் சக்கர நாவிலெ ழுந்திடிற்
கொண்டவிம் மந்திரங் கூத்தன் குறியதா
மன்றினுள் வித்தையு மானிடர் கையதாம்
வென்றிடும் வையக மெல்லியல் மேவியே.

விளக்கம்:

பாடல் #1335 இல் உள்ளபடி சாதகர்கள் தரிசித்த இறைவியானவள் வீற்றிருக்கும் இந்த நவாக்கிரி சக்கரம் சாதகர்களின் நாக்குக்குள்ளும் எழுந்து விட்டால் சாதகர்கள் எடுத்துக் கொண்ட இந்த நவாக்கிரி சக்கரத்திலுள்ள மந்திரங்களே திருநடனம் புரிகின்ற இறைவனின் திருவுருவத்தைக் குறிக்கின்ற குறியாகவே இருக்கும். அதன் பிறகு உலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் தங்களின் குருகுலங்களில் இருந்து கற்றுக் கொண்டு கைகளில் வைத்திருக்கும் அனைத்து விதமான வித்தைகளையும் மென்மையான இயல்பைக் கொண்ட இறைவியோடு ஒன்றாகச் சேர்ந்திருந்தே சாதகர்கள் வெற்றி கொள்ள முடியும்.

கருத்து: நவாக்கிரி சக்கரத்திலுள்ள மந்திங்களை சாதகர் கைவரப்பெற்றால் உலகத்திலுள்ள எந்த வித்தைகளையும் இறைவியின் துணைகொண்டு வெற்றி பெறலாம்.



பாடல் #1337: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

மெல்லிய லாகிய மெய்ப்பொரு டாடன்னைச்
சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்
பல்லியல் பாகப் பரந்தெழு நாள்பல
நல்லியல் பாக நடந்திடுந் தானே.

விளக்கம்:

பாடல் #1336 இல் உள்ளபடி மென்மையான தன்மையைக் கொண்டு உண்மைப் பொருளின் உருவமாகவே விளங்குகின்ற இறைவியானவள் சாதகர் குருவிடமிருந்து பெற்ற மந்திரங்களை செபிக்கும் தன்மைக்கு ஏற்ற படியே சாதகரைத் தொடர்ந்து அவர் இருக்கும் இடத்திலேயே அவருடன் சேர்ந்து வீற்றிருப்பாள். அதன் பிறகு சாதகருக்குள்ளிருந்து எழுந்து உலகம் முழுவதும் பரந்து செல்லும் சக்தியானது நல் வினை தீய வினை ஆகியவற்றால் பல விதமாகக் கடந்து செல்கின்ற பல நாள்களையும் நல் வினை கொண்ட நாட்களாகவே மாற்றி அனைத்தும் நன்மையாகவே நடக்கும்படி அருளும்.



பாடல் #1338: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நடந்திடு நாவினினு ண்மைக ளெல்லாந்
தொடர்ந்திடுஞ் சொல்லொடுஞ் சொற்பொரு டானுங்
கடந்திடுங் கல்விக் கரசிவ னாகப்
படர்ந்திடும் பாரிற் பகையில்லைத் தானே.

விளக்கம்:

பாடல் #1337 இல் உள்ளபடி அனைத்தும் நன்மையாகவே நடந்து கொண்டு இருக்கின்ற சாதகரின் நாக்கில் உண்மை என்று அறியப்படும் சத்தியங்கள் அனைத்தும் கிடைக்கப் பெறும். அதன் பிறகு சாதகர் சொல்கின்ற அனைத்து வார்த்தைகளும் அவரது சொல்லைத் தொடர்ந்து உடனே உண்மையாகவே ஆகி செயல்படும். அதனால் அவரது நாக்கிலிருந்து வருகின்ற அனைத்து விதமான சொற்களாகிய ஞானத்திற்கும் அரசனாகவே சாதகரும் ஆகிவிடுவார். அதன் பிறகு படர்ந்து விரிந்து இருக்கும் இந்த உலகத்தில் பகை என்று அறியப்படுகின்ற மும்மலங்கள் பசி தாகம் தூக்கம் ஆகிய எதுவும் சாதகருக்கு இல்லாமல் போய் விடும்.



பாடல் #1339: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பகையில்லைக் கௌமுத லைந்து மேலாகு
நகையில்லைச் சக்கர நன்றறி வார்க்குத்
தொகையில்லைச் சொல்லிய பல்லுயி ரெல்லாம்
வகையில்லை யாக வணங்கிடுந் தானே.

விளக்கம்:

பாடல் #1338 இல் உள்ளபடி இந்த உலகத்தில் பகை என்று அறியப்படுகின்ற எதுவும் இல்லாத சாதகரின் நிலம் முதலாகிய ஐந்து பூதங்களால் ஆகிய உடலும் மேன்மை நிலை பெறும். இந்த உலகத்தில் இழிவானது என்று அறியப்படுகின்ற எதுவும் நவாக்கிரி சக்கரத்தை தமக்குள் மிகவும் நன்றாக அறிந்து கொண்ட சாதகர்களுக்கு இல்லாமல் போய்விடும். உயிர்கள் என்று உலகத்தவர்களால் சொல்லப்படுகின்ற அனைத்து வகையான உயிர்களையும் ஒரு கூட்டமாகவும் இல்லாமல் பல வகைகளாகப் பிரித்து பார்ப்பதும் இல்லாமல் அனைத்தையும் இறைவனாகவே பார்க்கின்ற சாதகர்களை அனைத்து உயிர்களும் இறைவியாகவே போற்றி வணங்கி அன்பு செலுத்தும்.



பாடல் #1340: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடு நல்லுயி ரானவை யெல்லாங்
கலந்திடுங் காம வெகுளி மயக்கந்
துலங்கிடுஞ் சொல்லிய சூழ்வினை தானே.

விளக்கம்:

பாடல் #1339 இல் உள்ளபடி உயிர்களால் வணங்கப்படும் நிலைக்கு வந்து நவாக்கிரி சக்கரத்தில் இருக்கும் சக்தியின் இயக்கத் தத்துவங்களுக்கு தலைவியாகவே தாமும் ஆகிவிட்ட சாதகர்களின் மேல் கொண்ட பக்தியினாலும் அன்பினாலும் வாசனை முதலிய திரவியங்களை பூசி பூஜிக்கும் நல்ல உயிர்களாக பக்குவப்பட்ட அனைத்து உயிர்களோடும் கலந்து இருக்கும் ஆசை, கோபம், மாயையினால் இருக்கும் மயக்கம் ஆகிய குற்றங்கள் அனைத்தும் நீங்கி விடும். அதன் பிறகு உயிர்களின் பிறவிக்கு காரணம் என்று வேதங்கள் சொல்லுகின்ற உயிர்களைச் சூழ்ந்து இருக்கின்ற வினைகளும் உயிர்களை விட்டு நீங்கி விடும்.




பாடல் #1341: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தானே கழறித் தறியவும் வல்லனாய்த்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்த்
தானே தனிநடங் கண்டவள் தன்னையுந்
தானே வணங்கித் தலைவனு மாமே.

விளக்கம்:

நவாக்கிரி சக்கரத்தை சாதகம் செய்கின்ற சாதகர் அதன் மூலம் தமக்குள் இருக்கின்ற அனைத்து தீமைகளையும் நீக்கி விட்டு தாம் உண்மையில் யார் என்பதை அறிந்து கொள்ள முடிந்தவராக இருக்கின்றார். அதன் பயனால் சாதகர் தமக்குள் எண்ணிப் பார்த்து அறிந்து கொண்ட இறை தன்மைகள் அனைத்தையும் குருவாக வீற்றிருந்து பிறருக்கு எடுத்துக் கூற முடிந்தவராகவும் இருக்கின்றார். அதன் பயனால் இறைவன் தமக்காக தனியாக ஆடிய திருநடனத்தை கண்டு ரசித்த இறைவியையும் சாதகர் தமக்குள் தரிசித்து வணங்கவும் மற்றவர்களால் வணங்கப்படும் தலைவனாகவும் இருக்கின்றார்.



பாடல் #1342: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆமே யனைத்துயி ராகிய வம்மையுந்
தானே சகலமு மீன்றவத் தையலு
மாமே யவனடி போற்றி வணங்கிடிற்
போமே வினைகளாம் புண்ணிய னாகுமே.

விளக்கம்:

பாடல் #1341 இல் உள்ளபடி மற்றவர்களால் வணங்கப்படும் தலைவனாகவே ஆகிவிட்ட சாதகர் அனைத்து உயிர்களாகவே இருக்கின்ற இறைவியாகவும் ஆகி விடுவார். இறைவனோடு எப்போதும் ஒன்றாக இணைந்தே இருந்து அனைத்து உயிர்களுக்கும் வேண்டிய அனைத்து பொருள்களையும் உருவாக்கிய சக்தியாகவும் அவரே ஆகி விடுவார். இப்படி அனைத்தையும் உருவாக்குகின்ற சக்தியாகவே ஆகிவிட்ட சாதகரின் திருவடியை இறைவனாகவே போற்றி வணங்கி வழிபடும் அடியவர்களை விட்டு அனைத்து வினைகளும் விலகிப் போய் அவர்களும் புண்ணியனாகவே ஆகி விடுவார்கள்.



பாடல் #1343: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

புண்ணிய னாகிப் பொருந்தி யுலகெங்குங்
கண்ணிய னாகிக் கலந்தங் கிருந்திடுந்
தண்ணிய னாகித் தரணி முழுதுக்கு
மண்ணிய னாக வமர்ந்திருந் தானே.

விளக்கம்:

பாடல் #1342 இல் உள்ளபடி தமது திருவடிகளை இறைவனின் திருவடிகளாகவே பாவித்து வணங்குகின்ற அடியவர்களையும் புண்ணியர்களாக ஆக்குகின்ற பேறு பெற்ற குருநாதராக இருக்கின்ற சாதகர் அனைத்து உலகங்களோடும் சேர்ந்தே இருந்து அதில் இருக்கின்ற அனைத்து உயிர்களும் செய்கின்ற புண்ணியத்தின் பயனாக அனைத்தையும் அதற்கு ஏற்றவாறு செயல் படுத்துகின்றவராக இருக்கின்றார். அது மட்டுமின்றி அண்ட சராசரங்களில் இருக்கின்ற அனைத்திலும் கலந்தே இருந்து அவற்றைக் காணுகின்ற கண்களின் பார்வையாக அனைத்தையும் பார்க்க வைக்கின்றவராகவும் இருக்கின்றார். உலகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து உயிர்களோடும் நெருங்கி இருந்து அவற்றின் பக்குவத்திற்கு ஏற்றபடி மழை போல் அருளுகின்றவராகவும் அவரே இருக்கின்றார். இப்படி தமது சாதகத்தை இடைவிடாமல் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பதன் மூலம் அனைத்தையும் செயல் படுத்துகின்றவராக சாதகர் இருக்கின்றார்.



பாடல் #1344: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தானது சும்மீறீக் கௌவது வீரா
நானது சக்கர நன்றறி வார்க்கெல்லாங்
கானது கன்னி கலந்த பராசத்தி
கேளது வையங் கிளரொளி வானதே.

விளக்கம்:

நவாக்கிரி சக்கரமாகவே இருக்கின்ற பீஜங்களில் 'ஸௌம்', 'ஹ்ரீம்' மற்றும் 'கௌம்' ஓவ்வொன்றும் இரண்டு முறையாக அமைத்தால் வருகின்ற சக்கர அமைப்பில் சாதகரும் சக்கரமாகவே இருப்பதை தமக்குள் அதை நன்றாக அறிந்து கொள்ளுகின்ற சாதகர்கள் அனைவரும் தாம் காணுகின்ற அனைத்திலும் என்றும் இளமையுடன் அசையும் சக்தியாக இருக்கின்ற இறைவியானவள் ஒன்றாகக் கலந்து இருப்பதை பார்ப்பார்கள். அது மட்டுமின்றி யான் சொல்வதையும் கேட்டுக் கொள்பவர்கள் அந்த இறைவியானவளே அனைத்து உலகங்களாகவும், பிரகாசத்தோடு அனைத்து உலகங்களுக்கும் பரந்து விரிந்து இருக்கின்ற பேரொளியாகவும், அவை இருக்கின்ற ஆகாயமாகவும் இருப்பதை தெரிந்து கொள்வார்கள்.



பாடல் #1345: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஒளிக்கும் பராசத்தி யுள்ளே யமரிற்
களிக்கு மிச்சிந்தை யுங்காரணங் காட்டித்
தெளிக்கு மழையுடன் செல்வ முண்டாக்கு
மளிக்கு மிவளை யறிந்து கொள்வார்க்கே.

விளக்கம்:

பாடல் #1343 இல் உள்ளபடி அனைத்து உலகங்களுக்கும் பரந்து விரிந்து இருக்கின்ற பேரொளியாக விளங்குகின்ற அசையும் சக்தியான இறைவி சாதகருக்குள் வந்து வீற்றிருந்தால் சாதகரின் மனம் பேரின்பத்தில் திளைத்திருக்கும். அப்போது அந்த பேரின்பத்திற்கு காரணம் தாமே என்பதை இறைவி சாதகருக்கு காண்பித்து தெளிவு படுத்துகின்றாள். அது மட்டுமின்றி நவாக்கிரி சக்கரத்தில் இருக்கும் உண்மைப் பொருளை உணர்த்துகின்ற அருளையும் உருவாக்கி சாதகருக்கு அளிக்கின்றாள். இவை அனைத்தும் பேரொளியாக இருக்கின்ற இறைவியை தமக்குள் முழுவதுமாக அறிந்து கொண்ட சாதகர்களுக்கே இறைவி அருளுகின்றாள்.




பாடல் #1346: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அறிந்திடுஞ் சக்கர மற்சனை யோடே
யறிந்திடும் வையத்திடர் வகை காணில்
மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யிற்
பொறிந்திடுஞ் சிந்தை புகையில்லை தானே.

விளக்கம்:

பாடல் #1345 இல் உள்ளபடி இறைவியை தமக்குள் முழுவதுமாக அறிந்து கொண்ட சாதகர்கள் அவள் வீற்றிருக்கும் நவாக்கிரி சக்கரத்தை தமக்குள்ளேயே பூஜித்து வந்தால் அவர்களால் உலகத்திலுள்ள அனைத்து விதமான துன்பங்களையும் கண்டு அறிந்து கொண்டு அவற்றில் இருந்து விலகி இருக்க முடியும். இந்த நிலையை அடைந்த சாதகர்களை பகைவர்களைத் தடுத்து நாட்டு மக்களை காக்கின்ற பெரும் அரசர்களும் அவர் இருக்கும் இடம் தேடி வந்து அவரை வணங்குவார்கள். அரசர்களும் வந்து வணங்கினாலும் உலகப் பற்று இல்லாமல் இறை நினைப்பிலேயே திளைத்து இருக்கின்ற சாதகர்களின் சிந்தனைக்குள் எந்தவிதமான துன்பகரமான எண்ணங்களும் வராமல் அவர்கள் எப்போதும் பேரின்பத்திலேயே இருப்பார்கள்.



பாடல் #1347: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

புகையில்லைச் சொல்லிய பொன்னொளி யுண்டங்
குகையில்லைக் கொல்வ திலாமை யினாலே
வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாஞ்
சிகையில்லைச் சக்கரஞ் சேர்ந்தவர் தாமே.

விளக்கம்:

பாடல் #1346 இல் உள்ளபடி இறை நினைப்பிலேயே திளைத்து இருக்கின்ற சாதகர்களின் சிந்தனைக்குள் எந்தவிதமான துன்பகரமான எண்ணங்களும் இல்லை. பாடல் #1344 இல் சொல்லி உள்ளபடி தங்க நிறத்தில் பிரகாசிக்கும் ஒளி பொருந்திய உடலும் அவருக்கு உண்டு. ஒளி பொருந்திய சாதகர் இருக்கும் இடத்தில் மாபெரும் பாதகங்கள் எதுவும் இல்லை ஏனென்றால் அவரைச் சுற்றி எந்த உயிரும் இன்னொரு உயிரை கொல்லுகின்ற எண்ணமே இல்லாமல் இருக்கும் காரணத்தினால். இந்த உலகத்தில் வாழ்கின்ற அசையும் உயிர்கள் அனைத்தையும் பல வகைகளாக பிரித்துப் பார்க்காமல் இறை அம்சமாகவே பார்க்கின்றார். இப்படி நவாக்கிரி சக்கரத்தை சேர்ந்தே இருக்கின்ற சாதகர்களுக்கு முடிவு என்பதும் இல்லை.



பாடல் #1348: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

சேர்ந்தவ ரென்றுந் திசையொளி யானவர்
காய்ந்தெழு மேல்வினை காணகி லாதவர்
பாய்ந்தெழு முள்ளொளி பாரிற் பரந்தது
மாய்ந்தது காரிருள் மாறொளி தானே.

விளக்கம்:

பாடல் #1347 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தை சேர்ந்தே இருக்கின்ற சாதகர்கள் எப்பொழுதும் அனைத்து திசைகளுக்கும் பரவிச் செல்லுகின்ற ஒளியாகவே இருப்பார்கள். இது வரை பல பிறவிகளாக அவர்களைத் தொடர்ந்து வருகின்ற உச்ச வினைகள் இனிமேல் அவரைத் தொடர்ந்து வராமல் அழிந்து எந்த வினையும் இல்லாமல் இருப்பார்கள். அவர்களுக்கு உள்ளிருந்து வேகமாக மேலெழுந்து வருகின்ற ஞானமாகிய ஒளியானது உலகம் முழுவதும் பரந்து விரியும். அதன் பிறகு தம்மை நாடி வரும் தகுதியானவர்களுக்கு அவர்களுடைய மாயையாகிய இருளை அழித்து ஞானமாகிய ஒளியை கொடுக்கின்றவராக சாதகர்கள் இருப்பார்கள்.



பாடல் #1349: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஒளியது ஹௌ முதல்ஹ்ரீ மதுவீறாங்
களியது சக்கரங் கண்டறி வார்க்குத்
தெளிவது ஞானமுஞ் சிந்தையுந் தேறப்
பளியது பஞ்சாக் கரமது வாமே.

விளக்கம்:

பாடல் #1348 இல் உள்ளபடி தகுதியானவர்களுக்கு மாயை அழித்து ஞானத்தைக் கொடுக்கின்ற சாதகர்களுக்கு உள்ளே இருக்கின்ற ஒளியான நவாக்கிரி சக்கரத்தில் 'ஹௌம்' எனும் பீஜம் முதலில் வைத்து 'ஹ்ரீம்' எனும் பீஜத்தை கடைசியாக வைத்து முறைப்படி அமைத்து தியானித்தால் உள்ளுக்குள் பேரின்பத்தைக் கொடுக்கின்றதாக அதுவே இருக்கும். இந்த நவாக்கிரி சக்கரத்தை தமக்குள் கண்டு அறிந்து கொள்ளுகின்ற சாதகர்களுக்கு உண்மை பொருளை தெளிவு படுத்துவதாகவும் அதுவே இருந்து உண்மை ஞானத்தைக் கொடுப்பதாகவும், எண்ணங்கள் தெளிவு பெறும் அறிவைக் கற்றுக் கொடுக்கின்ற இடமாகவும் அதுவே இருக்கும். அது மட்டுமின்றி இறைவனின் எழுத்து வடிவான ஐந்து அட்சரங்களைக் கொண்ட 'நமசிவாய' மந்திரமாகவும் அதுவே இருக்கின்றது.




பாடல் #1350: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆமே சதாசிவ நாயகி யானவ
ளாமே யதோமுகத் துள்ளறி வானவ
ளாமே சுவையொளி யூரோசை கொண்டவ
ளாமே யனைத்துயிர் தன்னுளு மாமே.

விளக்கம்:

நவாக்கிரி சக்கரத்தில் இருக்கும் அசையும் சக்தியாகிய பரா சக்தியே அசையா சக்தியாகிய சதாசிவமூர்த்தியின் சரி பாதியான இறைவியாக இருக்கின்றாள். அவளே இறைவனின் ஐந்து முகங்களில் கீழ் நோக்கிய முகமாகிய அதோ முகத்தில் அண்ட சராசரங்களையும் அதிலுள்ள அனைத்தையும் தாங்கி இருக்கின்ற அறிவாகவும் இருக்கின்றாள். அவளே புலன்களின் மூலம் உயிர்கள் உணர்கின்ற உணர்வுகளில் சுவைக்கின்ற உணர்வு, பார்க்கின்ற உணர்வு, தொடுகின்ற உணர்வு, கேட்கின்ற உணர்வு ஆகிய அனைத்து உணர்வுகளையும் அறிகின்ற உயிர்களுக்கான ஞானத்தை தனக்குள் கொண்டிருக்கின்றாள். அவளே அண்ட சராசரங்களில் உள்ள அனைத்து உயிர்களையும் தனக்குள் தாங்கிக் கொண்டு இருக்கின்றாள்.



பாடல் #1351: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்
டென்னுளு மாகி யிடம்பெற நின்றவள்
மன்னுளு நீரனல் காலுளும் வானுளுங்
கண்ணுளு மெய்யுளுங் காணலு மாமே.

விளக்கம்:

பாடல் #1350 இல் உள்ளபடி அனைத்து உயிர்களையும் தனக்குள் தாங்கி அனைத்துமாகவே இருக்கின்ற இறைவியானவள் அண்ட சராசரங்களில் இருக்கின்ற உலகங்கள் அனைத்தையும் தனக்குள் கொண்டும் இருக்கின்றாள். அவளே எமக்கு உள்ளேயும் அனைத்தும் ஆகி எமக்குள் முழுவதும் நிறைந்து நிற்கின்றாள். அவளே பஞ்ச பூதங்களில் நிலத்தின் உள்ளேயும், நீரின் உள்ளேயும், நெருப்பின் உள்ளேயும், காற்றின் உள்ளேயும், ஆகாயத்தின் உள்ளேயும் இருக்கின்றாள். அவளே எமது கண்ணின் உள்ளேயும் எமது உடலுக்கு உள்ளேயும் வீற்றிருக்கிறாள் என்பதை நவாக்கிரி சக்கரத்தை சாதகம் செய்யும் சாதகர்களால் தரிசிக்கவும் முடியும்.



பாடல் #1352: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

காணலு மாகுங் கலந்துயிர் செய்வன
காணலு மாகுங் கருத்து ளிருந்திடிற்
காணலு மாகுங் கலந்து வழிசெய்யக்
காணலு மாகுங் கருத்துற நில்லே.

விளக்கம்:

பாடல் #1351 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தை சாதகம் செய்யும் சாதகர்களால் இறைவியானவள் உயிர்களோடு ஒன்றாகக் கலந்து நின்று செய்கின்ற அனைத்து செயல்களையும் தரிசிக்க முடியும். அது மட்டுமின்றி உயிர்களின் எண்ணங்களுக்கு உள்ளே இறைவி இருக்கின்ற தன்மையையும் தரிசிக்க முடியும். அது போலவே உயிர்களோடு ஒன்றாகக் கலந்து நின்று அவற்றுக்கு ஏற்ற நல் வழியில் இறைவி செல்ல வைப்பதையும் தரிசிக்க முடியும். ஆகவே உங்களது எண்ணங்களில் எப்போதும் இறைவியை வைத்து தியானித்து இருங்கள்.



பாடல் #1353: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நின்றிட மேழு புவனமு மொன்றாகக்
கண்டிடு முள்ளங் கலந்தெங்குந் தானாகக்
கொண்டிடும் வையங் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே.

விளக்கம்:

பாடல் #1352 இல் உள்ளபடி தமது எண்ணங்களில் எப்போதும் இறைவியை வைத்து தியானித்து இருக்கின்ற சாதகர்கள் தாம் சாதகம் செய்கின்ற இடத்திலிருந்தே ஏழு விதமான உலகங்களையும் ஒரு உலகம் போலவே ஒன்றாகப் பார்க்கின்ற உள்ளத்தைப் பெறுகிறார்கள். அப்படி அனைத்து உலகங்களையும் ஒன்றாகவே பார்க்கின்ற சாதகர்கள் அனைத்தோடும் கலந்து அனைத்தும் தாமாகவே ஆகி விடுவது மட்டுமின்றி உலகத்தில் பலவாறாக இருக்கின்ற தன்மைகள் அனைத்தையும் ஒன்றாகவே எடுத்துக் கொள்வார்கள். அதனால் உயிர்களிடமிருந்து கொடுமையான வினைகளைப் பிரித்து நவாக்கிரி சக்கரத்தில் இருக்கின்ற உண்மையை உணர்த்துகின்ற உண்மைப் பொருளாகவே சாதகரும் ஆகிவிடுவார்கள்.



பாடல் #1354: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

மெய்ப்பொருள் வெளமுதல் ஹௌவது வீறாகக்
கைப்பொரு ளாகக் கலந்தெழு சக்கரந்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேவரி
நற்பொரு ளாக நடுவிருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1353 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தில் இருக்கின்ற உண்மையை உணர்த்துகின்ற உண்மைப் பொருளாகவே ஆகிவிட்ட சாதகருக்குள் இருக்கும் நவாக்கிரி சக்கரமானது 'ஔம்' எனும் பீஜம் முதலில் ஆரம்பித்து 'ஹௌம்' எனும் பீஜம் கடைசியாக வைத்து முறைப்படி அமைந்து இருக்கும். சாதகருடன் எப்போதும் சேர்ந்தே இருக்கின்ற இந்த சக்கரத்தின் பொருளானது அவருடன் கலந்து இருந்து அவருக்குள்ளிருந்து எழுந்து வரும். அப்படி சாதகருக்குள்ளிருந்து எழுந்து வருகின்ற இந்த சக்கரமானது உலகத்தில் தானாகவே நிற்கின்ற பொருளாக ஆகி அதுவே நன்மைகள் கொடுப்பதற்காக மாறுகின்ற அமிழ்தத்தின் தன்மைக்குத் தலைவியாக இருக்கின்ற இறைவியே நன்மைகள் அனைத்தும் தருகின்ற இந்த சக்கரத்தின் நடுவிலும் வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1355: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தாளதி னுள்ளே சமைந்தமு தேச்சுரி
காலது கொண்டு கருத்துற வீசிடில்
நாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமுங் கேடில்லைக் காணுமே.

விளக்கம்:

பாடல் #1354 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தின் நடுவிலும் வீற்றிருக்கின்ற இறைவியின் திருவடிகளே சக்கரத்திற்குள் சக்தியூட்டமாக மாறி இருக்கின்ற பீஜ மந்திர எழுத்துக்களான அமிழ்தத்திற்கும் தலைவியாக அந்த இறைவியே இருக்கிறாள். அவளது அருளால் சக்தியூட்டம் பெற்ற பீஜ மந்திர எழுத்துக்களை மூச்சுக் காற்றின் மூலம் அனைத்தும் நன்மை பெற வேண்டும் என்கிற எண்ணத்தையும் சேர்ந்து அனைவருக்கும் பயன்படும் படி அதிர்வலைகளாக சாதகரைச் சுற்றி அனுப்பும் போது அந்த அதிர்வலைகளால் தினந்தோறும் பல விதமான புதுமையான நன்மைகள் தம்மைச் சுற்றி நடப்பதை சாதகர்கள் காணுவார்கள். அதனால் பயனடைந்தவர்கள் சொல்லுகின்ற புகழ்ச்சிகளையும் கேட்டு அந்த அதிர்வலைகளைப் பெற்றவர்களின் உடலுக்கும் எந்தவிதமான கெடுதல்களும் இல்லாமல் நன்றாக இருப்பதை சாதகர்களால் காண முடியும்.



பாடல் #1356: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கேடில்லைக் காணுங் கிளரொளி கண்டபி
னாடில்லைக் காணும் நாமுத லற்றபின்
மாடில்லைக் காணும் வரும்வழி கண்டபின்
காடில்லைக் காணுங் கருத்துற் றிடத்துக்கே.

விளக்கம்:

பாடல் #1355 இல் உள்ளபடி சாதகர்கள் அனுப்பிய மந்திர அதிர்வலைகளைப் பெற்றவர்களின் உடலுக்கு எந்தவிதமான கெடுதல்களும் இல்லாமல் நன்றாக இருப்பதை சாதகர்களால் காண முடியும். சாதகர்கள் தமக்குள்ளிருக்கும் நவாக்கிரி சக்கரத்திலிருந்து உத்வேகமாக எழுந்து வருகின்ற பேரொளியை தரிசித்த பிறகு தமது உடலுக்குத் தேவையான இடம் என்ற ஒன்றும் இந்த உலகத்தில் இல்லாமல் போவதைக் காண்பார்கள். அதன் பிறகு வருடம், மாதம், நாள், மணி, நிமிஷம், வினாடி, நொடி ஆகிய காலத்தைக் குறிக்கின்ற அனைத்தும் இல்லாமல் போகும். சாதகர்களும் தமது உடலைச் சார்ந்து இருக்க வேண்டிய எந்த தேவையும் இல்லாமல் இருப்பதைக் காண்பார்கள். அதன் பிறகு இறைவனை அடைய வேண்டும் என்று சாதகரை நாடி வருகின்ற உயிர்களுக்கு இறைவனை அடையும் வழிகள் எது எது என்று தமக்குள் கண்டு அறிந்து கொண்டு அவற்றை தகுதியானவர்களுக்கு கொடுப்பார்கள். சாதகரின் எண்ணங்களின் மூலம் தம்மைச் சுற்றி மந்திர அதிர்வலைகளை அனுப்பிய எல்லா இடத்திலும் இறைவனை அடைய வேண்டும் என்று அவரை நாடி வருகின்ற உயிர்களைச் சுற்றி காடு போல சூழ்ந்து இருக்கின்ற கொடிய வினைகள் இல்லாமல் போவதையும் காண்பார்கள்.



பாடல் #1357: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

உற்றிட மெல்லா முலப்பிலி பாழாகக்
கற்றிட மெல்லாங் கடுவெளி யானது
மற்றிட மில்லை வழியில்லைத் தானில்லைச்
சற்றிட மில்லைச் சலிப்பற நின்றிடே.

விளக்கம்:

பாடல் #1356 இல் உள்ளபடி சாதகரின் எண்ணங்களின் மூலம் தம்மைச் சுற்றி மந்திர அதிர்வலைகளை அனுப்பிய எல்லா இடத்திலும் நவாக்கிரி சக்கரத்திலிருந்து வருகின்ற அழிவில்லாத இறை சக்தியினால் கொடுமையான வினைகள் அனைத்தும் கெட்டு அழிந்து போய் விடும். சாதகர் இதுவரை தாம் கற்றுக் கொண்ட அனைத்து விஷயங்களையும் ஞாபகமாக வைத்திருந்த எண்ணங்களின் சேமிப்பு அனைத்தும் அழிந்து போய் அந்த இடம் வெற்று இடமாக ஆகி விடும். அனைத்து இடத்திலும் இருக்கின்ற சாதகர்களுக்கு ஒன்றோடு ஒன்று வேறு படுத்திப் பார்க்கின்ற இடம் என்று எதுவும் இல்லாமல் போய் விடும். அதனால் சாதகர் இடத்தின் மூலம் செல்ல வேண்டிய வழிகள் என்று எதுவும் இல்லாமலும் தான் என்கிற உடலோ மனமோ எண்ணமோ ஆகிய எதுவும் இல்லாமல் இருப்பார். அதன் பிறகு அவரைச் சுற்றி இருக்கின்ற உலகம் என்ற இடங்கள் எதுவும் இல்லாமல் போய் விடும். ஆகவே சாதகர்கள் இதனால் எந்தவிதமான மனச் சோர்வோ அல்லது சலிப்போ அடைந்து விடாமல் தாம் செய்கின்ற சாதகத்தை தொடர்ந்து சமாதி நிலையில் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

குறிப்பு: சமாதி நிலையில் இருக்கின்ற சாதகர்கள் நிலையை இந்தப் பாடலில் தெரிந்து கொள்ளலாம்.



பாடல் #1358: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நின்றிடு மேழ்கட லேழ்புவி யெல்லா
நின்றிடு முள்ளம் நினைத்தவை தானொக்க
நின்றிடுஞ் சித்தி நிலைபெற கண்டிடில்
நின்றிடு மேலை விளக்கொளி தானே.

விளக்கம்:

பாடல் #1357 இல் உள்ளபடி சாதகர் சமாதியில் இருந்து இடைவிடாது செய்கின்ற சாதகத்தினால் ஏழு விதமான பெருங் கடல்களிலும் ஏழு விதமான உலகங்களிலும் அவரால் இருக்க முடியும். அது மட்டுமின்றி அவரது உள்ளத்தில் நினைத்த அனைத்து விஷயங்களும் அந்தக் கணத்திலேயே அவரது எண்ணத்திற்கு ஏற்றவாறே நடக்கும். அப்போது சாதகர் பெற்ற அருள் நிலையானது எப்போதும் மாறாமல் நிலையாக இருப்பதை அவர் கண்டு உணர்வார். அதன் பிறகு உச்சத்தில் இருந்து அனைத்தையும் விளங்க வைக்கின்ற பேரொளியாகவும் சாதகரே இருக்கின்றார்.



பாடல் #1359: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

விளக்கொளி சௌமுதல் வெளவது வீறாம்
விளக்கொளி சக்கர மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி யாக விளங்கிடு நீரே.

விளக்கம்:

பாடல் #1358 இல் உள்ளபடி இடைவிடாது சாதகம் செய்து அனைத்தையும் விளங்க வைக்கின்ற பேரொளியானது 'சௌம்' எனும் பீஜத்தை முதலில் வைத்தும் 'ஔம்' எனும் பீஜத்தை முறைப்படி அமைத்து கடைசியிலும் இருக்கின்றது. அந்தப் பேரொளியே நவாக்கிரி சக்கரமாகவும் அதற்குள் இருக்கின்ற உண்மை பொருளாகவும் இருக்கின்றது. இப்படி பேரொளியாக இருக்கின்ற நவாக்கிரி சக்கரத்தில் மின்னல் போன்ற மாபெரும் சக்தியாக இருக்கின்ற இறைவியே அந்தப் பேரொளியாகவும் இருக்கின்றாள் என்பதை சாதகர்கள் தெரிந்து கொள்வார்கள்.



பாடல் #1360: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லில்
விளங்கிடு மெல்லிய லாளது வாகும்
விளங்கிடு மெய்நின்ற ஞானப் பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே.

விளக்கம்:

பாடல் #1359 இல் உள்ளபடி இறைவியே நவாக்கிரி சக்கரத்தில் உள்ள பேரொளியாகவும் இருக்கின்றாள் என்பதை சாதகர்கள் தெரிந்து கொள்கின்ற உச்ச நிலையில் வருகின்ற பேருண்மையான பரம்பொருளை சொல்ல முயன்றால் அதுவே மென்மையான இயல்பினைக் கொண்ட இறைவியாகவும் இருக்கின்றது. சாதகரின் உடலுக்குள் நிற்கின்ற உண்மையான ஞானத்தின் பரம்பொருளை தமக்குள் உணர்ந்து தெரிந்து இருக்கின்றவர்களே தெளிவானவர்கள் ஆவார்கள்.




பாடல் #1361: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தானே வெளியவ ளெங்கு நிறைந்தவள்
தானே வெளிக்கும் வெளியது வானவள்
தானே சகலமு மாக்கி யழித்தவள்
தானே யனைத்துள வண்ட சகலமே.

விளக்கம்:

பாடல் #1360 இல் உள்ளபடி சாதகர்கள் தமக்குள் உணர்ந்து தெரிந்து கொள்ளுகின்ற இறைவி தாமே ஆகாயமாகவும் அதிலுள்ள அனைத்திலும் நிறைந்தும் இருக்கின்றவள். அவளே ஆகாயத்திற்கும் மேலான பரவெளியாகவும் இருக்கின்றவள். அவளே அனைத்தையும் உருவாக்கி அவற்றின் வினை முடிந்த பின் அழிக்கின்றவள். அவளே அனைத்திலும் கலந்து உள்ளவளாகவும் அண்ட சராசரத்திலுள்ள அனைத்துமாகவும் இருக்கின்றாள்.




பாடல் #1362: நான்காம் தந்திரம் – 13. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அண்டத்தி னுள்ளே யளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணினுங்
கண்டத்தி னின்ற கலப்பறி யார்களே.

விளக்கம்:

பாடல் #1360 இல் உள்ளபடி அண்ட சராசரத்திலுள்ள அனைத்துமாகவும் இருக்கின்ற இறைவியே அண்ட சராசரத்தின் உள்ளே அளவிட்டு சொல்ல முடியாத பட மிகவும் அரியதாக அளவில்லாமல் இருக்கின்றாள். உடலுக்கு உள்ளே இருக்கின்ற மிகப் பெரும் ஆகாயமாகிய மனதையும் இறைவி கண்டு கொண்டு இருக்கின்றாள். நவ குண்டமாகிய உடலுக்கு உள்ளே இருந்து உடலை இயக்குகின்ற பல விதமான இயக்கங்களை பார்த்து உணர்ந்து கொண்டாலும் அந்த உடலுக்குள் வீற்றிருக்கின்ற இறைவி உடலோடு கலந்து இருக்கின்ற தன்மையை யாரும் அறிந்து கொள்வதில்லை.

குறிப்பு: நவாக்கிரி சக்கரத்தில் உள்ள பேரொளியாக இருக்கின்ற இறைவியானவள் உடலுக்குள் இருக்கும் மனதையும் உடலின் இயக்கத்தையும் உடலோடு கலந்து நின்று கண்டு கொண்டு இருக்கிறாள் என்பதை யாரும் அறிந்து கொள்வதில்லை.



பாடல் #1363: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கலப்பறி யார்கடல் சூழுல கெல்லா
முலப்பறி யாருட லோடுயிர் தன்னை
சிலப்பறி யார்பல தேவரை நாடித்
தலைப்பறி யாகச் சமைந்தவர் தாமே.

விளக்கம்:

பாடல் #1362 இல் உள்ளபடி இறைவி உடலோடு கலந்து இருக்கின்ற தன்மையை அறியாதவர்கள் பெரும் கடல்களால் சூழ்ந்து இருக்கின்ற உலகங்களில் எல்லாம் சென்று இறைவியைத் தேடி அலைகிறார்கள். தமது உடலுக்கு இறப்பு என்ற ஒன்று இருப்பதை அறியாதவர்கள் தமது உடலோடு உயிரும் ஒன்றாகக் கலந்து இருப்பதைப் போலவே இறைவியும் கலந்து இருக்கின்றாள் என்கிற சிறப்பான உண்மையை அறியாதவர்களாக பல விதமான தெய்வங்களை தேடிச் சென்று வாழ்க்கையை வீணடிக்கிறார்கள். இவர்கள் தேடி அலையும் அனைத்து தெய்வங்களுக்கும் தலைவியாக இறைவியே இருக்கின்றாள் என்பதை அறியாதவர்களாக பல வித குழப்பங்களுக்கு ஆளாகிறார்கள்.



பாடல் #1364: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தானே யெழுந்தவச் சக்கரஞ் சொல்லிடில்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
றேனே யிரேகை திகைப்பற வென்பதிற்
றானே கலந்தறை யெண்பத் தோடொன்றே.

விளக்கம்:

நவாக்கிரி சக்கரத்தை சாதகர்கள் சாதகம் செய்யும் போது அவர்களுக்குள்ளிருந்து தாமாகவே எழுந்து மேலே வருகின்ற நவாக்கிரி சக்கரத்தைப் பற்றி சொல்ல போனால் தமது மனதையும் புத்தியையும் ஒன்றாகச் சேர்த்து மானசீக கோடுகளாக இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழுமாகவும் பத்து கோடுகள் வரைந்து முறைப்படி சக்கரத்தை அமைக்க வேண்டும். அதன் பிறகு அந்தக் கோடுகளில் இருந்து கிடைக்கின்ற அமிழ்த்தைப் பார்த்து திகைத்து போய் நிற்காமல் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழுமாகவும் உள்ள ஒன்பது அறைகளோடு தாமும் ஒன்றாகக் கலந்து நின்று சக்கரத்தில் இருக்கும் மொத்தம் எண்பத்தொன்று அறைகளிலும் மனது ஒன்றி இருக்க வேண்டும்.



பாடல் #1365: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஒன்றிய சக்கர மோதிடும் வேளையில்
வெள்ளி கொள்மேனி மதிவட்டம் பொன்மையாங்
கன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையில்
மன்றிய லம்மை யெழுத்தவை பச்சையே.

விளக்கம்:

பாடல் #1364 இல் உள்ளபடி சாதகர் மனம் ஒன்றி இருக்கின்ற நவாக்கிரி சக்கரத்தை ஜெபம் செய்கின்ற போது வெள்ளி போல வெண்மை நிற ஒளியைக் கொண்டு இருக்கும் சாதகரின் உடலானது அவரது மனமும் அறிவும் முழுமை பெற்ற பிறகு தங்க நிற ஒளியாக மாறி பிரகாசிக்கும். அப்போது சக்கரத்தில் சக்தியூட்டம் பெற்று முழுமை அடைந்து இருக்கும் கோடுகளானது சாதகரின் உடலோடு ஒன்றாக கலந்து செழுமை பெறும். அதன் பிறகு அம்பலத்தில் இறைவனோடு சேர்ந்து ஆடுகின்ற இயல்பை உடைய இறைவியின் மந்திர எழுத்துக்களாக சக்கரத்தில் இருக்கும் பீஜங்கள் அனைத்தும் தமது சக்தியூட்டம் குறையாமல் எப்போதும் பசுமையாக நிலைத்து நிற்கும்.



பாடல் #1366: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஏய்ந்த மரவுரி தன்னி லெழுதிநீ
வாய்ந்த விப்பொன்னெண்பத் தொன்றி னிரைத்தபின்
காய்ந்தவி நெய்யொட் கலந்துட னோமமு
மாய்ந்த வியாயிர மாகுதி பண்ணே.

விளக்கம்:

நவாக்கிரி சக்கரத்தை வரைந்து பூஜை செய்வதற்கு ஏதுவான மரத்தின் பட்டையை எடுத்து அதில் சக்கரத்தை எழுத வேண்டும். அதன் பிறகு அதற்கு ஏற்றபடி வார்க்கப்பட்டு புடம் செய்த தங்கத் தகடில் மரப் பட்டையை வைத்து நவாக்கிரி சக்கரத்தில் இருக்கும் எண்பத்தோரு அறைகளையும் வரைந்து அதற்குள் எண்பத்தோரு பீஜங்களையும் எழுதி அடைக்க வேண்டும். அதன் பிறகு நன்றாக காய்ச்சிய அவிர் பாகத்திற்கு ஏற்ற நெய்யுடன் கலந்து அதனோடு மரக்கட்டைகளை வைத்து ஹோமம் செய்து தங்கத் தகடில் எழுதிய பீஜங்களை நன்றாக ஆராய்ந்து அவற்றையே அவிர் பாகமாக ஆயிரம் முறை ஜெபித்து ஹோமத்தில் சமர்ப்பணம் செய்யுங்கள்.

குறிப்பு: இதுவரை நவாக்கிரி சக்கரத்தை மானசீகமாக சாதகம் செய்யும் முறைகளை அருளிய திருமூலர் இந்தப் பாடலில் இருந்து வெளிப்புற பூஜையில் நவாக்கிரி சக்கரத்தை அமைத்து சாதகம் செய்யும் முறைகளை அருளுகிறார்.



பாடல் #1367: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பண்ணிய பொன்னைப் பகைப்பற நீபிடி
யெண்ணிய நாள்களி லின்பமே யெய்திடு
நண்ணிய நாமமு நான்முக னொத்திடுஞ்
சொல்லிய லேறிற் சொக்கனு மாகுமே.

விளக்கம்:

பாடல் #1366 இல் உள்ள முறைப்படி சாதகர் சாதகத்தால் சக்தியேற்றிய தங்கத் தகடை எந்தவித குற்றங்களோ தீய எண்ணங்களோ இல்லாமல் சாதகர் கைவரப் பெற்றால் அவர் தியானித்து இருக்கும் அனைத்து நாட்களிலுமே பேரின்பமே கிடைத்துக் கொண்டிருக்கும். சாதகர் சாதகத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கும் நவாக்கிரி சக்கரத்திலுள்ள பீஜ மந்திரங்களும் நான்கு முகங்களைக் கொண்ட பிரம்மனின் படைத்தல் தொழிலுக்கு சமமான சக்தி மந்திரத்திற்கும் வரப் பெறும். அதன் பிறகு அந்த மந்திர பீஜங்களின் சக்தியின் இயல்பை சாதகர் முழுவதுமாகப் பெற்று விட்டால் சாதகரும் சிவனைப் போலவே அன்பாளனாகவும் அருளாளனாகவும் ஆகிவிடுவார்.




பாடல் #1368: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆகின்ற சந்தன குங்கும கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
யாகின்ற கற்பூர மாகோசன நீருஞ்
சேர்கின்ற வொன்பதுஞ் சேரநீ வைத்திடே.

விளக்கம்:

அபிஷேகம் செய்வதற்கு ஏற்ற தூய்மையான சந்தனமும் குங்குமமும் கஸ்தூரியும் வாசனை மிகவும் பரவும் கருமையான அகில் கட்டையை அரைத்த சாந்தும் ஜவ்வாதும் புனுகும் நெய்யும் சேர்க்க வேண்டும். அதனுடன் அபிஷேகம் செய்வதற்கு ஏற்ற தூய்மையான பச்சைக் கற்பூரமும் பசுவின் மேன்மை பொருந்திய கோமியமும் சேர்க்க வேண்டும். இப்படி சேர்ப்பதற்கு ஏதுவான ஒன்பது பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து பாடல் #1367 இல் உள்ளபடி சாதகர் சாதகம் செய்து சக்தியேற்றிய தங்கத் தகடில் வைத்து அபிஷேகம் செய்ய வேண்டும்.



பாடல் #1369: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

வைத்திடும் பொன்னுடன் மாதவ னோக்கிடில்
கச்சிரு கொங்கை கலந்தெழு கன்னியைத்
தச்சது வாக சமைந்தவிம் மந்திர
மச்சியல் பாக வாயிரஞ் சிந்தியே.

விளக்கம்:

பாடல் #1368 இல் உள்ளபடி சாதகர் சாதகம் செய்து சக்தியேற்றி வைத்திருக்கும் தங்க தகடுடன் மாபெரும் தவமாக மனதை ஒரு நிலைப் படுத்தி வேறு எதையும் சிந்திக்காமல் அதையே மானசீகமாக உள்ளுக்குள் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும். அப்போது மார்புக் கச்சையால் கட்டிய பேரழகு பொருந்தி அமிர்தத்தை கொடுக்கும் இரண்டு மார்பகங்களைக் கொண்டு தங்கத் தகடுடன் சக்தியாகக் கலந்து அதிலிருந்து பேரொளியாக எழுகின்ற என்றுமே மாறாத இளமை பொருந்திய இறைவியை காணலாம். அதன் பிறகு சாதகர் செய்யும் சாதகத்தின் அளவிற்கு ஏற்றபடி தங்கத் தகடோடு கலந்து இருக்கும் இறைவியின் அருளால் நவாக்கிரி சக்கரத்திற்கான மந்திரம் சாதகருக்குள் உருவாகும். அதன் பிறகு அந்த மந்திரம் இருக்கும் தன்மையில் இருந்து சிறிதும் மாறாமல் மானசீகமாக ஜெபித்து ஆயிரம் முறை அந்த மந்திரத்தையே சிந்தித்து இருக்க வேண்டும்.




பாடல் #1370: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியா
யெந்தை கரங்க ளிருமூன்று முள்ளது
பந்தமாஞ் சூலப் படைபாசம் வில்லம்பு
முந்தை கிலியெழ முன்னிருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1369 இல் உள்ளபடி தமக்குள்ளிருந்து கிடைத்த நவாக்கிரி மந்திரத்தை சிந்தித்துக் கொண்டு இருக்கும் சாதகரின் எண்ணங்களுக்கு உள்ளே பிரகாசமான ஒளியைத் தருகின்ற ஜோதி வடிவமாகவும் எமது தந்தையாகிய இறைவனின் அம்சத்தில் ஆறு கைகளைக் கொண்டு இருக்கும் வடிவமாகவும் அந்த ஆறு கைகளிலும் தீச்சட்டிதிரிசூலம் அங்குசம் பாசக் கயிறு வில் அம்பு ஆகிய ஆறு ஆயுதங்களோடும் சாதகரின் முந்தைப் பிறவிகளில் இருந்து தொடர்ந்து வருகின்ற மும்மல இருளும் பயந்து விலகும் படி பேரொளியாகவும் எழுந்து சாதகரின் சிந்தனைக்கு முன்பு நிற்கின்றாள் இறைவி.



பாடல் #1371: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

இருந்தன சத்தியறு பத்து நால்வர்
யிருந்தனர் கன்னிக ளெண்வகை யெண்ம
ரிருந்தனர் சூழ வெதிர் சக்கரமா
யிருந்த கரமிரு வில்லம்பு கொண்டே.

விளக்கம்:

பாடல் #1370 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தில் இருக்கின்ற இறைவியின் அம்சமாக அறுபத்து நான்கு சக்திகள் இருக்கின்றார்கள். இந்த அறுபத்து நான்கு சக்திகளும் என்றும் இளமையுடன் எட்டு வகையாகவும் வகைக்கு எட்டு பேராகவும் மொத்தம் அறுபத்து நான்கு பேர் இருக்கின்றார்கள். இந்த அறுபத்து நான்கு சக்திகளும் நவாக்கிரி சக்கிரத்தின் நடுவில் வீற்றிருக்கும் இறைவிக்கு எதிர் புறமாகவும் சக்கரத்தை சூழ்ந்தும் பாதுகாப்பு வளையம் போல இருக்கின்றார்கள். இப்படி நவாக்கிரி சக்கரத்தை சூழ்ந்து பாதுகாப்பு வளையமாக இருக்கின்ற அறுபத்து நான்கு சக்திகளும் தமது இரண்டு கைகளிலும் வில்லும் அம்பும் ஏந்திக் கொண்டு இருக்கின்றார்கள்.



பாடல் #1372: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க்
கண்டவிம் மூர்த்தங் கனல்திரு மேனியாய்ப்
பண்டமர் சோதிப் படரித ழானவை
யுண்டங் கொருத்தி யுணர்ந்து கொள்வார்க்கே.

விளக்கம்:

பாடல் #1371 இல் உள்ளபடி தங்களின் கரங்களில் ஆயுதங்களுடன் நவாக்கிரி சக்கரத்தை சூழ்ந்து கொண்டு இருக்கின்ற அறுபத்து நான்கு சக்திகளும் தங்க ஆபரணங்களோடும் வளைந்து சுருண்டு நீண்டு இருக்கும் தலை முடியே அவர்கள் உடுத்தி இருக்கும் ஆடையாகவும் அக்னிக் கனலே தங்களின் திரு மேனியாகவும் இருக்கின்றார்கள். இதை தமக்குள் கண்டு கொண்ட சாதகர்கள் அந்த அக்னிக் கனலாகிய உருவமானது ஆதியிலிருந்தே இருக்கின்ற இறைவனின் ஜோதி உருவத்தோடு சரிசமமாக கலந்து இருக்கும் இறைவியாகவே தமக்குள் இருக்கும் நவாக்கிரி சக்கரத்தின் நடுவில் ஜோதி வடிவில் வீற்றிருக்கின்றாள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இப்படி தமக்குள் வீற்றிருக்கின்ற இறைவியை உணர்ந்து கொள்ள முடிந்த சாதகர்களால் அவள் ஒருவளே தமக்குள் முழுவதும் சக்திமயங்களாக படர்ந்து இருக்கின்றாள் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.



பாடல் #1373: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கிற்
கலந்திருந் தங்கே கருணை பொழியு
மலர்ந்தெழு மோசை யொளியது காணுந்
தளர்ந்தெழு சக்கரந் தான்றரு வாளே.

விளக்கம்:

பாடல் #1372 இல் உள்ளபடி சாதகர் தமக்குள் வீற்றிருக்கின்ற இறைவியை உணர்ந்து கொண்ட பிறகு அவளையே மனதிற்குள் கண்டு கொண்டே தியானத்தில் வீற்று இருந்தால் இறைவியும் சாதகரோடு ஒன்றாக கலந்திருந்து அங்கிருந்தே சாதகருக்கு பேரருள் கருணையை வழங்குவாள். அதன் பிறகு சாதகருக்குள்ளிருந்து பூவைப் போல மென்மையாக மலர்ந்து எழுகின்ற இறைவனது அம்சமாகிய சத்தத்தையும் இறைவியது அம்சமாகிய வெளிச்சத்தையும் உருவாக்கி அவர் காணும் படி அருளுவாள். அதன் பிறகு அந்த வெளிச்சமும் சத்தமும் சாதகத்திற்கு ஏற்றவாறு இணங்கி சாதகருக்குள்ளிருந்து எழுகின்ற நவாக்கிரி சக்கரத்தோடு சேர்ந்து செயல்படும்படி இறைவி அருளுவாள்.



பாடல் #1374: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தரும் வழியாகிய தத்துவ ஞானங்
குருவழி யாயங் குணங்களில் நின்று
கருவழி யாய கணக்கை யறுத்துப்
பெருவழி யாகிய பேரொளி காணே.

விளக்கம்:

பாடல் #1373 இல் உள்ளபடி இறைவி அருளால் சாதகருக்குள்ளிருந்து மலர்ந்து எழுகின்ற சத்தமும் வெளிச்சமும் சாதகருக்கான வழியாக இருந்து இறைவனை அடைவதற்கு வேண்டிய தத்துவ ஞானத்தை கொடுக்கின்றாள். அவளே குருவாக வீற்றிருந்து சாதகருக்குள் இருக்கும் தன்மைகளுக்கு ஏற்றபடியே நின்று காட்டி அருளுகின்றாள். அதன் பிறகு சாதகரின் முதல் பிறவியில் இருந்தே தொடர்ந்து வரும் கரு வழியாகிய பிறவிகளுக்கும் இனிமேல் எடுக்க வேண்டிய பிறவிகளுக்கும் காரணமாகிய கர்ம கணக்குகளை நீக்கி முக்தி அடைவதற்கான பெரிய வழியாக இருக்கின்ற இறைவனின் பேரொளி உருவத்தை காணும் படி செய்து அருளவாள்.



பாடல் #1375: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பேரொளி யாய பெரிய மலர்நடுச்
சீரொளி யாகத் திகழ்தரு ணாயகித்
தாரொளி யாயவள் தன்னிறம் பொன்மையாய்ப்
பாரொளி யாகப் பரந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1374 இல் உள்ளபடி முக்தி அடைவதற்கான பெரிய வழியாக இருக்கின்ற இறைவனின் பேரொளி உருவமானது சாதகருக்குள் இருக்கும் சகஸ்ரதள தாமரை மலரின் நடுவில் சீரும் சிறப்பும் பொருந்திய பேரொளியாக திகழ்கின்ற நிலையைத் தருகின்ற தலைவியாகிய இறைவியே சகஸ்ரதளத்தில் இருக்கும் தாமரை மலரின் ஒளியாக இருக்கின்றாள். அவளுடைய திருமேனியானது தங்கம் போல பிரகாசமாக ஜொலிக்கின்றது. அவளே உலகத்திற்கு ஒளி தருபவளாக எங்கும் பரவி விரிந்து நிற்கின்றாள்.



பாடல் #1376: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பரந்த கரமிரு பங்கய மேந்திக்
குவிந்த கரமிரு கொய்த மாபாணி
மலர்ந்தணி கொங்கைகள் முத்தார் பவள
மிருந்தல் குலாடை மணிபொதிந் தன்றே.

விளக்கம்:

பாடல் #1375 இல் உள்ளபடி உலகம் எங்கும் பரந்து விரிந்து இருக்கும் இறைவியின் திருக் கரங்கள் இரண்டிலும் தாமரை மலர்களை ஏந்திக் கொண்டு இருக்கின்றாள். மலரின் மொக்கு பொல குவிந்து இருக்கின்ற அவளுடைய திருக் கரங்கள் இரண்டும் அப்போது பறித்த மலர்களைப் போல மிகப் பெரும் அழகு பொருந்தி இருக்கின்றாள். மலர்ந்த மலர்களால் ஆன மாலையை அணிந்து இருக்கும் அவளுடைய திரு மார்புகளில் முத்துக்களால் ஆன மாலையில் பவளத்தை பதிந்து அணிந்து இருக்கின்றாள். அவளது திரு இடைக்கு கீழே இருக்கின்ற ஆடையில் நவரத்தின மணிகளைப் பதித்து வைத்த பேரழகுடன் நினைத்த அந்த கணமே தோன்றுகிறாள்.



பாடல் #1377: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

மணிமுடி பாத சிலம்பணி மங்கை
யணிந்தவர்க் கன்றி யருளில்லை யாகுந்
தணிந்தவர் நெஞ்சினுட் டன்னரு ளாகிப்
பணிந்தவர்க் கன்றே பரகதி யாமே.

விளக்கம்:

பாடல் #1376 இல் உள்ளபடி தனது ஆடையில் நவரத்தின மணிகளைப் பதித்து வைத்த பேரழகுடன் நினைத்த அந்த கணமே தோன்றுகின்ற இறைவியானவள் தனது தலையில் நவரத்தினக் கற்களால் ஆன கிரீடத்தை அணிந்து கொண்டும் தனது திருவடிகளில் சிலம்புகளை அணிந்து கொண்டும் சாதகர்களின் நிலைகளுக்கு ஏற்ப அருளுகின்ற என்றும் இளமையுடன் இறைவி இருக்கின்றாள். அவளை தமது மனதிற்குள் பதிய வைக்கின்ற சாதகரைத் தவிர வேறு யாருக்கும் அவளது திருவருள் அவ்வளவு எளிதில் கிடைப்பது இல்லை. இறைவியின் தூய்மையான அன்பில் நிறைந்து இருக்கின்ற சாதகரின் நெஞ்சத்திற்கு உள்ளே நினைக்கின்ற அனைத்தும் இறைவியின் திருவருளாகவே ஆகிவிடும். அப்படி தனது மனதிற்குள் பதிய வைத்த இறைவியின் திருவடிகளை பணிந்து தொழுகின்ற சாதகர்களுக்கு அவர்கள் பணிந்த அன்றே முக்தியை அடையும் வழியாக இறைவி இருப்பாள்.



பாடல் #1378: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பரந்தி ருந்துள்ளே யறுப்பது சத்தி
கரந்தன கன்னிக ளப்படி சூழ
மலர்ந்திரு கையில் மலரவை யேந்திச்
சிறந்தவ ரேத்துஞ் சிறீதன மாமே.

விளக்கம்:

அனைத்திலும் பரந்து விரிந்து இருக்கின்ற இறைவியானவள் சாதகருக்கு உள்ளிருந்து அவரது மும்மலங்களையும் அறுக்கின்ற சக்தியாக இருக்கின்றாள். பாடல் #1371 இல் உள்ளபடி அவளது அருளை வாங்கிக் கொடுக்கின்ற அறுபத்து நான்கு சக்திகளும் சாதகர் இருக்கின்ற நிலையில் அவரைச் சுற்றி இருந்து பாடல் #1376 இல் உள்ளபடி மலர்ந்து இருக்கின்ற தங்களின் இரண்டு கைகளிலும் தாமரை மலர்களை பல விதங்களில் ஏந்திக் கொண்டு இருக்கின்றார்கள். இவர்களின் அருளால் தாம் செய்யும் சாதகத்தை சிறப்பாக செய்கின்ற சாதகர்கள் போற்றி வணங்குகின்ற நவாக்கிரி சக்கரத்தில் உள்ள 'ஸ்ரீம்' எனும் பீஜ மந்திரத்தின் பலனாகவே இறைவி இருக்கின்றாள்.



பாடல் #1379: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தனமது வாகிய தையலை நோக்கி
மனமது வோடி மறிக்கிலோ ராண்டிற்
கனமவை யற்றுக் கருதிய நெஞ்சந்
தினகர னாரிடச் செய்தி யதாமே.

விளக்கம்:

பாடல் #1378 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தோடு ஒன்றாக இணைந்து இருந்து அதிலுள்ள பீஜ மந்திரங்களின் பலனை அளிக்கின்ற சக்தியாகிய இறைவியை மட்டுமே நினைத்து கொண்டு மனதில் இருக்கின்ற மற்ற எண்ணங்களை எல்லாம் வெளியில் சென்று விடும்படி செய்து எண்ணங்கள் அற்ற நிலையில் ஒரு வருடம் தியானத்தில் இருந்தால் பிறவிக்கு பாரமான அனைத்தும் சாதகரை விட்டு நீங்கிவிடும். அதன் பிறகு இறைவியையே எண்ணி தியானித்து இருந்த சாதகருடைய நெஞ்சத்தில் இருக்கின்ற மாயையாகிய இருளை நீக்கி விடும் சூரியனைப் போல பேரொளியுடன் இறைவன் வந்து தமது திருவடியை வைத்து அருளுவார். நவாக்கிரி சக்கரத்தின் தன்மை இதுவே ஆகும்.



பாடல் #1380: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி யாய மலரதாய்ப்
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே.

கருத்து: நவாக்கிரி சக்கர சாதகத்தில் முழுமை பெற்ற சாதகரிடமிருந்து வெளிவரும் ஜோதி வடிவமான சக்தியானது அண்ட சராசரங்களுக்கும் பரவுகின்ற பேரொளியான மலராக விரிகின்றது. அப்படி விரிந்த மலருக்குள் இருக்கும் சக்தியானது மகரந்தத்தால் வண்டுகளை ஈர்ப்பது போல தனக்குள் இருக்கும் சக்தியால் உயிர்களை ஈர்த்து நன்மை செய்கின்ற நெருப்பு மண்டலமாக இருக்கின்றது.



பாடல் #1381: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆகின்ற மண்டலத் துள்ளே யமைந்தவ
ளாகின்ற வத்தனி நாயகி யானவ
ளாகின்ற வைம்பத் தறுசத்தி நேர்தரு
வாகின்ற வைம்பத் தறுவகை சூழவே.

விளக்கம்:

பாடல் #1380 இல் உள்ளபடி தனக்குள் இருக்கும் சக்தியால் உயிர்களை ஈர்த்து நன்மை செய்கின்ற நெருப்பு மண்டலத்திற்கு உள்ளே நடுவில் வீற்றிருக்கின்ற இறைவியானவள் அவளே தனி ஒருவளாகவும் தலைவியாகவும் அந்த நெருப்பு மண்டலமாகவும் இருக்கின்றாள். பாடல் #1371 இல் உள்ளபடி இறைவியின் அம்சமாக எட்டு வகையாகவும் வகைக்கு எட்டு பேராகவும் மொத்தம் அறுபத்து நான்கு சக்திகள் இருக்கின்றார்கள். எட்டு வகையாக இருக்கின்ற சக்திகளில் வகைக்கு ஒருவராக மொத்தம் எட்டு சக்திகளும் இறைவியோடு சேர்ந்திருக்க மீதமுள்ள ஐம்பத்து ஆறு சக்திகளும் இறைவிக்கு இணையான அருளைத் தருபவர்களாக அவளைச் சூழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.



பாடல் #1382: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமா
யாங்கணி முத்த மழகிய மேனியுந்
தாங்கிரு கையவை தார்கிளி ஞானமா
யேந்து கரங்க ளெடுத்தமா பாசமே.

விளக்கம்:

பாடல் #1381 இல் உள்ளபடி ஐம்பத்தாறு சக்திகளும் சூழ்ந்து நிற்க நடுவில் அமர்ந்து இருக்கின்ற இறைவியானவள் மேலெழுந்து பரவுகின்ற மாபெரும் ஜோதி வடிவில் ஜோதியின் சுடரே தனது தலையாகவும் ஜோதியின் அடிப்பாகமே தனது திருவடிகளாகவும் கொண்டு இருக்கின்றாள். ஜோதியின் நடுப்புறப் பகுதியே அணிகலனாகிய முத்துக்கள் போலவும் பேரழகு கொண்ட திருமேனியாகவும் கொண்டு இருக்கின்றாள். அவள் தனது இரண்டு திருக்கரங்களிலும் மலர்கொத்தின் மீது அமர்ந்திருக்கும் கிளியையும் உண்மையான ஞானத்தைக் கொடுக்கும் சின் முத்திரையையும் தாங்கி இருக்கின்றாள். மேல் புறமாக ஏந்தி இருக்கின்ற தனது இரண்டு திருக்கரங்களில் ஆணவத்தை அழிக்கின்ற அங்குசத்தையும் பாசத்தை அறுக்கின்ற கயிறையும் வைத்து இருக்கின்றாள்.



பாடல் #1383: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பாசம தாகிய வேரை யறுத்திட்டு
நேசம தாக நினைந்திடு மும்முளே
நாசம தெல்லா நடந்திடு மையாண்டிற்
காசினி மேலமர் கண்ணுத லாகுமே.

விளக்கம்:

பாடல் #1382 இல் உள்ளபடி இறைவியானவள் தனது திருக்கரங்களில் ஏந்தி இருக்கும் பாசம் என்கிற கயிறாக இருக்கின்ற உலகப் பற்றுக்கள் எனும் ஆசையை வேரோடு அறுத்து எறிந்து விட்டு உண்மையான அன்பையே சிவமாக நினைத்துக் கொண்டு சாதகர் தமக்கு உள்ளே சிவமான அன்பையே வைத்து தியானித்து இருக்க வேண்டும். அப்படி தியானித்து இருந்தால் ஐந்து ஆண்டுகளில் தீமையானது என்று உலகத்தில் இருக்கின்ற அனைத்தும் சாதகரை விட்டு விலகி விடும். அதன் பிறகு பூமிக்கு மேலாக அமர்ந்திருக்கின்ற சாதகர் ஞானக் கண்ணை நெற்றியில் வைத்திருக்கும் சிவபெருமானாகவே ஆகிவிடுவார்.



பாடல் #1384: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி
பண்ணுயர் நாதம் பகையற நின்றிடில்
விண்ணமர் சோதி விளங்கிடி நீங்கார
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே.

விளக்கம்:

பாடல் #1383 இல் உள்ளபடி தனது நெற்றியில் ஞானக் கண்ணை உடைய இறைவியானவளின் திருவருளால் அருளிய வழியின் படியே நடந்து இசைகளிலே உயர்வான நாதமாகிய இறைவனை அடைவதற்கு தடையாக இருக்கின்ற அகங்கார எண்ணங்கள் இல்லாமல் தமக்குள் வைத்து இருந்தால் விண்ணுலகத்தில் வீற்றிருக்கும் பேரொளியான இறைவன் தமக்குள் வீற்றிருக்கும் படி சாதகர் வைத்து 'ஹ்ரீம்' எனும் பீஜத்திலேயே தியானித்து இருந்தால் பூமியை உடையவளாகிய இறைவியின் சக்தி மண்டலமாகவே சாதகரைச் சுற்றி இருக்கும்.



பாடல் #1385: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்
கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
விண்டகத் துள்ளே விளங்கி வருதலாற்
றண்டகத் துள்ளவை தாங்கலு மாகுமே.

விளக்கம்:

பாடல் #1384 இல் உள்ளபடி சாதகரைச் சுற்றி இருக்கின்ற சக்தி மண்டலத்தின் உள்ளிருந்து மலர் போல விரிந்து எழுகின்ற ஜோதியை தரிசித்து அதைத் தமக்கு உள்ளே வைத்து அந்த ஜோதியும் தானும் வேறு வேறு இல்லை எனும் எண்ணத்திலேயே தியானத்தில் வீற்றிருந்தால் பரந்து விரிந்து இருக்கின்ற ஆகாயத்தில் இருக்கின்ற அனைத்து தத்துவங்களையும் தமக்கு உள்ளேயே தெளிவாகப் புரிந்து கொள்ளும் படி கிடைக்கப் பெறும். அதன் பிறகு சாதகரின் உடலுக்கு நடுவில் இருக்கின்ற சுழுமுனை நாடியின் அடியிலிருந்து உச்சி வரை இருக்கின்ற இடத்திற்கு உள்ளேயே பரந்து விரிந்து இருக்கின்ற ஆகாயத்தில் இருக்கின்ற அனைத்தையும் தாங்கிக் கொண்டு வீற்றிருக்கின்ற இயல்பை சாதகர் அடைந்து விடுவார்.



பாடல் #1386: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தாங்கிய நாவித் தடமலர் மண்டலத்
தோங்கி யெழுங்கலைக் குள்ளுணர் வானவ
ளோங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய னாதம் வலியுட னாகுமே.

விளக்கம்:

பாடல் #1385 இல் உள்ளபடி பரந்து விரிந்து இருக்கின்ற ஆகாயத்தில் இருக்கின்ற அனைத்தையும் தமக்குள்ளே தாங்கி இருக்கின்ற சாதகரின் தொப்புள் கொடியிலிருக்கும் மணிப்பூரகச் சக்கரத்தின் தாமரை மலர் போன்ற மண்டலத்தில் இருந்து வேகமாக மேலே எழுந்து வரும் நவாக்கிரி சக்கரத்தின் கலைக்கு உள்ளே இருக்கின்ற உணர்வு வடிவமாக இருக்கின்ற இறைவியானவளை இனி வருகின்ற பிறவிகள் நீங்கி எப்போது சென்று அடைவோமோ என்று ஏங்கி இருந்து இனிமேல் வருகின்ற பிறப்புகளை எல்லாம் இறைவியையே எண்ணி இருந்து அறுத்து விட வேண்டும். அதன் பிறகு பாடல் #1383 இல் உள்ளபடி சாதகர் தமக்குள் பேரன்பின் உருவமாக வைத்திருந்த நாத வடிவான இறைவன் மிகவும் வலிமையுடன் வீற்றிருப்பார்.



பாடல் #1387: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நாவுக்கு நாயகி நன்மணிப் பூணாரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாள்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்த
ளாவுக்கு நாயகி யங்கமர்ந் தாளே.

விளக்கம்:

நாக்கிற்கு தலைவியான இறைவி நல்ல நவரத்தினங்களை பதித்து இருக்கும் மாலையை அணிந்து இருக்கின்றாள். மலர் வடிவான சக்கரத்திற்கு தலைவியான இறைவி தலை முடியிலிருந்து கீழ் வரை தங்கம் போல் தகதகக்கும் ஆடையை அணிந்து இருக்கின்றாள். பாடல்களுக்கு தலைவியான இறைவி பாலைப் போன்ற வெண்மையான நிறம் கொண்டு இருக்கின்றாள். ஆன்மாவிற்கு தலைவியான அவளே சாதகரின் ஆன்மாவோடு அங்கேயே வீற்றிருக்கின்றாள்.

உட் கருத்து: நவாக்கிரி சக்கரத்தில் இருக்கின்ற பீஜ மந்திரங்களை சொல்லும் சாதகரின் வாக்கிற்கு தலைவியான இறைவி நன்மையைக் கொடுக்கும் பிரகாசத்தினால் ஈர்க்கின்ற தேஜஸை கொண்டு விளங்குகின்றாள். மலர் போல மென்மையான சக்கரத்திற்கு தலைவியான இறைவி சாதகருக்கு உள்ளிருந்து பிரகாசமாக தலை முடியிலிருந்து கீழ் வரை சூரியக் கதிர்களைப் போல பிரகாசமாக வெளிப்பட்டு வருவாள். நவாக்கிரி சக்கரத்தில் இருக்கின்ற மந்திரத்தின் தலைவியான இறைவி சாதகரின் சாதகத் தன்மைக்கு ஏற்ற விதத்தில் அருளுபவளாக இருக்கின்றாள். ஆன்மாவிற்கு தலைவியான அவளே சாதகரின் ஆன்மாவோடு அங்கேயே வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1388: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அன்றிரு கையி லளந்த பொருண்முறை
யின்றிரு கையி லெடுத்த வெண்குண்டிகை
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் கிருந்த வக்காரணி காணுமே.

விளக்கம்:

ஆதியில் உயிர்களைப் படைக்கும் போதே தனது இரண்டு திருக்கரங்களாலும் அவரவர்களின் வினைகளுக்கு ஏற்ற முறைப்படி இன்பமும் துன்பமுமாகிய போகங்களை அளந்து கொடுத்து உயிர்கள் அதை அனுபவிக்க அருளினாள். இப்போது நவாக்கிரி சக்கர சாதகத்தை செய்யும் சாதகர்களுக்கு தனது இரண்டு திருக்கரங்களாலும் சாதகரிடமிருந்து மாயை முதலிய மல அழுக்குகளை நீக்கி தூய்மையாக்கி பேரறிவு ஞானத்தைக் கொடுத்து கமண்டலத்திலிருக்கும் நீரினால் பாவங்களை நீக்கி இனிமேல் வரும் பிறவிகளையும் அழித்து அருளுகின்றாள். இறைவன் ஆடுகின்ற அம்பலத்தை தனக்குள்ளே தரிசிக்கும் வழியாகவே இவைகளை இறைவி அருளுகின்றாள் என்பதை சாதகர் கண்டு கொண்டு அதையே எண்ணிக்கொண்டு தியானத்தில் இருந்து தாம் இறைவனை அடைவதற்கு நவாக்கிரி சக்கரத்தில் இருக்கின்ற இறைவியே காரணமாக இருக்கின்றாள் என்பதை தமக்குள் கண்டு அறிந்து கொள்வார்.



பாடல் #1389: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

காரணி சத்திக ளைம்பத் திரண்டெனக்
காரணி கன்னிக ளைம்பத் திருவராய்க்
காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்குங்
காரணி தன்னரு ளாகிநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1388 இல் உள்ளபடி சாதகர் தமது மலங்களும் கர்மங்களும் நீங்கி இறைவனை அடைவதற்கு காரணமாக இருக்கின்ற சக்திகளானது மொத்தம் ஐம்பத்து இரண்டு பேர்களாக பிரிந்து இருக்கின்றனர். இந்த சக்திகள் என்றும் இளமையுடன் சிறிதும் அருளில் குறைவின்றி ஐம்பத்து இரண்டு பேர்களாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் நவாக்கிரி சக்கரத்திற்கு உள்ளேயே நின்று சாதகரின் மும்மலங்களாகிய அழுக்குகளையும் இனி வரும் பிறவிகளுக்கு காரணமாக இருக்கின்ற கர்மங்களையும் முழுவதுமாக நீக்கி இறைவியிடமே சேர்த்து விடுகின்றனர். சாதகர் இறைவனை அடைவதற்கு காரணமாக இருக்கின்ற இறைவியே தனது பேரருளால் இந்த ஐம்பத்து இரண்டு சக்திகளும் ஒன்றாக ஆகி நிற்கின்றாள்.



பாடல் #1390: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நின்ற விச்சத்தி நிலைபெற நின்றிடிற்
கண்டவிவ் வன்னி கலந்திடு மோராண்டிற்
கொண்ட விரதநீர் குன்றாம னின்றிடின்
மன்றினி லாடு மணியது காணுமே.

விளக்கம்:

பாடல் #1389 இல் உள்ளபடி ஐம்பத்து இருவரும் ஒன்றாக ஆகி நிற்கின்ற இந்த இறைவியானவள் சாதகருக்குள் நிலையாக உறுதியுடன் ஒரு வருடம் நின்று விட்டால் சாதகர் தமக்குள் தரிசித்த இந்த அக்னி வடிவான இறைவியோடு சாதகருக்குள் இருக்கும் நவாக்கிரி சக்கரமும் கலந்து விடும். அதன் பிறகும் தாம் எடுத்துக் கொண்ட நவாக்கிரி சக்கர சாதகத்தை சாதகர் ஒரு குறையும் இல்லாமல் தொடர்ந்து செய்து வந்தால் அவருக்குள் இருக்கும் அம்பலத்தில் ஒன்றாக ஆடுகின்ற பாடல் #383 இல் உள்ளபடி வைரக் கல்லாகிய இறைவனையும் அதன் ஒளியாகிய சக்தியையும் தரிசிக்கலாம்.



பாடல் #1391: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கண்டவிச் சத்தி யிருதய பங்கயங்
கொண்டவித் தத்துவ நாயகி யானவள்
பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட
வின்றென் மனத்து ளினிதிருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1390 இல் உள்ளபடி சாதகர் தமக்குள் தரிசித்த இந்த இறைவியானவள் சாதகரின் இதயத் தாமரையை தனது இருப்பிடமாக கொண்டு வீற்றிருப்பாள். அப்படி அவள் வீற்றிருக்கும் முறைக்கு வேண்டிய அனைத்து தத்துவங்களுக்கும் அவளே தலைவியாக ஆகின்றாள். அவளை எண்ணிக் கொண்டே இருந்து ஆதியிலிருந்தே உயிர்களைத் தொடர்ந்து வருகின்ற மனமாகிய எண்ணங்களை சாதகர் தம்மிடமிருந்து முழுவதுமாக நீக்கி விட்டால் அது முழுவதுமாக நீங்கிய அன்றே சாதகரின் எண்ணங்கள் இல்லாத மனதிற்குள் இறைவியானவள் இன்பமுடன் வீற்றிருப்பாள்.



பாடல் #1392: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

இருந்தவிச் சத்தி யிருநாலு கையிற்
பரந்தவிப் பூக்கிளி பாச மழுவாழ்
கரந்த கடகுடன் வில்லம்பு கொண்டங்
குரந்தங் கிருந்தவன் கூத்துகந் தாளே.

விளக்கம்:

பாடல் #1391 இல் உள்ளபடி சாதகரின் எண்ணங்கள் இல்லாத மனதிற்குள் இன்பமுடன் இருந்த இந்த இறைவியானவள் தனது எட்டு திருக்கரங்களிலும் 1. பரந்து விரிந்து இருக்கும் இந்த பூமித் தாமரையையும் 2. ஆன்மாவாகிய கிளியையும் 3. பாசமாகிய கயிறையும் 4. அந்த பாசத்தை அறுக்கின்ற மழுவையும் 5. உலகத்தை சார்ந்து இருக்கின்ற உணவு நீர் காற்று ஆகிய பகைகளை அழிக்கின்ற வாளையும் 6. காக்கின்ற கேடயத்தையும் 7. அதனுடன் சேர்ந்து இனி வரும் பிறவிகளை அழிக்கின்ற வில்லையும் 8. அம்பையும் ஏந்திக் கொண்டு சாதகருக்குள் முழுவதும் பரவி அவருக்குள்ளேயே வீற்றிருந்து சாதகரின் அனைத்து கர்மங்களையும் அழிக்கின்ற தாண்டவத்தை விருப்பமுடன் ஆடுகின்றாள்.




பாடல் #1393: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

உகந்தனள் பொன் முடிமுத் தாரமாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே.

விளக்கம்:

பாடல் #1392 இல் உள்ளபடி சாதகருக்குள் விருப்பமுடன் வீற்றிருக்கும் இறைவியானவள் தங்க நிறத்தில் சூரியக் கதிர்களைப் போல ஒளி வீசுகின்ற தலை முடியிலிருந்து அடிவரை நிறைந்தும் முத்துக்களும் பவளங்களும் பதித்து பரந்து விரிந்து இருக்கின்ற மாலையையும் மிக உன்னதமான பட்டால் ஆகிய ஆடையையும் சாத்திக் கொண்டு இருக்கின்றாள். அவளுடைய மலர் போல மலர்ந்து எழுந்து இருக்கும் திருமார்பகங்களின் மீது நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட மார்புக் கச்சையை அணிந்து கொண்டு இருக்கின்றாள். இவ்வாறெல்லாம் அலங்கரித்துக் கொண்டு பேரழகோடு சாதகருக்குள் வீற்றிருக்கின்ற இறைவியே பசுமையாக இருக்கின்றாள்.



பாடல் #1394: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பச்சை யிவளுக்குப் பாங்கிமா ராறெட்டுக்
கொச்சைய ரெண்மர்கள் கூடி வருதலாற்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச விடைச்சி யினிதிருந் தாளே.

விளக்கம்:

பாடல் #1393 இல் உள்ளபடி சாதகருக்குள் பசுமையாக வீற்றிருக்கின்ற இறைவிக்கு சரிசமமாக அவளைச் சூழ்ந்து நிற்கின்ற சக்திகள் நாற்பத்தெட்டு பேர் இருக்கின்றார்கள். அவளுக்கு சரிசமமாகவும் நெருக்கமாகவும் இருக்கின்ற சக்திகள் எட்டு பேரும் நாற்பத்து எட்டு பேரோடு கூட்டி மொத்தம் ஐம்பத்து ஆறு பேரும் அவளை எப்போதும் சூழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் தங்களின் திருமார்புகளில் மார்புக் கச்சைகளை அணிந்து கொண்டும் தங்களின் திருக்கரங்கள் இரண்டிலும் ஆயதங்களை ஏந்திக் கொண்டும் காக்கின்ற வளையமாக சூழ்ந்து இருக்க மெல்லிய இடையைக் கொண்டு பசுமையாக இருக்கும் இறைவி அவர்களுக்கு நடுவில் இனிமையாக வீற்றிருந்தாள்.



பாடல் #1395: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தாளதி னுள்ளே தயங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்துகௌம் னைம்என்று
மாலது வாக வழிபாடு செய்துநீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே.

விளக்கம்:

பாடல் #1394 இல் உள்ளபடி சாதகருக்குள் வீற்றிருக்கின்ற இறைவியின் திருவடிகளுக்கு உள்ளேயே பிரகாசமாக இல்லாமல் மங்கி இருக்கும் ஜோதியை மூச்சுக் காற்றோடு கலந்து 'கௌம்' மற்றும் 'ஐம்' எனும் பீஜ மந்திரங்களை அதோடு சேர்த்து ஜெபித்துக் கொண்டு காக்கின்ற தெய்வமாக அந்த ஜோதியை எண்ணி தியானம் செய்தால் பசுவின் உடல் முழுவதும் உள்ள இரத்தமே பாலாக மாறுவது போல சாதகர்களின் உடல் முழுவதும் பரந்து இருக்கும் ஜோதியானது சாதகரின் உடலுக்குள்ளிருந்து மேலெழுந்து வந்து ஆகாயத்திலும் பரந்து விரிந்து கொண்டே இருக்கும்.



பாடல் #1396: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

விண்ணமர் நாபி யிரதயமாங் கிடைக்
கண்ணமர் கூபங் கலந்து வருதலாற்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே.

விளக்கம்:

பாடல் #1395 இல் உள்ளபடி ஆகாயத்தில் பரந்து விரிந்து இருக்கும் ஜோதியானது சாதகரின் உடலுக்குள் இருக்கின்ற தொப்புள் குழிக்கும் இதயத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் இருக்கின்ற சூட்சுமத் துளையில் அமர்ந்து இருக்கின்ற கிணறோடு கலந்து ஒன்றாகி வரும்போது பாடல் #1395 இல் உள்ளபடி சாதகர் ஜெபித்துக் கொண்டு இருக்கும் பீஜ மந்திரங்களில் வீற்றிருந்து அந்த இடமே சூரிய மண்டலமாக ஆகிவிடும். அதன் பிறகு ஜோதியின் அருள் நிரம்புகின்ற அந்த சூட்சுமத் துளையான கிணற்றில் அருள் முழுவதும் செழுமை பெற்று இருப்பதை காணலாம்.



பாடல் #1397: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலா
லாபத்துக் கைகள டைந்தன நாலைந்து
பாசம றுக்கப் பரந்தன சூழவே.

விளக்கம்:

பாடல் #1396 இல் உள்ளபடி சாதகரின் தொப்புள் குழிக்கும் இதயத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் இருக்கின்ற சூட்சுமத் துளையான கிணற்றில் வீற்றிருக்கும் இறைவிக்கு குளிர்ச்சியான அருளை வழங்கும் திருமுகங்கள் பத்து விதமாக இருக்கின்றது. சாதகருக்குள்ளிருந்து எழுந்து வருகின்ற உணர்வுகளால் மனம் சஞ்சலம் அடையாதபடி அந்த பத்து திருமுகங்களின் அருளால் இறைவியானவள் வேகத்தை தடுத்துக் குறைத்து தயங்கி வரும்படி அருளுகின்றாள். அந்த உணர்வுகளால் வருகின்ற ஆபத்துகளில் இருந்து சாதகரை காப்பாற்றி அருளுவதற்கு பல விதமான ஆயுதங்களை ஏந்திக் கொண்டு இருக்கும் தனது இருபது திருக்கரங்களை சாதகருக்குள் கொடுத்து சாதகருக்கும் அந்த உணர்வுகளுக்குமான பந்தத்தை அறுக்கும் படி பரந்து விரிந்து சாதகரை சுற்றி அருளுகிறாள்.

இறைவி தனது பத்து திருமுகங்களாலும் தடுத்து அருளுகின்ற பத்து விதமான மன சஞ்சலங்கள்:

1. காமம் – சிற்றின்பம்
2. குரோதம் – கோபம்
3. உலோபம் – பேராசை கருமித்தனம்
4. மோகம் – மாயையால் நிகழும் மயக்க உணர்ச்சி



பாடல் #1398: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

சூலந்தண் டொள்வாள் சுடர்பரை ஞானமாய்
வேலம்பு தமாக மாகிளி விற்கொண்டு
கோலம்பு பாசம் மழுக்கத்தி கைக்கொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை யெண்ணதே.

விளக்கம்:

பாடல் #1397 இல் உள்ளபடி தனது திருக்கரங்களை சாதகருக்குள் கொடுத்து சாதகருக்கும் உணர்வுகளுக்குமான பந்தத்தை அறுக்கும் படி பரந்து விரிந்து சாதகரை சுற்றி அருளுகின்ற இறைவியானவள் தனது இருபது திருக்கரங்களிலும் 1. திரிசூலமும் 2. தண்டாயுதமும் 3. கூர்மையான வாளும் 4. சுடர்வீசும் நெருப்பும் 5. பேரறிவு ஞானமும் 6. வேலாயுதமும் 7. கோரைப் புல்லும் 8. மானும் 9. கிளியும் 10. வில்லும் 11. கோலும் 12. அம்பும் 13. பாசக் கயிறும் 14. மழுவும் 15. கத்தியும் 16. தனது அழகிய வடிவத்தோடு சேர்ந்தே இருக்கின்ற சங்கும் 17 & 18. அபயம் கொடுக்கின்ற குவிந்த திருக்கரங்கள் இரண்டும் 19. மேல் நோக்கி முக்தியை குறிக்கின்ற விரலை நீட்டியும் 20. கீழ் நோக்கி சரணாகதியையும் குறிக்கின்ற விரலை நீட்டியும் இருக்கின்ற திருக்கரங்களை கொண்டு இருக்கின்றாள். இப்படி தம்மைச் சுற்றி பாதுகாப்பாக இருபது கரங்களில் இருபது விதமான ஆயுதங்களை ஏந்தி நிற்கும் இறைவியை சாதகர் எண்ணி தியானித்துக் கொண்டே இருக்க வேண்டும்.




பாடல் #1399: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

எண்ணமர் சத்திகள் நாற்பத்தி னாலுட
னெண்ணமர் சத்திகள் நாற்பத்தி னால்வரா
மெண்ணிய பூவித ழுள்ளே யிருந்தவ
ளெண்ணிய வெண்ணங் கடந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1398 இல் உள்ளபடி தன்னைச் சுற்றி பாதுகாப்பாக இருக்கின்ற இறைவியையே எண்ணி தியானத்தில் இருக்கின்ற சாதகரின் எண்ணத்தில் அமர்ந்து இருக்கின்ற சக்திகள் மொத்தம் நாற்பத்து நான்கு பேர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் நாற்பத்து நான்கு பேரும் சாதகரின் கழுத்திலிருந்து அடிவயிறு வரை உள்ள விசுக்தி [பதினாறு இதழ்கள்] அநாகதம் [பன்னிரண்டு இதழ்கள்] மணிப்பூரகம் [பத்து இதழ்கள்] சுவாதிட்டானம் [ஆறு இதழ்கள்] ஆகிய நான்கு சக்கரங்களில் இருக்கின்ற மொத்தம் நாற்பத்து நான்கு இதழ்களுக்கு உள்ளே இருக்கின்றார்கள். இந்த நாற்பத்து நான்கு பேர்களின் சக்திகளாகவும் இறைவியே இருக்கின்றாள். சாதகரும் இந்த நாற்பத்து நான்கு சக்திகளும் எண்ணிக் கொண்டு இருக்கின்ற தியானத்தின் எண்ணங்கள் அனைத்தையும் தாண்டி இருக்கின்ற மாபெரும் சக்தியாக இறைவி நிற்கின்றாள்.



பாடல் #1400: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்துப் பவளங் கச்சாகப்
படர்ந்தல் குற்பட்டாடை பாதச் சிலம்பு
மடந்தை குமிறீயில் வந்துநின் றாளே.

விளக்கம்:

பாடல் #1399 இல் உள்ளபடி அனைத்தையும் தாண்டி இருக்கின்ற மாபெரும் சக்தியான இறைவி தங்கத்தாலான கிரீடத்தை தனது திருமுடியிலும் மாணிக்கத்தாலான தோடுகளை தனது திருக்காதுகளிலும் முத்துக்களாலான ஆரத்தை தனது திருக்கழுத்திலும் பவளங்களால் பதிக்கப் பட்ட கச்சையை தனது திருமார்பிலும் தனது திருஇடையைத் தாண்டி படர்ந்து இருக்கின்ற கீழ் பகுதியில் பட்டாலான ஆடையையும் தனது திருவடிகளில் சிலம்புகளையும் அணிந்து கொண்டு சாதகருக்குள் இருக்கும் நவாக்கிரி சக்கரத்தில் ஆரம்ப நிலையில் இருக்கின்ற 'ஹ்ரீம்' எனும் பீஜ மந்திரத்தில் வந்து வீற்றிருக்கின்றாள்.



பாடல் #1401: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நின்றவள் சத்தி நிறந்தரம் மாகவே
கண்டிடு மேரு வணுவாதி தானாதிப்
பண்டைய வாநின் பகட்டை யறுத்திட
வொன்றிய தீபமுணர்ந் தாற்குண் டாகுமே.

விளக்கம்:

பாடல் #1400 இல் உள்ளபடி சாதகருக்குள் இருக்கும் நவாக்கிரி சக்கரத்தில் வந்து நிற்கின்ற இறைவியானவள் பராசக்தியாக சாதகருக்குள் முழுவதும் நிறைந்து மிகவும் உயர்ந்த நிலையில் தமக்குள் செயல் படுவதை சாதகர் தரிசித்து தமக்குள் அவளை வைத்து வணங்கும் போது சாதகரின் உடலையே மொத்த சக்தி மயத்தின் உருவமான மேரு மலையாகக் கொண்டு அவள் செயல்படுகின்றாள். இப்படி சாதகருக்குள் செயல்படுகின்ற பராசக்தியான இறைவியே அவருக்குள் இருக்கும் ஒவ்வொரு அணுவிற்கும் ஆதியாகவும் அவருக்கு வெளியில் அண்ட சராசரத்தில் இருக்கின்ற அனைத்திற்கும் ஆதியாகவும் இருக்கின்றாள். அப்போது பேரொளி வடிவமாகிய இறைவியோடு ஜோதி வடிவமாகிய தனது ஆன்மாவும் ஒன்றாகச் சேர்ந்து இருப்பதை தமக்குள் உணர்ந்து கொண்ட சாதகர்களுக்கு அசையா சக்தியாகிய பரம்பொருளில் இருந்து முதன் முதலில் ஆசையினால் பிரிந்து வந்த சாதகரின் ஆன்மாவுக்கு உள்ளே இறைவனை விட்டு பிரிவதற்கு முழுமுதல் காரணமாகவும் ஆணி வேராகவும் இருக்கின்ற ஆசையை முழுவதுமாக அறுத்து மீண்டும் இறைவனோடு சேருவதற்கான வழியை உருவாக்கி அருளுகின்றாள் இறைவி.



பாடல் #1402: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

உண்டாம தோமுக முத்தம மானது
கண்டவிச் சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகமைந்து கூறுங் கரங்களு
மொன் றிரண்டாகவே மூன்றுநா லானதே.

விளக்கம்:

பாடல் #1401 இல் உள்ளபடி இறைவியின் பேரொளியோடு ஒன்றாக சேர்ந்து இருக்கின்ற சாதகரின் ஆன்மாவிற்குள் இறைவியின் அருளால் உருவாகும் சக்தியின் அம்சமே இறைவனின் ஆறாவது முகமான அதோ முகமாக எப்போதும் நிலையாக இருக்கின்ற உன்னதமான இறை நிலை ஆகின்றது. சாதகர் தமக்குள் தரிசித்த இந்த இறைவியே அசையா சக்தியாகிய சதாசிவமூர்த்தியோடு அசையும் சக்தியாக எப்போதும் சேர்ந்தே இருக்கின்ற பராசக்தி ஆவாள். அவளுடைய அருளால் சாதகரும் இறை நிலைக்கு சரிசமமாகுவதற்கு எடுத்துக் கொண்ட முகங்கள் ஐந்து முகங்களாகவும் அதனோடு சேர்ந்து இயங்குகின்ற பத்து கரங்களாகவும் ஆகின்றார்.

கருத்து: அண்ட சராசரங்களை தனது ஆறாவது முகமான அதோமுகத்தால் தாங்கி இருக்கின்ற இறைவன் அதிலுள்ள அனைத்து உலகங்களிலும் ஐந்து விதமான தொழில்களைப் புரிவதற்கு ஐந்து விதமான முகங்களை கொண்டு இருக்கின்றார். இறைவனோடு ஒன்றாக கலப்பதற்கு சாதகரும் இதே நிலையை அடைய வேண்டும் என்று இறைவி சாதகருக்கு அதோமுகத்தில் உன்னதமான நிலையையும் ஐந்து முகங்களையும் பத்து கரங்களையும் கொடுத்து அருளுகின்றாள்.

ஐந்து முகங்களும் அதன் தொழில்களும்: 1. சத்யோ சோதம் – படைத்தல் 2. வாமதேவம் – காத்தல் 3. அகோரம் – அழித்தல் 4. தற்புருடம் – மறைத்தல் 5. ஈசானம் – அருளல்



பாடல் #1403: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நன்மணி சூலங் கபாலங் கிளியுடன்
பன்மணி நாகமழுக் கத்தி பந்தாகுங்
கன்மணி தாமரை கையிற் றமருகம்
பொன்மணி பூணாரம் பூசனை யானதே.

விளக்கம்:

பாடல் #1402 இல் உள்ளபடி நன்மையை அருளும் இறைவியின் பத்து திருக்கரங்களில் தூய்மையான ரத்தின மணிகளை பதித்த 1. திரிசூலமும் 2. மண்டையோடும் 3. கிளியும் 4. பலவிதமான ரத்தின மணிகளை பதித்த நாகமும் 5. கோடரியும் 6. கத்தியும் 7. பந்தும் ஆயுதமாகவும் 8. கல்லில் ரத்தின மணிகளை பதித்த தாமரை மலரும் 9. தமருகமும் 10. தங்கத்தில் ரத்தின மணிகளால் சேர்த்துப் பூட்டிய மாலையும் வைத்து இருக்கின்றாள். இப்படி இறைவியின் திருக்கரங்களில் இருக்கும் பத்து பொருட்களுமே இறைவிக்கு சரிசமமாக பூஜிக்கத் தகுந்தது ஆகும்.

குறிப்பு: முருகனின் வேலை வணங்குவது முருகப் பெருமானை வணங்குவதற்கு சமமாகக் கொள்ளப் படுவது போலவே இங்கே இறைவியின் திருக்கரங்களில் இருக்கின்ற பத்து பொருளையும் வணங்குதல் இறைவியை வணங்குவதற்கு சமமாகக் கொள்ளப் படுகிறது.



பாடல் #1404: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பூசனை சத்திக ளெண்ணைவர் சூழவே
நேசவள் கன்னிகள் நாற்பது நேரதாக்
காசினி சக்கரத் துள்ளே கலந்தவள்
மாசடை யாமல் மகிழ்ந்திருந் தார்களே.

விளக்கம்:

பாடல் #1403 இல் உள்ளபடி இறைவிக்கு சரிசமமாக பூஜிக்க தகுந்த பத்து பொருள்களையும் சூழ்ந்து இருக்கின்ற சக்திகள் நாற்பது பேரும் நேசிக்கின்ற இறைவி அவர்களுக்கு நடுவில் வீற்றிருக்கின்றாள். என்றும் இளமையுடன் இருக்கின்ற இந்த நாற்பது சக்திகளும் இறைவிக்கு சரிசமமாக அருளுபவர்களாக இருக்கின்றார்கள். பாடல் #1401 இல் உள்ளபடி இறைவியோடு ஒன்றாக சேர்ந்தே இருப்பதால் உலகமாகவே ஆகிவிட்ட சாதகரின் உடலுக்குள் இருக்கின்ற நவாக்கிரி சக்கரத்திற்கு உள்ளே வீற்றிருக்கும் இறைவியோடு இந்த நாற்பது பேரும் ஒன்றாகக் கலந்து அவளது அருளால் இறைவியையோ அல்லது அவளுக்கு சரிசமமாக இருக்கின்ற பத்து பொருள்களையோ வணங்குகின்ற உயிர்களின் கர்மங்களை தீர்க்கும் போது அதனால் எந்தவிதமான மாசும் வந்து சேர்ந்து விடாமலும் கர்ம வினைகளை தீர்த்து அதனால் உயிர்கள் இன்பம் பெறுவதைக் கண்டு மகிழ்ச்சியாகவும் இருக்கின்றார்கள்.



பாடல் #1405: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

தாரதி னுள்ளே தயங்கிய சோதியைப்
பாரதி னுள்ளே பரந்து ளெழுந்திட
வேரதுவ் வொன்றி நின்றெண்ணு மனோமயங்
காரது போலக் கலந்தெழு மண்ணிலே.

விளக்கம்:

சாதகருக்குள் இருக்கும் சகஸ்ரதளத்தில் உள்ள ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரின் உள்ளே இருந்து சாதகம் செய்ய செய்ய மெதுவாக மேலெழுந்து வருகின்ற ஜோதியை சாதகர் இருக்கின்ற உலகத்தில் இருக்கின்ற உயிர்களுக்கு எல்லாம் பரந்து சென்று அவைகளுக்கு உள்ளே இருக்கின்ற ஜோதியோடு எழுந்திடும். இதற்கு ஆதாரமாக சாதகரின் உள்ளே சகஸ்ரதளத்தில் இருக்கின்ற ஜோதியும் அதனோடு ஒன்றாக சேர்ந்து நிற்கும் படி எண்ணிக் கொண்டே இருக்கின்ற சாதகரின் மன வலிமைக்கும் தியானத்திற்கும் ஏற்றபடி மேகங்களில் இருக்கின்ற நீர் மண்ணில் மழையாகப் பொழிந்து வெப்பத்தால் ஆவியாகி மீண்டும் மேகத்தோடு சேர்ந்து மழையாக பொழிவது போலவே சாதகருக்குள்ளிருக்கும் ஆதார ஜோதியானது உலகம் முழுவதும் பரந்து விரிந்து இருக்கின்ற உயிர்களோடும் கலந்து எழுந்து அனைவருக்கும் பயன் கொடுக்கும் ஜோதியாக விளங்குகின்றது.



பாடல் #1406: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

மண்ணி லெழுந்த வகார வுகாரங்கள்
விண்ணி லெழுந்து சிவாய நமவென்று
தண்ணி லெழுந்தது காண்பரி தென்றுதான்
கண்ணி லெழுந்தது காட்சிதர வென்றே.

விளக்கம்:

பாடல் #1405 இல் உள்ளபடி சாதகருக்குள்ளிருந்து வெளிவந்து உலகம் முழுவதும் பரந்து எழுந்து இருக்கும் ஜோதியே ஓங்கார தத்துவத்தில் படைக்கும் தொழில் புரியும் அகாரமாகவும் காக்கும் தொழில் புரியும் உகாரமாகவும் செயல் படுகின்றது. அதுவே ஆகாயத்தில் எழுந்து வீற்றிருக்கும் போது இறைவனாகவே 'சிவாயநம' என்று வணங்குபவர்களுக்கு கிடைப்பதற்கு அரியதான அமைதியை அருளுகின்றதாகவும் இருக்கின்றது. இந்த ஜோதியை உருவமாக பார்ப்பது இயலாது என்ற காரணத்தால் உயிர்கள் தனக்குள் இறைவனாகவே வைத்து வணங்கும் போது சாதகரின் ஜோதியானது அவர்களின் ஆன்மாவிற்குள்ளேயே எழுந்து வந்து அருள் காட்சியை அருளவும் காரணமாக இருக்கின்றது.

உட்கருத்து: இறை நிலையில் வீற்றிருக்கும் சாகதருக்குள் இருக்கும் ஜோதியானது உலகம் முழுவதும் இருக்கின்ற உயிர்களுக்குள் சென்று மாயை நீங்கி இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதே படைத்தல் தொழிலாகும். அவ்வாறு எண்ணிக் கொண்டு வணங்கும் உயிர்கள் மீண்டும் மாயையில் சிக்கிக் கொள்ளாமல் காத்து அருளுவதே காத்தல் தொழிலாகும். இந்த இரண்டு தொழில்களையும் இறை நிலையில் இருந்து சாதகர் செய்வதால் அவரது ஜோதியை இறைவனாகவே வணங்கும் உயிர்களுக்கும் ஜோதி தரிசனத்தையும் கிடைப்பதற்கு அரியதான அமைதியையும் வழங்கும் நிலையில் இருக்கின்றார்.




பாடல் #1407: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

என்றங் கிருந்த வமுதக் கலையிடைச்
சென்றங் கிருந்த வமுதப் பயோதரி
கண்ட கரமிரு வெள்ளிபொன் மண்டையாய்க்
கொண்டங் கிருந்தது வண்ண வமுதமே.

விளக்கம்:

பாடல் #1406 இல் உள்ளபடி தம்மை இறைவனாகவே வணங்குகின்ற உயிர்களின் ஆன்மாவிற்கு ஜோதி தரிசனம் காட்ட என்று அவர்களுக்குள் இருந்த சாதகரின் ஜோதியானது அமிழ்தம் செயல் பட்டுக் கொண்டு இருக்கும் மூலாதாரத்திற்கும் தலை உச்சிக்கும் இடைப் பட்ட பகுதிக்கு உள்ளே சென்று அங்கே வீற்றிருக்கின்ற அமிழ்தத்தினால் உயிர்களின் மாயையை நீக்கி அருளுகின்ற இறைவியை தரிசித்து அங்கு கரங்களாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்ற இரண்டு நாடிகளின் [இடகலை பிங்கலை] மூலமாக மூச்சுக்காற்றை எடுத்துச் சென்று வெள்ளி போன்ற நிறத்தில் மூலாதாரத்துக்கு அருகில் இருக்கும் சுக்கிலத்தோடு உராய்ந்து அதை தங்கம் போன்ற நிறத்தில் இருக்கும் ஜோதியாக மாற்றிகின்றது. அதன் பிறகு அந்த ஜோதியை தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரதளத்திற்கு எடுத்துச் சென்று ஜோதி வடிவம் கொண்டு அங்கே வீற்றிருக்கின்ற இறைவியோடு கலக்கும் பொழுது அவள் தனது திருமேனி அமிழ்தமாக மாறி அருளுகின்றாள்.




பாடல் #1408: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

அமுத மதாக வழகிய மேனி
படிக மதாகப் பரந்தெழு முள்ளே
குமுத மதாகக் குளிர்ந்தெழு முத்துக்
கெழுத மதாகிய கேடிலி தானே.

விளக்கம்:

பாடல் #1407 இல் உள்ளபடி அமிழ்தமாகவே மாறி இருக்கும் இறைவியின் பேரழகுடைய திருமேனியானது பளிங்குக் கல்லை போலவே உறுதியாக சாதகருக்குள் பரந்து விரிந்து எழுந்து அல்லி மலரைப் போலவே குளிர்ச்சியுடன் மூலாதாரத்திலிருந்து எழுந்து வருகின்ற சுக்கிலத்தை முத்துப் போன்ற வடிவமாகவும் உறுதியான கல்லாகவும் ஆக்கி அதற்கு எந்த விதமான தீங்கும் இல்லாத சக்தியாகிறது.



பாடல் #1409: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கேடிலி சத்திகள் முப்பத் தறுவரு
நாடிலி கன்னிக ணாலொன் பதிமரும்
பூவிலி பூவித ழுள்ளே யிருந்தவர்
நாளிலி தன்னை நணுகிநின்றார் களே.

விளக்கம்:

பாடல் #1408 இல் உள்ளபடி எந்தவிதமான தீங்கும் இல்லாமல் சாதகருக்குள் இருக்கின்ற சக்திகள் மொத்தம் முப்பத்தாறு பேர் இருக்கின்றார்கள். சாதகர் தேடி அடைய வேண்டியது இல்லாமல் தாமாகவே இறைவியோடு சேர்ந்து வருகின்ற என்றும் இளமையுடன் இருக்கும் இந்த முப்பத்தாறு சக்திகளும் தமக்கென்று எந்த இடமும் இல்லாதவர்களாக சாதகருக்குள் இருக்கும் சக்கரங்களின் இதழ்களையே தமக்கு இடமாகக் கொண்டு அதன் உள்ளே வீற்றிருக்கின்றார்கள். இவர்கள் முப்பத்தாறு பேரும் காலம் என்கிற ஒன்று இல்லாதவளாகிய இறைவியை நெருங்கியே நிற்கின்றார்கள்.



பாடல் #1410: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியும்
கண்டது சோதி கருத்து ளிருந்திடக்
கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு
விண்ட வெளகாரம் விளங்கின வென்றே.

விளக்கம்:

பாடல் #1409 இல் உள்ளபடி முப்பத்தாறு சக்திகளும் நெருங்கி நிற்கின்ற இறைவியே சாதகரின் அறிவு முழுவதும் நிறைந்து இருக்கின்ற அக்னியாகவும் அந்த அக்னிக்குள் தரிசிக்கின்ற வடிவமே ஜோதியாகவும் தமது கருத்துக்கு உள்ளே வைத்து இடைவிடாமல் ஒரு வருடம் தியானத்தில் இருந்தால் பாடல் #1406 இல் உள்ளபடி ஆகாயம் முழுவதும் பரந்து விரிந்து இருக்கின்ற நவாக்கிரி சக்கரத்தில் உள்ள 'ஔம்' எனும் பீஜ மந்திரத்தின் உட் பொருளை விளங்கிக் கொள்ள முடியும்.




பாடல் #1411: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

விளங்கிடும் வானிடை நின்றவை யெல்லாம்
வணங்கிடு மண்டல மன்னுயி ராக
நலங்கிளர் நன்மைகள் நாரண னொத்துச்
சுணங்கிடை நின்றவை சொல்லலு மாமே.

விளக்கம்:

பாடல் #1410 இல் உள்ளபடி நவாக்கிரி சக்கரத்தில் உள்ள 'ஔம்' எனும் பீஜ மந்திரத்தின் உட் பொருளை விளங்கிக் கொண்ட சாதகருக்கு ஆகாயத்தின் நடுவில் நிற்கின்ற அனைத்து தத்துவங்களும் விளங்கிவிடும். அவரை வணங்கிடும் இடத்திலெல்லாம் வாழுகின்ற உயிர்கள் ஆகவே அவரும் இருந்து நலம் தரும் பல விஷயங்களை வெளிக் கொண்டு வந்து அதன் மூலம் அந்த உயிர்களுக்கு பலவிதமான நன்மைகளை செய்து நரனாக [மனிதனாக] இருந்தும் அனைத்துமாகவே தானும் இருந்து காக்கும் தொழில் புரியும் திருமாலைப் போலவே உலகத்திலுள்ள அனைத்தும் தமக்குள்ளேயே இருக்க அதற்கு நடுவில் நின்று கொண்டு அவற்றைப் பற்றி எடுத்துச் சொல்லவும் முடியும்.



பாடல் #1412: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆமே யதோமுக மேலே யமுதமாய்த்
தானே யுகாரந் தழைத்தெழுஞ் சோமனுங்
காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே.

விளக்கம்:

பாடல் #1411 இல் உள்ளபடி உலகத்திலுள்ள அனைத்தையும் தமக்குள்ளேயே நின்று இருக்க அவற்றை எடுத்துச் சொல்ல முடிந்த சாதகர் இறைவனின் கீழ் நோக்கி இருக்கும் ஆறாவது முகமான அதோ முகம் போல் உலகத்தை தாங்கிக் கொண்டு இருப்பவராகவும் அதற்கு மேலே இருக்கின்ற அமிழ்தமாகவும் அனைத்தையும் காக்கின்ற ஓங்காரத்தின் உகாரத் தத்துவமாகவும் சிறப்பாக எழுந்து வந்து உயிர்களுக்கு குளிர்ச்சியாக இருக்கும் அமைதியைக் கொடுக்கும் சந்திரனாகவும் தமது உடலுக்கு மேலே வந்து கேட்டது அனைத்தும் கொடுத்து அருளும் கற்பகத் தருவாகவும் பூமியின் மேல் வருகின்ற அனைத்து உலகங்களையும் இணைக்கின்ற தங்கம் போல் பிரகாசிக்கின்ற கொடியாகவும் இருக்கின்றார்.



பாடல் #1413: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பொற்கொடி யாளுடன் பூசனை செய்திட
வக்களி யாகிய வாங்காரம் போய்விடு
மற்கடி யாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே.

விளக்கம்:

பாடல் #1412 இல் உள்ளபடி தங்கம் போல் பிரகாசிக்கின்ற கொடியாக இருக்கின்ற இறைவியோடு சாதகர் எப்போதும் சேர்ந்தே இருந்து பூஜைகள் செய்து கொண்டு இருக்கும் போது அதில் இறைவி என்னோடு இருக்கின்றாள் என்கிற இன்பமான எண்ணமாகிய அகங்காரம் சாதகரை விட்டு விலகி விடும். அதன் பிறகு சாதகரைச் சுற்றி காவலாக நிலைபெற்று நிற்கின்ற மண்டலத்திற்கு உள்ளேயே சாதகரோடு ஒன்றாக பின்னிப் பிணைந்து இருக்கின்ற கொடியாகவும் குழந்தை போலவும் இருக்கின்ற இறைவியை தமக்குள்ளே சாதகரால் தரிசிக்க முடியும்.



பாடல் #1414: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

பேதை யிவளுக்குப் பெண்மை யழகாகுந்
தாதை யிவளுக்குத் தாணுவுமாய் நிற்கும்
மாதை யிவளுக்கு மண்ணுந் திலதமாய்க்
கோதையர் சூழக் குவிந்திடுங் காணுமே.

விளக்கம்:

பாடல் #1413 இல் உள்ளபடி குழந்தை போல இருக்கின்ற இறைவிக்கு சக்தியின் பரிபூரணமே பேரழகாக இருக்கின்றது. அனைத்து உயிர்களுக்கும் தந்தையாக இருக்கின்ற இறைவனும் இறைவிக்கு உறுதுணையாக நிற்கின்றார். இறைவனோடு சரிபாதியான பெண் பாகமாய் இருக்கும் இறைவிக்கு அழகாக பூசிய குங்குமத் திலகம் போலவே நடுவில் அரசி போல் வீற்றிருக்க மலர்களைச் சூடியுள்ள அழகிய கூந்தலை உடைய சக்திகள் அனைவரும் அவளைச் சுற்றி ஒன்றாக கூடி இருப்பதை சாதகரால் தரிசிக்க முடியும்.



பாடல் #1415: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

குவிந்தன சத்திகள் முப்பத் திருவர்
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழப்
பரந்தித ழாகிய பங்கயத் துள்ளே
யிருந்தனர் காணு மிடம்பல கொண்டே.

விளக்கம்:

பாடல் #1414 இல் உள்ளபடி இறைவியைச் சுற்றி ஒன்றாக கூடி இருக்கின்ற சக்திகள் மொத்தம் முப்பத்து இரண்டு பேர் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் இறைவியோடு சேர்ந்தே இயங்குகின்ற என்றும் இளமையுடன் இருக்கின்ற கன்னிகளாக நான்கு திசைகளுக்கும் எட்டு எட்டு பேராக மொத்தம் முப்பத்து இரண்டு பேர்களாக இறைவியைச் சுற்றி இருக்கிறார்கள். தாமரை மலரான இறைவியின் செயல்களான இதழ்களில் இந்த முப்பத்து இரண்டு சக்திகளும் ஒன்றாக சேர்ந்து அண்ட சராசரங்கள் முழுவதும் பரந்து விரிந்து புரிகின்ற அனைத்து செயல்களையும் சாதகர் தாம் அமர்ந்த இடத்திலிருந்தே தமக்குள் தரிசிக்க முடியும்.




பாடல் #1416: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

கொண்டங் கிருந்தனர் கூத்த னொழியினைக்
கண்டங் கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமா
மின்றென் மனத்துள்ளே யில்லடைந் தாளுமே.

விளக்கம்:

பாடல் #1415 இல் உள்ளபடி உலக செயல்களை புரிந்து கொண்டு பலவிதமான இடங்களில் இறைவியோடு சேர்ந்தே இருக்கின்ற முப்பத்து இரண்டு சக்திகளும் ஆனந்தக் கூத்து ஆடுகின்ற இறைவனின் பேரொளி வடிவத்தையே தரிசித்துக் கொண்டு அந்தந்த இடங்களில் இருந்து உலக நன்மைக்கான காரணத்திற்காக இறைவிக்கு உள்ளே இருந்து அவற்றை செயல் பட வைக்கின்றனர். ஆதிகாலத்திலேயே அனைத்து உயிர்களும் இறைவனை அறிந்து கொண்டு அவனைத் தேடி அடைய வேண்டும் என்ற காரணத்தினால் அருளப்பட்ட வேதங்களை அண்ட சராசரங்கள் முழுவதும் பரவும் படி எடுத்துச் சென்று அங்கெல்லாம் இருக்கின்ற உயிர்களில் இறைவனைத் தேடுகின்ற உயிர்களுக்கு இவர்கள் உதவி புரிகின்றனர். இவர்களுக்கு எல்லாம் தலைவியாக இருக்கின்ற இறைவியே இப்போது இறை நிலையை அடைந்துவிட்ட சாதகரின் மனதிற்கு உள்ளே இருந்து அவரது உள்ளத்தையே தனக்கு மிகவும் விருப்பமான கோயிலாகக் கொண்டு அவருக்குள் வீற்றிருந்து சாதகரை ஆளுவதின் மூலம் அனைத்தையும் இயக்குகின்றாள்.



பாடல் #1417: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம்
[ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

இல்லடைந் தாளுக்கு மில்லாத தொன்றில்லை
யில்லடைந் தானுக் கிறப்பது தானில்லை
யில்லடைந் தானுக் கிமையவர் தானொவ்வர்
ரில்லடைந் தானுக்கு மில்லாதில் லானையே.

விளக்கம்:

பாடல் #1416 இல் உள்ளபடி சாதகரின் உள்ளத்தையே கோயிலாக கொண்டு வீற்றிருக்கும் இறைவிக்கு இல்லாதது என்ற எந்த ஒன்றுமே இல்லை. இறைவி வீற்றிருக்கும் கோயிலாகிய உள்ளத்தை அடைந்த சாதகருக்கு இனி இறப்பது என்கிற நிகழ்வு இல்லை. இறைவி வீற்றிருக்கும் கோயிலாகிய உள்ளத்தை அடைந்த சாதகருக்கு கண்ணின் இமை போல் உலகத்தை காத்துக் கொண்டு இருக்கின்ற விண்ணவர்கள் அனைவரும் சரிசமம் ஆவார்கள். இறைவனே வீற்றிருப்பதால் இறைவனாகவே ஆகிவிட்ட சாதகரின் ஆன்மாவும் இறைவனைப் போலவே இல்லாத இடம் என்று எதுவும் இல்லை.





பாடல் #1418: நான்காம் தந்திரம் – 15. நவாக்கிரி சக்கரம் [ஒன்பது சக்திகளின் திருமேனியாக இருக்கும் அட்சரங்களைக் கொண்ட சக்கரம்]

ஆனை மயக்கு மறுபத்து நாற்றறி
யானை யிருக்கு மறுபத்து நாலொளி
யானை யிருக்கு மறுபத்து நாலறை
யானை யங்கோடு மறுபத்து நாலிலே.

விளக்கம்:

பாடல் #1417 இல் உள்ளபடி இறைவனாகவே ஆகிவிட்ட சாதகரின் ஆன்மாவின் இறை தன்மையில் கவர்ந்து இழுக்கப்பட்டு வணங்குகின்ற ஆன்மாக்களுக்கு அருளுகின்ற பாடல் #1371 இல் உள்ளபடி அறுபத்து நான்கு சக்திகள் இருக்கின்றார்கள். இவர்கள் அந்த ஆன்மாக்களுக்கு வழிகாட்டும் அறுபத்து நான்கு ஒளிகளாக இருக்கின்றார்கள். இறைவனாகவே ஆகிவிட்ட சாதகரின் ஆன்மாவிற்குள் இருக்கின்ற நவாக்கிரி சக்கரத்தை சுற்றி காவலாக வீற்றிருக்கின்ற இந்த அறுபத்து நான்கு சக்திகளும் சாதகரை நாடி வருகின்ற ஆன்மாக்களை காத்து அருளுகின்றனர்.





நான்காம் தந்திரம் முற்றியது.

தொடர்புக்கு: 9677074974
மேலும் அறிந்து கொள்ள:
https://kvnthirumoolar.com